யோவான் - முன்னுரை

காலம்

கி.பி. 70-ஆம் ஆண்டில் இந்தச் சுவிசேஷம் எழுதப்பட்டது. எழுதப்பட்ட இடம் தெரியவில்லை.

ஆசிரியர்

யோவான். சீஷரில் இயேசுவுக்கு அன்பானவாயிருந்த ஒருவன். (யோவான் 13:23; யோவான் 19:26; யோவான் 20:2; யோவான் 21:7,20,24) அப்போஸ்தலன். யாக்கோபின் சகோதரன் (மத் 4:21). யாக்கோபு, பேதுரு ஆகியோரோடு பல வேளைகளில் கூட இருந்தவன். (மாற்கு 5:37; மாற்கு 9:2; மாற்கு 14:33). பொறுமையில்லாதவன் (மாற்கு 9:38; லூக்கா 9:49-56). பஸ்காவை ஆயத்தம் பண்ணுகிறான். (லூக்கா 22:8-13). இயேசு கிறிஸ்து விசாரிக்கப்படும்போது அங்கு இருக்கிறான். (யோவான் 18:15-16; யோவான் 19:26-27), இயேசுவின் கல்லறையில் இருக்கிறான். (யோவான்20:2-8), மற்ற வேளைகளில் இயேசுவோடு கூட இருக்கிறான். (யோவான் 21). பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டான். (அப் 1:13-2:11). மரியாளைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். (யோவான் 19:26). தேவாலயத்தில் பேதுருவோடு இருந்தான். (அப் 3). சிறைச்சாலையில் இருந்தான். (அப் 4-5). சமாரியாவிற்கு அனுப்பப்பட்டான். (அப் 8:14-17). சபையின் தூணாக இருந்தான். (கலா 2:9). யோவான் எழுதின சுவிசேஷம், 1யோவான், 2யோவான், 3யோவான், வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய நூல்களின் ஆசிரியர். (வெளி 1:9). யோவான் தன்னுடைய நூறாவது வயதில் இயற்கையாக மரணமடைந்தான் என்று பாரம்பரிய வரலாறு கூறுகிறது.

ஷமயக்கருத்து

இயேசு கிறிஸ்து தேவன், யெகோவாவின் மேசியா, குமாரன். இயேசு கிறிஸ்துவின் தேவத்துவம் இந்த சுவிசேஷத்தில் உறுதி பண்ணப்படுகிறது. (யோவான் 1:1-3,14, 33-34,49; யோவான் 3:13-20; யோவான் 5:23,26; யோவான் 6:51,62; யோவான் 8:58; யோவான் 13:33; யோவான் 20:28,31)

இயேசு கிறிஸ்துவின் தேவத்துவத்திற்குச் சாட்சிகள்

1. பிதா (யோவான் 5:32-37; யோவான் 8:18)
2. குமாரன் (யோவான் 8:14; யோவான் 18:37)
3. பரிசுத்த ஆவியானவர் (யோவான் 15:26; யோவான் 16:13-15)
4. எழுதப்பட்ட வார்த்தை (யோவான் 1:45; யோவான் 5:39-46)
5. இயேசு கிறிஸ்துவின் கிரியைகள் (யோவான் 5:17, 36; யோவான் 10:25; யோவான் 14:11; யோவான் 15:24)
6. யோவான் ஸ்நானன் (யோவான் 1:7; யோவான் 5:32-35)
7. சீஷர்கள் (யோவான் 15:27; யோவான் 19:35; யோவான் 21:24)

யோவான் எழுதின சுவிசேஷத்திலும், மற்ற சுவிசேஷங்களிலும் காணப்படும் ஒற்றுமைகள்

1. யோவானுடைய வார்த்தை
2. கடைசி இராப்போஜனம்
3. பெத்தானியாவில் அபிஷேகம்
4. இயேசுகிறிஸ்துவின் பாடுகள்
5. உயிர்த்தெழுதல்
6. ஐயாயிரம் பேருக்கு போஜனம் கொடுத்தது
7. கடலின்மீது நடந்தது

இந்த ஏழு நிகழ்ச்சிகளைத் தவிர, யோவான் சுவிசேஷத்தில் காணப்படும் எல்லா நிகழ்ச்சிகளும் இந்த சுவிசேஷத்தின் விசேஷித்த காரியங்களாகும்.

யோவான் - முன்னுரை

சுவிசேஷங்களில் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வர்ணனை

1. மத்தேயு - இயேசு கிறிஸ்து ராஜா
2. மாற்கு - இயேசு கிறிஸ்து ஊழியக்காரர்
3. லூக்கா - இயேசு கிறிஸ்து மனுஷர்
4. யோவான் - இயேசு கிறிஸ்து தேவன்

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 21

வசனங்கள் - 879

கேள்விகள் - 167

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் - 15

புதிய தீர்க்கதரிசனங்கள் - 44

பொருளடக்கம்

I. இயேசு கிறிஸ்து

1. இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவமும் நித்தியமும் - (1:1-2)
2. இயேசு கிறிஸ்து மூலமாய் சகலமும் உண்டாயிற்று - (1:1-3-5)

II. யோவான் ஸ்நானன் - (1:6-8)

III. இயேசு கிறிஸ்து

1. தெய்வத்துவம், சிருஷ்டிப்பு கிரியை, இஸ்ரவேலர் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை - (1:9-11)
2. மீட்பின் கிரியை - (1:12-13)
3. வார்த்தை மாம்சமாகிறார் - (1:14)

IV. யோவான் ஸ்நானன் - (1:15)

V. இயேசு கிறிஸ்து - கிருபை, சத்தியம் ஆகியவற்றின் ஆதாரம் - (1:16-18)

VI. யோவான் ஸ்நானன்

1. யோவான் ஸ்நானன் தன்னைப் பற்றி கூறிய சாட்சி - (1:19-24)
2. யோவான் ஸ்நானன் தன் ஞானஸ்நானத்தைப் பற்றி கூறிய சாட்சி - (1:25-28)
3. யோவான் ஸ்நானன் இயேசு கிறிஸ்துவைப் பற்றி கூறிய சாட்சி - (1:29-34)

VII. இயேசு கிறிஸ்துவின் ஊழியமும் உபதேசமும்

1. யோவான் ஸ்நானன் ஆதாயம் பண்ணிய இரண்டு சீஷர்கள் - (1:35-39)
2. அந்திரேயா ஆதாயம் பண்ணிய பேதுரு - (1:40-42)
3. இயேசுவானவர் தாமே ஆதாயம் பண்ணிய பிலிப்பு - (1:43-44)
4. பிலிப்பு ஆதாயம் பண்ணிய நாத்தான்வேல் - (1:45-46)
5. நாத்தான்வேலின் சந்தேகங்கள் நிவர்த்தியாகிறது - (1:47-49)
6. இயேசு கிறிஸ்துவின் முதலாவது தீர்க்கதரிசனம் - (1:50-51)
7. இயேசுவானவர் செய்த முதலாவது அற்புதம் - (2:1-11)
8. கப்பர்நகூமை இயேசு தமது ஊழிய ஸ்தலமாக ஆக்குகிறார் - (2:12)
9. தேவாலயத்தின் முதலாவது சுத்திகரிப்பு - (2:13-17)
10. யூதர்கள் அடையாளத்தை நாடுகிறார்கள் - இயேசுவின் மரணத்தைப் பற்றிய முதலாவது தீர்க்கதரிசனம் - (2:18-22)

யோவான் - முன்னுரை

11. எருசலேமில் பல அற்புதங்கள் - *(2:23-25)*

12. இயேசுவும் நிக்கொதேமுவும்

(1) நிக்கொதேமு இயேசுவிடம் இராக்காலத்தில் வருகிறான் - *(3:1-2)*

(2) மறுபடியும் பிறக்க வேண்டியதின் அவசியத்தை இயேசு கூறுகிறார் - *(3:3)*

(3) மறுபடியும் பிறக்க வேண்டுமென்பதைநிக்கொதேமு தவறாக புரிந்து கொள்கிறான் - *(3:4)*

(4) மறுபடியும் பிறக்க வேண்டியதின் அவசியத்தை இயேசு விளக்கி கூறுகிறார் - *(3:5-8)*

(5) மறுபடியும் பிறக்க வேண்டும் என்பது நிக்கொதேமுவிற்கு புரியாத இரகசியமாகவே இருக்கிறது - *(3:9)*

(6) நிக்கொதேமுவை, அவனுடைய அறியாமைக் காகவும், அவிசுவாசத்திற்காகவும் இயேசு கிறிஸ்து கடிந்து கூறுகிறார். *(3:10-12)*

13. இயேசுவைப் பற்றிய சாட்சி

(1) பரலோகத்தில் இருக்கிற கிறிஸ்து - *(3:13)*

(2) கிறிஸ்துவின் சிலுவை மரணம் - *(3:14-17)*

(3) அவிசுவாசிகளுக்கு ஆக்கினைத்தீர்ப்பு - *(3:18-21)*

14. இயேசு கிறிஸ்து யூதேயாவில் ஊழியம் செய்கிறார் - *(3:22)*

15. யோவான் ஸ்நானன் அயினோன் என்னும் இடத்தில் ஊழியம் செய்கிறான் - *(3:23-24)*

16. யோவான் ஸ்நானனின் கடைசி சாட்சி

(1) தன்னைப் பற்றி - *(3:25-29)*

(2) இயேசு கிறிஸ்துவைப் பற்றி - *(3:30-36)*

17. இயேசு கிறிஸ்து கலிலேயாவிற்கு பிரயாணம் பண்ணுகிறார் - *(4:1-3)*

18. இயேசு கிறிஸ்துவும் சமாரிய ஸ்திரீயும்

(1) சூழ்நிலைகள் - *(4:4-6)*

(2) இயேசு "தாகத்துக்குத் தா" என்கிறார் - *(4:7-8)*

(3) ஸ்திரீ "என்னிடத்தில் எப்படி கேட்கலாம்" என்கிறாள் - *(4:9)*

(4) இயேசு - அவர் உனக்கு ஜீவத் தண்ணீரைக் கொடுத்திருப்பார் - *(4:10)*

(5) ஸ்திரீ - எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும் - *(4:11-12)*

(6) இயேசு - நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்று - *(4:13-14)*

(7) ஸ்திரீ - அந்த தண்ணீரைத் தரவேண்டும் - *(4:15)*

(8) இயேசு - உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா - *(4:16)*

(9) ஸ்திரீ - எனக்கு புருஷன் இல்லை - *(4:17)*

(10) இயேசு - ஐந்து புருஷர் உனக்கு இருந்தார்கள், இப்பொழுது உனக்கு இருக்கிறவன் உனக்கு புருஷன் அல்ல - *(4:18)*

(11) ஸ்திரீ - ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி - நான் எங்கு தொழுது கொள்ள வேண்டும் - *(4:19-20)*

யோவான் - முன்னுரை

(12) இயேசு - பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் - (4:21-24)

(13) ஸ்திரீ - கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் - (4:25)

(14) இயேசு - நானே அவர் - (4:26)

19. சீஷர்கள் திரும்பி வருகிறார்கள் - ஸ்திரீ ஊரிலுள்ள ஜனங்களை கிறிஸ்துவிடம் அழைத்து வருகிறாள் - (4:27-30)

20. ஊழியக்காரரின் சந்தோஷமும் திருப்தியும் - (4:31-34)

21. சுவிசேஷ ஊழியத்தைப் பற்றிய உபதேசம் - (4:35-38)

22. இரண்டு நாள் எழுப்புதல் கூட்டம் - (4:39-42)

23. கலிலேயாவில் இயேசுவை ஏற்றுக் கொள்கிறார்கள் - (4:43-45)

24. இராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரனை இயேசு குணமாக்குகிறார் - (4:46-54)

25. பெதஸ்தா குளம் - இயேசு ஓய்வுநாளில் திமிர்வாதக்காரனை சொஸ்தமாக்குகிறார் - (5:1-9)

26. ஓய்வுநாளில் படுக்கையை எடுத்துக் கொண்டு போவதற்காக யூதர்கள் அவனைக் கடிந்து கொள்கிறார்கள் - (5:10-13)

27. இயேசு தாம் சொஸ்தமாக்கிய திமிர்வாதக்காரனை மறுபடியும் காண்கிறார் - (5:14)

28. சொஸ்தமான மனுஷன் யூதரிடம் அறிவிக்கிறான் - (5:15)

29. இயேசுவை கொல்வதற்கு சதியாலோசனை - (5:16)

30. இயேசுவின் பதிலுரை

(1) இயற்கையில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:17-18)

(2) வல்லமையிலும் கிரியைகளிலும் பிதாவும் இயேசுவும் சமம் - (5:19-20)

(3) மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:21)

(4) நியாயத்தீர்ப்பு செய்வதில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:22)

(5) கனத்தில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:23)

(6) நித்திய ஜீவனைக் கொடுப்பதில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:24-25)

(7) தம்மில் தாமே ஜீவனுடையவராய் இருப்பதில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:26-27)

(8) மரணத்தின் மீதும் நித்தியத்தின்மீதும் உள்ள அதிகாரத்தில் பிதாவும் இயேசுவும் சமம் - (5:28-29)

(9) இயேசு பிதாவினிடத்தில் கேட்கிற படியே நியாயத்தீர்ப்பு செய்கிறார் - (5:30)

(10) இயேசுவைப் பற்றி கூறப்பட்டுள்ள சாட்சி

(அ) யோவான் ஸ்நானன் - (5:31-35)

(ஆ) இயேசுவின் கிரியைகள் - (5:36)

(இ) பிதா - (5:37-38)

(ஈ) வேதவாக்கியங்கள் - (5:39-42)

(11) இயேசு பிதாவின் நாமத்தினாலே வந்திருக்கிறார் - (5:43)

யோவான் - முன்னுரை

(12) இயேசு அவிசுவாசத்தைக் கடிந்து கொள்கிறார் - (5:44-47)

31. ஐயாயிரம் பேருக்கு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார் - (6:1-13)

32. இயேசுவை இராஜாவாக்கும்படி பிடித்துக் கொண்டு போக ஜனங்கள் மனதாயிருக்கிறார்கள் - (6:14-15)

33. இயேசு தண்ணீரின்மீது நடக்கிறார் - (6:16-21)

34. ஜீவ அப்பத்தைப் பற்றிய உபதேசம்

(1) திரளான ஜனங்கள் இயேசுவை தேடி வருகிறார்கள் - (6:22-25)

(2) இயேசு ஜனங்களுடைய தவறான நோக்கங்களைக் கடிந்து கொள்கிறார் - (6:26-27)

(3) தேவனுக்கு ஏற்ற கிரியைகளை எவ்வாறு செய்வது என்று ஜனங்கள் இயேசுவிடம் கேட்கிறார்கள் - (6:28)

(4) தேவனுக்கேற்ற கிரியை - (6:29)

(5) ஜனங்கள் அடையாளத்தை கேட்கிறார்கள் - (6:30-31)

(6) பிதா மெய்யான அப்பத்தை கொடுக்கிறார் - (6:32-33)

(7) ஜனங்கள் அந்த அப்பத்தை எப்பொழுதும் தங்களுக்கு தரவேண்டும் என்று கூறுகிறார்கள் - (6:34)

(8) இயேசு - ஜீவ அப்பம் நானே - (6:35-40)

(9) முறுமுறுக்கும் யூதர்கள் - (6:41-42)

(10) இயேசு ஜீவ அப்பத்தைப் பற்றி மேலும் விளக்குகிறார் - (6:43-51)

(11) யூதர்கள் தங்களுக்குள் வாக்குவாதம் பண்ணுகிறார்கள் - (6:52)

(12) இயேசு ஜீவ அப்பத்தைப் பற்றி இன்னும் அதிகமாக விளக்கி கூறுகிறார் - (6:53-58)

35. உபதேசத்தினால் சீஷத்துவத்திற்கு பரீட்சை - (6:59-66)

36. பேதுருவின் புதிய விசுவாச அறிக்கை - (6:67-69)

37. யூதாஸ் தம்மைக் காட்டிக் கொடுக்கப்போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (6:70-71)

38. இயேசுவின் சகோதரர்கள் அவரை விசுவாசிக்க வில்லை - (7:1-9)

39. எல்லா மனுஷருக்காகவும் மரிப்பதற்காக கலிலேயாவிலிருந்து இறுதி பிரயாணம் - (7:10-13)

40. தேவாலயத்தில் இயேசு உபதேசம் பண்ணுகிறார்

(1) யூதர்கள் ஆச்சரியப்படுகிறார்கள் - (7:14-15)

(2) இயேசுவின் உபதேசம் பிதாவின் உபதேசம் ஆகும் - (7:16-19)

(3) இயேசுவை பிசாசு பிடித்தவன் என்று குற்றம் சுமத்துகிறார்கள் - (7:20)

(4) இயேசு யூதர்களின் நிலையற்ற பழக்கங்களைக் கடிந்து கொள்கிறார் - (7:21-24)

(5) இயேசுவிடம் யூதர்கள் கூறிய மறுப்புரை - (7:25-27)

(6) இயேசு யூதர்களிடம் கூறிய பதிலுரை - (7:28-29)

(7) பிரிவினை - இயேசுவைக் கொல்ல சதியாலோசனை - (7:30-32)

யோவான் - முன்னுரை

(8) இயேசு பரிசேயருக்கு கூறிய பதிலுரை - (7:33-34)

(9) இயேசுவைப் பற்றியும் அவருடைய உபதேசங்களைப் பற்றியும் யூதர்களுக்குள் விவாதம் - (7:35-36)

(10) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் - (7:37-39)

41. பிரிவினை - இயேசுவைக் கொல்ல சதியாலோசனை - (7:40-44)

42. சேவகரின் அறிக்கையும் நிக்கொதேமுவின் ஆலோசனையும் - (7:45-53)

43. இயேசு தேவாலயத்தில் உபதேசம் பண்ணுகிறார்

(1) விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீ - (8:1-11)

(2) இயேசு உலகத்திற்கு ஒளியாயிருக்கிறார் - (8:12)

(3) தம்மைப் பற்றி இயேசு கொடுத்த சாட்சியை பரிசேயர் குற்றப்படுத்துகிறார்கள் - (8:13)

(4) பிதா தம்மைக் குறித்து சாட்சி கொடுப்பதாக இயேசு கூறுகிறார் - (8:14-18)

(5) உம்முடைய பிதா எங்கே - (8:19-21)

(6) தன்னைத் தான் கொலைசெய்து கொள்வானோ - (8:22-24)

(7) நீர் யார் - (8:25-29)

(8) விசுவாசிகளுக்கு இயேசுவின் உபதேசம் - (8:30-32)

(9) யூதர்கள் விடுதலையின் சந்ததியாய் இருக்கிறோம் என்கிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (8:33-38)

(10) யூதர்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம் என்கிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (8:39-40)

(11) யூதர்கள் பிதாவின் சந்ததியாய் இருக்கிறோம் என்கிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (8:41-47)

(12) யூதர்கள் இயேசுவை சமாரியன் என்றும் பிசாசு பிடித்தவன் என்றும் கூறுகிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (8:48-51)

(13) இயேசுவின் மகிமையைப் பற்றிய விளக்கம் - (8:52-56)

(14) ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே இயேசு இருக்கிறார் - (8:57-58)

44. இயேசுவை கொல்வதற்கு சதியாலோசனை - (8:59)

45. பிறவிக்குருடன்

(1) இவன் குருடனாய் பிறந்தது யார் செய்த பாவம் - (9:1-3)

(2) இயேசு பிறவிக்குருடனை சொஸ்தமாக்குகிறார் - (9:4-7)

(3) குருடனும் அயலகத்தாரும் - (9:8-12)

(4) குருடனும் பரிசேயரும் - (9:13-17)

(5) குருடனின் பெற்றோரும் யூதரும் - (9:18-23)

(6) குருடனும் பரிசேயரும் - (9:24-34)

(7) இயேசுவும் குணமாக்கப்பட்ட மனுஷனும் - (9:35-38)

46. தேவாலயத்தில் உபதேசம்

யோவான் - முன்னுரை

(1) இயேசுவின் ஊழியம் - (9:39)

(2) பரிசேயரின் கேள்வியும் இயேசுவிம் பதிலும் - (9:40-41)

(3) நல்ல மேய்ப்பனைப் பற்றிய உவமை - (10:1-6)

(4) நல்ல மேய்ப்பனைப் பற்றிய உவமையின் விளக்கம் - (10:7-18)

(5) யூதர்களுக்குள் பிரிவினை - (10:19-21)

47. தேவாலயத்தில் இயேசுவின் உபதேசம்

(1) யூதர்கள் இயேசுவிடம் விசாரிக்கிறார்கள் - (10:22-24)

(2) இயேசு தமது தெய்வத்துவத்தை வலியுறுத்துகிறார் - (10:25-30)

(3) இயேசுவை கொல்வதற்கு முயற்சி - (10:31-33)

(4) இயேசு தமது தெய்வத்துவத்திற்கு சாட்சி கூறுகிறார் - (10:34-38)

48. இயேசுவைக் கொல்வதற்கு முயற்சி - (10:39-42)

49. மரித்த லாசரு உயிருடன் எழும்புகிறான்

(1) சூழ்நிலையும் நோக்கமும் - (11:1-6)

(2) யூதேயாவிற்கு மறுபடியும் பிரயாணம் - (11:7-16)

(3) இயேசும் மார்த்தாளும் - (11:17-27)

(4) இயேசுவும் மரியாளும் - (11:28-32)

(5) இயேசுவின் மனதுருக்கம் - (11:33-36)

(6) இயேசு லாசருவை அடக்கம் பண்ணிய கல்லறையி னிடத்திற்கு வருகிறார் - (11:37-38)

(7) மார்த்தாளின் அவிசுவாசம் - (11:39)

(8) இயேசுவின் விசுவாசம் - (11:40)

(9) இயேசுவின் ஜெபம் - (11:41-42)

(10) இயேசுவின் வல்லமை - லாசருவை உயிருடன் எழுப்புகிறார் - (11:43-44)

50. அற்புதத்தின் விளைவு - (11:45-46)

51. இயேசுவைக் கொல்ல முயற்சி - (11:47-48)

52. இயேசுவின் மரணத்தைப் பற்றி காய்பாவின் தீர்க்கதரிசனம் - (11:49-52)

53. இயேசுவைக் கொல்ல முயற்சி - (11:53-54)

54. இயேசுவைப் பிடிப்பதற்குக் கட்டளை - (11:55-57)

55. இயேசுவின் அபிஷேகம் - (12:1-8)

56. லாசருவைக் கொல்ல சதியாலோசனை - (12:9-11)

57. வெற்றிப்பவனி - (12:12-19)

58. தேவாலயத்தில் இயேசு கிறிஸ்துவின் உபதேசம்

(1) சூழ்நிலை - கிரேக்கர்கள் இயேசுவை தேடுகிறார்கள் - (12:20-22)

(2) இயேசு தமது மரணத்தை முன் குறித்துக் கூறுகிறார் - (12:23-24)

(3) சீஷத்துவத்திற்கு பரீட்சை - (12:25-26)

யோவான் - முன்னுரை

(4) ஜெபம் - வானத்திலிருந்து உண்டான சத்தம் - (12:27-29)

(5) கிறிஸ்துவின் சிலுவையில் உலகத்திற்கு நியாயத்தீர்ப்பு - (12:30-33)

(6) இயேசுவிடம் கேட்கப்பட்ட கேள்வி - (12:34)

(7) இயேசு ஜனங்களுக்கு புத்திமதி கூறிவிட்டு அவர்களை விட்டு மறைகிறார் - (12:35-36)

59. தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை - (12:37-41)

60. அதிகாரிகளின் சுபாவம் - (12:2-43)

61. இயேசு தம்மைப் பற்றி ஜனங்களிடம் கூறிய கடைசி சாட்சி - (12:44-50)

62. கடைசி பஸ்கா

(1) இயேசுவின் வேளை - (13:1)

(2) போஜனம் பண்ணுகிறார்கள் - யூதாஸ் சோதிக்கப்படுகிறான் - (13:2)

(3) இயேசு தாழ்மைக்கு எடுத்துக் காட்டாக சீஷர்களுடைய கால்களைக் கழுவுகிறார் - (13:3-5)

(4) பேதுருவின் கலக்கம் - (13:6)

(5) இயேசு செய்வதை பேதுரு அப்பொழுது அறியவில்லை - (13:7)

(6) தனது கால்களைக் கழுவக்கூடாது என்று பேதுரு கூறுகிறான் - (13:8)

(7) பின்பு பேதுரு தன் கைகளையும் தலையையும் கழுவவேண்டுமென்று கூறுகிறான் - (13:9)

(8) யூதாசைத் தவிர எல்லோரும் சுத்தமாயிருக்கிறார்கள் - (13:10-11)

(9) இயேசுவின் தாழ்மை நமக்கு ஓர் எடுத்துக்காட்டு - (13:12-17)

(10) யூதாஸ் தம்மை காட்டிக்கொடுக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (13:18-26)

(11) யூதாஸ் தன்னை சாத்தானுக்கு ஒப்புக் கொடுக்கிறான் - (13:27-30)

(12) பஸ்காவில் இயேசுவின் கடைசி உபதேசம் - (13:31-35)

63. ஒலிவமலையில் இயேசுவின் பிரசங்கம்

(1) பேதுரு தம்மை மறுதலிக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (13:36-38)

(2) சபை எடுத்துக் கொள்ளப்படப்போவதைப் பற்றிய முதலாவது அறிவிப்பு - (14:1-4)

(3) ஜீவியத்தின் பிரதான கேள்வி - (14:5)

(4) இயேசுவின் பதிலுரை - (14:6-7)

(5) உண்மையான விசுவாசிகளின் ஆவல் - (14:8)

(6) தேவனுடைய உண்மையான வெளிப்பாடு - (14:9-11)

(7) இயேசுவை விசுவாசிக்கிறவர்களால் செய்யக்கூடிய காரியங்கள் - (14:12)

(8) விசுவாசிகளுக்கு தேவன் செய்யும் காரியம் - (14:13-14)

(9) தேவனிடத்தில் அன்பாய் இருக்கிறவர்கள் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் - (14:15-17)

(10) ஆவிக்குரிய ஐக்கியமும் வல்லமையும் - (14:18-21)

(11) விசுவாசிகளுக்கு தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார் - (14:22)

(12) விசுவாசிகளிடத்தில் தேவன் வாசம் பண்ணுகிறார் - (14:23-25)

(13) பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் - (12:26)

(14) தேவனுடைய சமாதானம் - (14:27)

(15) இயேசு பிதாவினிடத்திற்கு போகிறார் - (14:28-31)

64. கெத்செமனே தோட்டத்திற்குப் போகும் வழியில் உபதேசம்

(1) மெய்யான திராட்சச்செடி - (15:1)

(2) இரண்டு விதமான கொடிகள் - (15:2)

(3) உண்மையான விசுவாசிகள் - (15:3)

(4) கனிகொடுப்பதற்கு நிபந்தனை - (15:4-5)

(5) கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும் - (15:5-6)

(6) ஜெபத்திற்கு பதில் கிடைக்க நிபந்தனை - (15:7)

(7) கனிகளைக் கொடுப்பதன் நோக்கம் - (15:8)

(8) கிறிஸ்துவில் நிலைத்திருப்பதற்கு நிபந்தனைகளும் அதனால் ஆசீர்வாதங்களும் - (15:9-14)

(9) சிநேகிதத்திற்கு ஏழு அடையாளங்கள் - (15:15-17)

(10) உண்மையான விசுவாசிகளை உலகம் ஏன் பகைக்கிறது - (15:18-21)

(11) உலகம் ஏன் தேவனையும் கிறிஸ்துவையும் பகைக்கிறது - (15:22-25)

(12) சத்திய ஆவியான தேற்றரவாளன் - (15:26-27)

(13) இயேசு உபத்திரவத்தை முன் குறித்துக் கூறுகிறார் - (16:1-3)

(14) கிறிஸ்தவர்களின் உபத்திரவத்தைப் பற்றிய தீர்க்கதரிசனத்திற்குக் காரணம் - (16:4-6)

(15) இயேசு பிதாவினிடத்திற்கு போவதன் அவசியம் - (16:7)

(16) உலகத்தில் பரிசுத்த ஆவியானவரின் மூன்று அம்ச கிரியை - (16:8-11)

(17) வருங்கால வெளிப்பாடுகளின் தீர்க்கதரிசனங்கள் - (16:12-15)

(18) இயேசு பிதாவினிடத்திற்கு போவதன் உபதேசம் - (16:16)

(19) சீஷர்கள் இந்த உபதேசத்தைத் தவறாக புரிந்து கொள்கிறார்கள் - (16:17-18)

(20) இயேசு பிதாவினிடத்தில் போவதையும் திரும்பவும் வரப் போவதையும் குறித்து விளக்குகிறார் - (16:19-22)

(21) இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்க வேண்டும் - (16:23-26)

(22) சீஷர்கள் தவறாக புரிந்து கொண்டதற்கு தெளிவான விளக்கம் - (16:27-28)

(23) சீஷர்கள் தெளிவாக புரிந்து கொள்கிறார்கள் - (16:29-30)

(24) உபத்திரவங்களையும் கிறிஸ்தவர்களின் பாடுகளையும் குறித்த தீர்க்கதரிசனங்கள் - (16:31-33)

யோவான் - முன்னுரை

65. கர்த்தருடைய ஜெபம்

(1) பிதாவையும் குமாரனையும் மகிமைப்படுத்துதல் - (17:1)

(2) நித்திய ஜீவன் - (17:2-3)

(3) நியமித்த கிரியை செய்து முடிக்கப் பட்டிருக்கிறது - (17:4)

(4) கிறிஸ்துவின் மகிமை - (17:5)

(5) கிறிஸ்து மனுஷருக்கு பிதாவின் நாமத்தை வெளிப்படுத்துகிறார் - (17:6-8)

(6) விசுவாசிகள் அனைவருடைய ஒற்றுமை - (17:9-11)

(7) கேட்டின் மகன் கெட்டுப்போகிறான் - (17:12)

(8) விசுவாசிகளின் பரிசுத்தம் - (17:13-14)

(9) விசுவாசிகளை தீமையிலிருந்து காக்கும்படி ஜெபம் - (17:15)

(10) விசுவாசிகளின் பரிசுத்தத்தைப் பற்றிய சாட்சி - (17:16)

(11) விசுவாசிகள் ஊழியத்திற்காக வேறு பிரிக்கப்படுகிறார்கள் - (17:17-19)

(12) விசுவாசிகள் ஒன்றாயிருக்க வேண்டும் - (17:20-23)

(13) விசுவாசிகளின் மகிமை - (17:24)

(14) உலகம் பிதாவை அறியவில்லை - (17:25)

(15) ஊழியம் நிறைவேறிற்று - (17:26)

VIII. இயேசுவின் பாடுகள்

1. கெத்செமனே தோட்டத்தில் இயேசு - (18:1)

2. இயேசுவைக் கொல்ல முயற்சி - இயேசு காட்டிக்கொடுக்கப்படுவதும் கைதுபண்ணப்படுவதும் - (18:2-11)

3. இயேசுவை அன்னா என்பவனிடத்திற்கு முதலாவதும், பின்பு காய்பா என்பவனிடத்திற்கும் கொண்டு போகிறார்கள் - (18:12-14)

4. பேதுருவின் முதலாவது மறுதலிப்பு - (18:15-18)

5. இயேசுவின் விசாரணை - (18:19-24)

6. பேதுருவின் இரண்டாம், மூன்றாம் மறுதலிப்புக்கள் - (18:25-27)

7. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு - (18:28-37)

8. இயேசுவிற்கு தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (18:38-40)

9. இயேசுவின் சிரசின்மேல் முள்முடியை வைக்கிறார்கள் - (19:1-3)

10. பிலாத்து இயேசுவை ஜனங்களுக்கு முன்பாக கொண்டு வருகிறான் - (19:4-7)

11. இயேசுவை பிலாத்துவிடம் மறுபடியும் கொண்டு போகிறார்கள் - (19:8-11)

12. பிலாத்து இயேசுவை விடுதலை பண்ண வழிபார்க்கிறான் - (19:12)

13. பிலாத்து இயேசுவை யூதருக்கு முன்பாக நிறுத்துகிறான் - (19:13-14)

14. யூதர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறார்கள் - (19:15)

15. இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள் - (19:16-24)

16. இயேசுவின் சிலுவையின் அருகே நின்ற ஸ்திரீகள் - (19:25-27)

17. இயேசுவின் மரணம் - (19:28-37)

18. இயேசுவை அடக்கம் பண்ணுகிறார்கள் - (19:38-42)

யோவான் - முன்னுரை

IX. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம்

1. ஸ்திரீகள் அப்போஸ்தலரிடம் கல்லறை காலியாக இருப்பதை அறிவிக்கிறார்கள் - (20:1-2)

2. பேதுருவும் யோவானும் இயேசுவை அடக்கம் பண்ணிய இடத்திற்கு ஓடுகிறார்கள் - (20:3-10)

3. மகதலேனா மரியாளுக்கு இயேசுவின் தரிசனம் - (20:11-17)

4. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு மகதலேனா மரியாளின் சாட்சி - (20:18)

5. இயேசு பத்து பேருக்கு தரிசனம் தருகிறார் - தோமா அங்கில்லை - (20:19-20)

6. இயேசு தமது சீஷர்களுக்கு ஊழியப் பொறுப்புக்களைக் கொடுக்கிறார் - (20:21-23)

7. கண்டு விசுவாசித்த தோமா - (24-25)

8. இயேசு பதினொறு பேருக்கு தரிசனம் தருகிறார் - (20:26-28)

9. காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் - (20:29)

10. யோவான் எழுதின சுவிசேஷத்தின் நோக்கம் - (20:30-31)

11. இயேசு தமது சீஷர்களுக்கு மறுபடியும் தம்மை வெளிப்படுத்துகிறார் -

    (1) ஒரு மீனும் அகப்படவில்லை - (21:1-3)

    (2) திரளான மீன்கள் அகப்படுகிறது - (21:4-6)

    (3) இயேசுவிற்கு அன்பாயிருந்த சீஷன் - (21:7)

    (4) சீஷர்கள் மீன்களுள்ள வலையை கரைக்கு இழுத்து வருகிறார்கள் - (21:8-14)

12. பேதுருவின் மூன்று அம்ச ஊழியம் - (21:15-17)

13. பேதுருவின் மரணத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் - (21:18-19)

14. பேதுரு யோவானைப் பற்றி கேட்கிறான் - (21:20-23)

15. யோவான் - இந்த சுவிசேஷத்தை எழுதியவர் - முடிவுரை - (21:24-25)

1 அதிகாரம்

I. இயேசு கிறிஸ்து

1. இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவமும் நித்தியமும் - (மீகா 5:1; எபி 1:5,14; வெளி 1:8,17; 22:13)

யோவான் 1:1. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.

யோவான் 1:2 அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.

"ஆதி" - ஆரம்பம், முதலாவது, காலத்தால் கணக்கிட முடியாத கடந்த காலம். (ஆதி 1:1; நீதி 8:23).

ஆதி (beginning) - ἀρχή - archee - 746

பெண்பால் பெயர்ச்சொல் - ஆதி, ஆதிமுதல், ஆரம்பம், முதல், அதிகாரமுள்ளவர்கள், அதிகாரம், துரைத்தனம், துவக்கம், மூலஉபதேசம், உலகமுண்டானது முதல், உலகத்தை சிருஷ்டித்தது முதல்

"வார்த்தை" - இதன் கிரேக்கச் சொல் "லோகோஸ்" (logos) என்பதாகும். (அப் 1:1) வார்த்தை என்னும் சொல் கிறிஸ்துவைக் குறிக்கும். (யோவான் 1:14; வெளி 19:13) இயேசு கிறிஸ்து ஏற்கெனவே இருந்தார் என்பதை இந்த வாக்கியம் உறுதி பண்ணுகிறது. (மீகா 5:1-2; வெளி 1:8,11; வெளி 2:8; வெளி 22:13-16). பிதாவைப் போலவும், பரிசுத்த ஆவியானவரைப் போலவும் இயேசு கிறிஸ்துவும் நித்தியமானவர். (சங் 90: 1-2; எபி 9:14) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் திரித்துவத்தில் அங்கம் வகிக்கிறார்கள். (1யோவான் 5:7).

வார்த்தை (Word) - λόγος - logos - 3056

ஆண்பால் பெயர்ச்சொல் - சொல், சொல்லுதல், வார்த்தை, கணக்கு, காரியம், புத்தி, ஞானம், வசனம், சங்கதி, பேச்சு, உபதேசம், கீர்த்தி, யோசனை, வாக்கியம்

"தேவனாயிருந்தது" - வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. திரித்துவத்தில் பிதாவும், பரிசுத்த ஆவியானவரும் தெய்வத்துவ பண்புடையவர்களாக இருப்பதுபோலவே வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவும் தெய்வத்துவப் பண்புடையவராக இருக்கிறார். (சங் 45:6-7; ஏசா 9:6-7; யோவான் 1:1; எபி 1:8-12; வெளி 1:8,11; வெளி 22:13-16)

2. இயேசு கிறிஸ்து மூலமாய் சகலமும் உண்டாயிற்று - (எபே 3:9; கொலோ 1:16; எபி 1:2; வெளி 3:14)

யோவான் 1:3 சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டான தொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.

யோவான் 1:4 அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.

யோவான் 1:5 அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.

"அவர் மூலமாய்" - தேவன் எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்துவின் மூலமாகச் சிருஷ்டித்தார். (எபே 3:9; கொலோ 1:15-18; எபி 1:1-2).

"ஜீவன்" - இயேசு கிறிஸ்துவின் மூலமாக சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. அதே சமயத்தில் எல்லா சிருஷ்டிகளுக்கும் அவர் மூலமாகவே மீட்பு உண்டாயிற்று. (யோவான் 17:2; கொலோ 1:20) எல்ல சிருஷ்டிகளும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக, குமாரனால் வந்தது. அதுபோலவே எல்லா மீட்பும் வரும். இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார். அவருடைய மரணத்தினால் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாக சிருஷ்டியை இரட்சிப்பது தேவனுக்குச் சாத்தியமாயிற்று. (யோவான் 3:3-5; தீத்து 3:5).

1 அதிகாரம்

பற்றிக்கொள்ளுதல் (comprehended) - καταλαμβάνω - katalembanoo - 2638

வினைச்சொல் - பிடி, பற்றிக்கொள்ளு, அகப்படு, அடை, பெறு, அறி (to seize upon; to keep down or under; stop; to catch up with in the sense of to discover or detect) - வார்த்தையாகிய இயேசுகிறிஸ்துவை சாத்தானுடைய அந்தகாரச் சக்திகளினால் மேற்கொள்ள முடியாது. (எபே 6:12) வார்த்தையாகிய இயேசு கிறிஸ்து அவற்றைச் சிலுவையில் முறியடித்தார். (கொலோ 2:14-17)

II. யோவான் ஸ்நானன் - (மத் 3:1; மாற்கு 1:1; லூக் 3:1)

யோவான் 1:6 தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான், அவன் பேர் யோவான்.

யோவான் 1:7 அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்கச் சாட்சியாக வந்தான்.

யோவான் 1:8 அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக் குறித்துச் சாட்சி கொடுக்க வந்தவனாயிருந்தான்.

"அவன் பேர் யோவான்" - யோவான்ஸ்நானன். இந்தச் சுவிசேஷத்தில் இவன் யோவான் என்றே அழைக்கப்படுகிறான். மற்ற சுவிசேஷங்களில் இவன் யோவான் ஸ்நானன் என்று அழைக்கப்படுகிறான்.

III. இயேசு கிறிஸ்து

1. தெய்வத்துவம், சிருஷ்டிப்பு கிரியை, இஸ்ரவேலர் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை

யோவான் 1:9 உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.

யோவான் 1:10 அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை.

யோவான் 1:11 அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" - மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவே எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிறவர். அவரே அந்த மெய்யான ஒளி. (யோவான் 8:12; யோவான் 9:5; யோவான் 12:35-46).

"பிரகாசிப்பித்தல்" (power) - சூரியன், எல்லாவற்றின்மீதும் பாய்ந்து சென்று, பிரகாசிப்பிக்கிறதுபோல. சூரியன் ஒளி கொடுக்காமல் யாரையும் தள்ளி விடுவதில்லை. அதுபோலவே மேசியா எல்லோரையும் ஆசீர்வதிக்கிறார். புறஜாதியாரையும் ஆசீர்வதிக்கிறார். (ஆதி 12:2; ரோமர் 10:11-13; ரோமர் 15:8-12)

"தமக்குச் சொந்தமானவர்கள்" - யூதர்கள் (மத் 10:5-6; ரோமர் 9:5).

2. மீட்பின் கிரியை - (யோவான் 17:2)

யோவான் 1:12 அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.

யோவான் 1:13 அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்சசித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.

1 அதிகாரம்

"அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ" - ஒவ்வொரு தனிநபரும் இயேசு கிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். (மாற்கு 16:16; யோவான் 3:16; யோவான் 6:37).

அதிகாரம் (power) - ἐξουσία - **exousia** - 1849

பெண்பால் பெயர்ச்சொல் - அதிகாரம், வல்லமை, ஆதீனம் **(delegated power; the liberty and right to use power)** - அதிகாரம் செலுத்தும் உரிமை. ஒவ்வொரு மனுஷனுக்கும் இரட்சிப்படைவதற்கு உரிமை இருக்கிறது. (யோவான் 3:16; யோவான் 6:37; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17).

"அவர்கள்" - இயேசு கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்கள். (யோவான் 1:12; மத் 1:21; அப் 2:21; அப் 3:16; அப் 4:12).

"பிறந்தவர்கள்" - இதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல் "கென்னாவோ" **(gennaoo)** சுவிசேஷத்தின் மூலமாக இயேசு கிறிஸ்துவிடம் ஒரு நபரை அழைத்து வருதல் என்று பொருள். (1கொரி 4:15; பிலே 1:10) தேவனுடைய குடும்பத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற ஜனங்கள் என்றும் இதற்குப் பொருள் கூறலாம். (யோவான் 3:3; 1யோவான் 2:29; 1யோவான் 3:9; 1யோவான் 5:1,18; ரோமர் 8:15) புதிய சரீரம், புதிய ஆத்துமா, புதிய ஆவி ஆகியவற்றோடு பிறந்தவர்கள் என்று இந்த வார்த்தைக்குப் பொருள் கூறக்கூடாது. ஏனென்றால் இயேசு கிறிஸ்து மட்டுமே தேவனுடைய ஒரேபேறான குமாரன். மரியாள் முதலாவது பெற்றெடுத்த பிள்ளை. (யோவான் 1:14,18; யோவான் 3:16; மத் 1:3)

பிறந்திரு (born) - γεννάω - **gennaoo** - 1080

வினைச்சொல் - பெறு, பிறந்திரு, உண்டாயிரு, எழும்பு, ஜனித்திரு, (ஜென்ம), ஜெநிப்பி **(a bringing forth)**

"இரத்தத்தினாலாவது" - மனுஷனுடைய இரத்தச் சம்பந்தமான பிறப்பினால் யாரும் தேவனுடைய பிள்ளைகளாக ஆவதில்லை.

"மாம்ச சித்தத்தினாலாவது" - தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று, தன்னுடைய மாம்சத்தின் பிரகாரமாகத் தீர்மானம் பண்ணுவதினாலும் ஒருவரும் தேவனுடைய பிள்ளைகளாக ஆவதில்லை.

"புருஷனுடைய சித்தத்தினாலாவது" - மனுஷருடைய கொள்கைகளினாலோ, கோட்பாடுகளினாலோ, மார்க்க உபதேசங்களினாலோ யாருமே தேவனுடைய பிள்ளைகளாக ஆவதில்லை. தேவனே மனுஷனை இரட்சிப்பதற்காக அவன் அனுபவிக்க வேண்டிய தண்டனையைக் கல்வாரி சிலுவையில் தாமே ஏற்றுக் கொண்டு, தமது திரு இரத்தத்தைச் சிந்தி, மனுஷனை இரட்சிக்கிறார். இதன் மூலமாகவே இரட்சிக்கப்பட்டவர்கள், தேவனுடைய பிள்ளைகளாக ஆகிறார்கள். (யோவான் 3:16; ரோமர் 3:20-30; 2கொரி 5:14-21).

3. வார்த்தை மாம்சமாகிறார் - (ஏசா 7:14; 9:6; மத் 1:18; லூக் 1:35; ரோமர் 1:3; 8:3; கலா 4:4; 1தீமோ 3:16; எபி 1:5)

யோவான் 1:14 அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையிலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

"அந்த வார்த்தை மாம்சமாயிற்று" - அந்த வார்த்தை ஆவியாகவில்லை, தேவனாகவில்லை, பூமிக்குரிய காரியமாகவில்லை, பரலோகத்திற்குரிய காரியமாகவில்லை. அந்த வார்த்தை மாம்சமாயிற்று. இதனால் இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரனாக ஆகிறார். இயேசு கிறிஸ்துவின் குமாரத்துவம் எப்போதுமே அவருடைய மானிடத்தன்மையையே விளக்கும். இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை விளக்காது. (லூக்கா 1:35; அப் 13:33)

யோவான் - தொகுப்புரை

1 அதிகாரம்

"அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" - மூலபாஷையில் எழுதப்பட்டிருக்கும் யோவான் சுவிசேஷத்தில் இந்த வசனம் அடைப்புக் குறிக்குள் (parentheses) கொடுக்கப் பட்டிருக்கிறது. யோவான் எழுதின சுவிசேஷத்தில் நாம் இதைப் போன்று பன்னிரெண்டு வாக்கியங்களை அடைப்புக் குறிக்குள் வாசிக்கிறோம். அவையாவன: (யோவான் 1:14,38; யோவான் 2:9; யோவான் 4:8; யோவான் 6:23; யோவான் 7:39,50; யோவான் 9:7; யோவான் 11:2; யோவான் 19:31; யோவான் 21:7,8).

"மகிமை" - (மத் 17:2; மாற்கு 9:3; லூக்கா 9:29; 2பேதுரு 1:16-17)

"பிதாவுக்கு ஒரேபேறானவர்" - இயேசு கிறிஸ்து மட்டுமே பிதாவின் ஒரேபேறான குமாரனாக இருந்தார், இருக்கிறார், எப்போதும் இருப்பார். (யோவான் 1:14,18; யோவான் 3:16,18; 1 யோவான் 4:9) இயேசு கிறிஸ்து ஒரேபேறானவர் என்று கூறுகிறோம். மனுஷர் யாரும் இயேசு கிறிஸ்துவைப்போல ஒரேபேறானவராக இருப்பதில்லை. மனுஷருடைய பிறப்பு வேறு, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு வேறு. (மத் 1:18-25; லூக்கா 1:34-35) விசுவாசிகள் தேவனுடைய பிள்ளைகளாகும்போது தேவன் நம்மைச் சுவீகாரப் புத்திரராக அங்கீகரிக்கிறார். அவர் நம்மை இயேசுவைப் பெற்றெடுத்ததுபோல பெற்றெடுப்பதில்லை. (ரோமர் 8:15; ரோமர் 9:4; கலா 4:5; எபே 1:5)

IV. யோவான் ஸ்நானன் - (மத் 3:1; மாற்கு 1:1; லூக் 3:1; யோவான் 1:6)

யோவான் 1:15 யோவான் அவரைக் குறித்துச் சாட்சி கொடுத்து: எனக்குப் பின்வருகிறவர்எனக்கு முன்னிருந்தவர், ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான் என்று சத்தமிட்டுக் கூறினான்.

"எனக்கு முன்னிருந்தவர்" - இயேசு கிறிஸ்து அநாதிக் காலமாக இருக்கிறார். ஆகையினால் அவர் யோவானுக்கு முன்னிருந்தவர். அதே வேளையில் இந்த உலக ஊழியத்தில் இயேசு கிறிஸ்து யோவானுக்குப் பின்பே வருகிறார். (மத் 3:11; லூக்கா 3:17; யோவான் 1:31-33).

V. இயேசு கிறிஸ்து - கிருபை, சத்தியம் ஆகியவற்றின் ஆதாரம் - (யோவான் 14:6, 12-26; 17:2)

யோவான் 1:16 அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம்.

யோவான் 1:17 எப்படியெனில் நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.

யோவான் 1:18 தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.

பரிபூரணம் (fulness) - πλήρωμα - pleerooma - 4138

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அதிகம், நிறைவு, பரிபூரணம், சம்பூரணம் (fullness, abundance, completeness) - மனுஷருடைய நியாயமான எல்லாத் தேவைகளும் சந்திக்கப்படும் என்று சுவிசேஷம் வாக்குபண்ணுகிறது. (2கொரி 1:20; மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-17; யோவான் 15:7,16; யோவான் 16:23-26).

"கிருபையின்மேல் கிருபை" - நமது தேவைகளுக்கு ஏற்ற பிரகாரம் தேவன் தமது கிருபையை நமக்கு அளவில்லாமல் கொடுத்துக் கொண்டே இருப்பார். (எபி 4:14-16; எபி 10:19-38; யாக் 1:5-8)

"நியாயப்பிரமாணம்" - இது எப்போதுமே மனுஷரைக் குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கும். மார்க்க ரீதியாக மனுஷர் செய்ய வேண்டிய காரியங்களை அறிவுறுத்தும்.

1 அதிகாரம்

"மோசே" - யோவான் சுவிசேஷத்தில் மோசே 13 இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறார். (யோவான் 1:17,45; யோவான் 3:14; யோவான் 5:45-46; யோவான் 6:32; யோவான் 7:19-23; யோவான் 8:5; யோவான் 9:28-29).

"கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" - மோசேக்கு முன்பாக நியாயப்பிரமாணம் இல்லை என்று கூறமுடியாது. அதுபோலவே இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாக கிருபையும், சத்தியமும் இல்லை என்றும் கூறமுடியாது. நியாயப்பிரமாணமே சத்தியம். புதிய ஏற்பாடே நியாயப்பிரமாணம். புதிய ஏற்பாட்டில் 1,050 கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிற கருத்து, கிருபையின் நிறைவு. இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயிற்று என்பதாகும். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் ஓரளவு மட்டுமே பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களைப் புதிய ஏற்பாட்டுக்கால விசுவாசிகள் பரிபூரணமாக பெற்றுக் கொள்ளலாம்.

"கண்டது" - ஒருவருடைய சொந்த கண்களினாலும், சொந்த மனதினாலும் காண்பது. தேவனைப் பலர் தங்கள் கண்களால் கண்டிருக்கிறார்கள். (ஆதி 18:2,33; ஆதி 32:24-30; யாத் 24:10; யாத் 33:11; யோசு 5:13; ஏசா 6; எசே 1:26-28; தானி 7:9-14; தானி 10:5-6; அப் 7:56-59; வெளி 4:2-5; வெளி 5:1-7) ஆனால் அவர்கள் தேவனை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே தேவனை வெளிப்படுத்தினார். தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை என்பது தேவனை ஒருவனும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்று பொருள்படும். குமாரன் வெளிப்படுத்துவதை மட்டுமே விசுவாசிகள் காணமுடியும். இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் தேவனை முழுமையாகப் புரிந்து கொண்டவர். (யோவான் 3:34; அப் 10:38; ஏசா 11:1-2; ஏசா 61:1-2; லூக்கா 4:16-18)

காண்பி (seen) - ὁράω - horaoo - 3708

வினைச்சொல் - காண்பி, எச்சரிக்கையாயிரு, பார், காண், தரிசி

"பிதாவின் மடி" - (லூக்கா 6:38)

வெளிப்படுத்தினார் (declared) - ἐξηγέομαι - exeegeomai - 1834

வினைச்சொல் - விவரித்துச் சொல், வெளிப்படுத்து (revealed, expounded) - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் லூக்கா 24:35; அப் 10:8; அப் 15:12,14; அப் 21:19 ஆகிய வசனங்களிலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

zVI. யோவான் ஸ்நானன்

1. **யோவான் ஸ்நானன் தன்னைப் பற்றி கூறிய சாட்சி** - (1:15; 3:25; மத் 3:3; மாற்கு 1:3; லூக் 3:4)

யோவான் 1:19 எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி: நீர் யார் என்று கேட்ட பொழுது,

யோவான் 1:20 அவன் மறுதலியாமல் அறிக்கை யிட்டதுமன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான்.

யோவான் 1:21 அப்பொழுது அவர்கள்: பின்னை யார்? நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு: நான் அவன் அல்ல என்றான். நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள். அதற்கும் அல்ல என்றான்.

யோவான் 1:22 அவர்கள் பின்னும் அவனை நோக்கி: நீர் யார்? எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்படிக்கு, உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர் என்று கேட்டார்கள்.

யோவான் 1:23 அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான்.

1 அதிகாரம்

யோவான் 1:24 அனுப்பப்பட்டவர்கள் பரிசேயராயிருந்தார்கள்.

"நான் கிறிஸ்து அல்ல" - யோவான் ஸ்நானன் கிறிஸ்துவோ, எலியாவோ அல்லது கடந்த காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசியோ அல்ல. அவன் ஒரு சாதாரண மனுஷன். சகரியாவிற்கும், எலிசபெத்திற்கும்பிறந்தவன்.(லூக்கா 1:24,57) அவன் எலியாவின் ஆவியோடும், வல்லமையோடும் வந்தான். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக எலியா என்ன செய்வாரோ அதை இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்பாக இஸ்ரவேல் ஜனங்களுக்குச் செய்வதற்காக யோவான் ஸ்நானன் வந்தான். (மல் 4:5-6; லூக்கா 1:17) இந்தக் கருத்து மத் 11:14; மத் 17:10-13 ஆகிய வசனங்களை விளக்கும்.

"தீர்க்கதரிசியானவர்" - மோசே முன்னறிவித்த தீர்க்கதரிசியானவரா என்று கேட்கிறார்கள். (உபா 18:15-18; அப் 3:22-23; அப் 7:37).

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 1

"கர்த்தருக்கு வழியைச் செவ்வை பண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன்" (யோவான் 1:23; ஏசா 40:3)

"ஏசாயா" - யோவான் சுவிசேஷத்தில் ஏசாயாவின் பெயர் நான்கு இடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யோவான் 1:23; யோவான் 12:38-41)

2. யோவான் ஸ்நானன் தன் ஞானஸ்நானத்தைப் பற்றி கூறிய சாட்சி - (3:25; மத் 3:11; மாற்கு 1:4; லூக் 3:3,16)

யோவான் 1:25 அவர்கள் அவனை நோக்கி: நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்கதரிசியானவருமல்ல வென்றால், ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர் என்று கேட்டார்கள்.

யோவான் 1:26 யோவான் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்.

யோவான் 1:27 அவர் எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான்.

யோவான் 1:28 இவைகள் யோர்தானுக்கு அக்கரையில் யோவான் ஞானஸ்நானங் கொடுத்த பெத்தாபராவிலே நடந்தன.

"ஞானஸ்நானங் கொடுக்கிறீர்" - ஒருவர் யூதமார்க்கத்தில் சேரும்போது அவருக்கு நியாயப்பிரமாண முறைமையின் பிரகாரம் சுத்திகரிப்பு செய்வது வழக்கம். ஆலோசனைச் சங்கத்தின் அனுமதியின் பேரிலேயே ஒருவரை யூதமார்க்கத்தில் சேர்க்க முடியும். மூன்று நியாயசாஸ்திரிகள் அல்லது வேதபாரகர்கள் சுத்திகரிப்பு செய்யும்போது உடனிருப்பார்கள். யோவான் ஸ்நானன் யூதருடைய முறைமையைப் பின்பற்றாமல் ஞானஸ்நானம் கொடுத்து வந்தான். யூதமார்க்கத்துத் தலைவர்களுக்கு அவனுடைய செயல் பிடிக்கவில்லை. பரிசேயரின் பழக்கவழக்கங்களுக்கு யோவான் ஸ்நானன் முரண்பாடாகச் செய்கிறான்.

"நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிறார்" - மேசியாவை இஸ்ரவேல் ஜனங்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். யோவான் ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு இதுவே காரணம். (யோவான் 1:26-31).

"பெத்தாபரா" (Bethabara) - பழைய ஏற்பாட்டு எபிரெய சுவடிகளில் பல இந்தக் கிராமத்தைப் பெத்தானியா (Bethania) என்றே கூறுகின்றனர். எரிகோவிற்கு எதிரே யோர்தான் நதிக்கரை ஓரமாக இந்தக் கிராமம் அமைந்திருந்தது. (நியா 7:24; யோவான் 10:39-42)

யோவான் - தொகுப்புரை

1 அதிகாரம்

3. **யோவான் ஸ்நானன் இயேசு கிறிஸ்துவைப் பற்றி கூறிய சாட்சி** - (3:25; மத் 3:11; மாற்கு 1:7; லூக் 3:16)

யோவான் 1:29 மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி.

யோவான் 1:30 எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் எனக்கு முன்னிருந்த படியால் என்னிலும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே, அவர் இவர்தான்.

யோவான் 1:31 நானும் இவரை அறியாதிருந்தேன்; இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்படும் பொருட்டாக, நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்க வந்தேன் என்றான்.

யோவான் 1:32 பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப் போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன்.

யோவான் 1:33 நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனால் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார்.

யோவான் 1:34 அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன் என்றான்.

தீர்க்கதரிசன எண் - 1

“இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி..............” (யோவான் 1:29-33) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

“தேவஆட்டுக்குட்டி” - வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவிற்கு அடையாளப் பெயராக தேவஆட்டுக்குட்டி 32 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஏசா 53:7; யோவான் 1:29,36; அப் 8:32; 1பேதுரு 1:19; வெளி 5:6-13; வெளி 6:1,16; வெளி 7:9-17; வெளி 12:11; வெளி 13:8; வெளி 14:1-10; வெளி 15:3; வெளி 17:14; வெளி 19:7-9; வெளி 21:9-27; வெளி 22:1-3)

சுமந்து தீர்க்கிற **(taketh away)** - **αἴρω** - **airoo** - 142

விணைச்சொல் - சுமந்து தீர்க்கிற - பாவத்தை அகற்றுதல், குற்ற உணர்வையும், தண்டனையையும் அகற்றுதல். (1பேதுரு 2:24; சங் 103:12; 1யோவான் 3:5, மாற்கு 16:18)

“பாவம்” - இலக்கைத் தவறவிடுதல் **(missing the mark).** செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் இருப்பதும், செய்ய வேண்டாதவற்றைச் செய்வதும் பாவம். இது சிந்தையாகவோ, செயலாகவோ, வார்த்தையாகவோ இருக்கலாம். இலக்கை எவ்வாறு குறிபார்த்து எய்வது. அதாவது இலக்கை எவ்வாறு தவறவிடாமல் இருப்பது என்பதை உபதேசம் பண்ணுவதற்காகவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். (தீத்து 2:11-14; 1யோவான் 2:1-2,29; 1யோவான் 3:9; 1யோவான் 5:1-4,18).

பாவம் **(sin)** - **ἁμαρτία** - **hamartia** - 266

பெண்பால் விணைப்பெயர் - பாவம், தோல்வி

(அ) பாவச் செயல் (1கொரி. 15:17)

(ஆ) பாவத்தில் முங்கியிருத்தல். எப்பொழுதும் பாவத்தில் இருத்தல் (யோவா. 1:21), (ரோம. 3:1)

“அவர் எனக்கு முன்னிருந்தபடியால்” - (மீகா 5:2; ஏசா 9:6-7; எபி 1:8; வெளி 1:8)

1 அதிகாரம்

"நானும் இவரை அறியாதிருந்தேன்" - யோவான் இயேசு கிறிஸ்துவை அறியவில்லை. இயேசுவை அனுப்பிய பிதாவை யோவான் அறிந்திருந்தான். (யோவான் 1:33) யோவானும், இயேசுவும் உறவினர் என்பதை வேதவாக்கியம் தெளிவாக வெளிப்படுத்தவில்லை. (லூக்கா 1:36)

வெளிப்படுத்து (manifest) - **φανερόω** - phanerooo - 5319

வினைச்சொல் - வெளியரங்கமாக்கு, வெளிப்படுத்து, தரிசனமாகு, விளங்கப்பண்ணு, தோன்று **(to bring to light)** - இஸ்ரவேல் ஜனங்களுக்கு மேசியாவை அறிமுகப்படுத்துதல் அல்லது வெளிப்படுத்துதல் என்று பொருள். (யோவான் 1:11; மத் 15:24).

சாட்சியாகச் சொல் (bare record) - **μαρτυρέω** - martyreoo - 3140

வினைச்சொல் - சாட்சிகளாயிரு, சாட்சிகொடு, சாட்சிசொல், சாட்சியாக அறிவி **(bear witness)**

மேசியாவிற்குச் சாட்சிகள்

1. பிதா (யோவான் 5:32-37; யோவான் 8:18)
2. குமாரன் (யோவான் 8:14; யோவான் 18:37)
3. பரிசுத்த ஆவியானவர் (யோவான் 15:26; யோவான் 16:13-15)
4. எழுதப்பட்ட வார்த்தை (யோவான் 1:45; யோவான் 5:39-46)
5. இயேசு கிறிஸ்துவின் கிரியைகள் (யோவான் 5:17, 36; யோவான் 10:25; யோவான் 14:11; யோவான் 15:24)
6. யோவான் ஸ்நானன் (யோவான் 1:7; யோவான் 5:32-35)
7. சீஷர்கள் (யோவான் 15:27; யோவான் 19:35; யோவான் 21:24)

தங்கியிரு (abode) - **μένω** - menoo - 3306

வினைச்சொல் - தங்கியிரு, நிலைத்திரு, தரித்திரு, இரு, வாசம் பண்ணு, நிலைக்கொண்டிரு, நிலைநில் **(abide, dwell, remain)** - யோவான் சுவிசேஷத்தில் இந்த வார்த்தை 41 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மற்ற சுவிசேஷங்களில் 12 தடவைகளே பயன்படுத்தப்பட்டிருக்கிறது

"என்னை அனுப்பினவர்" - திரித்துவத்திற்கு இந்த வாக்கியம் ஒரு சான்றாகும். யோவான் ஸ்நானன் குமாரனை அறியவில்லை. பிதாவை அறிந்திருந்தார். பரிசுத்த ஆவியானவர் பிதாவிடத்திலிருந்து இறங்கி, குமாரன்மீது தங்குவதைக் கண்டார். (மத் 3:16-17; லூக்கா 3:22).

"காண்பாயோ" - கண்களினால் பார்ப்பது மட்டுமல்ல. காணும் பொருளை முழுமையாக உணருவது. ஒரே இடத்தில் ஒரே வேளையில் பிதாவையும், குமாரனையும் யோவான் தனது கண்களால் காண்கிறான். (தானி 7:9-14; அப் 7:55; வெளி 5:7; வெளி 7:10) பிதாவையும், குமாரனையும் தவிர, பரிசுத்த ஆவியானவரைத் தனிநபராகக் காண்கிறான்.

காண் (see) - **εἴδω** - eidoo - 1492

வினைச்சொல் - காண், அறி, பார், தெரிந்திரு, நோக்கு, உணர், அறிந்திரு, விளங்கு

"ஆவியானவர் இறங்கி இயேசு கிறிஸ்துவின்மேல் தங்கினார்" - ஏசா 11:2; ஏசா 42:1; ஏசா 61:1 ஆகிய வசனங்களின் நிறைவேற்றம். மத் 3:16-17; மாற்கு 1:10; லூக்கா 3:22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

"பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கிறவர்" - இயேசு கிறிஸ்துவே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானங் கொடுக்கிறவர். (மத் 3:11; லூக்கா 3:16; லூக்கா 24:49; யோவான் 1:33; யோவான் 7:37-39; யோவான் 15:16-17,26; யோவான் 15:26; அப் 1:4-8; அப் 11:16)

1 அதிகாரம்

VII. இயேசு கிறிஸ்துவின் ஊழியமும் உபதேசமும் - (மத் 4:14; மாற்கு 1:14; லூக் 4:14)

1. யோவான் ஸ்நானன் ஆதாயம் பண்ணிய இரண்டு சீஷர்கள்

யோவான் 1:35 மறுநாளிலே யோவானும் அவனுடையசீஷரில் இரண்டுபேரும் நிற்கும் போது,

யோவான் 1:36 இயேசு நடந்து போகிறதை அவன் கண்டு: இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான்.

யோவான் 1:37 அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷருங் கேட்டு, இயேசுவுக்குப் பின்சொன்றார்கள்.

யோவான் 1:38 இயேசு திரும்பி, அவர்கள் பின் செல்லுகிறதைக் கண்டு: என்னை தேடுகிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள்; ரபீ என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.

யோவான் 1:39 அவர்: வந்து பாருங்கள் என்றார். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள். அப்பொழுது ஏறக்குறையப் பத்துமணி வேளையாயிருந்தது.

"அவனுடையசீஷரில் இரண்டுபேர்" - ஒருவன் அந்திரேயா. (யோவான் 1:40) மற்றவன் அப்போஸ்தலனாகிய யோவானாக இருக்க வேண்டும். இந்தப் புஸ்தகத்தில் இவனுடைய பெயர் எங்கும் குறிப்பிடப்படவில்லை. (யோவான் 19:35; யோவான் 20:2-4; யோவான் 21:2,7,20-25; லூக்கா 24:13))

காண் (looking upon) - ἐμβλέπω - **emblepoo** - 1689

வினைச்சொல் - கவனித்துப்பார், காண், பார், கூர்ந்து கவனி, கவனமாகப் பார். **(to look with fixed eyes upon, look intently)**

"தேவஆட்டுக்குட்டி" - (யோவான் 1:29)

"ரபீ" - (லூக்கா 9:38)

"ரபீ என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம்" - அர்த்தம் என்றால் வியாக்கியானம் என்று பொருள். (மாற்கு 4:22, யோவான் 1:42; யோவான் 9:7; எபி 7:2)

அர்த்தம் (interpret) - ἑρμηνεύω - **hermeeneuoo** - 2059

வினைச்சொல் - அர்த்தம்

"பத்துமணிவேளை" - மாலை 4 மணி

2. அந்திரேயா ஆதாயம் பண்ணிய பேதுரு

யோவான் 1:40 யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின்சென்ற இரண்டுபேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன்.

யோவான் 1:41 அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம்.

யோவான் 1:42 பின்பு, அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக் கொண்டுவந்தான். இயேசு அவனைப் பார்த்து: நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்.

"மேசியாவைக் கண்டோம்" - மேசியாவைக் கண்டவர்களுடைய ஜீவியம் மாற்றமடையும். (2கொரி 5:17-18) மேசியாவைக் கண்டவர்கள் மற்றவர்களை மேசியாவிடம் அழைத்து வருவார்கள். சபையிலும், பழைய விசுவாசிகள் புதிய விசுவாசிகளை அழைத்துக் கொண்டு வரவேண்டும்.

1 அதிகாரம்

"மேசியா" - அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பது இந்த வார்த்தையின் பொருள். இது ஒரு எபிரெய வார்த்தை. (யோவான் 1:41; யோவான் 4:25; 1சாமு 2:10,35; சங் 2:2; தானி 9:25-26) ஆசாரியர்களைக் குறிப்பதற்கு இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (லேவி 4:3-5; லேவி 6:22), இராஜாக்கள் (1சாமு 12:3-5; 1சாமு 16:6; 1சாமு 24:6-10; 1சாமு 26:9-23; 2சாமு 1:14-21; 2சாமு 19:21; 2சாமு 22:51; 2சாமு 23:1), தீர்க்கதரிசிகள் (1நாளா 16:22; சங் 105:15; சக 4:14) ஆகியோரையும் இந்தச் சொல் குறிப்பிடுகிறது. பாபிலோனை அகற்றுவதற்குத் தேவன் தெரிந்தெடுத்த புறஜாதி ராஜாவிற்கும், இந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஏசா 45:1) லூசிபரைக் குறிப்பதற்குக் கூட இத்துடன் தொடர்புடைய ஒரு வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (எசே 28:14) மேசியா என்னும் எபிரெயச் சொல் புதிய ஏற்பாட்டின் கிரேக்க மொழியிலும், மேசியா என்றே **(mashiyach)**எழுதப்பட்டிருக்கிறது. (மத் 1:1)

மேசியா **(Messias)** - **מָשִׁיחַ** - **maw-shee'-akh - 4899**

ஆண்பால் பெயர்ச்சொல் - மேசியா, அபிஷேகம் பெற்றவர், அபிஷேகம் பண்ணப்பட்டவர்

கிறிஸ்து - **Χριστός** - **Christos** - 5547

பெயர்ச்சொல் - கிறிஸ்து

"அபிஷேகிக்கப்பட்டவர்"

"யோனா" **(Jona)** - யோவான் என்னும் பெயரின் அரமாயிக் மொழிவடிவம்.

"கேபா" **(Cephas)** கல் என்னும் பொருளைக் குறிக்கும் அரமாயிக் மொழிச்சொல். (1கொரி 1:12; 1கொரி 3:22; 1கொரி 9:5; 1கொரி 15:5; கலா 2:9)

பேதுரு **(Peter)** - **Πέτρος** - **Petros** - 4074

ஓர் ஆணின் பெயர் - பேதுரு, கேபா, கல் (யோவான் 1:42) - புதிய ஏற்பாட்டில் 161 இடங்களில் "பேதுரு" என்றே இந்தச் சொல் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. (மத் 16:18) ஒரு மனுஷனை இயேசு கிறிஸ்து முதன் முறையாகப் பார்க்கும் போதே அவன் எப்பேர்ப்பட்டவன் என்பதைத் தீர்மானம் பண்ணி விடுகிறார். பேதுரு உறுதியானவன். ஆத்துமாவில் பெலமுள்ளவன்.

3. இயேசுவானவர் தாமே ஆதாயம் பண்ணிய பிலிப்பு

யோவான் 1:43 மறுநாளிலே இயேசு கலிலேயாவுக்குப் போக மனதாயிருந்து, பிலிப்புவைக் கண்டு: நீ எனக்குப் பின்சென்று வா என்றார்.

யோவான் 1:44 பிலிப்பென்பவன் அந்திரேயா பேதுரு என்பவர்களுடைய ஊராகிய பெத்சாயிதா பட்டணத்தான்.

"கலிலேயா" - இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தை இங்கு ஆரம்பிக்கிறார். (மத் 4:12; மாற்கு 1:14; லூக்கா 4:14).

"பெத்சாயிதா" **(Bethsaida)**-(லூக்கா 9:10)

4. பிலிப்பு ஆதாயம் பண்ணிய நாத்தான்வேல்

யோவான் 1:45 பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு: நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக்கண்டோம்: அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்.

யோவான் 1:46 அதற்கு நாத்தான்வேல்: நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமோ என்றான். அதற்குப் பிலிப்பு: வந்து பார் என்றான்.

"நாத்தான்வேல்" - இந்தப் பெயரின் பொருள். தேவனுடைய வெகுமதி என்பதாகும். பார்த்தொலொமேயுவும் **(Bartholomew)** நாத்தான்வேலும் ஒரே நபராக இருக்கலாம். அப்போஸ்தலர்களின் பெயர் பட்டியலில் இவனுடைய பெயர் பிலிப்புடன் சேர்ந்து வருகிறது. (மத் 10:3; மாற்கு 3:18; லூக்கா 6:14; யோவான் 21:2; அப் 1:13). நாத்தான்வேலின் சுபாவம், அவன் இயேசுவைச் சந்தேகப்பட்டது, கேள்விக் கேட்டது, விசுவாச அறிக்கை செய்தது ஆகியவற்றை யோவான் 1:45-51 ஆகிய வசனங்களில் நாம் வாசித்தறியலாம்.

1 அதிகாரம்

"யோசேப்பின் குமாரன்" - இவை பிலிப்பு கூறிய வார்த்தையாகும். அக்காலத்து ஜனங்கள் இயேசுவை யோசேப்பின் குமாரன் என்றே கூறினார்கள். (மத் 13:55)

"நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா" - இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே பூமியிலுள்ள மனுஷருக்கு நன்மை உண்டாகும்.

5. நாத்தான்வேலின் சந்தேகங்கள் நிவர்த்தியாகிறது

யோவான் 1:47 இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக் குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்.

யோவான் 1:48 அதற்கு நாத்தான்வேல்: நீர் என்னை எப்படி அறிவீர் என்றான். இயேசு அவனை நோக்கி: பிலிப்பு உன்னை அழைக்கிறதற்குமுன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன் என்றார்.

யோவான் 1:49 அதற்கு நாத்தான்வேல்: ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான்.

"இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" - நாத்தான்வேலை இயேசு கிறிஸ்து பார்த்தவுடன் அவனுடைய சுபாவத்தை அப்படியே வெளிப்படுத்துகிறார். (யோவான் 1:42) யாக்கோபு ஜெபத்தில் ஜெயம் பெற்றதினால் கபடற்றவன் என்னும் பெயரைப் பெற்றான். (ஆதி 32:24-32). கபடற்றவன் என்பதற்கு ஏமாற்றாதவன் என்று பொருள்.

"நீர் என்னை எப்படி அறிவீர்" - பரிசுத்த ஆவியானவரின் வரத்தினால் இயேசு கிறிஸ்து நாத்தான்வேலை அறிகிறார்.(யோவான்3:34; 1கொரி 12:4-11).

"ரபீ" - (லூக்கா 9:38)

"தேவனுடைய குமாரன்" - (மத் 16:16)

6. இயேசு கிறிஸ்துவின் முதலாவது தீர்க்கதரிசனம்

யோவான் 1:50 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்; இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார்.

யோவான் 1:51 பின்னும், அவர் அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷ குமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்" - இயேசு கிறிஸ்து தமது கண்களால் நாத்தான்வேலைக் காண்பதற்கு முன்பாக அவனை ஆவியில் காண்கிறார். அதைத் தெரிந்தவுடன் நாத்தான்வேல் இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடுகிறான்.

தீர்க்கதரிசன எண் - 2

"இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்............" (யோவான் 1:50-51) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. நாத்தான்வேல் தேவனுடைய மகத்துவமான கிரியைகளைக் கண்டான். மூன்று வருஷங்களாக அவன் இயேசு கிறிஸ்துவோடு கூடஇருந்து, அவர் செய்த அற்புதங்களையெல்லாம் தன் கண்களால் பார்த்தான். யோவான் 1:15 எப்பொழுது நிறைவேறிற்று என்று கூறப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் நித்திய ராஜ்ஜியத்தில் இது நிறைவேறலாம். அப்போது வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் தேவனுடைய நித்திய ராஜ்ஜியத்தில் காணலாம். (மத் 13:41-43; மத் 24:31; மத் 25:31; 2தெச 1:7)

1 அதிகாரம்

"மெய்யாகவே மெய்யாகவே" - நிச்சயமாக என்றும் பொருள்படும். "ஆமென்" என்றும் இதற்குப் பொருள்கூறலாம். மெய்யாகவே மெய்யாகவே என்று யோவான் 25 இடங்களில் கூறியிருக்கிறார். (யோவான் 1:51; யோவான் 3:3,5,11; யோவான்5:19,24,25;யோவான்6:26,32,47,53; யோவான் 8:34, 51, 58; யோவான் 10:1,7; யோவான் 12:24; யோவான் 13:16,20,21,38; யோவான் 14:12; யோவான் 16:20,23; யோவான் 21:18) இயேசு கிறிஸ்து சத்தியத்தைக் கூறுகிறார். அவரால் மட்டுமே ஒரு காரியத்தை இவ்வாறு வலியுறுத்திக் கூறமுடியும். (யோவான் 14:6) மற்ற இடங்களிலெல்லாம் "மெய்யாகவே" என்று ஒரு தடவை மட்டுமே இந்த வார்த்தைப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் 16 தடவைகளும், மத்தேயுவில் 30 தடவைகளும், மாற்குவில் 15 தடவைகளும், லூக்காவில் 8 தடவைகளும் இந்த வாக்கியம் வந்திருக்கிறது. சுவிசேஷப் புஸ்தகங்களில் இயேசு கிறிஸ்து மட்டுமே "மெய்யாகவே" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். சுவிசேஷப் புஸ்தகங்கள் தவிர புதிய ஏற்பாட்டில் 21 தடவைகள் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சுவிசேஷப் புஸ்தகத்தில் இயேசு கிறிஸ்து "மெய்யாகவே" என்னும் வாக்கியத்தை 103 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார். மற்ற 62 புஸ்தகங்களில் இதர ஆசிரியர்கள் இந்த வாக்கியத்தை 36 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

"வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" - மனுஷகுமாரன் என்னும் வார்த்தை இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டில் 88 தடவைகளும், தானி 7:13 -இல் ஒரு தடவையும், இந்த வார்த்தை இயேசு கிறிஸ்துவைக் குறிக்குமாறு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து தேவனுடைய மனுஷன். மனுஷரை மீட்கிறவர். சாதாரண மனுஷருக்கும், இயேசுகிறிஸ்துவிற்கும் வித்தியாசம் ஏராளம் உள்ளன. இயேசு கிறிஸ்து மட்டுமே தேவனுடைய ஒரேபேறான குமாரன். மனுஷகுமாரன். (the Son of man)

2 அதிகாரம்

7. இயேசுவானவர் செய்த முதல்வாவது அற்புதம்

யோவான் 2:1 மூன்றாம்நாளிலே கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது; இயேசுவின் தாயும் அங்கேயிருந்தாள்.

யோவான் 2:2 இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப் பட்டிருந்தார்கள்.

யோவான் 2:3 திராட்சரசங்குறைவுபட்ட போது, இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள்.

யோவான் 2:4 அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார்.

யோவான் 2:5 அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள்.

யோவான் 2:6 யூதர்கள் தங்களைச் சுத்திகரிக்கும் முறைமையின்படியே, ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தது.

யோவான் 2:7 இயேசு வேலைக்காரரை நோக்கி: ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார்; அவர்கள் அவைகளை நிறைய நிரப்பினார்கள்.

யோவான் 2:8 அவர் அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்தி விசாரிப்புக் காரனிடத்தில் கொண்டுபோங்கள் என்றார்; அவர்கள் கொண்டுபோனார்கள்.

யோவான் 2:9 அந்தத் திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததேயன்றி பந்திவிசாரிப்புக் காரனுக்குத் தெரியாததினால், அவன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தபோது, மணவாளனை அழைத்து:

யோவான் 2:10 எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்த பின்பு, ருசிகுறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான்.

யோவான் 2:11 இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

"மூன்றாம்நாள்" - இயேசு கிறிஸ்து தமது ஊழியத்தை ஆரம்பிப்பதற்காக யோர்தானிலிருந்து புறப்பட்டு மூன்று நாட்களுக்குப் பின்பு.

"கலியாணம்" - கலியாண விருந்து (மத் 22:1-4) கிழக்கு தேசங்களில் கலியாண விருந்து ஒருவாரகாலம் நடைபெறும்.

"கலிலேயாவிலுள்ள கானா" - நாசரேத்திலிருந்து 7 மைல் தொலைவிலுள்ள ஊர். ஆசேரில் ஒரு கானா ஊர் உள்ளது. இவ்விரண்டு ஊர்களுக்கும் வேறுபடுத்திக் காண்பிப்பதற்காக இந்த ஊர் கலிலேயாவிலுள்ள கானா ஊர் என்று அழைக்கப்பட்டது.

"சீஷர்" - இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் முதலாவது வாரத்தில் அவரோடு எத்தனை சீஷர்கள் இருந்தார்கள் என்று தெரியவில்லை.

"திராட்சரசங்குறைவுபட்ட போது" - திராட்சரசம் தீர்ந்துவிட்டது.

"திராட்சரசம்"- (ஏசா 65:8)

2 அதிகாரம்

“ஸ்திரீயே” - தமது தாயை ஸ்திரீயே என்று அழைப்பது அவமரியாதையான வார்த்தையல்ல. கிழக்கு தேசத்தில் இது மரியாதைக்குரிய வார்த்தையே. (மத் 15:28; யோவான் 4:21; யோவான் 19:26; யோவான் 20:15).

“எனக்கும் உனக்கும் என்ன” - இந்த விஷயத்தில் நான் உனக்கு என்ன செய்ய வேண்டும். இயேசு கிறிஸ்து அற்புதம் செய்யக் கூடிய வேளை இன்னும் பூரணமாக வரவில்லை. ஒருவேளை திராட்சரசம் முழுவதுமாகக் காலியாவது வரைக்கும் பொறுத்திருக்குமாறு கூறியிருக்கலாம். முழுவதும் காலியான பின்பு, அற்புதம் செய்தால் அது மிகவும் சிறப்பாக இருக்கும். தேவனுடைய மகிமை பூரணமாக வெளிப்படும்.

“அவருடைய தாய்” - யோவான் சுவிசேஷத்தில் மரியாளின் பெயர் குறிப்பிடப்படவில்லை. (யோவான் 19:26-27).

“அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்” - இந்தச் சுவிசேஷத்தில் மரியாள் கூறியதாக எழுதப்பட்டிருக்கும் கடைசி வார்த்தைகள்.

“ஆறு கற்சாடிகள்” - விருந்தினர்களின் எண்ணிக்கைக்கேற்ப அங்கு ஆறு கற்சாடிகளைக் கொண்டு வருகிறார்கள்.

“பந்திவிசாரிப்புக்காரன்” - மணவாளனின் சிநேகிதனாக இருக்கலாம் அல்லது பந்தி பரிமாறுவதற்குப் பொறுப்பான நபராக இருக்கலாம்.

“எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுப்பான்” - இது மனுஷருடைய பழக்கம். ஆனால் தேவனோ எப்போதும் நல்லதையே கொடுக்கிறார்.

“திருப்தியடைந்தபின்பு” - போதுமான அளவு திராட்சரசம் பருகிய பின்பு. குடித்து வெறித்திருப்பது என்று பொருள்படாது.

“முதலாம் அற்புதம்” - ஒரு சில தள்ளுபடி ஆகமங்களில் **(apocryphal books)** இயேசு கிறிஸ்து இன்னும் அநேக அற்புதங்களைச் செய்ததாக எழுதியிருக்கிறார்கள். அவற்றைப் பரிசுத்த ஆவியானவர் ஏவியதாக நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகையினால் வேதவாக்கியத்தின் பிரகாரம் இதுவே முதலாம் அற்புதமாகும்.

“அற்புதம்” - இதன் கிரேக்க வார்த்தை “சேமேயோன்” **(seemeion)** தேவனுடைய கிரியையை உறுதிபண்ணும் நிகழ்ச்சி. ஓர் அடையாளம். இந்த வார்த்தை பல்வேறு விதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. 50 இடங்களில் அடையாளம் **(sign)** எனவும், 23 இடங்களில் அற்புதம் **(miracle)** எனவும், 3 இடங்களில் ஆச்சரியம் **(wonder)** எனவும், ஒரு இடத்தில் அடையாளம் **(token)** எனவும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தேவனுடைய அழைப்பை உறுதி பண்ணுவதற்காகவும் தேவனுடைய ஊழியத்தை உறுதிபண்ணுவதற்காகவும், தேவனுடைய பிள்ளைகள் அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்தார்கள். (மத் 12:38; மத் 16:1-4; மாற்கு8:11,மாற்கு16:17-20; லூக்கா 11:16,29; லூக்கா 23:8; யோவான் 2:11,18,23; யோவான் 3:2; யோவான் 4:54; யோவான் 6:2,14,26,30; யோவான் 7:31; யோவான் 9:16; யோவான் 10:41; யோவான் 11:47;யோவான் 12:18,37; யோவான் 20:30; அப் 2:22,43; அப் 8:6; 1கொரி 1:22; ரோமர் 15:19)

தேவனுடைய வல்லமை அற்புதங்களாலும், அடையாளங்களாலும் உறுதியாயிற்று. கள்ளப்போதகர்களுக்கு எதிராகத் தேவனுடைய பிள்ளைகள் சத்திய வசனங்களை உபதேசம் பண்ணியபோது, கர்த்தர் தமது வசனங்களை அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் உறுதிபண்ணினார்.(மத்24:24; மாற்கு 13:22; 2தெச 2:8-12; வெளி 13:13-18; வெளி 16:14; வெளி 19:20)

கடைசி நாட்களில் சாத்தான் அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து ஜனங்களை வஞ்சிப்பான். தமது கள்ள உபதேசங்களை ஜனங்களுடைய இருதயத்தில் வஞ்சனையாக போதிப்பான். சாத்தானுடையவல்லமையைவிட தேவனுடைய வல்லமை பெரிது. கர்த்தர் தமது பிள்ளைகளுக்குத் தமது வல்லமையை வாக்குபண்ணியிருக்கிறார். (மத் 17:20; மத் 18:18; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20; லூக்கா 10:19; யோவான் 14:12; அப் 1:8)

யோவான் - தொகுப்புரை

2 அதிகாரம்

அற்புதம் (miracle) - σημεῖον - seemeion - 4592

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - அடையாளம், அற்புதம், அதிசயம்

"தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்" - தேவன் தம்முடைய மகிமையை வெளிப்படுத்துவதற்காகவே அற்புதங்களைச் செய்கிறார். மனுஷருடைய பலவீனத்தினாலும், தோல்வியினாலும், பாவத்தினாலும், வியாதியினாலும் தேவன் மகிமையடைவதில்லை. தம்முடைய பிள்ளைகளின் பரிசுத்தத்தினாலும், பலத்தினாலும், வெற்றியினாலும், ஆரோக்கியத்தினாலுமே தேவன் மகிமையடைகிறார்.

8. கப்பர்நகூமை இயேசு தமது ஊழிய ஸ்தலமாக ஆக்குகிறார் - (மத் 4:13; மாற்கு 1:21; லூக் 4:31)

யோவான் 2:12 அதன்பின்பு அவரும் அவருடைய தாயாரும் அவருடைய சகோதரரும் அவருடைய சீஷரும் கப்பர்நகூமுக்குப்போய், அங்கே சிலநாள் தங்கினார்கள்.

"கப்பர்நகூமுக்குப்போய், அங்கே சிலநாள் தங்கினார்கள்" - கப்பர்நகூம் கலிலேயா கடற்கரையிலுள்ள ஊர். இந்த ஊரிலிருந்து கானா ஊர் 700 அடி உயரத்தில் இருந்தது.

"இயேசுவின் சகோரர்" - (லூக்கா 8:19)

9. தேவாலயத்தின் முதலாவது சுத்திகரிப்பு - (மத் 2:12)

யோவான் 2:13 பின்பு யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமாயிருந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போய்,

யோவான் 2:14 தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள் புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு,

யோவான் 2:15 கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டு பண்ணி, அவர்கள் யாவரையும் ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு,

யோவான் 2:16 புறாவிற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டு போங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார்.

யோவான் 2:17 அப்பொழுது: உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்தார்கள்.

"யூதருடைய பஸ்காபண்டிகை" - ஆரம்பத்தில் இது "கர்த்தருடைய பஸ்காபண்டிகை" (Lord's Passover) என்று அழைக்கப்பட்டது. (யாத் 12:11,27; லேவி 23:5; எண் 28:16) அதன் பின்பு, இந்தப் பண்டிகையை யூதருடைய பஸ்காபண்டிகை (Jews' Passover) என்று அழைத்தார்கள். (யோவான் 2:13; யோவான் 6:4; யோவான் 11:55).

கர்த்தருடைய பண்டிகைகள் (லேவி 23:2) இப்போது யூதருடைய பண்டிகைகள் ஆயிற்று. (யோவான் 5:1; யோவான் 6:4; யோவான் 7:2; யோவான் 11:56; யோவான் 19:42). கர்த்தருடைய கற்பனைகளையும், யூதர்கள் மாற்றிவிட்டார்கள். மனுஷருடைய பாரம்பரியங்களைக் கைக்கொள்கிறார்கள். (மத் 15:1-9; மத் 16:6-12).

"தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள் புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்கள்" - யோசபஸ் (Josephus) என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் பஸ்கா பண்டிகையைப் பற்றி எழுதியிருக்கிறார். தேவாலயத்தில் பஸ்கா பண்டிகையின்போது 256,500 விலங்குகளைப் பலியிடுவார்களாம். தேவாலயத்தில் மிகப்பெரிய வியாபாரம் நடந்திருக்கும். அனுமதி பெற்றவர்கள் மட்டுமே தேவாலயத்தில் ஆடுகளையும், மாடுகளையும், புறாக்களையும் விற்க முடியும். தேவாலயத்திற்கு மிகுந்த வருமானம் வந்திருக்கும்.

2 அதிகாரம்

"கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டு பண்ணி, அவர்கள் யாவரையும் ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டார்" - ஆடுமாடுகளையும், அவற்றை விற்றவர்களையும் இயேசு கிறிஸ்து தேவாலயத்திற்குவெளியே துரத்திவிடுகிறார். ஆடுகளை விற்றவர்களுக்கு தேவாலயத்தின் மகிமை தெரியாது. தேவாலயத்தைத் தாங்கள் அசுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்கள் பிரமாணத்தை மீறுகிறார்கள்.

"என் பிதாவின் வீடு" - இயேசு கிறிஸ்து 60 இடங்களில் தேவனை "என்பிதா" என்று அழைப்பதாக வாசிக்கிறோம். (யோவான் 2:16; யோவான் 5:17,43; லூக்கா 10:21)

யோவான்சுவிசேஷத்தில்நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 2

"உம்முடைய வீட்டைக் குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது" (யோவான் 2:17; சங் 69:9)

10. யூதர்கள் அடையாளத்தை நாடுகிறார்கள் - இயேசுவின் மரணத்தைப் பற்றிய முதலாவது தீர்க்கதரிசனம் - (மத் 12:38; லூக் 11:29)

யோவான் 2:18 அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: நீர் இவைகளைச் செய்கிறீரே, இதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர் என்று கேட்டார்கள்.

யோவான் 2:19 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்.

யோவான் 2:20 அப்பொழுது யூதர்கள்: இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள்.

யோவான் 2:21 அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்.

யோவான் 2:22 அவர் இப்படிச் சொன்னதை அவர் மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்து, வேதவாக்கியத்தையும் இயேசு சொன்ன வசனத்தையும் விசுவாசித்தார்கள்.

"நீர் இவைகளைச் செய்கிறீரே, இதற்கு என்ன அடையாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர்" - யோவான் 2:23 ஆகிய வசனத்தின் அடையாளங்கள்.

தீர்க்கதரிசன எண் - 3

"இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" (யோவான் 2:19) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (யோவான் 2:22; மத் 28:6-7,9; 1கொரி 15:3-4). இயேசு கிறிஸ்து தமது சரீரத்தைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறார்.

"இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ" - செருபாபேல் கட்டிய தேவாலயத்தை ஏரோது இடித்து விட்டு, அதைப் பெரிதாகவும், அழகாகவும் கட்டினான். கி.மு. 20 ஆம் ஆண்டில் ஏரோது தேவாலயத்தைக் கட்டும் வேலையை ஆரம்பித்தான்.

"மரித்தோரிலிருந்து" - இயேசு கிறிஸ்து மரித்து, மூன்றாம் நாளில் உயிருடன் எழும்பினார். மரித்தோரில் இயேசு கிறிஸ்துவே முதலாவது உயிர்த்தெழுந்தவர். (மத் 27:51-53; மத் 28:6; 1கொரி 15:12-23; வெளி 20:4-6; பிலி 3:11)

"வேதவாக்கியம்" - இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளெல்லாமே வேதவாக்கியம்தான். இங்கு கூறப்பட்டிருப்பது சங் 16:10 ஆவது வசனமாக இருக்கலாம்.

11. எருசலேமில் பல அற்புதங்கள்

யோவான் 2:23 பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

யோவான் - தொகுப்புரை

2 அதிகாரம்

யோவான் 2:24 அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை.

யோவான் 2:25 மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்க வில்லை.

"அவருடைய நாமத்தில் அநேகர் விசுவாசம் வைத்தார்கள்" - இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்ததினால் அநேகர் விசுவாசம் வைத்தார்கள். தம்மிடத்தில் ஜனங்கள் விசுவாசம் வைக்க வேண்டும் என்பதற்காகவும் இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்தார். (யோவான் 11:42)

"இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை." - அவர்களுடைய விசுவாசமும், சுபாவமும் உண்மையானவை அல்ல என்பது இயேசுவிற்குத் தெரிந்திருந்தது. பரிசுத்த ஆவியானவரின் வரத்தினால் இயேசு கிறிஸ்து இதைத் தெரிந்து கொண்டார். (1கொரி 12:4-11)

3 அதிகாரம்

12. இயேசுவும் நிக்கொதேமுவும்

(1) நிக்கொதேமு இயேசுவிடம் இராக்காலத்தில் வருகிறான்

யோவான் 3:1 யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான்.

யோவான் 3:2 அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான் என்றான்.

"யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான்" - நிக்கொதேமுவின் நிகழ்ச்சியை ஒரு சிலர் உவமை என்று கூறுகிறார்கள். "ஒருவன் இருந்தான்" என்னும் வாக்கியம் பொதுவாக உவமையிலேயே வரும். (மத் 12:10; மாற்கு 3:1; மாற்கு 6:20; லூக்கா 2:25; லூக்கா 4:33; லூக்கா 19:2; லூக்கா 23:50; யோவான் 1:6) ஆனால் இந்த வசனம் உவமையல்ல. உண்மை நிகழ்ச்சி.

"யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு" - யூதமார்க்கத்தில் ரபீ என்று அழைக்கப்பட்டவன். ஆலோசனைச் சங்கத்தின் உறுப்பினன். எருசலேமில் இருந்த மூன்று ஐசுவரியவான்களில் ஒருவன்.

நிக்கொதேமு செய்த காரியங்கள்

1. இயேசுவினிடத்தில் வந்தான். (யோவான் 3:1).
2. அவரைப் பற்றி சாட்சி கூறினான் (யோவான் 7:50-51).
3. அவருக்காக சேவை புரிந்தான் (யோவான் 19:39).

"இராக்காலம்" - நிக்கொதேமு இயேசு கிறிஸ்துவிடம் இராக்காலத்தில் வந்ததினால் வேதபண்டிதர்கள் இதைப் பலவிதமாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். ஒருவேளை பயத்தினாலோ அல்லது அவமானத்தினாலோ நிக்கொதேமு பகல்வேளையில் வராமல் இயேசு கிறிஸ்துவிடம் இராக்காலத்திலே வந்திருக்கலாம். (யோவான் 7:50; யோவான் 19:38-39, யோவான் 20:19.) கிறிஸ்துவிற்காக வெட்கப்படாத ஊழியர்கள் அநேகர் தங்களுக்குத் தேவன் கொடுத்திருக்கும் ஞானத்தைப் பயன்படுத்தி, சூழ்நிலை அறிந்து, தேவனுக்காக ஊழியம் செய்கிறார்கள்.

"நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம்" - யூதமார்க்கத்தின் தலைவர்களில் சிலர் இயேசு கிறிஸ்துவைத் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறார்கள். ஆனால் யூதமார்க்கத்துத் தலைவர்களில் அநேகருக்கு இந்த உண்மை தெரிந்திருந்தாலும் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாமல் இயேசுவைப் புறக்கணிக்கிறார்கள்.

"ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால்" - அற்புதங்களைச் செய்ய முடியாது. தேவன் நம்மோடு இருக்க வேண்டும். இதுவே வல்லமையின் இரகசியம். (அப் 10:38)

(2) மறுபடியும் பிறக்க வேண்டியதின் அவசியத்தை இயேசு கூறுகிறார் - (மத் 18:3)

யோவான் 3:3 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்" - வேதாகமத்தில் "விட்டால்" **Except** என்பது மிகவும் முக்கியமான வார்த்தை. இது ஒரு நிபந்தனை. வேதாகமத்தில் இதுபோன்ற நிபந்தனைகள். பல காரியங்களுக்குக் கூறப்பட்டிருக்கிறது.

3 அதிகாரம்

1. நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கேட்டுப்போவீர்கள். (லூக்கா 13:1-5).

2. நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிஉப் மாட்டீர்கள். (மத் 18:3)

3. ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான். (யோவான் 3:3; 1யோவான் 2:29; 1யோவான் 3:8; 1யோவான் 5:1-14,18).

4. ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான். (யோவான் 3:5)

5. நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை. (யோவான் 6:53)

6. வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்களுடைய நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள். (மத் 5:20).

7. கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும், என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள். (யோவான் 15:4-6)

"மறுபடியும் பிறப்பது" - உன்னதத்திலிருந்து மறுபடியும் பிறப்பது. (லூக்கா 1:3) நம்முடைய சுபாவம் மறுபடியும் பிறக்க வேண்டும். நாம் நீதியில் புதுப்பிக்கப்படவேண்டும். இரட்சிக்கப் படுவதற்கு நம்மிடம் உண்மையான பரிசுத்தம் காணப்படவேண்டும். (2கொரி 5:17-21; எபே 4:22-24; கொலோ 1:13-14,20; கொலோ 2:12-17; கொலோ 3:1-16)

பிறந்திரு (born) - γεννάω - gennaoo - 1080

வினைச்சொல் - பெறு, பிறந்திரு, உண்டாயிரு, எழும்பு, ஜநித்திரு, (ஜென்ம), ஜெநிப்பி

மறுபடியும் (again) - ἄνωθεν - anoothen - 509

வினையடை - மேலிருந்து, ஆதிமுதல், மறுபடியும், பரத்திலிருந்து, உன்னதத்திலிருந்து

காண் (see) - εἴδω - eidoo - 1492

வினைச்சொல் - காண், அறி, பார், தெரிந்திரு, நோக்கு, உணர், அறிந்திரு, விளங்கு

(3) மறுபடியும் பிறக்க வேண்டுமென்பதை நிக்கொதேமு தவறாக புரிந்து கொள்கிறான் - (ரோமர் 9:30-10:13; 1கொரி 1:18-31; 2கொரி 3:13,18; 4:3-4)

யோவான் 3:4 அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான்.

"பிறக்கக் கூடுமோ" - இயேசு கிறிஸ்து கூறியதை நிக்கொதேமு தவறாகப் புரிந்து கொண்டான். தன்னுடைய மனுஷ ஞானத்தினாலே இயேசுகிறிஸ்து கூறிய தெய்வீகக் காரியத்தை வியாக்கியானம் பண்ணுகிறான். இன்றைய தினமும் ஏராளமான ஜனங்கள் புதிய பிறப்பையும், பழைய பிறப்பையும் தங்களுக்குத் தெரிந்தபடியெல்லாம் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். நமக்கு இஷ்டமானபடி வியாக்கியானம் பண்ணக்கூடாது என்று இயேசு கிறிஸ்து எச்சரிக்கிறார். (யோவான் 3:12) முதலாவது பிறப்பு என்பது தாயின் கர்ப்பத்தில் பிறப்பது. மறுபடியும் பிறப்பது என்பது தேவன் நம்மைத் தமது பிள்ளையாக சுவீகாரம் எடுத்துக்கொள்வது. (ரோமர் 8:14-16; கலா 4:5; எபே 1:5).

3 அதிகாரம்

(4) மறுபடியும் பிறக்க வேண்டியதின் அவசியத்தை இயேசு விளக்கி கூறுகிறார் - (ரோமர் 1:19-20)

யோவான் 3:5 இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 3:6 மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.

யோவான் 3:7 நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம்.

யோவான் 3:8 காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்.

"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" - இது இயற்கையான பிறப்பைக் குறிக்காது. நிக்கொதேமு ஏற்கெனவே பிறந்து விட்டான். அவன் மறுபடியும் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க வேண்டும். ஜலத்தினால் என்பது தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்காது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் தண்ணீர் ஞானஸ்நானம் இல்லாமலேயே இரட்சிக்கப்பட்டு, மறுபடியும் பிறந்திருக்கிறார்கள். (எபி 11; ரோமர் 3:23-25; எபி 9:15; ரோமர் 4; கலா 4:29; யாக் 2:23; சங் 32:5; சங் 103:3; லூக்கா 1:70; அப் 3:21; உபா 32:18; 2பேதுரு 1:21) அவர்கள் எல்லோருமே தண்ணீர் ஞானஸ்நானம் இல்லாமலேயே பரிசுத்த ஆவியானவரையும், அவருடைய வரங்களையும் அநேக ஆசீர்வாதங்களையும் பெற்றிருந்தார்கள். (சங் 51:12; 1இராஜா 3:12; 1இராஜா 4:29-34; எண் 11:17-29; அப் 3:21; லூக்கா 1:15-17, 41, 46,67; லூக்கா 2:25-38; எபி 11). இயேசு கிறிஸ்து தமது ஊழியக்காலத்தில் தண்ணீர் ஞானஸ்நானம் இல்லாமலேயே பலருடைய பாவங்களை மன்னித்தார். (மத் 9:1-7,22; மாற்கு 5:34; மாற்கு 10:52; லூக்கா 7:48; லூக்கா 17:19; லூக்கா 18:9-14; லூக்கா 19:1-9; லூக்கா 23:43; யோவான் 4:49-53; யோவான் 7:31; யோவான் 8:30-31; யோவான் 11:45; யோவான் 12:11,42).

தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே தேவனுடைய பிள்ளைகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருந்தார்கள். (அப் 9:17; அப் 10:44-48; அப் 11:14-18; அப் 15:7-11) தண்ணீர் ஞானஸ்நானம் ஓர் அடையாளம் மட்டுமே. (1பேதுரு 3:21) இது ஒரு சாட்சி (1யோவான் 5:6-10), இரட்சிப்பிற்கு தண்ணீர் ஞானஸ்நானம் அவசியம் என்று கூறமுடியாது. (1கொரி 1:13-24; 1கொரி 15:1-5; ரோமர் 1:16; ரோமர் 10:9-14; எபே 2:8-9; அப் 10:43; அப் 13:38-39; அப் 16:31; யோவான் 3:14-18,36; யோவான் 5:24; 1யோவான் 5:1). மனம் திரும்பியவர்கள் தங்களுடைய சாட்சியை ஜனங்களுக்கு அறிவிப்பதற்காக தண்ணீர் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். (மத் 3:2-6; மத் 28:19; அப் 2:38-41; அப் 8:12,37; அப் 10:43-48; அப் 18:8; அப் 19:4).

இந்த வசனத்தில் தண்ணீர் என்பது இரட்சிப்பிற்கு உருவகமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (யோவான் 4:14; ஏசா 12:3), பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்கும் தண்ணீர் உருவமாகும். (யோவான் 7:37-39), தேவனுடைய வார்த்தையினால் கழுவப் படுவதையும் தண்ணீர் குறிப்பிடுகிறது. (யோவான் 15:3; எபே 5:26). தேவனுடைய வார்த்தையினால் மனுஷர் கழுவப்பட்டு, மறுபடியும் பிறக்கிறார்கள். (யாக் 1:18; 1பேதுரு 1:23), ஜலத்தினால் பிறப்பது என்பது தேவனுடைய வார்த்தையினால் மறுபடியும் பிறப்பதைக் குறிக்கும்.

3 அதிகாரம்

"மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" - இது ஒரு அடிப்படைப் பிரமாணம். நாம் மாம்சத்தின் பிரகாரமாக ஜீவிக்கிறோமா, ஆவியின் பிரகாரமாக ஜீவிக்கிறோமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். (ரோமர் 8:1-13; கலா 5:16-26).

"ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்" - மாம்சத்தினால் பிறந்திருக்கிறவன் காற்றின் சத்தத்தைக் கேட்கிறான். ஆவியினால் பிறந்திருக்கிறவன் பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கிறான்.

(5) மறுபடியும் பிறக்க வேண்டும் என்பது நிக்கொதேமுவிற்கு புரியாத இரகசியமாகவே இருக்கிறது

யோவான் 3:9 அதற்கு நிக்கொதேமு; இவைகள் எப்படி ஆகும் என்றான்.

"இவைகள் எப்படி ஆகும்" - எரே 31:33; எரே 32:39; எசே 11:19; எசே 18:31; எசே 36:25-27; சங் 51:10; ஏசா 1:18-20; ஏசா 55:6; 2 நாளா 7:14 ஆகிய வசனங்களை நாம் வாசிக்கும்போது, இவைகள் எப்படி ஆகும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

(6) நிக்கொதேமுவை, அவனுடைய அறியாமைக்காகவும், அவிசுவாசத்திற்காகவும் இயேசு கிறிஸ்து கடிந்து கூறுகிறார்

யோவான் 3:10 இயேசு அவனை நோக்கி: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?

யோவான் 3:11 மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியைஏற்றுக் கொள்ளுகிறதில்லை.

யோவான் 3:12 பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?

"நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?" - இரட்சிக்கப்படுவதற்குத் தேவையான அளவு நிக்கொதேமுவிடம் வேதஅறிவு இருக்குமென்று இயேசு எதிர்பார்த்தார். ஆனால் அவன் போதகனாக இருந்தும், வேதவாக்கியத்தை அறியவில்லை.

"நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை" - ஆவிக்குரிய காரியங்களை நிக்கொதேமு புரிந்து கொள்ளவில்லை. அதன்பின்பு, அவன் இயேசுவை ஏற்றுக் கொள்கிறான். (யோவான் 19:39)

"பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?" - யோவான் 3:6,8 ஆகிய வசனங்கள் பூமிக்கடுத்தக் காரியங்கள். யோவான் 3:3,5,6,8. ஆகிய வசனங்கள் பரமகாரியங்கள்.

13. இயேசுவைப் பற்றிய சாட்சி

(1) பரலோகத்தில் இருக்கிற கிறிஸ்து

யோவான் 3:13 பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை.

"பரலோகத்துக்கு ஏறினவன்" - எடுத்துக் கொள்ளப்பட்டவன் அல்ல. தன்னுடைய சொந்த வல்லமையினால் ஏறினவன். பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள். ஏனோக்கு (ஆதி 5:24; எபி 11:5), எலியா (2இராஜா 2:11), பவுல் (2கொரி 12:1-3), யோவான் (வெளி 4:1). இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்து பரமேறுவதைக் குறிக்கிறது. (யோவான் 3:13; யோவான் 6:62; அப் 1:11; லூக்கா 24:51; எபே 4:8-10). இயேசு கிறிஸ்து பரமேறினார். அவர் மறுபடியும் பூமிக்குத் திரும்பி வந்து, மறுபடியும் பரமேறுவார். (யோவான் 20:17).

3 அதிகாரம்

ஏறு (ascended up) - ἀναβαίνω - anabainoo - 305

வினைச்சொல் - ஏறு, முன்னேறு, கரையேறு, வளர், அகப்படு, போ, ஏறிப்போ, எழும்பு, வந்தெட்டியிரு, பரம்பு

"பரலோகத்திலிருக்கிறவர்" - யோவான் இந்தச் சுவிசேஷத்தை எழுதிய போது இயேசு கிறிஸ்து ஏற்கெனவே பரமேறிவிட்டார். நிக்கொதேமுவோடு இயேசுவின் சம்பாஷணை யோவான் 3:12 ஆவது வசனத்தோடு முடிவு பெறுகிறது. இப்பொழுது இயேசு பரலோகத்தில் இருக்கிறார்.

(2) கிறிஸ்துவின் சிலுவை மரணம் - (யோவான் 1:12; 1யோவான் 1:9; 5:1)

யோவான் 3:14 சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுஷகுமாரனும்

யோவான் 3:15 தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உஸ்ர்த்தப்பட வேண்டும்.

யோவான் 3:16 தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

யோவான் 3:17 உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

தீர்க்கதரிசன எண் -4

"சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்பட வேண்டும்." (யோவான் 3:14, 15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (எண் 21:9; யோவான் 8:28; யோவான் 12:32,34; 1பேதுரு 2:24)

"மனுஷகுமாரனும்.......உயர்த்தப்படவேண்டும்" - மனுஷனை இரட்சிப்பதற்காகவும், இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்காகவும் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட வேண்டும். (லூக்கா 24:26,46; அப் 3:18; அப் 17:3)

"தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்" - தாம் சிலுவையில் அறையப்படவேண்டியதற்கான காரணத்தை இயேசு கிறிஸ்து கூறுகிறார். (யோவான் 3:15-17, 36; யோவான் 5:24)

"தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ" - தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை. இயேசு கிறிஸ்துவை யார் விசுவாசித்தாலும், அவர்கள் இரட்சிக்கப்பட முடியும். (யோவான் 3:15-17; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17).

விசுவாசம்

விசுவாசிப்பது என்பதன் கிரேக்கச்சொல் "பிசிடியோஸ்" (Pisidios) புதிய ஏற்பாட்டில் 248 இடங்களில் இந்தச் சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இந்தச் சொல் நிகழ்காலத்தில் "விசுவாசிக்கிறது" என்றே வரும். விசுவாசத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் தொடர்ந்து விசுவாசித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று பொருள். (அப் 14:22; எபே 6:16; கொலோ 1:23; கொலோ 2:5-7; 1தெச 5:8; 1தீமோ 2:15; 1தீமோ 3:9; 1தீமோ 6:12; 2தீமோ 3:8; 2தீமோ 4:7; தீத்து 1:13; எபி 10:23-38; 2பேதுரு 1:5-10). விசுவாசம் காணாமல் போகும். (லூக்கா 8:13; 1தீமோ 1:19; 1தீமோ 4:1; 1தீமோ 5:8,12; 1தீமோ 6:10,21; 2தீமோ 2:18; 2தீமோ 3:8; யூதா 1:3; வெளி 2:13)

3 அதிகாரம்

விசுவாசம் என்பதற்கு நாம் இவ்வாறு பொருள் கூறலாம்.

1. தொடர்ந்து முயற்சி பண்ணுவது (ரோமர் 4:17-22; ரோமர் 8:38-39; 2தீமோ 1:12)

2. நம்பிக்கை வைப்பது (எபே 3:12; பிலி 1:6; எபி 3:6,12-14; எபி 10:35; 1யோவான் 3:21; 1யோவான் 5:14)

3. விசுவாசமானதுநம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபி 10:19-38; எபி 11:1, 6; ரோமர் 4:17; ரோமர் 8:24)

4. இயேசு கிறிஸ்துவையும், அவருடைய வார்த்தையையும் முழுவதுமாக சார்ந்திருக்க வேண்டும். (மத் 8:8-10; மத் 15:28; ரோமர் 10:17; எபி 11:1-12:3)

5. சத்தியத்திற்கு முழுவதுமாக கீழ்ப்படிய வேண்டும். (ரோமர் 1:5; ரோமர் 16:26; ரோமர் 6:11-23; யாக் 2:14-26; 2கொரி 10:4-7; எபி 11:6)

6. தேவனிடத்தில் எந்தவித தயக்கமும் இல்லாமல் முழுமையாக நம்பிக்கையாய் இருக்க வேண்டும். (மத் 6:25-34; மத் 12:21; லூக்கா 12:28-31; எபே 1:13; 1தீமோ 4:11; 1தீமோ 6:17; 1கொரி 10:13)

7. ஜீவியத்தின் புதிய வழிக்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். (ரோமர் 1:17; ரோமர் 6:11-23; ரோமர் 8:1-16; 2கொரி 10:4-7; கலா 5:16-26; கலா 3:5-10; எபி 12:1-15; தீத்து 2:11-14; 1யோவான் 1:7; 1யோவான் 2:6; 1யோவான் 3:8-10; 1யோவான் 4:17; 1யோவான் 5:1-5, 18)

8. தேவனிடத்தில் விசுவாசம் இருந்தது. அவர் மனுஷனை மீட்டுக்கொண்டார். (ரோமர் 4:17; கலா 5:22; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 17:6; எபி 11)

9. வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியத்தை விசுவாசிக்க வேண்டும். (லூக்கா 18:8; யூதா 1:3; ரோமர் 10:17; 1தீமோ 4:1,6; 1தீமோ 6:10; 2தீமோ 3:16-17)

10. விசுவாசித்து சந்தோஷமாக இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார் என்பதை விசுவாசித்து, நமது இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (மாற்கு 16:16; அப் 4:12; அப் 10:43; ரோமர் 1:16; ரோமர் 3:24-31; எபே 2:8-9); விசுவாசத்தினால் தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (ரோமர் 5:2); தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று விசுவாசிக்க வேண்டும். (எபி 6:12); விசுவாசத்தினால் நாம் பெற்றுக் கொள்ளும் காரியங்கள் - பரிசுத்த ஆவியானவர் **(the Holy Spirit)** (கலா 3:14); நீதி **(righteousness)** (ரோமர் 4; ரோமர் 9:30,32; ரோமர் 10:6; பிலி 3:9); தேவனுடைய பிள்ளை **(sonship)** (கலா 3:26); சுகமாதல் **(healing)** (யாக் 5:14-16; 1பேதுரு 2:24); நித்திய ஜீவன் **(eternal life)** (யோவான் 3:15-18,36; யோவான் 5:24; யோவான் 6:47); ஜெபத்திற்குப் பதில்கள் **(answers to every prayer)** (மத் 7:7-11; மத் 21:21; மாற்கு 11:22-24; லூக்கா 18:1-8; யோவான் 14:12-15; யோவான் 15:7,16).

விசுவாசிக்கிறவன் **(believeth)** - **Πιστόδιος - Pisidios** - 4100

வினைச்சொல் - விசுவாசிக்கிறது

3 அதிகாரம்

"கெட்டுப்போதல்" - அழிந்துபோதல். இதற்கான கிரேக்கவார்த்தை "அப்பல்லிமி" (**apollymi**) இந்த வார்த்தை வேதாகமத்தில் பலவிதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. **to destroy** (மத் 10:28); **lose** (மத் 10:39); **die** (யோவான் 18:14); **be lost** (2கொரி 4:3); **be marred** (மாற்கு 2:22); **perish** (மத் 8:25; மத் 18:14; எபி 1:11). நித்திய நரகத்திற்கு ஆத்துமாக்கள் போய், அங்கு பாடுகளை அனுபவிக்கும் என்பது இதன் பொருள். (லூக்கா 12:5; லூக்கா 16:23.)

கெடு (**perish**) - **ἀπόλλυμι** - **apollymi** - 622

வினைச்சொல் - கொலை செய், அழி, கெடு, கொல், சங்கரி

உலகம் (**world**) - **κόσμος** - **kosmos** - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு, லௌகிகம்

"ஒரேபேறான குமாரன்" - (லூக்கா 1:34; யோவான் 1:13-14)

"நித்திய ஜீவன்" - இதற்கான கிரேக்க வார்த்தை "ஐயோனியோஸ்" (**aioonios**) நித்திய காலத்திற்கு வாழும் வாழ்வு (**unknown time, time out of mind, eternity**). யோவான் 3:15 -இல் நித்தியம் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஜீவன் நித்தியமாக இருக்கும். மனுஷன் இரட்சிக்கப் பட்டாலும், இரட்சிக்கப்படாவிட்டாலும் அவனுடைய ஜீவன் நித்தியமானதே. அவன் இரட்சிக்கப்பட்டால் அவனுடைய ஜீவன் நித்தியகாலமாக பரலோகத்தில் தேவனோடு இருக்கும். அவன் இரட்சிக்கப்படாவிட்டால் அவனுடைய ஜீவன் நித்தியகாலமாக நரகத்தில் பாடுகளை அனுபவிக்கும். இந்த வசனத்தில் நித்திய ஜீவன் என்பது இயேசுகிறிஸ்துவோடு நித்திய காலமாக இருக்கப்போகும் ஜீவனைக் குறிக்கும். யோவான் 6:27; 1யோவான் 5:11-12).

நித்திய (**everlasting**) - **αἰώνιος** - **aioonios** - 166

பெயரடை - நித்திய

(அ) துவக்கமோ அல்லது முடிவோ அல்லாத, அநாதி ரோம. 16:25

(ஆ) துவக்கம் இல்லாத ரோம. 14:25

(இ) முடிவு இல்லாத

ஆக்கினைக்குள்ளாகத்தீர் (**condemn**) - **κρίνω** - **krinoo** - 2919

வினைச்சொல் - வழக்காடு, நியாயந்தீர், தீர்மானி - இயேசுகிறிஸ்து மனுஷரை இரட்சிப்பதற்காக ஏற்கெனவே வந்து விட்டார். இனிமேல் உலகத்தை நியாயம்தீர்ப்பதற்காக வருவார். (மத் 16:27; மத் 25:31-46).

(3) அவிசுவாசிகளுக்கு ஆக்கினைத் தீர்ப்பு - (மாற்கு 16:16; யோவான் 16:17)

யோவான் 3:18 அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று.

யோவான் 3:19 ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது.

யோவான் 3:20 பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்.

யோவான் 3:21 சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப் படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் என்றார்.

3 அதிகாரம்

"தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமம்" - இயேசு கிறிஸ்து என்பதே அவருடைய நாமம். அவருடைய நாமத்தின் பொருள் இரட்சகர் என்பது. அவருடைய நாமத்தில் விசுவாசம் வைக்கிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். மற்றவர்கள் இரட்சிக்கப்படமாட்டார்கள். (மத் 1:21)

ஆக்கினைத்தீர்ப்பு (condemnation) - κρίσις - krisis - 2920

பெண்பால் பெயர்ச்சொல் - நியாயத்தீர்ப்பு, நியாயம், ஆக்கினை, தீர்ப்பு (judgment)

"அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறார்கள்" - (யோபு 15:16; யோபு 20:12; நீதி 2:14; யோவான் 3:19; யோவான் 12:43; 2பேதுரு 2:22)

பொல்லாங்கு (evil) - φαῦλος - phaulos - 5337

பெயரடை - தீமையான, பொல்லாங்கு செய்கிற, துர்ச்செய்கை (worthless, base things). இந்த வார்த்தை இந்த வசனத்திலும், யோவான் 5:29; தீத்து 2:8; யாக் 3:16 ஆகிய வசனங்களிலும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"சத்தியத்தின்படி செய்கிறவன்" - தேவனுடைய வார்த்தையின் பிரகாரமாக ஜீவித்து, தன்னுடைய ஜீவியத்தில் ஆவியின் கனியைத் தொடர்ந்து தருகிறவன். (யாக் 1:22-27; யாக் 2:14-26; மத் 5:16; மத் 7:15-20).

14. இயேசு கிறிஸ்து யூதேயாவில் ஊழியம் செய்கிறார்

யோவான் 3:22 இவைகளுக்குப் பின்பு, இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள்; அங்கே அவர் அவர்களோடே சஞ்சரித்து, ஞானஸ்நானங்கொடுத்து வந்தார்.

"இவைகளுக்குப் பின்பு, இயேசுவும் அவருடைய சீஷரும் யூதேயா தேசத்திற்கு வந்தார்கள்" - பஸ்கா பண்டிகைக்குப் பின்பு, அவர்கள் எருசலேமை விட்டுப் புறப்பட்டு, சமாரியாவிற்கோ, அல்லது கலிலேயாவிற்கோ வந்திருக்க வேண்டும். (யோவான் 2:13).

"ஞானஸ்நானங் கொடுத்து வந்தார்" - இயேசு கிறிஸ்து யாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. அவருடைய சீஷர்களே ஞானஸ்நானம் கொடுத்தார்கள். (யோவான் 4:2)

15. யோவான் ஸ்நானன் அயினோன் என்னும் இடத்தில் ஊழியம் செய்கிறான்

யோவான் 3:23 சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்த படியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங் கொடுத்துவந்தான்; ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்றார்கள்.

யோவான் 3:24 அக்காலத்தில் யோவான் காவலில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

அயினோன் (Aenon) - Αἰνών - Ainoon - 137

ஓர் இடத்தின் பெயர் - யோர்தான் பள்ளத்தாக்கு, யோவான் ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்து வந்த இடம் அயினோன் - இதன் பொருள் ஊற்று. யோர்தானுக்கு மேற்குக்கரையிலுள்ள பட்டணம். சமாரியாவில் இருந்தது. எருசலேமிலிருந்து வடகிழக்கில் 54 மைல் தூரத்தில் இருந்தது.

"தண்ணீர் மிகுதியாயிருந்தது" - அங்கு அநேக நீரூற்றுக்கள் இருந்தன. ஞானஸ்நானம் கொடுப்பதற்கு ஏற்ற இடமாக இருந்தது.

3 அதிகாரம்

16. யோவான் ஸ்நானனின் கடைசி சாட்சி

(1) தன்னைப் பற்றி - (யோவான் 1:19)

யோவான் 3:25 அப்பொழுது யோவானுடைய சீஷரில் சிலருக்கும் யூதருக்கும் சுத்திகரிப்பைக் குறித்து வாக்குவாதமுண்டாயிற்று.

யோவான் 3:26 அவர்கள் யோவானிடத்தில் வந்து: ரபீ, உம்முடனே கூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர் இருந்தாரே; அவரைக் குறித்து நீரும் சாட்சிகொடுத்தீரே, இதோ, அவர் ஞானஸ்நானங் கொடுக்கிறார், எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்றார்கள்.

யோவான் 3:27 யோவான் பிரதியுத்தரமாக: பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப் பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ளமாட்டான்.

யோவான் 3:28 நான் கிறிஸ்துவல்ல, அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன் என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள்.

யோவான் 3:29 மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று.

"அப்பொழுது யோவானுடைய சீஷரில் சிலருக்கும் யூதருக்கும் சுத்திகரிப்பைக் குறித்து வாக்குவாதமுண்டாயிற்று" - பாவத்தைச் சுத்திகரிப்பதற்கு யோவான் கொடுக்கும் ஞானஸ்நானம் சிறந்ததா அல்லது யூதருடைய சுத்திகரிப்பு முறைமை சிறந்ததா என்று அவர்களுக்குள் வாக்குவாதம் உண்டாயிற்று.

"பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப் பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக் கொள்ளமாட்டான்" - இது சத்தியமான வாக்கியம். நாம் எவ்வளவுதான் சம்பாதித்தாலும், அது நிலைக்காது. தேவன் நமக்குத் தேவையானதைத் தரவேண்டும். அதுவே நிலைக்கும். (2பேதுரு 1:3-11; 2கொரி 1:20)

"மணவாளனுடைய தோழன்" - கலியாணத்தில் மணவாளனுடைய தோழனுக்கு முக்கியமான பங்கு இருக்கும். இவனும் ஒருசில சடங்குகளைச் செய்வான்.

"மணவாளனுடைய சத்தம்" - மணவாளனும், மணவாட்டியும் முதன் முறையாக பேசிக் கொள்வதைக் கேட்கும்போது, மணவாளனுடைய தோழனுக்கு மிகுந்த சந்தோஷமாக இருக்கும்.

"இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று" - யோவான் இவ்வாறு எழுதியிருப்பதினால், அவன் மணவாளனுடைய தோழன் மட்டுமே, இயேசு கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கமாட்டான் என்று பொருள் கூறக்கூடாது. யோவானும், கிறிஸ்துவின் மணவாட்டியாகவே இருப்பான். பரலோக நகரமாகிய புதிய எருசலேம் கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கிறது. (வெளி 21:2,9-10) பழைய ஏற்பாட்டுக் கால பரிசுத்தவான்களும் (எபி 11:10-16), புதிய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்களும் (எபி 13:14; யோவான் 14:1-3) பரலோக நகரமாகிய புதிய எருசலேமிற்குப் போவார்கள். யோவான் ஸ்நானனும், அவர்களில் ஒருவனாக இருப்பான். ஆபேலிலிருந்து முதலாம் உயிர்த்தெழுதலில் உயிர்த்தெழுந்தோர் எல்லோருமே புதிய எருசலேமிற்குப் போவார்கள். (1கொரி 15:23, 51-58; 1தெச 4:16; வெளி 20:4-6). இந்த வசனத்தின் மூலமாக யோவான் ஸ்நானன் தான் மணவாளன் அல்ல, மணவாளனுடைய தோழனே என்பதை வலியுறுத்துகிறான். எல்லாப் பரிசுத்தவான்களும் மணவாளனுடைய தோழராக இருக்கிறார்கள். (யோவான் 15:13-15) யோவான் ஸ்நானன் ஜனங்களைக் கிறிஸ்துவிடம் அழைத்தான். அதுபோலவே, மணவாட்டியின் அங்கத்தினர்கள் எல்லோரும் ஜனங்களைக் கிறிஸ்துவிடம் அழைத்துவரவேண்டும். (வெளி 22:17)

3 அதிகாரம்

(2) இயேசு கிறிஸ்துவைப் பற்றி - (யோவான் 1:6,15,19,29)

யோவான் 3:30 அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்.

யோவான் 3:31 உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக் கடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்.

யோவான் 3:32 தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார்; அவருடைய சாட்சியை ஒருவனும்ஏற்றுக் கொள்ளுகிறதில்லை.

யோவான் 3:33 அவருடைய சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்றுமுத்திரைபோட்டு நிச்சயப்படுத்து கிறான்.

யோவான் 3:34 தேவனால் அனுப்பப் பட்டவர்தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்.

யோவான் 3:35 பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

யோவான் 3:36 குமாரனிடத்தில் விசுவாசமா யிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்.

தீர்க்கதரிசன எண் - 5

"அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" (யோவான் 3:30) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

உன்னதத்திலிருந்து (from above) - ἄνωθεν - anoothen - 509

வினையடை - மேலிருந்து, ஆதிமுதல், மறுபடியும், பரத்திலிருந்து, உன்னதத்திலிருந்து

"தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார்; அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக் கொள்ளுகிறதில்லை" - இந்த வாக்கியம் இன்றும் உண்மையாக இருக்கிறது.

முத்திரைபோடு (seal) - σφραγίζω - sphragizoo - 4972

வினைச்சொல் - முத்திரை போடு, ஒப்புவி, முத்தரித்திரு, முத்திரையாகப் பெறு (to stamp, confirm, place beyond doubt)

பரிசுத்த ஆவியானவரின் வெவ்வேறு அளவுகள்

1. மோசேயின் அளவு (எண் 11:17,25)
2. மோசேயின் அளவு 71 பங்குகளாகப் பிரிக்கப்பட்டது (எண் 11:16-17, 25-29)
3. எலியாவின் அளவு (2இராஜா 2:9)
4. இரட்டிப்பான பங்கு (2இராஜா 2:9-10)
5. யோவான் ஸ்நானன்மீது எலியாவின் அளவு (லூக்கா 1:15-17)
6. ஆவியானவரின் அச்சாரம் (2கொரி 1:22; 2கொரி 5:5; 1யோவான் 4:13; பிலி 1:19)
7. அளவில்லாத பரிசுத்த ஆவியானவர் (The Spirit without measure) (யோவான் 3:34; ஏசா 11:2; ஏசா 42:1; ஏசா 61:1; லூக்கா 4:16-21; அப் 10:38); பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் (Spirit baptism or baptismal measure) (மத் 3:11; மத் 20:22-23; லூக்கா 3:16; யோவான் 1:31-34; அப் 1:4-8; அப் 2:1-21; அப் 8:15-24; அப் 10:44-48; அப் 11:14-18; அப் 15:7-11; அப் 19:1-7; கலா 3:14); தேவனுடைய நிறைவு (the fulness of God) (எபே 3:19; ரோமர் 15:29); ஜீவத்தண்ணீருள்ள நதிகள் (the rivers of living water) (யோவான் 7:37-39); உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படுதலும், பரிசுத்த ஆவியானவரின் முழுமையான அபிஷேகமும் (the full anointing of the Spirit and enduement of power from on high) (லூக்கா 24:49; யோவான் 14:12-15)

யோவான் - தொகுப்புரை

3 அதிகாரம்

"விசுவாசியாதவன்" - இதன் கிரேக்கச் சொல் "அப்பேதியோ" **(apeitheoo)** இதன் மொழிபெயர்ப்புக்கள். **(believe not)** (யோவான் 3:36; அப் 17:5; அப் 19:9; ரோமர் 11:30,31; ரோமர் 15:31; எபி 3:18; எபி 11:31); **(unbelieving)** (அப் 14:2) **(obey not)** (ரோமர் 2:8; 1பேதுரு 3:1; 1பேதுரு 4:17); **(disobedient)** (ரோமர் 10:21; 1பேதுரு 2:7,8; 1பேதுரு 3:20). கீழ்ப்படியாதவன், விசுவாசியாதவன் என்பது இதன் பொருள்.

விசுவாசியாமலிரு **(believeth not)** - ἀπειθέω - **apeitheoo** - 544

வினைச்சொல் - விசுவாசியாமலிரு, கீழ்ப்படியாமலிரு

கோபம் **(wrath)** - ὀργή - **orgee** - 3709

பெண்பால் பெயர்ச்சொல் - கோபம், கோபாக்கினை **(temper, agitation of the soul, violent emotion, anger, wrath, indignation)** - பாவம் செய்யும் மனுஷரையும், தேவனுக்குக் கலகம் செய்யும் மனுஷரையும் தண்டிக்கும் தேவனுடைய சுபாவம் "தேவனுடைய கோபம்" என்று அழைக்கப்படுகிறது. (மத் 3:7; லூக்கா 3:7; யோவான் 3:36; ரோமர் 1:18; ரோமர் 4:15; ரோமர் 9:22; 2தெச 1:16; எபி 3:11; எபி 4:3; வெளி 14:10).

4 அதிகாரம்

17. இயேசு கிறிஸ்து கலிலேயாவிற்கு பிரயாணம் பண்ணுகிறார்

யோவான்4:1 யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங் கொடுக்கிறாரென்று பரிசேயர் கேள்விப் பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது,

யோவான் 4:2 யூதேயாவைவிட்டு மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார்.

யோவான் 4:3 இயேசு தாமே ஞானஸ்நானங் கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்.

"கர்த்தர்" - இயேசு கிறிஸ்துவை யோவான் கர்த்தர் என்று அழைக்கிறார். (யோவான் 4:1; யோவான் 6:23; யோவான் 11:2; யோவான் 20:2,13,18,20,25; யோவான் 21:7, லூக்கா 9:38)

"பரிசேயர்" - யோவான் சதுசேயரைப் பற்றியோ ஏரோதியரைப் பற்றியோ மற்ற மார்க்கப் பிரிவினரைப் பற்றியோ இந்தச் சுவிசேஷத்தில் குறிப்பிடவில்லை.

"மறுபடியுங் கலிலேயாவுக்குப் போனார்" - (யோவான் 1:43, யோவான் 3:22)

18. இயேசு கிறிஸ்துவும் சமாரிய ஸ்திரீயும்

(1) சூழ்நிலைகள்

யோவான் 4:4 அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போக வேண்டியதாயிருந்த படியால்,

யோவான் 4:5 யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார்.

யோவான் 4:6 அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது; இயேசு பிரயாணத்தினால் இளைப் படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார்; அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி வேளையாயிருந்தது.

"அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தது" - சமாரியா நாட்டின் வழியாகப் போவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது காரணம், கலிலேயாவிற்குச் சமாரியா நாட்டின் வழியாகப் போனால், பிரயாண நேரம் மூன்று நாள் குறையும். இரண்டாவது காரணம், தேவனுடைய தெய்வீகச் சித்தம். சமாரியா நாட்டின் வழியாகப் போனதினால் சமாரியா நாட்டாளாகிய ஸ்திரீயும், மேலும் ஏராளமானஜனங்களும்இரட்சிக்கப்பட்டார்கள்.

சீகார் (Sychar) - Συχάρ - Sychar - 4965

ஓர் இடத்தின் பெயர் - சீகார் - குடிவெறியில் உள்ள பட்டணம், தவறான பட்டணம் என்று இந்த ஊரைப் பற்றிக் கூறுவார்கள்.

"யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலம்" - (ஆதி 33:19; ஆதி 48:22; யோசு 24:32)

"ஆறாம்மணிவேளை" - மதியம் 12 மணி.

(2) இயேசு "தாகத்துக்குத் தா" என்கிறார்

யோவான் 4:7 அவருடைய சீஷர்கள் போஜன பதார்த்தங்களைக் கொள்ளும் படி ஊருக்குள்ளே போயிருந்தார்கள்.

யோவான் 4:8 அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத்தா என்றார்.

"தாகத்துக்குத்தா" - இயேசு கிறிஸ்து கிணற்றுக்குத் தண்ணீர் மொள்ள வந்த ஸ்திரீயிடம், ஏழு தடவை பேசுகிறார். முதலாவதாக, "தாகத்துக்குத்தா" என்று கூறி, படிப்படியாகத் தம்மைப் பற்றி அவளுக்கு வெளிப்படுத்தி, இறுதியில் "உன்னுடனே பேசுகிற நானே அவர்" என்று தம்மைப் பற்றிக் கூறுகிறார். கிழக்குத் தேசங்களில் பெண்களே கிணற்றிற்குத் தண்ணீர் பிடிக்க வருவார்கள்.

4 அதிகாரம்

(3) ஸ்திரீ "என்னிடத்தில் எப்படி கேட்கலாம்" என்கிறாள்

யோவான் 4:9 யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களான படியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்.

சம்பந்தம் கலத்தல் (dealings) - συγχράομαι - synchraomai - 4798

பெண்பால் பெயர்ச்சொல் - உடன்சம்பந்தங்கள், சம்பந்தம் கலத்தல் (familiar intercourse or hospitality) - சமாரியரும், யூதரும் வாங்குவது, விற்பது போன்ற அன்றாட நடைமுறைக் காரியங்களைச் செய்து வந்தார்கள். (யோவான் 4:8)

(4) இயேசு - அவர் உனக்கு ஜீவத் தண்ணீரைக் கொடுத்திருப்பார்

யோவான் 4:10 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும் தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்.

தேவனுடைய ஈவுகள்

1. கிறிஸ்து (யோவான் 4:10; 2கொரி 9:15; எபி 6:4; ரோமர் 8:32)
2. பரிசுத்த ஆவியானவர் (அப் 2:38-39; அப் 8:20; அப் 10:45; அப் 11:17; யோவான் 7:37-39)
3. ஆவிக்குரிய வரங்கள் (ரோமர் 1:11; ரோமர் 11:29; ரோமர் 12:6; 1கொரி 1:7; 1கொரி 12:1-14:40; எபே 3:7; எபே 4:7; 1தீமோ 4:14; 2தீமோ 1:6; எபி 2:4; 1பேதுரு 4:10)
4. இரட்சிப்பு (ரோமர் 5:15-21; யோவான் 4:10-14; அப் 4:12; எபே 2:8-9)
5. நித்திய ஜீவன் (ரோமர் 6:23; யோவான்4:10-14;யோவான் 10:27-29)
6. தெய்வீக அழைப்பு (1கொரி 7:7; ரோமர் 12:3-6; 2கொரி 5:18; எபே 3:7; எபே 4:7)
7. நல்ல ஈவுகள் (யாக் 1:17; மத் 7:11)
8. ஊழியக்காரர்கள் (எபே 4:8-11)

சுவிசேஷத்தின் ஈவுகள்

1. கிருபையும், சத்தியமும் (யோவான் 1:17)
2. ஜீவத்தண்ணீர் (யோவான் 4:10)
3. பரிசுத்த ஆவியானவர் (யோவான் 7:37-39; யோவான் 14:16)
4. பரிபூரண முன்மாதிரி (யோவான் 13:15)
5. தேவனுடைய வார்த்தை (யோவான் 17:8,14; யோவான் 13:34)
6. தேவனுடைய மகிமை (யோவான் 17:22)
7. மெய்யான அப்பம் (யோவான் 6:32)
8. நித்திய ஜீவன் (யோவான் 6:33; யோவான் 10:27-29)
9. சமாதானம் (யோவான் 14:27)
10. ஜெபத்திற்குப் பதில்கள் (யோவான் 15:16; யோவான் 16:23)

"ஜீவத்தண்ணீர்" - நின்றுபோகாத நித்திய நீரூற்று. (எரே 2:13; எரே 17:13; சக 14:8)

4 அதிகாரம்

(5) ஸ்திரீ - எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்

யோவான் 4:11 அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்.

யோவான் 4:12 இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருக ஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்.

ஆண்டவர் (Sir) - κύριος - kyrios - 2962

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், எஜமான், ஆண்டவர், ஐயா, உடையவர், தேவரீர் (Sir) - (யோவான் 4:11,15,19,49; யோவான் 5:7; யோவான் 12:21; யோவான் 20:15, லூக்கா 9:38)

"மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே" - கிழக்குத் தேசங்களில் பிரயாணம் பண்ணுகிறவர்கள் கிணறுகளில் தண்ணீர் பிடித்துக் கொள்வதற்காகத் தங்களோடு தோல்துருத்திகளைக் கொண்டு செல்வது வழக்கம்.

"கிணறும் ஆழமாயிருக்கிறதே" - சாதாரணமாக ஒரு கிணறு 105 அடி ஆழமும், 9 அடி விட்டமும் இருக்கும். கிணற்றில் 15 அடி ஆழத்திற்குத் தண்ணீர் இருக்கும். கற்பாறைகளை வெட்டி, கிணற்றை ஆழமாக்கியிருப்பார்கள்.

(6) இயேசு - நித்திய ஜீவகால்மாய் ஊறுகிற நீரூற்று

யோவான் 4:13 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்.

யோவான் 4:14 நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்.

நீரூற்று (fountain) - πηγή - peegee - 4077

பெண்பால் பெயர்ச்சொல் - ஊறல், கிணறு, ஊற்று, நீரூற்று (spring) (மாற்கு 5:29; யாக் 3:11-12; வெளி 7:17; வெளி 8:10; வெளி 14:7; வெளி 16:4; வெளி 21:6); கிணறு (well)(யோவான்4:6,14;2பேதுரு 2:17)

(7) ஸ்திரீ - அந்த தண்ணீரைத் தரவேண்டும்

யோவான் 4:15 அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ளவராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்.

"எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும்" - ஸ்திரீயின் விண்ணப்பத்தில் இரண்டு காரியம் உள்ளது. அவையாவன:

1. அவளுக்குத் தாகம் உண்டாகாமல் இருக்க வேண்டும்.
2. அவள் தண்ணீர் மொண்டுகொள்ள இங்கே வராமல் இருக்க வேண்டும்.

(8) இயேசு - உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா

யோவான் 4:16 இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார்.

"நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா" - அவளுடைய பிரச்சனையின் அஸ்திபாரத்திற்கே இயேசு கிறிஸ்து சென்று விட்டார். இதன் மூலமாக இயேசு கிறிஸ்து அவளுடைய பாவங்களை உணர்த்தி அவளை இரட்சிக்க முடியும்.

4 அதிகாரம்

(9) ஸ்திரீ - எனக்கு புருஷன் இல்லை

யோவான் 4:17 அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான்.

(10) இயேசு - ஐந்து புருஷர் உனக்கு இருந்தார்கள், இப்பொழுது உனக்கு இருக்கிறவன் உனக்கு புருஷன் அல்ல

யோவான் 4:18 எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்.

"ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல" - பரிசுத்த ஆவியானவரின் வரத்தினால் இயேசு கிறிஸ்து அவளுடைய நிலைமையைத் தெரிந்து கொள்கிறார். (1கொரி 12: 4-11) அவளுடைய கடந்த காலத்தைக் காண்கிறார். அவளுடைய சிந்தையில் ஓடிக் கொண்டிருக்கும் எண்ணங்களை அறிகிறார். (மத் 9:4; மத் 12:25; லூக்கா 5:22; லூக்கா 6:8; லூக்கா 11:17; யோவான் 2:24-25).

(11) ஸ்திரீ - ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி - நான் எங்கு தொழுது கொள்ள வேண்டும்

யோவான் 4:19 அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காணகிறேன்.

யோவான் 4:20 எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுது கொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ள வேண்டும் என்கிறீர்களே என்றாள்.

"ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்" - தன்னுடைய வாழ்வின் இரகசியத்தை இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தியவுடன், அவரை ஒரு வல்லமையுள்ள தீர்க்கதரிசி என்று அறிவிக்கிறாள். தம்மைப் பற்றி இயேசு கிறிஸ்து மேலும் அதிகமாகக் கூறிவிடாதவாறு, தங்களுடைய சம்பாஷணையைத் திசை திருப்புகிறாள்.

"மலை" - கெர்சீம் மலை. ஆசீர்வாத மலை **(the mount of blessing)**. அருகில் மற்றொரு மலை உள்ளது. அது ஏபால் மலை. நாசமலை **(the mount of cursing)** என்பது இதன் பொருள். (உபா 11:29; உபா 27:12-26; யோசு 8:33). யோதாம் இஸ்ரவேல் ஜனங்களிடம் இங்கிருந்து பேசினார். (நியா 9:7).

கி.மு. 332-இல் சமாரியாவின் தேசாதிபதியாக சன்பல்லாத் இருந்தான். சமாரியா பெர்சியருடைய ஆளுகையின்கீழ் இருந்தது. நெகேமியாவின்கீழ் இவன் இஸ்ரவேலரை எதிர்த்தான். (நெகே 4:7-13:28) மகா அலெக்ஸாண்டரோடு சேர்ந்து கொண்டான். அலெக்ஸாண்டர் சன்பல்லாத்திற்கு எருசலேமிலுள்ள ஒரு தேவாலயத்தைப் போல கெரிசீம் மலையிலும், ஒரு தேவாலயம் கட்ட, அனுமதி கொடுத்தான். தேவாலயத்தைக் கட்டி, தன்னுடைய மருமகன் மனாசேயைத் தேவாலயத்தின் பிரதான ஆசாரியனாக்கினான். சமாரியர், எருசலேமிலுள்ள தேவாலயத்திற்குப் போட்டியாக கெரிசீம் மலையிலுள்ள தேவாலயத்தில் ஆராதனை செய்தார்கள். பழைய ஏற்பாட்டிலுள்ள பஞ்சாகமத்தைத் தங்களுடைய வேதாகமமாகப் பயன்படுத்தி, வந்தார்கள். யூதருக்கும், சமாரியருக்கும் உள்ள மிகப்பெரிய வேறுபாடு என்னவென்றால், கர்த்தரைக் கெரிசீம் மலையில் ஆராதிக்க வேண்டுமா அல்லது மோரியா மலையில் ஆராதிக்க வேண்டுமா என்பதுதான்.

4 அதிகாரம்

சமாரிய ஸ்திரீ இயேசு கிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசி என்று கூறினாள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, யூதருக்கும், சமாரியருக்கும் இடையிலுள்ள பிரச்சனையைப் பற்றிப் பேசுகிறாள்.

(12) இயேசு - பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்

யோவான் 4:21 அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது.

யோவான் 4:22 நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுது கொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது.

யோவான் 4:23 உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப் பட்டவர்களாயிருக்கும் படி பிதாவானவர் விரும்புகிறார்.

யோவான் 4:24 தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்றார்.

"ஸ்திரீயே" - (யோவான் 2:4)

தீர்க்கதரிசன எண் - 6

"நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது..........." (யோவான் 4:21-24) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்து ஒரு சத்தியத்தை வெளிப்படுத்துகிறார். உண்மையான ஆராதனையை நாம் நமது இருதயத்திலிருந்து ஏறெடுக்க வேண்டும். எந்த மலையிலிருந்து ஆராதனை செய்தாலும், பிரச்சனையில்லை. நமது ஸ்தோத்திரமும், துதியும் இருதயத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும்.

"பிதா" - இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரர். ஆகையினால் இயேசு ஆண்டவரை "பிதா" என்று அழைக்கிறார். (மத் 16:16) நாமெல்லாம் கர்த்தருடைய சுவீகாரப் புத்திரர்கள். (மத் 8:15; கலா 4:5; எபே 1:5, லூக்கா 10:21, 2கொரி 6:18)

பிதா (Father) - προπάτωρ - **propatoor** - 3962

ஆண்பால் பெயர்ச்சொல் - தகப்பன், பிதா, முன்னோர்

"நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்" - (2இராஜா 17:24-41, யோவான் 4:33)

"இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" - யூதருடைய மேசியா வழியாக இரட்சிப்பு வரும் என்று தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தார்கள். (லூக்கா 2:30; ரோமர் 3:1-2; ரோமர் 9:4-5; 1பேதுரு 1:10-12).

"காலம் இப்பொழுதே வந்திருக்கிறது" - உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் இப்பொழுதே வந்திருக்கிறது.

தொழுதுகொள்ளுகிறவர்கள் **(worshippers)** - προσκυνητής - **proskyneetees** - 4353

ஆண்பால் பெயர்ச்சொல் - தொழுதுகொள்ளுகிறவர்கள்

4 அதிகாரம்

"ஆவியோடு" - சரீரப்பிரகாரமாக அல்ல. நமது சிந்தையிலும், எண்ணங்களிலும், கர்த்தரைத் தொழுதுகொள்ளுதல்.

"உண்மையோடு" - சத்தியத்தை ஏற்றுக் கொண்டு, கர்த்தரைத் தொழுது கொள்ளுதல். கள்ள உபதேசங்களைப் பின்பற்றக் கூடாது.

"தேவன் ஆவியாயிருக்கிறார்" - தேவன் சூரியனோ, சந்திரனோ, நட்சத்திரங்களோ அல்ல. அவர் கல்லோ, உலோகமோ, மரமோ, மிருகமோ, மனுஷனோ அல்ல. அவர் காற்றோ, ஜலமோ, அக்கினியோ அல்ல. அவர் ஆவியாயிருக்கிறார்.

அவர் ஒரு நபர். அவருக்கு ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவை உள்ளது. மனுஷருக்கு எலும்புகளும், சதைகளும் இருப்பது போன்று, தேவனுக்கு இராது. மற்றபடி தேவன் மனுஷரைப் போல ஒரு நபராகவே இருக்கிறார். (யோபு 13:8; எபி 1:3). தேவனுக்கு ஆவிக்குரிய சரீரம் உள்ளது. (தானி 7:9-14; தானி 10:5-19); ரூபம் **shape** (யோவான் 5:37); சாயல் **(form)** (பிலி 2:5-7); மனுஷனுடைய ரூபமும், சாயலும் உள்ளது. **(image and likeness of a man)** (ஆதி 1:26; ஆதி 9:6; எசே 1:26-28; 1தீமோ 3:9)

வேதாகமத்தில் தேவனுடைய சரீர உறுப்புக்களாக நாம் வாசிக்கும் காரியங்கள்.

1. பின்பகுதிகள் **(back parts)** (யாத் 33:23)
2. இருதயம் **heart** (ஆதி 6:6; ஆதி 8:21)
3. கைகளும், விரல்களும் **(hands and fingers)** (சங் 8:3-6; எபி 1:10; வெளி 5:1-7)
4. வாய் **(mouth)** (எண் 12:8)
5. உதடுகளும், நாவும் **(lips and tongue)** (ஏசா 30:27)
6. பாதங்கள் **(feet)** (எசே 1:27; யாத் 24:10)
7. கண்கள் **(eyes)** (சங் 11:4; சங் 18:24; சங் 33:18)
8. காதுகள் **(ears)** (சங் 18:6)
9. தலைமுடி, தலை, முகம், கைகள் **(hair, head, face, arms)** (தானி 7:9-14; தானி 10:5-19; வெளி 5:1-7; வெளி 22:4-6)
10. இடுப்பு **(loins)** (எசே 1:26-28; எசே 8:1-4)

தேவனுக்குச் சரீரப் பிரசன்னம் உள்ளது. (ஆதி 3:8; ஆதி 18:1-22) ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மற்ற நபர்கள் போவதுபோலவே போகிறார். (ஆதி 3:8; ஆதி 11:5; ஆதி 18:1-5,22,33; ஆதி 19:24; ஆதி 32:24-32; ஆதி 35:13; சக 14:5; தானி 7: 9-14; தீத்து 2:13).

தேவனிடம் உள்ள காரியங்கள்

1. சத்தம் **(voice)** (சங் 29; வெளி 10:3-4)
2. சுவாசம் **(breath)** (ஆதி 2:7)
3. முகரூபம் **(countenance)** (சங் 11:7)

தேவன் செய்யும் காரியங்கள்

1. வஸ்திரம் தரிக்கிறார். **(He wears clothes)**(தானி7:9-14;தானி 10:5-19);
2. போஜனம் பண்ணுகிறார் **(eats)** (ஆதி 18:1-8; யாத் 24:11)
3. ஓய்வு எடுக்கிறார் **(rests)** (ஆதி 2:1-4; எபி 4:4)
4. பரலோகத்தில் வாசம்பண்ணுகிறார். **(dwells in a mansion and in a city located on a material planet called Heaven)** (யோவான் 14:1-3; எபி 11:10-16; எபி 13:14; வெளி 21)

4 அதிகாரம்

5. சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார் **(sits on a throne)** *(ஏசா 6; தானி 7:9-14; வெளி 4:1-5; வெளி 22:3-6)*

6. நடக்கிறார் **(walks)** *(ஆதி 3:8; ஆதி 18:1-8,22,33)*

7. ஏறிப்போகிறார் **(rides)** *(சங் 18:10; சங் 68:17; சங் 104:3; எசே 1)*

தேவனுடைய உணர்வுகள்

1. துக்கம் **(grief)** *(ஆதி 6:6)*
2. கோபம் **(anger)** *(1இராஜா 11:9)*
3. மனம்வருந்துதல் **(repentance)** *(ஆதி 6:6)*
4. வைராக்கியம் **(jealousy)** *(யாத் 20:5)*
5. வெறுப்பு **(hate)** *(நீதி 6:16)*
6. அன்பு **(love)** *(யோவான் 3:16)*
7. பரிதாபம் **(pity)** *(சங் 103:13)*
8. ஐக்கியம் **(fellowship)** *(1யோவான் 1:1-7)*
9. சந்தோஷம் **(pleasure and delight)** *(சங் 147:10)*
10. உணர்வுகள் **(other soul passions like other beings)** *(கலா 5:22-23)*.

தேவனுடைய ஆள்தத்துவப் பண்புகள்

1. தனிப்பட்ட ஆவி **(personal spirit)** *(சங் 143:10; ஏசா 30:1)*
2. சிந்தை **(mind)** *(ரோமர் 11:34)*
3. ஞானம் **(intelligence)** *(ஆதி 1:26; ரோமர் 11:33)*
4. சித்தம் **(will)** *(ரோமர் 8:27; ரோமர் 9:19)*
5. வல்லமை **(power)** *(எபே 1:19; எபே 3:7,20; எபி 1:3)*
6. சத்தியம் **(truth)** *(சங் 91:4)*
7. விசுவாசமும், நம்பிக்கையும் **(faith and hope)** *(ரோமர் 12:3; 1கொரி 13:13)*
8. நீதி **(righteousness)** *(சங் 45:4)*
9. உண்மை **(faithfulness)** *(1கொரி 10:13)*
10. அறிவும், ஞானமும் **(knowledge and wisdom)** *(ஏசா 11:2; 1தீமோ 1:17)*
11. சிந்தனை **(reason)** *(ஏசா 1:18)*
12. பகுத்தறிவு **(discernment)** *(எபி 4:12)*
13. மாறாத தன்மை **(immutability)** *(எபி 6:17)*

தேவன் தம்மைச் சரீரப்பிரகாரமாகப் பல இடங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். (ஆதி 18; ஆதி 32:24-30; யாத் 24:9-11; யோசு 5:13-15; ஏசா 6; தானி 7:9-13; எசே 1; அப் 7:56-59; வெளி 4-5) மனுஷன் தேவனுடைய ரூபமாகவும், தேவனுடைய சாயலாகவும் இருக்கிறான். தேவனைக் காணமுடியாது. அவருடைய ரூபமாகவும், சாயலாகவும் இருக்கும் மனுஷன் மூலமாக தேவனை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். (ரோமர் 1:20)

(13) ஸ்திரீ - கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார்

யோவான் 4:25 அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்.

4 அதிகாரம்

(14) இயேசு - நானே அவர்

யோவான் 4:26 அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்.

19. சீஷர்கள் திரும்பி வருகிறார்கள் - ஸ்திரீ ஊரிலுள்ள ஜனங்களை கிறிஸ்துவிடம் அழைத்து வருகிறாள்

யோவான் 4:27 அத்தருணத்தில் அவருடைய சீஷர்கள் வந்து, அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப் பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவளுடனே பேசுகிறீரென்றாவது, ஒருவனும் கேட்கவில்லை.

யோவான் 4:28 அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி:

யோவான் 4:29 நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள்.

யோவான் 4:30 அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்.

"அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப் பற்றி ஆச்சரியப்பட்டார்கள்" - யூதருக்கும், சமாரியருக்கும் எந்தவிதச் சம்மந்தமுமில்லை. அப்படியிருக்கும் போது, யூதராகிய இயேசு கிறிஸ்து சமாரியா ஸ்திரீயிடம் பேசுவது சீஷருக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அதே சமயத்தில் யூதமார்க்கத்தில் ரபீ என்று அழைக்கப்படுகிறவர்கள் பொது இடங்களில் ஸ்திரீகளோடு பேசக்கூடாது. அது மட்டுமல்ல, தன் மனைவி, சகோதரி, மகள் ஆகிய யாருடனும் தெருவிலோ, அல்லது வேறு பொது இடங்களிலோ யூதமார்க்கத்தின் ரபீமார்கள் பேசக்கூடாது.

ஆகையினால் இயேசு கிறிஸ்து கிணற்றண்டையில் ஸ்திரீயிடம் பேசியது சீஷருக்கு ஆச்சரியமாக இருந்தது.

20. ஊழியக்காரரின் சந்தோஷமும் திருப்தியும்

யோவான் 4:31 இப்படி நடக்கையில் சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, போஜனம் பண்ணும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

யோவான் 4:32 அதற்கு அவர்: நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார்.

யோவான் 4:33 அப்பொழுது சீஷர்கள் ஒருவரையொருவர் பார்த்து: யாராவது அவருக்குப் போஜனம் கொண்டு வந்திருப்பானோ என்றார்கள்.

யோவான் 4:34 இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.

"நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு" - ஆத்தும திருப்தி என்பதைச் சீஷர்கள் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. ஒரு சமாரியா ஸ்திரீ மனந்திரும்பி இரட்சிக்கப்படும்போது, இயேசு கிறிஸ்துவின் ஆத்துமாவில் சந்தோஷமும், சமாதானமும், திருப்தியும் உண்டாகும். (யோவான் 4:34).

"நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" - இயேசு கிறிஸ்து ஜீவியத்தின் இலக்கணத்தைத் தெளிவாகக் கூறுகிறார். தேவனுடைய சித்தத்தைச் செய்வது நமது வாழ்வின் இலக்காக இருக்க வேண்டும். அதற்காகவே நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும்.

முடி (finish) - τελειόω - teleiooo - 5048

வினைச்சொல் - முடி, தேறு, நிறைவேற்று, பூரணப்படுத்து (to complete and bring to an end) (யோவான் 5:36; யோவான்17:4,23;யோவான் 19:28,30).

4 அதிகாரம்

21. சுவிசேஷ ஊழியத்தைப் பற்றிய உபதேசம்

யோவான் 4:35 அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 4:36 விதைக்கிறவனும் அறுக்கிற வனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக் கொள்ளுகிறான்.

யோவான் 4:37 விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்சொல் இதினாலே விளங்குகிறது.

யோவான் 4:38 நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப் பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள் என்றார்.

"அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா?" - பஸ்கா பண்டிகைக்குப் பின்பு அறுப்புக்காலம் வரும். பஸ்கா ஏப்ரல் மாதத்தில் நடைபெறும். இயேசு கிறிஸ்து இங்கு கூறியிருக்கும் மாதம் டிசம்பர் மாதத்துக் குளிர்காலமாகும்.

"இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்" - சமாரியர்கள் பட்டணத்திலிருந்து இயேசு கிறிஸ்து இருக்கும் கிணற்றண்டையில் வருகிறார்கள். அறுப்புக்கு விளைந்திருக்கிறது என்பது சமாரியருடைய ஆத்தும அறுவடையைக் குறிப்பிடும். அறுவடை சமீபமாக இருக்கிறது. அறுவடை பண்ண வேண்டிய காலம் ஒருநாள் வரும். ஆவிக்குரிய அறுவடைகளுக்கு நாம் நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. சத்திய வசனங்களை நாம் ஏற்கெனவே விதைத்திருக்கிறோம். விதைப்புக்கு ஏற்ற விளைச்சல் நிச்சயமாக இருக்கும்.

"அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக் கொள்ளுகிறான்" - இயேசு கிறிஸ்து சமாரிய ஸ்திரீயின் இருதயத்திலே சுவிசேஷ விதையை விதைத்திருக்கிறார். ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதற்கான கூலியை அவர் ஏற்கெனவே வாங்கியிருக்கிறார். அவர் விதையை விதைத்து, நித்திய ஜீவனுக்கான கனியை அன்றைய தினமே அறுவடை செய்கிறார். விதைக்கிறவரும், அறுக்கிறவரும் இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்துவே. இயேசு கிறிஸ்து அந்த நாளின் அறுவடைக்காக மிகுந்த சந்தோஷமடைகிறார். (1கொரி 3:6-9)

"நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்கிறீர்கள்" - இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை ஆத்தும அறுவடைக்காக அனுப்புகிறார். அவர்கள் அறுவடையின் பலனைப் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் சீஷர்கள் சத்திய வசனங்களை விதைக்கவில்லை. அவர்களுக்கு முன்பிருந்த பரிசுத்தவான்களும், தீர்க்கதரிசிகளும் வேத வசனத்தை ஜனங்களுடைய இருதயத்தில் விதைத்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவும், யோவான் ஸ்நானனும் ஏற்கெனவே சத்திய வசனத்தை ஜனங்கள் மத்தியிலே விதைத்திருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே பலருக்கு சத்திய வசனங்களைப் பிரசங்கம் பண்ணி, ஞானஸ்நானம் கொடுத்திருக்கிறார்கள். ஏராளமான வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் பிரயாசப்பட்டு, பயிரிட்டார்கள். அவர்களுடைய பிரயாசத்தின் பலனைச் சீஷர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். (மத் 10; லூக்கா 9; லூக்கா 10; யோவான் 4:2).

22. இரண்டு நாள் எழுப்புதல் கூட்டம்

யோவான் 4:39 நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்கள் ஆனார்கள்.

4 அதிகாரம்

யோவான் 4:40 சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்தில் தங்க வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டார்கள்; அவர் இரண்டு நாள் அங்கே தங்கினார்.

யோவான் 4:41 அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து,

யோவான் 4:42 அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்துவிசுவாசிக்கிறோம்என்றார்கள்.

"அநேகர்அவர்மேல் விசுவாசமுள்ளவர்கள் ஆனார்கள்" - அந்த ஸ்திரீயின் சாட்சியின் மூலமாக அந்த ஊர் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, மறுபடியும் பிறந்து, நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டார்கள். (யோவான் 4:42; யோவான் 3:15-18; 1யோவான் 5:1)

"ஸ்திரீ" - இவள் ஒரு வேசி என்பதற்கு ஆதாரம் எதுவுமில்லை. அவளுக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள். ஒருவேளை ஒவ்வொருவராக மரித்திருக்கலாம். மத் 22:28 ஆவது வசனத்தில் ஒரு ஸ்திரீயின் ஏழு கணவர்களைப் பற்றி வாசிக்கிறோம். அல்லது இந்த ஸ்திரீயின் புருஷர்கள் இவளைத் தள்ளுதற்சீட்டுக் கொடுத்து, தள்ளி வைத்திருக்கலாம். அக்காலத்தில் மனைவியைத் தள்ளிவிடுவது எளிது. எந்த முகாந்தரத்தினாலாகிலும், மனைவியைத் தள்ளிவிடலாம் என்று புருஷர்கள் நினைத்தார்கள். (மத் 19:1-12). தள்ளுதற்சீட்டைப் பற்றி உபா 24:1 ஆவது வசனத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம். "ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணிக் கொண்ட பின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால் அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம்". யூதமார்க்கத்து ரபீமார்கள் இந்த நிபந்தனைகளையெல்லாம் புறக்கணித்து விட்டு, சிறிய காரணங்களுக்குக் கூட தள்ளுதற்சீட்டுக் கொடுத்து விடுகிறார்கள். சமாரியரும், யூதரைப் போல தள்ளுதற்சீட்டுக் கொடுத்திருக்கலாம். இயேசு கிறிஸ்து அவளிடம் "இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல" என்று கூறுகிறார். ஆகையினால் இந்த ஸ்திரீயும், அந்த மனுஷனும் கணவனும், மனைவியும் அல்ல. (யோவான் 4:18)

"அவர் இரண்டு நாள் அங்கே தங்கினார்" - யூதர்கள் சமாரியருடைய ஊரில் தங்க மாட்டார்கள். இயேசு கிறிஸ்து அங்கு இரண்டு நாள் தங்கி, யூதருடைய பாரம்பரியத்தை மீறுகிறார். ஒரு ஸ்திரீயோடு பேசுவதே ரபீமாருக்கு உகந்ததல்ல. இப்போது சமாரியரோடு இரண்டு நாள் தங்குகிறார். இது பரிசேயருடைய பார்வையில் மிகப்பெரியக் குற்றமாக இருக்கும். (யோவான் 4:9) நாம் பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்று இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். தமது உபதேசத்தின் பிரகாரம் செயல்படுகிறார். (லூக்கா 10:29-37)

"அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்தார்கள்" - யோவான் இரண்டு இடங்களில் "அநேகர்" இயேசுவை விசுவாசித்ததாகக் கூறுகிறார். (யோவான் 4:39,41) மிகப்பெரிய ஆத்தும அறுவடை அங்கு நடைபெற்றது.

"உலகரட்சகர்" - இந்த வசனத்திலும் 1யோவான் 4:14 ஆவது வசனத்திலும் மட்டுமே இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"உலகம்" - இயேசு கிறிஸ்து யூதருக்கும், புறஜாதியாருக்கும் இரட்சகர் என்று இந்த சமாரியர்கள் விசுவாசித்தார்கள். இவர்கள் மற்ற சமாரியர்களைப் போல அல்ல. மற்ற சமாரியர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவில்லை. (லூக்கா 9:51-56) ஒருநபர் இயேசுகிறிஸ்துவைத் தன்னுடைய உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளும்போது அவர்களுடைய ஜீவியத்தில் மாற்றம் ஏற்படும்.

23. கலிலேயாவில் இயேசுவை ஏற்றுக் கொள்கிறார்கள்

யோவான் 4:43 இரண்டுநாளைக்குப் பின்பு அவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவுக்குப் போனார்.

யோவான் 4:44 ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் சொந்த ஊரிலே கனமில்லையென்று இயேசு தாமே சொல்லியிருந்தார்.

4 அதிகாரம்

யோவான் 4:45 அவர் கலிலேயாவில் வந்தபோது, எருசலேமில் பண்டிகையிலே அவர் செய்த எல்லாவற்றையும் பார்த்திருந்த கலிலேயர் அவரை ஏற்றுக் கொண்டார்கள்; அவர்களும் பண்டிகைக்குப் போயிருந்தார்கள்.

"இரண்டுநாளைக்குப் பின்பு" - சமாரியாவில் இரண்டு நாட்கள் இருந்தபின்பு. "பின்பு" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "மேடா" **(meta)** என்பதாகும். இதற்கு "ஒரு நிகழ்ச்சிக்குப் பின்பு" என்று பொருள். (யோவான் 5:1) இயேசுகிறிஸ்து மூன்று நாட்களுக்குப் பின்பு, உயிர்த்தெழுந்தார் என்னும் வாக்கியத்திலும், இதே கிரேக்கச் சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மத் 27:63; மாற்கு 8:31). "பின்பு" என்னும் வார்த்தை பயன்படுத்தப்படும்போது அந்த நிகழ்ச்சி ஒரு காரியத்திற்கு நடுவில் நடைபெறவில்லை என்று பொருள். வேதவாக்கியத்தில் "ஒருசில நாட்களுக்குப் பின்பு" என்று நாம் சில வசனங்களில் வாசிக்கிறோம். எடுத்துக்காட்டாக, "இரண்டு நாளைக்குப்பின்பு" (மத் 26:2; மாற்கு 14:1), "மூன்று நாளைக்குப்பின்பு" (அப் 25:1; அப் 28:17), "ஆறு நாளைக்குப் பின்பு" (மத் 17:1; மாற்கு 9:2), "எட்டு நாளைக்குப்பின்பு" (லூக்கா 9:28).

பின்பு **(after)** - **μετά** - **meta** - 3326

முன்னிடைச்சொல் - உடன், கூட, உம், உடைய

"ஒரு தீர்க்கதரிசிக்குத் தன் சொந்த ஊரிலே கனமில்லை" - இயேசுகிறிஸ்துவின் சொந்த தேசம் யூதேயா. சொந்த ஊர் பெத்லகேம். (மீகா 5:1-2; மத் 2). அவர் ஊழியம் செய்த தேசம் கலிலேயா. யூதேயா அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. கலிலேயா அவரைஏற்றுக்கொண்டது. (யோவான் 4:45). இயேசுகிறிஸ்து சொந்த ஊரான நாசரேத்தில் உள்ள ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை. கலிலேயாவிலுள்ள ஜனங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். (லூக்கா 4:16-30)

24. இராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரனை இயேசு குணமாக்குகிறார்

யோவான் 4:46 பின்பு, இயேசு தாம் தண்ணீரைத் திராட்சரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் வந்தார்; அப்பொழுது கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான்.

யோவான் 4:47 இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தாரென்று அந்த மனுஷன் கேள்விப்பட்டபோது, அவரிடத்திற்குப் போய், தன் மகன் மரண அவஸ்தையாயிருந்தபடியினாலே, அவனைக் குணமாக்கும்படிக்கு வரவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்.

யோவான் 4:48 அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார்.

யோவான் 4:49 அதற்கு ராஜாவின் மனுஷன்: ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்குமுன்னே வரவேண்டும் என்றான்.

யோவான் 4:50 இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த மனுஷன், இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனான்.

யோவான் 4:51 அவன் போகையில், அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து, உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள்.

யோவான் 4:52 அப்பொழுது: எந்த மணிநேரத்தில் அவனுக்குக் குணமுண்டாயிற்று என்று அவர்களிடத்தில் விசாரித்தான். அவர்கள்: நேற்று ஏழாமணிநேரத்தில் ஜுரம் அவனை விட்டது என்றார்கள்.

யோவான் 4:53 உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று இயேசு தன்னுடனே சொன்ன மணிநேரம் அதுவே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள்.

4 அதிகாரம்

யோவான் 4:54 இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குத் திரும்பிவந்த பின்பு, இது அவர் செய்த இரண்டாம் அற்புதம்.

"கலிலேயாவிலுள்ள கானா ஊர்" - (யோவான் 2:1)

"ராஜாவின் மனுஷர்" **(nobleman)** - கலிலேயாவின் காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுவினுடைய அதிகாரியாகவோ, அல்லது அவனுடைய குடும்பத்தாராகவோ இருக்கலாம். (யாக் 3:1; மத் 14:1).

ராஜாவின் மனுஷன் **(nobleman)** - βασιλίσκος - **basiliskos** - 937

பெயரடை - ராஜா, ராஜரிக, ராஜாவின் மனுஷன் **(an officer, prince)** (யோவான் 4:46,49; அப் 12:20-21; யாக் 2:8)

"கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான்" - நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் வியாதியாக இருந்த சம்பவத்தை மத் 8:5-12, லூக்கா 7:1-10 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கலாம். இவ்விரண்டும் வெவ்வேறு அற்புதங்கள். நடைபெற்ற இடம், விண்ணப்பம், கிறிஸ்துவின் பதில், மனுஷனுடைய விசுவாசம் எல்லாமே வெவ்வேறானவை.

"நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்க மாட்டீர்கள்" - இந்த மனுஷனிடம் விசுவாசம் இல்லை. மத்தேயு 8 ஆவது அதிகாரத்தில் நாம் வாசிக்கும் நூற்றுக்கதிபதியினிடத்தில் மிகுந்த விசுவாசம் இருந்தது.

"அடையாளங்களையும் அற்புதங்களையும்" - (யோவான் 2:11) ஜனங்களை விசுவாசிகளாகஆக்குவதற்கு அற்புதங்களும், அடையாளங்களும் நடைபெற்றன. (மாற்கு 16:15-20; யோவான் 5:20-36; யோவான் 9:3-4; யோவான் 10:25-38; யோவான் 14:10-15).

தீர்க்கதரிசன எண் - 7

"நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான்" (யோவான் 4:50) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"அந்த மனுஷன், இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனான்" - இதுவே விசுவாசம். (ரோமர் 4:17; ரோமர் 10:17; எபி 11:1) விசுவாசத்தை நாம் நடைமுறையில் செயல்படுத்த வேண்டும். கர்த்தர் வாக்கு மாறாதவர். அவர் வாக்குத்தத்தம் பண்ணியதை நிறைவேற்றுவார். வேதத்திலுள்ள தீர்க்கதரிசனங்களும் நிறைவேறும். கர்த்தருடைய வார்த்தையும் நிறைவேறும்.

"எந்த மணிநேரத்தில் அவனுக்குக் குணமுண்டாயிற்று என்று அவர்களிடத்தில் விசாரித்தான்" - இயேசு கிறிஸ்து சுகமாக்கும்போது தவணை முறையில் சுகமாக்காமல், உடனடியாகச் சுகமாக்குகிறார். ராஜாவின் மனுஷனிடம் நீ போகலாம். உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று எந்த நேரத்தில் சொன்னாரோ அந்த நேரத்திலேயே அவனுடைய குமாரன் பிழைத்தான். (யோவான் 4:53)

"ஏழாமணிநேரம்" - மதியம் 1 மணி

"அவன் விசுவாசித்தான்" - இயேசு சொன்ன வார்த்தையை அந்த மனுஷன் நம்பிப் போனான். (யோவான் 4:50) அவனுடைய விசுவாசம் இந்த வசனத்தில் உறுதிபண்ணப்படுகிறது.

"அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்தார்கள்" - அவன் வீட்டிலுள்ள எல்லோருமே இரட்சிக்கப்பட்டார்கள். எல்லோரும்விசுவாசித்தார்கள். ஒருவனுடைய விசுவாசத்தினால் மற்றவன் இரட்சிக்கப் படுவதில்லை. ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு அவனுக்குள் விசுவாசம் இருக்க வேண்டும்.

5 அதிகாரம்

25. பெதஸ்தா குளம் - இயேசு ஓய்வுநாளில் திமிர்வாதக்காரனை சொஸ்தமாக்குகிறார்

யோவான் 5:1 இவைகளுக்குப்பின்பு யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போனார்.

யோவான் 5:2 எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டுவாசலினருகே இருக்கிறது, அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு.

யோவான் 5:3 அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து, தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக் கொண்டிருப்பார்கள்.

யோவான் 5:4 ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கினபின்பு யார் முந்தி அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான்.

யோவான் 5:5 முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான்.

யோவான் 5:6 படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதியஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார்.

யோவான் 5:7 அதற்கு வியாதியஸ்தன்: ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும் போது என்னைக் குளத்தில் கொண்டு போய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான்.

யோவான் 5:8 இயேசு அவனை நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்றார்.

யோவான் 5:9 உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான். அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது.

"இவைகளுக்குப்பின்பு" - யோவான் இப்படிப்பட்ட வாக்கியத்தை 15 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். இதற்குரிய கிரேக்க வார்த்தை "மேடா" **(meta)** என்பதாகும். யோவான் சுவிசேஷத்திலும், வெளிப்படுத்தின விசேஷத்திலும் இந்த வாக்கியம் பலவிதமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவைகளுக்குப் பின்பு **"after these things"** (யோவான் 3:22; யோவான் 6:1; யோவான் 7:1; யோவான் 21:1; வெளி 7:1; வெளி 18:1; வெளி 19:1); இவைகளுக்குப் பின்பு **"after this"** (யோவான் 5:1; யோவான் 19:38; வெளி 4:1; வெளி 7:9); இவைகளுக்குப் பின்பு **"after that"** (வெளி 15:5; வெளி 20:3); அதற்குப்பின்பு **"afterward"** (யோவான் 5:14); இவைகளுக்குப்பின்பு **"hereafter"** (யோவான் 13:7; வெளி 1:19; வெளி 4:1; வெளி 9:12). புதிய ஏற்பாட்டில் இந்த வாக்கியம் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்திக் கூறுவதற்காக 12 இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (மாற்கு 16:12; லூக்கா 5:27; லூக்கா 10:1; லூக்கா 12:4; லூக்கா 17:8; லூக்கா 18:4; அப் 7:7; அப் 13:20; அப் 15:16; அப் 18:1; எபி 4:8; 1பேதுரு 1:11)

இவைகளுக்குப்பின்பு **(After this)** - **μετά** - **meta** – 3326

முன்னிடைச்சொல் - உடன், கூட, உம், உடைய

"யூதருடைய பண்டிகை" - (யோவான் 2:13)

"இயேசு எருசலேமுக்குப் போனார்" - எருசலேமில் இயேசு கிறிஸ்து கலந்து கொண்ட இரண்டாவது பண்டிகை. (யோவான் 2:13-23; யோவான் 3:22)

"ஆட்டுவாசல்" - இது வாசலின் பெயராக இருக்கலாம். (நெகே 3:1,32; நெகே 12:39)

குளம் **(pool)** - **κολυμβήθρα** - **kolymbeethra** - 2861

5 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - குளம் (யோவான் 5:2,4; யோவான் 9:7; அப் 27:43).

"பெதஸ்தா" - இரக்கத்தின்வீடு **(house of mercy)**

"ஐந்து மண்டபங்கள்" - வெயிலுக்கும், மழைக்கும் ஜனங்கள் ஒதுங்கித் தங்குவதற்காகக் கட்டப்பட்டிருந்தன.

"வியாதிக்காரர்" **(impotent)** - வியாதி உடையவர்கள், நாதியற்றவர்கள்.

"சப்பாணிகள்" **(halt)** - (அப் 3:2,11; அப் 8:7; அப் 14:8; மத் 11:5; மத் 18:8; மத் 21:14; மத் 7:22; மத் 14:13, 21; எபி 12:13; மாற்கு 9:45)

"சூம்பின உறுப்புடையவர்கள்" - திமிர்வாதக்காரர்கள். (மத் 12:10; மாற்கு 3:3; லூக்கா 6:6-8)

"சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா" - அந்த மனுஷனுக்கு இயேசுவைப் பற்றித் தெரியாது. ஆகையினால் இயேசு தாமே சம்பாஷணையை ஆரம்பித்து வைக்கிறார்.

"ஆண்டவரே" - (யோவான் 4:11)

கலக்குதல் **(troubled)** - ταράσσω - **tarassoo** - 5015

வினைச்சொல் - கலங்கு, கலக்கமடை, துயரமடை, கலக்குதல் **(to agitate, cause commotion, disturb)** (யோவான் 11:33; யோவான் 12:27; யோவான் 13:21; யோவான் 14:1,27).

"எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட" - யோவான் கூறியிருக்கும் மூன்றாவது அற்புதம். (யோவான் 2:11; யோவான் 4:54). பெதஸ்தா குளத்தில் ஏராளமான வியாதியஸ்தர்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லோரையும் இயேசு குணமாக்காமல், இந்த மனுஷனை மட்டும் ஏன் குணமாக்கினார் என்று இந்த வசனத்தில் கூறப்படவில்லை.

இயேசு கிறிஸ்துவின் சத்துருக்கள் அவருக்கு எதிராக சதியாலோசனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் அவர் தமது கிரியைகளைப் பிரஸ்தாபப்படுத்த விரும்பவில்லை. அது ஒய்வுநாள். அந்த ஒய்வுநாளில் இயேசு கிறிஸ்து பெரிய குழப்பத்தை உண்டு பண்ண விரும்பவில்லை. (யோவான் 5:16). இயேசுவால் எல்லாரையும் குணப்படுத்த முடியாது. ஒருவேளையில் அவர் ஒருவரை மட்டுமே குணப்படுத்துவார் என்று இதற்கு வியாக்கியானம் கூறக்கூடாது. எல்லோரையும் குணப்படுத்துவதற்காகவே இயேசு கிறிஸ்து வந்திருக்கிறார். அவருடைய தழும்புகளால் நாம் எல்லோருமே குணமாகிறோம். (ஏசா 53:4-5; மத் 8:17; மத் 2:24).

26. ஓய்வுநாளில் படுக்கையை எடுத்துக் கொண்டு போவதற்காக யூதர்கள் அவனைக் கடிந்து கொள்கிறார்கள்

யோவான் 5:10 ஆதலால் யூதர்கள் குணமாக்கப்பட்டவனை நோக்கி: இது ஓய்வுநாளாயிருக்கிறதே, படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல என்றார்கள்.

யோவான் 5:11 அவன் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைச் சொஸ்தமாக்கினவர், உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று எனக்குச் சொன்னார் என்றான்.

யோவான் 5:12 அதற்கு அவர்கள்: உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று உன்னுடனே சொன்ன மனுஷன் யார் என்று அவனிடத்தில் கேட்டார்கள்.

யோவான்5:13 சொஸ்தமாக்கப்பட்டவன் அவர் இன்னாரென்று அறியவில்லை; அவ்விடத்தில் ஜனங்கள் கூட்டமாயிருந்த படியினால் இயேசு விலகியிருந்தார்.

"இது ஓய்வுநாளாயிருக்கிறதே, படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது உனக்கு நியாயமல்ல" - ஒரு பொது இடத்திலிருந்து தனி இடத்திற்கோ அல்லது தனி இடத்திலிருந்து ஒரு பொது இடத்திற்கோ ஓய்வுநாளில் ஒரு பொருளை எடுத்துச் செல்வது பிரமாணத்தை மீறும் செயல் என்று யூதமார்க்கத்து ரபீமார்கள் குற்றம் சுமத்தினார்கள். இதுபோன்று அவர்கள் பல்வேறு பாரம்பரியங்களை ஜனங்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தி வந்தார்கள்.

5 அதிகாரம்

“அவ்விடத்தில் ஜனங்கள் கூட்டமாயிருந்த படியினால் இயேசு விலகியிருந்தார்” - அங்கு திரளான ஜனங்கள் கூட்டமாகக் கூடியிருந்தார்கள். தம்மீது யூதமார்க்கத் தலைவர்களுக்கு வெறுப்பு இருந்தது. அவர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறிய பாரம்பரிய விதிகளை இயேசுகிறிஸ்து மீறினார். பிரச்சனை வரக்கூடாது என்று நினைத்து, இயேசு அந்த இடத்திலிருந்து விலகி இருந்தார். இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல் “எக்னேயோ” (ekneuoo) இதற்குக் கடந்துபோதல், அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்குப் போதல், தப்பித்துப்போதல் (to escape, slip away) என்று பொருள். இந்த இடத்தில் இயேசு கிறிஸ்து தேவையில்லாமல் மரிக்க விரும்பவில்லை. கல்வாரி சிலுவையில் மரிக்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தம். இயேசு கிறிஸ்து அதை நிறைவேற்றவே விரும்பினார்.

விலகு (conveyed ... away) - ἐκνεύω - ekneuoo - 1593

வினைச்சொல் - விலகு

27. இயேசு தாம் சொஸ்தமாக்கிய திமிர்வாதக்காரனை மறுபடியும் காண்கிறார்

யோவான் 5:14 அதற்குப்பின்பு இயேசு அவனை தேவாலயத்திலே கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.

பாவம் (sin) - ἁμαρτάνω - hamartanoo - 264 - குறி தவறுதல் (யோவான் 1:29).

வினைச்சொல் - குற்றம் செய், பாவஞ்செய், பெற்றுக்கொள்ளத் தவறு, நியதியின் படி நடக்கத்தவறு

(அ) சட்டப்பிரகாரமாக தவறு செய்தல் (அப். 25:8) ஆன்மீகபிரகாரமாக தவறு செய்தல் (ரோம. 3:23, 5:12)

(ஆ) நீதி நெறிக்குப் புறம்பாகத் தவறு செய்தல்; ஒருவருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தல் (1கொரி. 6:18) மனிதர்கள் மத்தியில் தவறு செய்தல் (18:15)

(இ) தேவனுடைய சித்தத்தை மீறுதல். அதிலும் சிறப்பாக தேவன் வெளிப்படுத்தியுள்ள சித்தத்தை கூறி, அவருக்கு எதிராக பாவஞ்செய்தல் (மத். 27:2)

28. சொஸ்தமான மனுஷன் யூதரிடம் அறிவிக்கிறான்

யோவான் 5:15 அந்த மனுஷன் போய், தன்னைச் சொஸ்தமாக்கினவர் இயேசு என்று யூதர்களுக்கு அறிவித்தான்.

“அந்த மனுஷன் போய், தன்னைச் சொஸ்தமாக்கினவர் இயேசு என்று யூதர்களுக்கு அறிவித்தான்” - அந்த மனுஷனுக்கு யூதமார்க்கத் தலைவர்களால் இயேசு கிறிஸ்துவிற்கு நேரிட்டிருக்கிற பிரச்சனை தெரியவில்லை. ஆகையினால், இயேசுவின் அற்புதமான கிரியையை யூதருக்கு அறிவிக்கிறான்.

29. இயேசுவை கொல்வதற்கு சதியாலோசனை - (மத் 26:3)

யோவான் 5:16 இயேசு இவைகளை ஓய்வுநாளில் செய்தபடியால், யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி, அவரைக் கொலைசெய்ய வகைதேடினார்கள்.

“இயேசு இவைகளை ஓய்வுநாளில் செய்தபடியால், யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி, அவரைக் கொலைசெய்ய வகைதேடினார்கள்” - இயேசு மேலும் பல சமயங்களில் ஓய்வு நாளில் சொஸ்தமாக்கியிருக்கிறார். (யோவான் 12:10-14; மாற்கு 1:21-27; மாற்கு 3:1-6; லூக்கா 6:6-11; லூக்கா 13:10-16; லூக்கா 14:1-5; யோவான் 5:16; யோவான் 9:14). இதனால் அவருக்கு உபத்திரவம் வரும். இதைத் தெரிந்திருந்தும், இயேசுகிறிஸ்து ஓய்வுநாளில் அற்புதம் செய்கிறார். ஓய்வுநாளுக்காக மனுஷன் சிருஷ்டிக்கப் படவில்லை. மனுஷனுக்காகவே ஓய்வுநாள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது என்பது இயேசு கிறிஸ்துவின் உபதேசம். (ஏசா 1:13-15; ஓசி 2:11)

5 அதிகாரம்

30. இயேசுவின் பதிலுரை

(1) இயற்கையில் பிதாவும் இயேசுவும் சமம் - (1:1)

யோவான் 5:17 இயேசு அவர்களை நோக்கி: என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியைசெய்துவருகிறேன் என்றார்.

யோவான் 5:18 அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்.

"என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியை செய்துவருகிறேன்" - தேவன் ஓய்வுநாளிலும், மற்ற நாட்களிலும் கிரியை செய்து வருகிறார். தம்முடைய சிருஷ்டிகளை எல்லா நாட்களிலும் பராமரிக்கிறார். கடினமாக உழைத்துவிட்டு, ஓய்வு எடுப்பது தவறில்லை. (ரோமர் 14:5-6) ஆனாலும், ஓய்வுநாளுக்கு முக்கியம் தவறாமல் தேவனுக்கே முக்கியம் தரவேண்டும். ஓய்வுநாளிலும், நன்மை செய்ய வேண்டும். (மத் 12:12; மாற்கு 2:27-28; மாற்கு 3:4; லூக்கா 6:9; லூக்கா 13:16; யோவான் 7:22-23; கலா 4:9-10; கொலோ 2:14-17).

"நானும் கிரியைசெய்துவருகிறேன்" - பிதா குமாரனுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தை இந்த வாக்கியம் வெளிப்படுத்துகிறது. (யோவான் 5:19-40; எபி 1:1-2) குமாரனுக்குப் பிதா கொடுத்திருக்கும் வேலையையே இயேசு கிறிஸ்து செய்து வருகிறார். பிதா ஓய்வுநாளிலும் கிரியை செய்வதினால் குமாரனும் ஓய்வுநாளில் கிரியை செய்கிறார்.

"அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்" - இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்வதற்கு யூதமார்க்கத்து தலைவர்கள் பலமுறை முயற்சி பண்ணுகிறார்கள். அதற்குப் பலவிதமான காரணங்களையும் கண்டுபிடிக்கிறார்கள். இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறியதும், தேவனைத் தம்முடைய பிதா என்று கூறியதும் யூதமார்க்கத்தலைவர்களுக்குத் தேவ தூஷணமாகத் தெரிகிறது. இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனுக்குச் சமமாக்கியதாக நினைத்தார்கள்.

"தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினார்" - இயேசு கிறிஸ்து மனுஷகுமாரனாக ஆவதற்கு முன்பாக அவர் பிதாவோடும், பரிசுத்த ஆவியானவரோடும் சம அந்தஸ்தில் இருந்தார். அவருக்கு ஆவிக்குரிய சரீரமும், தெய்வீக சுபாவங்களும் இருந்தது. இயேசு கிறிஸ்து மனுஷராக ஆனதினாலே தம்முடைய தெய்வத்துவத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, தம்மைத் தாமே வெறுமையாக்கி, ஒரு மனுஷனைப் போல ஆனார். (பிலி 2:5-11) இயேசு கிறிஸ்து எப்போதுமே பிதாவிற்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் சமமானவர். இதுவே திரித்துவத்தின் தத்துவம். (யோவான் 5:17-29)

(2) வல்லமையிலும் கிரியைகளிலும் பிதாவும் இயேசுவும் சமம் - (யோவான் 3:34)

யோவான் 5:19 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.

யோவான் 5:20 பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள் ஆச்சரியப் படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார்.

5 அதிகாரம்

"பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" - திரித்துவத்தில் இடம் பெற்றிருக்கும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் தனித்தனியாகக் கிரியை செய்வதில்லை. இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே வெறுமையாக்கி, மனுஷனானபோது, அவர் பூமியிலே பிதாவின் பிரதிநிதியாக இருந்தார். பிதா பரிசுத்த ஆவியினால் குமாரன் மூலமாகக் கிரியை செய்தார். (ஏசா 11:2; ஏசா 61:1; அப் 10:38)

"அந்தப்படியே" (likewise) - பிதா செய்கிறதை அந்தப்படியே குமாரனும் செய்கிறார். பிதாவின் சித்தமும், குமாரனின் சித்தமும் ஒன்றாகவே இருக்கிறது.

"பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளை யெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்" - இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் மனுஷனாக இருந்த பொழுது, அவருடைய அறிவு, ஞானம், வல்லமை ஆகியவை அனைத்தும், மனுஷத்துவத்தின்வரையறைக்குட்பட்டிருந்தது. (ஏசா 11:2; ஏசா 50:4; லூக்கா 2:40,52; மத் 11:25-27; மத் 24:36; அப் 1:6-8; வெளி 1:1).

தீர்க்கதரிசன எண் - 8

"நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார்" (யோவான் 5:20) இந்தத் தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் கிரியைகளில் நிறைவேறிற்று.

(3) மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதில் பிதாவும் இயேசுவும் சமம் - (யோவான் 11:25)

யோவான் 5:21 பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்.

"பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார்" - பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் இயேசு கிறிஸ்துவிற்கு தேவனிடமிருந்து பரிபூரணமான அதிகாரமும், அளவில்லாத கிருபையும் கிடைத்திருக்கிறது. (யோவான் 3:34) இயேசு கிறிஸ்து மனுஷரை உயிர்த்தெழச்செய்து, தமது பரிபூரணமான அதிகாரத்தை வெளிப்படுத்துகிறார். (யோவான் 5:28-29; யோவான் 6:39; யோவான் 11:25).

(4) நியாயத்தீர்ப்பு செய்வதில் பிதாவும் இயேசுவும் சமம் - (அப் 17:31)

யோவான் 5:22 அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

"அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறது போல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும் படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" - தேவன் இந்த உலகத்தை இயேசுகிறிஸ்து மூலமாக நியாயம் தீர்ப்பார் என்று இந்த வசனம் தெளிவாக விளக்குகிறது. (அப் 17:31; அப் 12:48).

(5) கனத்தில் பிதாவும் இயேசுவும் சமம் - (எபி 2:7-9)

யோவான் 5:23 குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்.

"குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்" - திரித்துவத்தில் பிதாவும், பரிசுத்த ஆவியானவரும் இருப்பதுபோல குமாரனும் இருக்கிறார். இயேசு அவர்களோடு சம அந்தஸ்தில் இருக்கிறார் என்பதை இந்த வசனம் விளக்குகிறது. (1யோவான் 5:7)

5 அதிகாரம்

(6) நித்திய ஜீவனைக் கொடுப்பதில் பிதாவும் இயேசுவும் சமம் - (17:2)

யோவான் 5:24 என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட் படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 5:25 மரித்தோர் தேவ குமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்" - (யோவான் 5:22, 1யோவான் 3:14; 2கொரி 5:17; 2கொரி 5:24)

தீர்க்கதரிசன எண் - 9

"மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்" (யோவான் 5:25) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று, இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"மரித்தோர்" - ஆவிக்குரிய ரீதியாக மரிப்பவர்கள். (மத் 8:22; எபே 2:1-9; 1தீமோ 5:6).

"அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்" - (மாற்கு 16:15-16; லூக்கா 24:47; அப் 2:38-39; அப் 3:19; ரோமர் 10:9-17)

(7) தம்மில்தாமே ஜீவனுடையவராய் இருப்பதில் பிதாவும் இயேசுவும் சமம் - (1:4)

யோவான் 5:26 ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடைய வராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்.

யோவான் 5:27 அவர் மனுஷ குமாரனாயிருக்கிற படியால், நியாத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குச் கொடுத்திருக்கிறார்.

"பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார்" - குமாரன் தம்மில் தாமே ஜீவனுடையவராக இருக்கிறார். உலகத்தை இரட்சிக்கவும், நியாயந்தீர்க்கவும் சகல அதிகாரமும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகப் பிதாவினால் குமாரனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 11:2; ஏசா 42:1; ஏசா 61:1; அப் 10:38; மத் 12:28)

(8) மரணத்தின்மீதும் நித்தியத்தின் மீதும் உள்ள அதிகாரத்தில் பிதாவும் இயேசுவும் சமம்

யோவான் 5:28 இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்;

யோவான் 5:29 அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.

5 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 10

"இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும். அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28-29) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறவில்லை. பாவத்தில் மரித்துப்போன ஆத்துமாக்களை இயேசு கிறிஸ்து தமது வல்லமையினால் மறுபடியும் உயிர்த்தெழ வைக்கிறார். (யோவான் 5:25; எபே 2:1-9) பிரேதக்குழிகளில் உள்ள மரித்துப் போன சரீரங்களையும் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழச் செய்வார். (எபே 5:28-29; 1கொரி 15:20-23; வெளி 20:4-15)

"பிரேதக்குழிகளில்" - சரீர மரணம் அடைந்தவர்கள் மட்டுமே பிரேதக்குழிகளில் கிடப்பார்கள். (யாக் 2:26) சரீர உயிர்த்தெழுதலுக்காகப் பிரேதக்குழிகளில் சரீரங்கள் காத்துக் கொண்டிருக்கும். (யோவான் 5:28-29). ஆவியும், ஆத்துமாவும் மரிப்பதில்லை. சரீரம் மட்டுமே மரித்துப்போய் பிரேதக்குழிகளில் இருக்கும். (யோவான் 3:4) மரித்துப் போன பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் பரலோகத்தில் இருக்கும். (எபே 4:8-10; பிலி 1:21-24; 2கொரி 5:8; வெளி 6:9-11; எபி 12:22-23) மரித்துப்போன துன்மார்க்கரின் ஆத்துமாக்கள் நரகத்தில் இருக்கும். (லூக்கா 16:19-21; ஏசா 14:9; வெளி 20:11-15) மரித்துப் போனவர்களுடைய ஆத்துமாக்கள் பரலோகத்திலும், நரகத்திலும் உணர்வுடன் இருக்கும்.

"பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்" - பிரேதக்குழிகளில் கிடக்கும் சரீரங்களும், பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ இருக்கும். அவர்களுடைய ஆத்துமாக்களும் மறுபடியும் உயிர்த்தெழும்போது ஒன்றுசேரும். அப்போது அவை தேவகுமாரனுடைய சப்தத்தைக் கேட்கும். அதன்பின்பு அவை பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ சென்று நித்திய காலமாகத் தங்கும். (யோவான் 5:28-29; தானி 12:2)

"அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" - பிரேதக்குழிகளிலிருந்து சரீரங்கள் ஜீவனற்றவையாகவும், மரித்தவையாகவும் புறப்பட்டு வரமுடியாது. ஆவியும், ஆத்துமாவும் உயிர்த்தெழுதலின்போது அதன் சரீரத்தோடு சேரும். அப்போது அந்த சரீரம் உயிர்த்தெழும். இயேசு கிறிஸ்துவும் இவ்வாறு உயிர்த்தெழுந்தார். அவருடைய சரீரம் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டிருந்தது. அவருடைய ஆவியும், ஆத்துமாவும் பாதாளத்திற்குச் சென்று அங்கு சாத்தானால் சிறைப்பிடிக்கப் பட்டிருந்தவர்களை விடுதலைபண்ணி விட்டு, மறுபடியும் கல்லறைக்கு வந்து, அங்கு அடக்கம் பண்ணப்பட்டிருந்த சரீரத்தோடு சேர்ந்து கொண்டது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். (சங் 16:10; மத் 12:40; மத் 28:1-6; எபே 4:8-10)

"நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாக....... புறப்படுவார்கள்" - நன்மை செய்தவர்கள் என்பது கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லா நபர்களையும் குறிக்கும்.

1. நன்மைசெய்தவர்கள். **(have done good)** (யோவான் 5:29)
2. பாக்கியவான்களும்,பரிசுத்தவான்களும் **(blessed and holy)** (வெளி 20:4-6)
3. கிறிஸ்துவினுடைய வர்கள் **(are Christ's)** (1கொரி 15:23,51-58; 1கொரி 5:24)
4. பாத்திரவான்கள் **(worthy)** (லூக்கா 21:36)
5. கிறிஸ்துவில் இருக்கிறவர்கள். **(in Christ)** (1தெச 4:16-17; 2கொரி 5:17)

5 அதிகாரம்

6. வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருப்பவரிடத்தில் இருக்கிறவர்கள். **(that are in the way, the truth, and the life)** (யோவான் 14:1-6)

7. அவர் பரிசுத்தமாக இருக்கிறதுபோல தங்களைப் பரிசுத்தப் படுத்திக் கொண்டிருக்கிறவர்கள். **(that have purified themselves even as He is pure)** (1யோவான் 3:2-3; 2கொரி 7:1; கலா 5:16-24; எபி 12:14)

8. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் கறைதிரை இல்லாமல் இருக்கிறவர்கள். **(that are without spot or wrinkle and without blemish and are in the church, the body of Christ)** (எபே 1:22-23; எபே 5:27; 1கொரி 12:13; கொலோ 1:18,24)

பரிசுத்தவான்கள் நித்திய ஜீவனைப் பெறும்படிக்கு உயிர்த்தெழுந்து, ஆயிரம் வருஷங்களுக்குப் பின்பு துன்மார்க்கர் ஆக்கினையை அடையும்படிக்கு உயிர்த்தெழுவார்கள். (யோவான் 5:29; தானி 12:2).

நன்மைசெய் **(done good)** - **ποιέω** - **poieoo** - 4160

வினைச்சொல் - கட்டளையிடு, செவ்வைப்பண்ணு, கொடு, கைக்கொள், செய்யப்பண்ணு, உண்டாக்கு

"தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாக புறப்படுவார்கள்" - பரிசுத்தவான்கள் நித்திய ஜீவனைப் பெறும்படிக்கு உயிர்த்தெழுந்து, ஆயிரம் வருஷங்களுக்குப் பின்பு துன்மார்க்கர் ஆக்கினையை அடையும்படிக்கு உயிர்த்தெழுவார்கள். (யோவான் 5:29; தானி 12:2, வெளி 14:9-11; வெளி 20:4-6, 11-15; வெளி 21:8; வெளி 22:15).

தீமைசெய் **(done evil)** - **ἀναπράσσω** - **anaprassoo** - 4238

வினைச்சொல் - எதிர்பார்

"ஆக்கினை" - யோவான் 5:22, 24, 27 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆக்கினை என்பதன் கிரேக்கச் சொல் "கிரிசிஸ்" **(krisis)** நீதிமான்கள் நித்திய ஜீவனை அடைவதற்காக உயிர்த்தெழுவார்கள். துன்மார்க்கர் ஆக்கினையை அடைவதற்காக உயிர்த்தெழுவார்கள்.

ஆக்கினை **(damnation)** - **κρίσις** - **krisis** - 2920

பெண்பால் பெயர்ச்சொல் - நியாயத்தீர்ப்பு, நியாயம், ஆக்கினை, தீர்ப்பு

(9) இயேசு பிதாவினிடத்தில் கேட்கிறபடியே நியாயத்தீர்ப்பு செய்கிறார் - (8:16; 9:39)

யோவான் 5:30 நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை; நான் கேட்கிற படியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.

"நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது" - குமாரனாகிய இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனோடு ஐக்கியமாக இருப்பதை இயேசு கிறிஸ்து சாட்சியாக அறிவிக்கிறார்.

(10) இயேசுவைப் பற்றி கூறப்பட்டுள்ள சாட்சி

(அ) யோவான் ஸ்நானன் - (1:29)

யோவான் 5:31 என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது.

5 அதிகாரம்

யோவான் 5:32 என்னைக்குறித்து சாட்சி கொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார்,அவர் என்னைக்குறித்துக் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்று அறிந்திருக்கிறேன்.

யோவான் 5:33 நீங்கள் யோவானிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்கள், அவன் சத்தியத்திற்கு சாட்சிகொடுத்தான்.

யோவான் 5:34 நான் ஏற்றுக் கொள்ளுகிற சாட்சி மனுஷருடைய சாட்சியல்ல, நீங்கள் இரட்சிக்கப் படுவதற்காகவே இவைகளைச் சொல்லுகிறேன்.

யோவான் 5:35 அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்; நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள்.

"என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது" - இயேசு கிறிஸ்து பொய் கூறாதவர். ஆகையினால் அவரைக் குறித்து, அவர் கூறும் சாட்சி மெய்யாகவே இருக்கிறது. என்றாலும் நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் ஒரு சாட்சி ஏற்றுக் கொள்ளப்படவேண்டுமென்றால், இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் அதை உறுதி பண்ண வேண்டும். (உபா 17:6).

"என்னைக்குறித்து சாட்சிகொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார்" - பிதாவானவரே தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து, சாட்சி கொடுக்கிறார். (யோவான் 5:31; யோவான் 7:28; யோவான் 8:26; மத் 3:17; மத் 17:5) இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்து யோவான் ஸ்நானனைப் பற்றிக் கூறவில்லை. அவர் ஏற்கெனவே இயேசுவைப் பற்றி சாட்சி கூறி வருகிறார். (யோவான் 5:33-35) இந்த வசனத்தில் இயேசு பிதாவைக் குறிப்பிடுகிறார். (யோவான் 5:36-38) ஆகையினால் பிதாவானவர் தம்மைக் குறித்து கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்று இயேசு கிறிஸ்து அறிந்திருக்கிறார்.

"அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்; நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள்" - எரிந்து பிரகாசிக்கிற விளக்கு என்பது எபிரெயருடைய வழக்குச் சொல். இது பிரபலியமான மனுஷரைக் குறிக்கும். (யோவான் 8:12) ஜனங்கள் யோவானைத் தீர்க்கதரிசியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தீர்க்கதரிசி பொய்கூறமாட்டார் என்றும் விசுவாசிக்கிறார்கள். ஆகையினால் யோவான் ஸ்நானன் தம்மைப் பற்றிக் கூறியதை ஜனங்கள் விசுவாசிக்க வேண்டும் என்று இயேசுகிறிஸ்து இந்த வசனத்தில் வலியுறுத்திக் கூறுகிறார். (யோவான் 1:29)

(ஆ) இயேசுவின் கிரியைகள் - (10:31-38)

யோவான் 5:36 யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், நான் நிறைவேற்றும் படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச்சாட்சிகொடுக்கிறது.

(இ) பிதா - (மத் 3:17; 17:5; யோவான் 8:18; 10:25; 12:28; 14:10)

யோவான் 5:37 என்னை அனுப்பின பிதா தாமே என்னைக்குறித்துச் சாட்சி கொடுத்திருக்கிறார்; நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை.

யோவான் 5:38 அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசியாதபடியால் அவருடைய வசனம் உங்களில் தரித்திருக்கிறதுமில்லை.

5 அதிகாரம்

"என்னை அனுப்பின பிதா தாமே என்னைக்குறித்துச்சாட்சிகொடுத்திருக்கிறார்; நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை" - சீனாய் மலையில் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்டதுபோன்று இவர்கள் கேட்கப்போவதில்லை. (உபா 5:22-33) மற்றவர்கள் மத் 3:17; மத் 17:5 ஆகிய வசனங்களில் தேவனுடைய சத்தத்தைக் கேட்டதுபோன்றும், இவர்கள் கேட்கப் போவதில்லை.அவருடைய ரூபத்தையும் இவர்கள் காண்பதில்லை. (ஆதி 18:1-8; ஆதி 32:24-30; யாத் 24:9-11; யோசு 5:13-15; நியா 6:11-23; நியா 13:3-23; 1நாளா 21:16; யோபு 42:5; ஏசா 6; ஆமோ 9:1; எசே 1:26-28; தானி 7:9-14; தானி 10:5-6; அப் 7:56-59; வெளி 4-5) இந்த வசனங்கள் மூலமாக தேவனுக்கு ஒரு ரூபம் உண்டு என்பதும், அவர் தமது சப்தத்தை வெளிப்படுத்தக் கூடியவர் என்பதும் தெளிவாகிறது.

ரூபம் (figure) - εἶδος - eidos - 1491

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ரூபம், தரிசனம், தோற்றம் (external appearance,form,figure, shape)

(ஈ) வேதவாக்கியங்கள் - (லூக் 24:27,44)

யோவான் 5:39 வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே.

யோவான் 5:40 அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை.

யோவான் 5:41 நான் மனுஷரால் மகிமையை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை.

யோவான் 5:42 உங்களில் தேவ அன்பு இல்லையென்று உங்களை அறிந்திருக்கிறேன்.

ஆராய்ந்துபார் (Search) - ἐρευνάω - eraunaoo - 2045

வினைச்சொல் - ஆராய், ஆராய்ந்துபார் - வேட்டைக்குப் போகும்போது, வேட்டை நாய் மோப்பம் பிடித்து, வேட்டையாடுவது போல தேடிப்பார்த்தல் என்று பொருள்படும். வேதவாக்கியங்களில் நித்திய ஜீவன் உண்டு என்று யூதர்கள் எண்ணுகிறார்கள். அவர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சத்தியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" - இயேசு கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்து யோவான் ஸ்நானன் சாட்சி பகர்ந்தான். அது இயேசுவைப் பற்றிய மறைமுகமான சாட்சியாகும். (யோவான் 5:36) பிதாவானவர் தாமே தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து, நேரடியாகவே சாட்சி பகருகிறார். (வெளி 5:30-37; மத் 3:17; மத் 17:5) பிதாவானவர் கூறும் சாட்சியை யூதர்களால் புரிந்து கொள்ள முடியாது. ஏனெனில் அவர்கள் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதில்லை. (யோவான் 5:37). அதுமட்டுமல்ல, அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர்கூறும்சாட்சியும்கிடைப்பதில்லை. அவர்கள் வேதவாக்கியங்களையும் ஆராய்ந்து பார்ப்பதில்லை. இயேசு கிறிஸ்துவைப் பற்றி வேதவாக்கியம் கூறும் சத்தியங்களையும் ஏற்றுக் கொள்வதில்லை. பிதாவானவரே தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பினார் என்று வேதவாக்கியம் தெளிவாகக் கூறுகிறது. (யோவான் 5:38,40) ஆகையினால் இயேசு கிறிஸ்து யூதரிடம் "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்" என்று கூறுகிறார்.

மகிமை (honour) - δόξα - doxa - 1391

பெண்பால் பெயர்ச்சொல் - மகிமை, மகத்துவம், துதி, கனம் - அங்கீகாரம் (approval) (யோவான் 5:44) துதி (praise) (யோவான் 9:24; யோவான் 12:43; 1பேதுரு 4:11)

5 அதிகாரம்

(11) இயேசு பிதாவின் நாமத்தினாலே வந்திருக்கிறார் - (தானி 9:27)

யோவான் 5:43 நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை, வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்.

தீர்க்கதரிசன எண் - 11

"நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ள வில்லை, வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்" (யோவான் 5:43) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. தாம் செய்த எல்லாக் கிரியைகளையும் இயேசுகிறிஸ்து தமது பிதாவின் நாமத்தினாலேயே செய்தார். (யோவான் 5:43; யோவான் 10:25)

"வேறொருவன் தன் சுய நாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள்" - வருங்காலத்தில் வரப்போகும் அந்திக் கிறிஸ்துவைக் குறிக்கும். (தானி 7:24; தானி 8:9, 23-24; தானி 9:27; தானி 11:35-45; மத் 24:15; 2தெச 2:1-12;1 யோவான் 2:18; வெளி 13). யூதர்கள் அந்திக்கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள். அவனோடு ஏழு வருஷங்களுக்கு உடன்படிக்கை செய்து கொள்வார்கள். (தானி 8:25; தானி 9:27).

(12) இயேசு அவிசுவாசத்தைக் கடிந்து கொள்கிறார்

யோவான் 5:44 தேவனாலேமாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?

யோவான் 5:45 பிதாவினிடத்தில் நான் உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவேன் என்று நினையாதிருங்கள்; நீங்கள் நம்புகிற மோசேயே உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவான்.

யோவான் 5:46 நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக் குறித்து எழுதியிருக்கிறானே.

யோவான் 5:47 அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள் என்றார்.

"மகிமை" - (யோவான் 5:41)

"பிதாவினிடத்தில் நான் உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவேன் என்று நினையாதிருங்கள்; நீங்கள் நம்புகிற மோசேயே உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவான்" - யூதமார்க்கத்தார் மோசேயைத் தங்கள் முற்பிதாவாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்காக இயேசு கிறிஸ்து அவர்கள்மீது குற்றம் சுமத்த வேண்டியதில்லை. அவர்கள் நம்பும் மோசேயே இதற்காக அவர்கள்மீது குற்றம் சுமத்துவார். நியாயத்தீர்ப்பு நாளில் இந்தக் குற்றச்சாட்டு, யூதர்கள்மீது சுமத்தப்படும்.

"மோசே என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே" - (ஆதி 3:15; ஆதி 12:3; ஆதி 17:18; ஆதி 49:10; உபா 18:15-18; லூக்கா 24:27, 44)

"அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள்" - பஞ்சாகமத்தில் உள்ள ஐந்து புஸ்தகங்களும் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, எழுதப்பட்டிருக்கிறது என்பதை இயேசுகிறிஸ்து இந்த வசனத்தின் மூலமாக அங்கீகாரம் பண்ணுகிறார். மோசேயின் வார்த்தைகளை நாம் விசுவாசிக்க வேண்டும். மோசேயின் வார்த்தைகளை விசுவாசியாதவர்கள் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளையும் விசுவாசிக்க மாட்டார்கள். ஏனெனில் மோசேயின் வார்த்தைகளும், கிறிஸ்துவின் வார்த்தைகளும் ஒத்திருக்கின்றன.

6 அதிகாரம்

31. ஐயாயிரம் பேருக்கு அற்புதமாக போஜனம் கொடுக்கிறார் - (மத் 14:15; மாற்கு 6:32; லூக் 9:11)ற

யோவான் 6:1 இவைகளுக்குப்பின்பு இயேசு திபேரியாக்கடல் என்னப்பட்ட கலிலேயாக் கடலின் அக்கரைக்குப் போனார்.

யோவான் 6:2 அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின்சென்றார்கள்.

யோவான் 6:3 இயேசு மலையின்மேல் ஏறி, அங்கே தம்முடைய சீஷருடனேகூட உட்கார்ந்தார்.

யோவான் 6:4 அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது.

யோவான் 6:5 இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில வருகிறதைக் கண்டு, பிலிப்புவை நோக்கி: இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கேகொள்ளலாம் என்று கேட்டார்.

யோவான் 6:6 தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும், அவனைச் சோதிக்கும்படி இப்படிக்கேட்டார்.

யோவான் 6:7 பிலிப்பு அவருக்குப் பிரதியுத்தரமாக: இவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சங்கொஞ்சம் எடுத்துக் கொண்டாலும், இருநூறு பணத்துக்கு அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான்.

யோவான் 6:8 அப்பொழுது அவருடைய சீஷரிலொருவனும், சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி:

யோவான் 6:9 இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான்.

யோவான் 6:10 இயேசு: ஜனங்களை உட்காரவையுங்கள் என்றார். அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருந்தது. பந்தியிருந்த புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிருந்தார்கள்.

யோவான் 6:11 இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் பந்தி இருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார்.

யோவான் 6:12 அவர்கள் திருப்தியடைந்த பின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார்.

யோவான் 6:13 அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்.

"இவைகளுக்குப் பின்பு இயேசு திபேரியாக் கடல் என்னப்பட்ட கலிலேயாக் கடலின் அக்கரைக்குப் போனார்" - யூதருடைய இரண்டாம் பண்டிகையில் கலந்து கொள்வதற்கு இயேசு கிறிஸ்து எருசலேமிற்கு இரண்டு முறை சென்றபின்பு கலிலேயாவிற்குத் திரும்பி வந்தார். கலிலேயாக்கடல் வழியாகப் பிரயாணம் பண்ணினார்.

"திபேரியாக்கடல்" - கலிலேயாக்கடலில் மேற்குக் கடல் ஓரத்தில் திபேரியாப் பட்டணம் உள்ளது. இதனால் கலிலேயாக்கடலுக்குத் திபேரியாக்கடல் என்னும் பெயர் வழங்கலாயிற்று. இந்த வசனத்திலும் யோவான் 6:23; யோவான் 21:1 ஆகிய வசனங்களிலும் நாம் இந்தப் பெயரை வாசிக்கிறோம்.

6 அதிகாரம்

"அற்புதங்கள்" - (யோவான் 2:11)

"யூதருடைய பண்டிகை" - (யோவான் 2:13)

"இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்" - இத்தனைபேரும் சாப்பிடுவதற்குப் பணத்திற்கு என்ன செய்வது என்னும் கேள்வி இங்கு எழவில்லை. சுவிசேஷ ஊழியத்தில் பணம் ஒரு பிரச்சனையாக இருக்கக் கூடாது. கர்த்தரைச் சார்ந்து, ஜீவிக்க வேண்டும். விசுவாசத்தோடு ஊழியம் செய்ய வேண்டும். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லையென்று பிரசங்கம் பண்ணுகிற நாம் அந்த வாக்கியத்தை நமது ஜீவியத்திலும் ஆழமாக விசுவாசிக்க வேண்டும். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 15:7,16).

பணம் **(pennyworth)** - **δηνάριον** - **deenarion** - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு

"அந்திரேயா" - யோவான் 1:44; யோவான் 12:22 ஆகிய வசனங்களில் பிலிப்புடன் வருகிறான். ஒருசிலருடைய பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு அந்திரேயா ஆலோசனை கூறுகிறான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ எல்லோருடைய பிரச்சனையையும் தீர்த்து வைக்கிறார். (யோவான் 6:9-13) இந்தச் சிறுபையன், அப்பம் விற்கும் பையனாக இருக்கலாம். கிழக்குத் தேசங்களில் திரளான ஜனங்கள் கூடியிருக்கும் இடங்களில் இவனைப் போன்ற சிறுவர்கள் உணவுப் பொருட்களை விற்பது வழக்கம்.

'இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்" - எல்லோருக்கும் உணவு கிடைப்பதற்கு முன்பாகவே இயேசு கிறிஸ்து விசுவாசத்தோடு பிதாவை ஸ்தோத்திரம் பண்ணுகிறார். எல்லோருக்கும் பிதாவானவர் உணவைக் கொடுத்துவிட்டதாக விசுவாசித்து ஸ்தோத்திரிக்கிறார். பிதாவிடம் உணவைக் கேட்பதற்குப் பதிலாக உணவைக் கொடுத்ததற்காகப் பிதாவை ஸ்தோத்திரிக்கிறார்.

"அவர் அப்பங்களையும், மீன்களையும் எடுத்து அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார்" - இயேசு கிறிஸ்து எப்போதுமே தமது பிள்ளைகளுக்கு வேண்டியமட்டும் கொடுக்கிறவர். பிலிப்பு "கொஞ்சங்கொஞ்சம்" கொடுக்கலாம் என்று நினைத்தான். (யோவான் 6:7) ஆனால் கிறிஸ்துவோ தாராளமாக வேண்டியமட்டும் கொடுக்கிறார்.

"அவர்கள் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள்" என்றார் - இது தெய்வீக நியமனம். தேவன் தாராளமாகக் கொடுக்கிறார். அவர் கொடுப்பதைச் சேதமாய் போகாதபடிக்குப் பார்த்துக் கொள்ள வேண்டியது நமது கடமை. நாம் எதையும் வீணாக்கக் கூடாது. தேவன் வீணாக எதையும் செய்வதில்லை. தேவனுடைய எல்லாக் கிரியைகளுக்கும் ஒரு தெய்வீக நோக்கம் உண்டு. அந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டு, நாம் செயல்பட வேண்டும். எதையும் வீணாக்கி விடக்கூடாது. சேதமாய்ப் போவதற்கும் நாம் காரணமாக இருக்கக்கூடாது.

"அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்" - ஆரம்பத்தில் அவர்களிடம் ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களுமே இருந்தன. ஆனால் இப்போது ஐயாயிரம் புருஷர்கள், திருப்தியாகச் சாப்பிட்டார்கள். இதுபோக ஏராளமான ஸ்திரீகளும், பிள்ளைகளும் சாப்பிட்டார்கள். எல்லோரும் திருப்தியடைந்த பின்பு, பன்னிரெண்டு கூடைகளில் மீதியான துணிக்கைகளை நிரப்பினார்கள். ஒவ்வொரு அப்போஸ்தலருக்கும் ஒவ்வொரு கூடை.

கூடைகள் **(baskets)** - **κόφινος** - **kophinos** - 2894

ஆண்பால் பெயர்ச்சொல் - கூடை - மத் 15:37; மாற்கு 8:8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கூடை வேறு, இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கூடை வேறு.

6 அதிகாரம்

32. இயேசுவை இராஜாவாக்கும்படி பிடித்துக் கொண்டு போக ஜனங்கள் மனதாயிருக்கிறார்கள்

யோவான் 6:14 இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்.

யோவான் 6:15 ஆதலால் அவர்கள் வந்து, தம்மை ராஜாவாக்கும்படிப் பிடித்துக் கொண்டுபோக மனதாயிருக்கிறார் களென்று இயேசு அறிந்து, மறுபடியும் விலகி, தனியே மலையின்மேல் ஏறினார்.

"மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி" - நியாயப் பிரமாணங்களிலும், தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களிலும், கூறப்பட்டிருக்கும் மேசியா. (யோவான் 1:21,45).

"ஆதலால் அவர்கள் வந்து, தம்மை ராஜாவாக்கும்படிப் பிடித்துக்கொண்டுபோக மனதாயிருக்கிறார்களென்று இயேசு அறிந்து, மறுபடியும் விலகி, தனியே மலையின்மேல் ஏறினார்" - திரளான ஜனங்களுக்கு இயேசு கிறிஸ்து போஜனம் கொடுத்தார். இது மிகப்பெரிய அற்புதம். இதனால் ஜனங்கள் ஆச்சரியமடைந்தார்கள். இயேசு கிறிஸ்துவை ராஜாவாக ஆக்கவேண்டுமென்று விரும்பினார்கள். இக்காலத்தில் யூதர்கள் ரோமருக்கு அடிமைகளாக இருந்தார்கள். இயேசு கிறிஸ்துவை ராஜாவாக்கினால் அவர் தங்களை ரோமப்பேரரசிடமிருந்து விடுவிப்பார் என்று நினைத்தார்கள். ஆகையினால் எப்படியாவது இயேசுவை ராஜாவாக ஆக்க வேண்டும் என்று நினைத்து, அவரைப் பிடித்துக் கொண்டுபோக திட்டம் பண்ணினார்கள். புகழும், சோதனையும் சேர்ந்தே வரும். இயேசு கிறிஸ்து அவர்களுடைய புகழ்ச்சியை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் தம்மை ராஜாவாக்க விரும்புவதை இயேசு கிறிஸ்து ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் அந்த இடத்திலிருந்து விலகி தனிமையான இடத்திற்கு ஜெபம்பண்ணப் போய்விட்டார். ஊழியத்தில் நம் எல்லோருக்கும் இயேசுகிறிஸ்து முன்மாதிரியாக இருக்கிறார்.

நமக்கு மனுஷர் மூலமாகப் புகழ்ச்சி வரும்போது, அதில் மயங்கிவிடாமல், தேவனுடைய சமூகத்தில் ஜெபம் பண்ணுவதையே நாடவேண்டும். புகழ்ச்சியை நாடக்கூடாது. தேவனுடைய சமூகத்தையே நாடவேண்டும். "அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும், நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம்" (நீதி 16:8)

33. இயேசு தண்ணீரின்மீது நடக்கிறார்

- (மத் 14:22; மாற்கு 6:45)

யோவான் 6:16 சாயங்காலமானபோது அவருடைய சீஷர்கள் கடற்கரைக்குப் போய்,

யோவான் 6:17 படவில் ஏறி, கடலின் அக்கரையிலுள்ள கப்பர்நகூமுக்கு நேராய்ப்போனார்கள்; அப்பொழுது இருட்டாயிருந்தது, இயேசுவும் அவர்களிடத்தில் வராதிருந்தார்.

யோவான் 6:18 பெருங்காற்று அடித்த படியினாலே கடல் கொந்தளித்தது.

யோவான் 6:19 அவர்கள் ஏறக்குறைய மூன்று நாலுமைல்தூரம் தண்டுவலித்துப்போன பொழுது, இயேசு கடலின்மேல் நடந்து, படவுக்குச் சமீபமாய் வருகிறதைக் கண்டு பயந்தார்கள்.

யோவான் 6:20 அவர்களை அவர் நோக்கி: நான் தான், பயப்படாதிருங்கள் என்றார்.

யோவான் 6:21 அப்பொழுது அவரைப் படவில் ஏற்றிக் கொள்ள மனதாயிருந்தார்கள்; உடனே படவு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது.

மூன்று நாலுமைல்தூரம் - (five and twenty or thirty furlongs) σταδιον - stadion - 4712

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பந்தயச்சாலை, ஸ்தாதி தூரம், ஸ்தாதிஅளவு

"இயேசு கடலின்மேல் நடந்து, படவுக்குச் சமீபமாய் வருகிறதைக் கண்டு பயந்தார்கள்" - இயேசுகிறிஸ்து படவில் வருவார் என்று சீஷர்கள் எதிர்பார்த்தார்கள்.

6 அதிகாரம்

சீஷர்கள் இப்போது கொந்தளிக்கும் கடலில் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெய்வீக உதவி தேவைப்படுகிறது. அவர்களுக்கு உதவி புரிவதற்காக இயேசுகிறிஸ்து கடலின்மீது நாலுமைல் தூரம் நடந்தே வருகிறார்.

"நான் தான், பயப்படாதிருங்கள்" - (யோவான் 4:26; யோவான் 8:24,28,58; யோவான் 13:19; யோவான் 18:5-8; மாற்கு 13:6; லூக்கா 21:8.)

"அப்பொழுது அவரைப் படவில் ஏற்றிக்கொள்ள மனதாயிருந்தார்கள்; உடனே படவு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது" - இது மிகப்பெரிய அற்புதம். படகு கொந்தளிக்கும் கடலில் இருக்கிறது. அவர்கள் நடுக்கடலில் இருக்கிறார்கள். திடீரென்று, நடுக்கடலில் இருந்த படகு கரைக்கு வந்து சேர்ந்துவிட்டது. தேவனுடைய வல்லமை படகைக் கரைக்கு கொண்டு வந்துவிட்டது. பிலிப்பு தேவனுடைய வல்லமையினால் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதைப் போன்று, இந்த நிகழ்ச்சி இருக்கிறது. (அப் 8:39-40)

34. ஜீவ அப்பத்தைப் பற்றிய உபதேசம்

(1) திரளான ஜனங்கள் இயேசுவை தேடி வருகிறார்கள்

யோவான் 6:22 மறுநாளில் கடலின் அக்கரையிலே நின்ற ஜனங்கள் அவருடைய சீஷர் ஏறின அந்த ஒரே படவுதவிர அங்கே வேறொரு படவும் இருந்ததில்லையென்றும், இயேசு தம்முடைய சீஷருடனேகூடப் படவில் ஏறாமல் அவருடைய சீஷர்மாத்திரம் போனார்களென்றும் அறிந்தார்கள்.

யோவான் 6:23 கர்த்தர் ஸ்தோத்திரஞ் செய்தபின்பு அவர்கள் அப்பம் சாப்பிட்ட இடத்துக்குச் சமீபமாய்த் திபேரியாவிலிருந்து வேறே படவுகள் வந்தது.

யோவான் 6:24 அப்பொழுது இயேசுவும் அவருடைய சீஷரும் அங்கே இல்லாததை ஜனங்கள் கண்டு, உடனே அந்தப் படவுகளில் ஏறி, இயேசுவைத் தேடிக் கொண்டு, கப்பர்நகூமுக்கு வந்தார்கள்.

யோவான் 6:25 கடலின் அக்கரையிலே அவர்கள் அவரைக் கண்டபோது: ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர் என்று கேட்டார்கள்.

"இயேசுவும் அவருடைய சீஷரும் அங்கே இல்லாததை ஜனங்கள் கண்டார்கள்" - ஜனங்கள் இன்னும் இயேசுவைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவரை எப்படியாவது ராஜாவாக ஆக்கிவிடவேண்டும் என்று தீர்மானமாக இருக்கிறார்கள். ஆனால் இயேசுவை அங்கு காணவில்லை. உடனே அந்தப் படவுகளில் ஏறி, இயேசுவைத் தேடிக்கொண்டு, கப்பர்நகூமுக்கு வந்தார்கள். (யோவான் 6:15)

(2) இயேசு ஜனங்களுடைய தவறான நோக்கங்களைக் கடிந்து கொள்கிறார்

யோவான் 6:26 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 6:27 அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன் வரைக்கும் நிலை நிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷ குமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார்.

"நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்கள்" - இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்யும்போது அவருடைய தெய்வீக சுபாவம் வெளிப்படுகிறது. திரளான ஜனங்களுக்கு இயேசு கிறிஸ்து போஜனம் கொடுத்து அற்புதம் செய்தார்.

யோவான் - தொகுப்புரை

6 அதிகாரம்

இந்த ஜனங்கள் அப்பங்களை மாத்திரமே காண்கிறார்கள். அந்த அற்புதங்களைச் செய்த இயேசு கிறிஸ்து "தேவனுடைய குமாரன்" என்பதை அவர்கள் காணவில்லை. அற்புதங்கள் நடைபெறும்போது இயேசுவை மேசியாவாக காணவேண்டும். அப்பம் சாப்பிட்டு, திருப்தியடைவது தவறல்ல. அவர்களுடைய சரீரத்திற்குப் போஜனம் தேவை. அதேவேளையில் அவர்களுடைய ஆத்துமாவிற்கும் போஜனம் தேவைப்படுகிறது. இயேசு கிறிஸ்துவே ஜீவஅப்பம். அவர்கள் உலகப்பிரகாரமான அப்பத்தைப் புசித்தபோது, இயேசு கிறிஸ்துவை ஜீவ அப்பமாகக் காணவேண்டும்.

நித்திய ஜீவன்

1. கிறிஸ்துவிடமிருந்து வருகிறது (யோவான் 6:37, 45,65).
2. அவருடைய சரீரத்தைப் புசிப்பது - அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுவது(யோவான் 6:50,51,53,58).
3. கிரியை நடப்பித்தல் (யோவான் 6:27).
4. அறுவடை - ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுதல் (யோவான் 4:35-38).
5. இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுத்தல் (யோவான் 12:25).
6. தேவனையும், கிறிஸ்துவையும் தெரிந்து கொள்ளுதல் (யோவான் 17:2-3).
7. சரியான வாசலில் உட்பிரவேசித்தல் (மத் 7:13-14).
8. தீங்கு செய்யாதிருத்தல் (மத் 18:8-9).
9. கற்பனைகளைக் கைக்கொள்ளுதல் (மத் 19:17).
10. எல்லாவற்றையும் வெறுத்தல் (மத் 19:27-29; மாற்கு 10:28-30; லூக்கா 18:28-30).
11. பாவத்திலிருந்து விலகி ஜீவித்தல் (ரோமர் 5:21; ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; தீத்து 2:11-14)
12. நற்கிரியைகளைத் தொடர்ந்து செய்து, நித்திய ஜீவனை நாடுதல் (ரோமர் 2:7).
13. ஆவிக்காக விதைத்தல் (கலா 6:7-8).
14. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுதல் (1தீமோ 6:12,19).
15. தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருத்தல் (தீத்து 1:2; தீத்து 3:7; 1பேதுரு 1:5,9,13= ரோமர் 8:24)
16. சோதனைகளைத் தாங்கிக் கொள்ளுதல் (யாக் 1:12).
17. நித்திய ஜீவனின் வாக்குத்தத்தம் நமக்குள் இருக்க வேண்டும் - தேவனிடத்திலும், கிறிஸ்துவிடத்திலும் நாம் தொடர்ந்து இருக்க வேண்டும். (1யோவான்2:24-25; 1யோவான் 5:11-20).
18. எல்லோரையும் நேசித்தல் (1யோவான் 3:14-15).
19. தேவனுடைய அன்பில் நம்மைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனை நோக்கிப் பார்த்தல் (யூதா 1:20-24).
20. பாவத்தை மேற்கொள்ளுதல் (வெளி 2:7,11,17,26; வெளி 3:5,12,21)
21. மரணம் வரையிலும் உண்மையுள்ளவர்களாக இருத்தல் (வெளி 2:10; எபி 12:14-15).
22. சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிதல் (யோவான் 3:15-19,36; யோவான் 4:14; யோவான் 5:24; யோவான் 6:40,47,54; 2கொரி 5:17; ரோமர் 1:5).
23. மறுபடியும் பிறத்தல், கிறிஸ்துவின் சத்திய வசனத்தைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிதல் (யோவான் 3; யோவான் 10:27-29).

6 அதிகாரம்

நாம் இப்போது நித்திய ஜீவனைப் பெற்றுக் கொண்டு, அதைக் காத்துக்கொள்ள வேண்டும். மேலே கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். நாம் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க வேண்டும். (மத் 7:13; மத் 18:8-9; மத் 19:17; ரோமர் 6:22); நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (ரோமர் 6:23; யாக் 1:12; 1பேதுரு 1:13; வெளி 2:10); ஆத்துமாக்களை அறுவடை செய்ய வேண்டும். (கலா 6:7-8); வரப்போகும் உலகத்தில் நாம் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும். (மத் 19:27-29; மாற்கு 10:28-30; லூக்கா 18:28-30) ஜீவியத்தின் முடிவில் நித்திய ஜீவன் பலனாகக் கிடைக்கும். (ரோமர் 6:22, யோவான் 3:16)

"நித்திய ஜீவனை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார்" - பரிசுத்த ஆவியானவரை மனுஷ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவிற்கு அளவில்லாமல் கொடுத்திருப்பதினால் பிதாவானவர் குமாரனை முத்திரித்திருக்கிறார். அதாவது உறுதிபண்ணி இருக்கிறார். (யோவான் 3:33-34, யோவான் 3:34, 1இராஜா 21:5; யோபு 34:14; 2கொரி 1:22; எபே 1:13; எபே 4:30; வெளி 7:2)

(3) தேவனுக்கு ஏற்ற கிரியைகளை எவ்வாறு செய்வது என்று ஜனங்கள் இயேசுவிடம் கேட்கிறார்கள்

யோவான் 6:28 அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்றார்கள்.

"தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்னசெய்ய வேண்டும்" - விசுவாசிகளுடைய ஜீவியத்தில் இது மிகவும் முக்கியமான கேள்வி. நம்முடைய நற்கிரியைகள் மனுஷர் காணும்படியாக இருக்க வேண்டும். இதைக் கண்ட மனுஷர் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். (மத் 5:16) கிரியைகளின் மூலமாக நமது விசுவாசத்தை வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும். (யாக் 1:22-27; யாக் 2:9-26). நற்கிரியைகளைச் செய்வதற்கு இரட்சிக்கப் பட்டவர்களாகிய நாம் ஆர்வமுடையவர்களாக இருக்கவேண்டும். (தீத்து 2:11-14)

நம் மூலமாக அற்புதம் நடைபெறுவது தவறல்ல. ஆனால் நமது நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதாகவே இருக்க வேண்டும். நம் மூலமாக தேவன் நடப்பிக்கும் அற்புதத்தில் நாம் பெருமைப்படக்கூடாது. நாம் நடப்பிக்கும் கிரியைகள் எப்போதும் தேவனை மகிமைப்படுத்தக்கூடியதாகவே இருக்க வேண்டும். லூசிபர் தேவனைப்போல ஆகவேண்டுமென்று நினைத்தான். (ஏசா 14:12-14) ஆதாமும் இதே தவறையே செய்தான். (ஆதி 3:1-14) அவர்களுடைய எண்ணமும் தவறு. இதற்காக அவர்கள் செய்த கிரியைகளும் தவறு.

இயேசுகிறிஸ்து தம்மைத் தாமே வெறுமையாக்கினார். (பிலி 2:5-11) அவரிடத்தில் சுயநலமில்லை. பிதாவை மகிமைப்படுத்த வேண்டும் என்பது மட்டுமே அவர் சித்தமாக இருந்தது. நாம் நமது ஜீவியத்தில் நமது சரீரப் பிரகாரமான தேவைகளுக்கு ஊழியம் செய்வதை நிறுத்திவிட்டு, தேவனுடைய நாம மகிமைக்காக ஊழியம் செய்ய வேண்டும். (யோவான் 6:29).

(4) தேவனுக்கேற்ற கிரியை

யோவான் 6:29 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்.

6 அதிகாரம்

"அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" - ஜனங்கள் இயேசுவிடம் தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்றுகேள்வி கேட்டார்கள். அதற்கு இயேசு கிறிஸ்து இவ்வாறு பதில் கூறுகிறார். பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்துவை அனுப்பினார். அவரைத் தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்று எல்லோரும் விசுவாசிக்க வேண்டும். அப்போது தேவன் நம்மைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொள்வார். தேவனுடைய கிரியைகளைச் செய்வதற்கு நம்மைப் பெலப்படுத்துவார். (மாற்கு 16:15-20; லூக்கா 24:49; யோவான் 14:12)

(5) ஜனங்கள் அடையாளத்தை கேட்கிறார்கள்

யோவான் 6:30 அதற்கு அவர்கள்: அப்படியானால் உம்மை விசுவாசிக்கும் படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்?

யோவான் 6:31 வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்தைப் புசிக்கக் கொடுத்தார் என்று எழுதியிருக்கிற படி, நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்களே என்றார்கள்.

"அப்படியானால் உம்மை விசுவாசிக்கும் படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்?" - இயேசு கிறிஸ்து தேவகுமாரன் என்றும், மேசியா என்றும் விசுவாசிப்பதற்கு ஜனங்கள் அடையாளத்தைத் தேடுகிறார்கள். இயேசு கிறிஸ்து திரளான ஜனங்களுக்கு அற்புதமாகப் போஜனம் கொடுத்தார். இது அவர்களுக்குப் பெரிய அற்புதமாகத் தெரியவில்லை. ஏனெனில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே வனாந்தரத்தில் நாற்பது வருஷங்களாகப் போஜனம் கொடுத்தார். அப்படியிருந்தும், மோசே தன்னைத் தேவனுடைய குமாரன் என்றோ மேசியா என்றோ கூறிக் கொள்ளவில்லை. (யோவான் 2:11. யோவான் 6:42)

(6) பிதா மெய்யான அப்பத்தை கொடுக்கிறார்

யோவான் 6:32 இயேசு அவர்களை நோக்கி: வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 6:33 வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார்.

"வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை" - மோசே மெய்யான அப்பத்தைக் கொடுப்பதில்லை. மெய்யான அப்பம் ஆத்துமாவிற்குப் போஜனம் கொடுத்து, நித்திய ஜீவனைத் தரும். மோசே கொடுத்த அப்பமோ சரீரத்திற்குரியது. சரீரப் பசியை மட்டுமே போக்கும். (யாத் 16:15; சங் 78:24, யோவான் 1:17)

(7) ஜனங்கள் அந்த அப்பத்தை எப்பொழுதும் தங்களுக்கு தர வேண்டும் என்று கூறுகிறார்கள்

யோவான் 6:34 அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும் என்றார்கள்.

"ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தரவேண்டும்" - ஜனங்கள் இவ்வாறு கேட்பதினால் அவர்கள் இன்னும் இயேசு கிறிஸ்து கூறிய சத்தியத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்று தெரிகிறது. தங்களுடைய சரீரத்தின் பசியைப் போக்கும் உலகப்பிரகாரமான அப்பத்தையே கேட்கிறார்கள்.

6 அதிகாரம்

(8) இயேசு - ஜீவ அப்பம் நானே

யோவான் 6:35 இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.

யோவான் 6:36 நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்.

யோவான் 6:37 பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.

யோவான் 6:38 என் சித்தத்தினபடியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின் படி செய்யவேநான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்.

யோவான் 6:39 அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது.

யோவான் 6:40 குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்.

தீர்க்கதரிசன எண் - 12

"ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" (யோவான் 6:35) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

யோவான் சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றிக் கூறியிருக்கும் காரியங்கள்

1. ஜீவஅப்பம் நானே. (யோவான் 6:35-51).
2. நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன். (யோவான் 8:12; யோவான் 9:5).
3. நானே ஆடுகளுக்கு வாசல் (யோவான் 10:7-9).
4. நானே நல்ல மேய்ப்பன் (யோவான் 10:11-14).
5. நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன்(யோவான்11:25).
6. நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்(யோவான்14:6).
7. நானே மெய்யான திராட்சச்செடி (யோவான் 15:1-6).

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" - இயேசு கிறிஸ்து ஜீவதண்ணீரை நமக்குப் பருகக்கொடுப்பார். ஆகையினால் நமக்குத் தாகமடையாது. (யோவான் 7:37-39) பரிசுத்த ஆவியானவர் நம்மை அபிஷேகம் பண்ணுவார். நம்முடைய எல்லாத் தேவைகளும் சந்திக்கப்படும். எல்லாப் பிரச்சனைகளையும் பரிசுத்த ஆவியானவர் தீர்த்து வைப்பார். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 11:9-13; யோவான் 14:12-17,26; யோவான் 15:7,16,26; யோவான் 16:7-15; அப் 1:4-8; அப் 8:26; 1கொரி 12:1-13; கலா 3:14; கலா 5:16-26).

"நீங்கள் என்னைக் கண்டிருந்தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள்" - தேவனே அப்பத்தைக் கொடுத்தவர். மோசேயல்ல. இயேசு கிறிஸ்து ஐந்து அப்பங்களைக் கொண்டு, திரளான ஜனங்களுக்குப் போஜனம் கொடுத்ததை அந்த ஜனங்கள் தங்கள் கண்களால் கண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் மூலமாக பல அடையாளங்களைக் கண்டும், அவரை விசுவாசியாமல் இருக்கிறார்கள். (யோவான் 6:26-27)

6 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 13

"பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" - இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசத்தோடு மனந்திருந்தி, முழு இருதயத்தோடு வரவேண்டும். பாவத்தை விட்டு விலகி தேவனுக்குப் பரிசுத்தமாக வாழவேண்டுமென்று பிரதிஷ்டை பண்ணி இயேசுகிறிஸ்துவிடம் வரவேண்டும். இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்கும், அவருடைய சித்தத்திற்கும் நம்மை ஒப்புக்கொடுத்து, கீழ்ப்படிய வேண்டும். (ரோமர் 10:9-10; 2கொரி 7:10; 1யோவான் 1:9; அப் 2:38-39; அப் 3:19).

தீர்க்கதரிசன எண் - 14

"அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது. குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது" (யோவான் 6:39-40) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. உயிர்த்தெழுதலின் போது இந்தத் தீர்க்கதரினம் முழுமையாக நிறைவேறும். (1தெச 4:16-17; 1கொரி 15:23,51-58)

"அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல்" - யோவான் 6:37,40, 47,51,53-58 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் இயேசு கிறிஸ்து தம்மிடத்தில் வருகிற யாரையும் புறம்பே தள்ளவும் மாட்டார். இழந்து போகவும் மாட்டார். (யோவான் 3:15)

"கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது" - கடைசி நாள் என்னும் வாக்கியத்தை யோவான் ஆறு இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். நீதிமானின் கடைசி நாள் மீட்பைப் பற்றி யோவான் கூறுகிறார். அப்போது அவர்களுடைய சரீரங்கள் முழுவதுமாக மீட்கப்படும். (யோவான் 6:39, 40, 44, 54; யோவான் 11:24) மேலும் ஒரு வசனத்தில் துன்மார்க்கர் கடைசி நாளில் உயிர்த்தெழுந்து, நியாயத்தீர்ப்படைவார்கள் என்பதையும் யோவான் குறிப்பிட்டிருக்கிறார். (யோவான் 12:48;வெளி 20:11-15)

(9) முறுமுறுக்கும் யூதர்கள் - (மத் 26:3)

யோவான் 6:41 நான் வானத்திலிருந்து வந்த அப்பம் என்று அவர் சொன்னதினிமித்தம் யூதர்கள் அவரைக்குறித்து முறுமுறுத்து:

யோவான் 6:42 இவன் யோசேப்பின் குமாரனாகிய இயேசு அல்லவா, இவனுடைய தகப்பனையும் தாயையும் அறிந்திருக்கிறோமே; அப்படியிருக்க, நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன் என்று இவன் எப்படிச் சொல்லுகிறான் என்றார்கள்.

"நான் வானத்திலிருந்து வந்த அப்பம்" - (யோவான் 6:35)

"இவன் யோசேப்பின் குமாரனாகிய இயேசு அல்லவா, இவனுடைய தகப்பனையும் தாயையும் அறிந்திருக்கிறோமே; அப்படியிருக்க, நான் வானத்தில் இருந்திறங்கிவந்தேன் என்று இவன் எப்படிச் சொல்லுகிறான்" - ஜனங்கள் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கவில்லை. தங்களுடைய அவிசுவாசத்திற்கு ஒருசில சாக்குப் போக்குகளைக் கூறுகிறார்கள். (மத் 13:55; மாற்கு 6:3; லூக்கா 4:22). ஜனங்கள் இந்த வசனங்களைக் கூறியபோது, யோசேப்பு உயிரோடு இருந்தார்.

(10) இயேசு ஜீவ அப்பத்தைப் பற்றி மேலும் விளக்குகிறார்

யோவான் 6:43 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: உங்களுக்குள்ளே முறுமுறுக்க வேண்டாம்.

6 அதிகாரம்

யோவான் 6:44 என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன்.

யோவான் 6:45 எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்.

யோவான் 6:46 தேவனிடத்தினின்று வந்தவரே தவிர வேறொருவரும் பிதாவைக் கண்டதில்லை, இவரே பிதாவைக் கண்டவர்.

யோவான் 6:47 என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 6:48 ஜீவ அப்பம் நானே.

யோவான் 6:49 உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள்.

யோவான் 6:50 இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படிவானத்திலிருந்து இறங்கின அப்பம் இதுவே.

யோவான் 6:51 நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்.

தீர்க்கதரிசன எண் - 15

"என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன். எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான். ((யோவான் 6:44-45) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. நீதிமான் உயிர்த்தெழுகையில் இது முழுவதுமாக நிறைவேறும். (1தெச 4:16; 1கொரி 15:23,51-58)

"என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" - தேவனுடைய வார்த்தையினாலும், பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் மட்டுமே ஒருவன் இயேசு கிறிஸ்துவிடம் வரமுடியும். (யோவான் 6:45; யோவான் 16:7-11; ரோமர் 2:12-16)

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 3

"எல்லாரும் தேவனாலே போதிக்கப் பட்டிருப்பார்கள்" (யோவான் 6:45; ஏசா 54:13; எரே 31:34)

"பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்" - பிதா மனுஷரை இவ்வாறுதான் இழுத்துக் கொள்கிறார். தம்முடைய வார்த்தையைப் பிரசங்கம் பண்ணுவதற்கு தமது பிரதிநிதிகளைப் பயன்படுத்துகிறார். (ரோமர் 10:11-17; 2கொரி 1:17-24) பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக் குறித்து உணர்த்துகிறார். (யோவான் 16:7-11) பரிசுத்த ஆவியானவருடைய கிரியையின் மூலமாக மனுஷனுடைய மனச்சாட்சி குற்ற உணர்வு அடைகிறது. தன்னுடைய செயல், சரியானதா அல்லது தவறானதா என்பதை மனுஷன் வேதவாக்கியத்தின் பிரகாரமாக நிதானித்து அறிகிறான். (ரோமர் 2:12-16; 2கொரி 2:15-17; 1யோவான் 1:7) தேவன் மனுஷரைத் தம்பிடத்தில் இழுத்துக்கொள்ளும் போது அவர் பலவந்தத்தைப் பயன்படுத்துவதில்லை. மனுஷருடைய சுயாதீன சித்தத்திற்குத் தேவன் அனுமதி அளிக்கிறார்.

6 அதிகாரம்

"இவரே பிதாவைக் கண்டவர்" - இயேசு கிறிஸ்துவே பிதாவைக் கண்டவர். பிதாவை முழுவதுமாகப் புரிந்து கொண்டவர். தமது சிந்தையில் பிதாவை அறிந்து கொண்டவர். சத்தியத்தை முழுவதுமாகக் காண்கிறவர். இந்த வாக்கியத்தில் "கண்டவர்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல்ல "ஹோராயோ" (horaoo) என்பதாகும். இந்த வார்த்தை இந்தப் பொருளிலேயே பல வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (யோவான் 1:18, யோவான் 8:38; யோவான் 14:9; யோவான் 15:24; 1யோவான் 3:6)

காண் (seen) - ὁράω - horaoo - 3708

வினைச்சொல் - காண்பி, எச்சரிக்கையாயிரு, பார், காண், தரிசி **(to comprehend fully, understand with the mind; to see truth fully)**

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு" - இந்த வாக்கியம் மனுஷர் தொடர்ந்து செய்ய வேண்டிய கிரியையை வெளிப்படுத்துகிறது. நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்துக் கொண்டிருக்க வேண்டும். எப்போதாவது ஒரு தடவை இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் நமக்கு நித்திய ஜீவன் எப்போதும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது. (லூக்கா 8:13; 1தீமோ 1:19; 1தீமோ 4:1; 1தீமோ 5:8,12; 1தீமோ 6:12,21; 2 தீமோ 2:11-13; எபி 3:6, 12-14; எபி 4:11; எபி 10:23-38; யூதா 1:5; வெளி 2:13). இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் விசுவாசம் எப்போதும் நம்மிடத்தில் காணப்படவேண்டும். நமது விசுவாசத்தை நிறுத்திவிடக் கூடாது. இயேசு கிறிஸ்து செய்யும் எல்லாக் காரியங்களிலும் தேவன் விசுவாசமாக இருக்கிறார். (ரோமர் 4:17; 1கொரி 13:13). விசுவாசிகள் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக வரும் விசுவாசத்திலேயே ஜீவிக்கிறார்கள். (யோவான் 3:15, ரோமர் 1:17; கலா 2:20; எபி 10:23-38).

"நித்திய ஜீவன்" - (யோவான் 6:27)

"உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள்" - வனாந்தரத்திலேயே இஸ்ரவேல் ஜனங்கள் புசித்த அப்பம் அவர்கள் சரீரத்திற்குரியது. அவர்களுடைய ஆத்துமாவிற்குரியது அல்ல. ஆகையினால் வனாந்தரத்தில் அவர்கள் புசித்த அப்பத்தினால் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவில்லை. அதனால் அவர்கள் மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். (யோவான் 6:27)

தீர்க்கதரிசன எண் - 16

"இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" (யோவான் 6:50-51) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று, நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி" - இது சரீர மரணத்தைக் குறிக்காது. ஆவிக்குரிய மரணத்தைக் குறிக்கும். ஜீவஅப்பத்தைப் புசிக்கிறவன் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வான். ஆகையினால் அவன் சரீரப் பிரகாரமாக மரித்தாலும், ஆவிக்குரிய பிரகாரமாக மரிப்பதில்லை. (எபி 9:27; 1கொரி 15:51-58; 1தெச 4:16-17)

"நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்" - இந்த அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து தம்மை ஜீவஅப்பமாக நான்கு இடங்களில் ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார். (யோவான் 6:35,41,48,51) ஜீவஅப்பம் என்பது இயேசு கிறிஸ்துவின் சரீரத்தைக் குறிக்கும். உலகத்தின் ஜீவனுக்காக இயேசு கிறிஸ்து தம்முடைய ஜீவனையே ஒப்புக் கொடுத்திருக்கிறார். (யோவான் 6:33,51) உலகத்திலுள்ள ஜனங்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றால் இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் நிபந்தனைகளையும் கைக்கொள்ள வேண்டும். (யோவான் 6:27)

பிழைத்திரு (living) - ζάω - zaoo - 2198

6 அதிகாரம்

வினைச்சொல் - பிழைத்திரு, உயிரோடிரு, ஜீவித்திரு, வாழ்ந்திரு, சஞ்சரி, உண்டாயிரு, ஜீவனம் பண்ணு, ஜீவன் (live, be alive). இயேசு கிறிஸ்துவே மனுஷருக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பம். (யோவான் 6:48,51)

"இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்" - நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கு இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் நிபந்தனைகளில் இதுவும் ஒரு நிபந்தனை. இந்த அப்பத்தைப் புசிக்க வேண்டும். (யோவான் 6:27) இயேசு கிறிஸ்துவைப் புசிப்பது என்பது விசுவாசத்தின் மூலமாக இயேசு கிறிஸ்துவை நம்முடைய உள்ளங்களில் ஏற்றுக் கொள்வது. நமக்காக இயேசு கிறிஸ்து செய்திருக்கிற காரியங்களை விசுவாசித்து ஏற்றுக் கொள்வது. பாவம் செய்யாமல், இயேசு கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிப்பது. நமது பாவங்களை மன்னிப்பதற்காக இயேசு கிறிஸ்து ஏற்கெனவே அதற்குரிய கிரயத்தைச் செலுத்தியிருக்கிறார். நாம் இயேசு கிறிஸ்துவிற்குப் பயந்து, கீழ்ப்படிதலோடு, பாவமில்லாமல் ஜீவிக்கும்போது அவர் நம்மை மன்னிப்பதற்காக மறுபடியும் கிரயம் செலுத்த வேண்டியதில்லை. (யோவான் 6:63)

(11) யூதர்கள் தங்களுக்குள் வாக்குவாதம் பண்ணுகிறார்கள்

யோவான் 6:52 அப்பொழுது யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள்.

"இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான்" - நம்முடைய பாவநிவாரண பலியாக இயேசு கிறிஸ்து மரித்தார் என்பதை நாம் ஏற்றுக் கொள்வதே அவருடைய மாம்சத்தைப் புசிப்பதாகும். அத்துடன், அவருடைய கற்பனைகளையும் நாம் கைக்கொள்ள வேண்டும். (யோவான் 6:27)

(12) இயேசு ஜீவ அப்பத்தைப் பற்றி இன்னும் அதிகமாக விளக்கி கூறுகிறார்

யோவான் 6:53 அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 6:54 என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்.

யோவான் 6:55 என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது.

யோவான் 6:56 என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்.

யோவான் 6:57 ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறது போலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.

யோவான் 6:58 வானத்திலிருந்து இறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப் போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 17

"நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை......என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்"

6 அதிகாரம்

(யோவான் 6:53-54) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. உயிர்த்தெழுதலின் போது இந்தத் தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறும். (1கொரி 15:23,51-58; 1தெச 4:16-17) (யோவான் 3:3)

"என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு" - இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களில் பங்குபெறுவதைப் புசிப்பதும், பானம் பண்ணுவதும் என்பதை இது அடையாளமாக விளக்குகிறது. நாம் விசுவாசத்தினால் இதில் பங்கு பெறுகிறோம். இயேசு கிறிஸ்து நமக்காகச் செய்திருக்கும் கிரியைகளின் அடிப்படையிலேயே தேவன் நமக்கு ஆசீர்வாதங்களை அருளுகிறார். ஆகையினால் இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசிக்கும்போதும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணும்போதும், நாம் பயபக்தியோடும், சந்தோஷத்தோடும் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். எபே 2:8-9; ரோமர் 3:24-25; ரோமர் 5:1-11; ரோமர் 10:9-10; அப் 3:16; அப் 4:12; அப் 15:9; அப் 26:18; கலா 2:16-20; கலா 3:1-26; 1பேதுரு 1:5-13). புசிப்பது என்பது ஆவிக்குரிய போஜனத்தைப் புசிப்பதைக் குறிக்கும். (1கொரி 10:1-3); ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் புசிப்பதினால் வரும் பலன்களாகும். (சங் 69:9; எபே 2:8; எபே 3:1-3; வெளி 10:9) பாவத்தினால் தீய விளைவுகள் உண்டாகும். (நீதி 9:17; ஓசி 10:13; யாக் 5:3). இயேசுகிறிஸ்து இங்கு உவமையாகக் கூறியிருக்கும் காரியங்கள் யூதருக்குப் புரிந்து கொள்வதற்குக் கடினமானவையல்ல. அவர்களுக்கு ஏற்கெனவே புரிந்திருக்கும் காரியங்கள் மூலமாகவே இயேசு கிறிஸ்து பேசுகிறார். ஆகையினால் இயேசுவின் வார்த்தை தங்களுக்குப் புரியவில்லையென்று, சாக்குப் போக்குச் சொல்வதற்கு இடமேயில்லை. யோவான் 6:47-48 ஆகிய வசனங்களை யோவான் 6:53-54 ஆகிய வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இயேசு கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைப்பது அவருடைய மாம்சத்தைப் புசிப்பதற்கும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுவதற்கும் சமமான காரியம் என்பது விளங்கும்.

பிழைத்திரு (living) - ζάω - zaoo - 2198

வினைச்சொல் - பிழைத்திரு, உயிரோடிரு, ஜீவித்திரு, வாழ்ந்திரு, சஞ்சரி, உண்டாயிரு, ஜீவனம் பண்ணு, ஜீவன்

"ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினார்" - இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்டதாக மூன்று இடங்களில் கூறுகிறார். (யோவான் 6:38,41,42) தம்மைப் பிதா அனுப்பியதாக ஐந்து இடங்களில் கூறுகிறார். (யோவான் 6:38, 39, 40,44, 57).

"வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே" - ஏழு இடங்களில் மன்னா அல்லது மெய்யான அப்பம் வானத்திலிருந்து வந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. (யோவான் 6:31,32, 33,50,51,58)

"இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்" - இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் நிபந்தனைகளைப் பின்பற்றினால் மனுஷருக்கு நித்திய ஜீவன் உண்டு என்று ஆறு இடங்களில் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. (யோவான் 6:40,47, 50,51,54,58) (யோவான் 6:27)

35. உபதேசத்தினால் சீஷத்துவத்திற்கு பரீட்சை - (மத் 8:22)

யோவான் 6:59 கப்பர்நகூமிலுள்ள ஜெப ஆலயத்திலே அவர் உபதேசிக்கையில் இவைகளைச் சொன்னார்.

யோவான் 6:60 அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள்.

யோவான் 6:61 சீஷர்கள் அதைக் குறித்து முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள்ளே அறிந்து, அவர்களை நோக்கி: இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ?

யோவான் 6:62 மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப் போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?

6 அதிகாரம்

யோவான் 6:63 ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.

யோவான் 6:64 ஆகிலும் உங்களில் விசுவாசியாதவர்கள் சிலர் உண்டு என்றார்; விசுவாசியாதவர்கள் இன்னாரென்றும், தம்மைக் காட்டிக் கொடுப்பவன் இன்னானென்றும் ஆதிமுதலாக இயேசு அறிந்திருந்தபடியால், அவர் பின்னும்:

யோவான் 6:65 ஒருவன் என்பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார்.

யோவான் 6:66 அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்.

"இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்" - இயேசு கிறிஸ்து கூறிய உபதேசத்தைச் சீஷர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. நடைமுறைக்கு அவருடைய உபதேசம் ஒத்துவரவில்லை. அது ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இல்லை.

"சீஷர்கள் அதைக்குறித்து முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள்ளே அறிந்தார்" - சீஷர்கள் முறுமுறுப்பதை இயேசு கிறிஸ்து அறிவை உணர்த்தும் வசனம் என்னும் ஆவிக்குரிய வரத்தின் மூலமாகப் புரிந்து கொள்கிறார். (1கொரி 12:4-11; ஏசா 11:2; யோவான் 6:64).

"இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ? மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?" - இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசிப்பதும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுவதும் அவர்களுக்கு இடறலாயிருக்கிறது. இதைவிடக் கடினமான உபதேசங்களையெல்லாம் இயேசு கிறிஸ்து உபதேசம் பண்ண வேண்டும்.

அதை அவர்கள் எவ்வாறு புரிந்து கொள்வார்கள் என்று தெரியவில்லை. மனுஷகுமாரன் பரலோகத்திற்கு ஏறிப்போவதை அவர்கள் காணப்போகிறார்கள். அந்த நிகழ்ச்சியை அவர்கள் எவ்வாறு புரிந்து கொள்வார்களோ என்பது தெரியவில்லை.

தீர்க்கதரிசன எண் - 18

"மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?" (யோவான் 6:62) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (லூக்கா 24:51; அப் 1:11; எபே 4:8-10).

"ஆவியே உயிர்ப்பிக்கிறது" - இயேசு கிறிஸ்து தம்மைப் பலியாக ஒப்புக் கொடுத்ததினால் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கிடைத்திருக்கிறது. அவர் தமது ஜீவனை நமக்கு ஜீவ அப்பமாகக் கொடுத்திருக்கிறார். இந்த உலகத்தை இரட்சிப்பதற்காக அவர் தமது சரீரத்தை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார். (1பேதுரு 2:24; கொலோ 1:20; கொலோ 2:14-17)

"மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது" - இயேசு கிறிஸ்துவின் பௌதீக சரீரத்தையும், இரத்தத்தையும் நாம் புசிக்கவோ, பானம் பண்ணவோ முடியாது. அவை நம்முடைய ஆத்துமாவை இரட்சிக்காது.

"நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" - இயேசு கிறிஸ்து பேசுகிற ஜீவன் ஆவிக்குரியது. மாம்சத்திற்குரியது அல்ல. நமக்கு நித்திய ஜீவனை அவர் வாக்குப்பண்ணுகிறார். (2கொரி 3:6; எபி 4:12).

இயேசு கிறிஸ்து ஆதிமுதலாக அறிந்திருந்த காரியங்கள்

1. சிலர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க மாட்டார்கள்.
2. இயேசுகிறிஸ்துவை ஒருவன் காட்டிக் கொடுப்பான்.

6 அதிகாரம்

"அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள்" - இயேசு கிறிஸ்துவின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை இந்த வசனம் குறிக்காது. அவரை ஏராளமான சீஷர்கள் பின்பற்றினார்கள். அவர்களில் அநேகர் இயேசுவோடு நடவாமல் பின்வாங்கிப் போனார்கள். (யோவான் 6:67)

36. பேதுருவின் புதிய விசுவாச அறிக்கை - (மத் 16:13; மாற்கு 8:27; லூக் 9:18)

யோவான் 6:67 அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார்.

யோவான் 6:68 சீமோன் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே.

யோவான் 6:69 நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்.

"நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ" - இந்த வாக்கியத்தை இயேசு கிறிஸ்து தமது பன்னிரெண்டு சீஷர்களிடம் கேட்கிறார். இந்தப் பன்னிரெண்டு சீஷர்களையும் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலிருந்து தெரிந்தெடுத்தார். அவர்களை இரட்சித்தார். தமது ஊழியத்தைச் செய்வதற்கு அவர்களுக்குப் பெலன் கொடுத்தார். ஆவிக்குரிய இரகசியங்களை வெளிப்படுத்தினார். அவர்கள் மூலமாகப் பெரிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று இயேசு கிறிஸ்து திட்டமிட்டிருக்கிறார்.

"நித்தியஜீவன்" - (யோவான் 6:27)

பேதுரு விசுவாசித்து அறிந்திருக்கிற காரியங்கள்

1. யாரும் இயேசுவை விட்டு விலகிப்போக மாட்டார்கள்.
2. இயேசு கிறிஸ்துவிடத்தில் மட்டுமே நித்திய ஜீவ வசனங்கள் உள்ளன.
3. இயேசுவே கிறிஸ்து
4. இயேசு கிறிஸ்து ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்.

இந்த நான்கு காரியங்களையும் நாம் அறிக்கையிடும்போது மறுபடியும் பிறக்கும் அனுபவம் நமக்குக் கிடைக்கிறது. (1யோவான் 5:1)

37. யூதாஸ் தம்மைக் காட்டிக் கொடுக்கப்போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார்

யோவான் 6:70 இயேசு அவர்களை நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார்.

யோவான் 6:71 சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து பன்னிருவரிலொருவனாயிருந்தும், தம்மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனாயிருந்தபடியினால் அவனைக் குறித்து இப்படிச் சொன்னார்.

பிசாசு (devi) - διάβολος - **diabolos** - 1228

பெயரடை - பிசாசான, அவதூறு செய்கிறவன் **(adversary, false accuser, slanderer)** (1தீமோ 3:11; 2தீமோ 3:3; தீத்து 2:3). - இந்த வசனத்தில் யூதாஸ்காரியோத்து பிசாசாக இருக்கிறான். மற்ற இடங்களிலெல்லாம் இந்த வார்த்தை சாத்தானையே குறிக்கும். (யோவான் 8:44).

யோவான் - தொகுப்புரை

6 அதிகாரம்

“யூதாஸ்காரியோத்து” - இவன் சீமோனின் குமாரன் (யோவான் 6:71; யோவான் 12:4; யோவான் 13:2,26); இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களில் ஒருவனாக இவனைத் தெரிந்தெடுத்து, அப்போஸ்தல ஊழியத்திற்கு அபிஷேகம் பண்ணினார். (மத் 10:1-20; மாற்கு 3:14-19; லூக்கா 6:12-16; லூக்கா 9:1-10; அப் 1:17); சீஷர்கள் மத்தியிலே பணப்பையை வைத்திருக்கிறவன். (யோவான் 12:4-6; யோவான் 13:29); நன்றாகப் பிரசங்கம் பண்ணக்கூடியவன், வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்கினான். (மாற்கு 6:7-13; லூக்கா 9:10). யூதாசின் மறுபெயர் ஸ்காரியோத்து. யூதேயா தேசத்தில் காரியோத்து என்னும் ஊர் உள்ளது. இவன் அந்த ஊரைச் சேர்ந்தவன். (யோசு 15:25). இவனுடைய கடைசி நாட்களில் இவன் திருடனாகவும், பிசாசாகவும் மாறினான். (யோவான் 6:70; யோவான் 12:4-6). இயேசுவைக் காட்டிக்கொடுத்தான். (மத் 26:14-16,47-50; மாற்கு 14:10-11,43-45; லூக்கா 22:3-6,47-49; யோவான் 13:2; யோவான் 18:2-5; அப் 1:16-25), பிரதான ஆசாரியரிடத்தில் பணத்தைத் திருப்பிக் கொடுத்தான். (மத் 27:3-10), நான்றுகொண்டு செத்தான். (மத் 26:24; மத் 27:5; மாற்கு 14:21; லூக்கா 22:22; யோவான் 17:12; அப் 1:16-25). யூதாஸ் காரியோத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள். (மத் 26:21-25; மாற்கு 14:18-21; லூக்கா 22:21-23; யோவான் 13:18-26; யோவான் 17:12; அப் 1:16,20= சங் 41:9; சங் 69:25; சங் 109:8; சக 11:12-13).

7 அதிகாரம்

38. இயேசுவின் சகோதரர்கள் அவரை விசுவாசிக்கவில்லை - (சங் 69:8-9; மாற்கு 3:21; லூக் 9:51; யோவான் 7:3-10)

யோவான் 7:1 இவைகளுக்குப் பின்பு, யூதர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வகைதேடின படியால், அவர் யூதேயாவிலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்சரித்து வந்தார்.

யோவான் 7:2 யூதருடைய கூடாரப் பண்டிகை சமீபமாயிருந்தது.

யோவான் 7:3 அப்பொழுது அவருடைய சகோதரர் அவரை நோக்கி: நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீஷர்களும் பார்க்கும்படி, இவ்விடம்விட்டு யூதேயாவுக்குப்போம்.

யோவான் 7:4 பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான்; நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்தால் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தும் என்றார்கள்.

யோவான் 7:5 அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாத படியால் இப்படிச் சொன்னார்கள்.

யோவான் 7:6 இயேசு அவர்களை நோக்கி: என்வேளை இன்னும் வரவில்லை, உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது.

யோவான் 7:7 உலகம் உங்களைப் பகைக்கமாட்டாது; அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சிகொடுக்கிறபடியினாலே அது என்னைப் பகைக்கிறது.

யோவான் 7:8 நீங்கள் இந்தப் பண்டிகைக்குப் போங்கள்; என் வேளை இன்னும் வராதபடியால் நான் இந்தப் பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லை என்றார்.

யோவான் 7:9 இவைகளை அவர்களுடனே சொல்லி, பின்னுங் கலிலேயாவிலே தங்கினார்.

"இவைகளுக்குப் பின்பு இயேசு கலிலேயாவிலே சஞ்சரித்துவந்தார்" - (யோவான் 5:1)

"யூதேயா" **(Jewry)** - யூதருடைய தேசம். இந்த வசனத்திலும் தானி 5:13 ஆவது வசனத்திலும் இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"யூதருடைய கூடாரப்பண்டிகை" **(Jews' feast of tabernacles)** - செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதியிலிருந்து 22 ஆம் தேதி வரையிலும் நடைபெறும். (லேவி 23:34-44; உபா 16:13-16; 2நாளா 8:13; சக 14:16-21). இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் படுவதற்கு ஏழு மாதங்களுக்கு முன்பு இந்தப் பண்டிகை நடைபெற்றது. (யோவான் 2:13)

"இயேசு கிறிஸ்துவினுடைய சகோதரர்" - (லூக்கா 8:19)

"நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீஷர்களும் பார்க்கும்படி, இவ்விடம்விட்டு யூதேயாவுக்குப்போம்" - யூதேயாவிலுள்ள உம்முடைய சீஷர்கள் நீர் செய்யும் கிரியைகளைக் காணட்டும்.

"பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே ஒன்றையும் செய்யமாட்டான்" - இயேசு கிறிஸ்து சாதாரண மனுஷர் அல்ல. அவர் பிரபலமாயிருக்க விரும்பவில்லை. பல சமயங்களில் அவர் தம்மைக் குறித்தும், தமது அற்புதமான கிரியைகளைக் குறித்தும் வெளிப்படுத்த வேண்டாமென்று இயேசு கிறிஸ்து கட்டளையிட்டிருக்கிறார். சாதாரண மனுஷர் பிரபல்யமடைவதற்காக எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்துவார்கள். இயேசு கிறிஸ்துவை கலிலேயாவிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்பதே அவர்களுடைய நோக்கம். கலிலேயா சிறிய ஊர். அங்குள்ளவர்கள் பாமர ஜனங்கள். பட்டணத்திலோ நியாயசாஸ்திரிகளும், வேதபாரகர்களும் ஏராளமானபேர் இருப்பார்கள். அவர்கள் மத்தியிலே தமது ஊழியத்தைச் செய்யுமாறு இயேசு கிறிஸ்துவின் சகோதரர்கள் அவரைக் கலிலேயாவைவிட்டுப் போகுமாறு கூறுகிறார்கள்.

யோவான் - தொகுப்புரை

7 அதிகாரம்

“அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள்” - இயேசு கிறிஸ்துவின் சகோதரர்களுக்கு அவர் செய்யும் அற்புதமான கிரியைகள் நன்றாகத் தெரியும். அவரை ஒரு தீர்க்கதரிசியாக ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருந்தார்கள். ஆனால் அவரை மேசியாவாக அவர்கள் ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அவர் ராஜ்யத்தைக் குறித்துப் பேசினார். (யோவான் 6:15) மேசியா தமது ஜனங்களை ஆளுகை செய்ய வருவார் என்று யூதர்கள் நம்பினார்கள். இயேசு கிறிஸ்து உண்மையிலேயே மேசியாவாக இருப்பார் என்றால் அவரால் யூதரை ஆளுகை செய்ய முடியுமா என்னும் சந்தேகம் அவர்கள் மனதிற்குள் இருந்தது.

“என்வேளை இன்னும் வரவில்லை, உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறது” - இயேசு கிறிஸ்து தமது பாடுகளின் வேளையைக் குறிப்பிட்டாரா அல்லது பண்டிகைக்குப் போவதற்கு முன்பாக தமக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தைக் குறிப்பிட்டாரா என்பது தெரியவில்லை. உலகம் யூதர்களைப் பகைக்காது. ஏனெனில் அவர்கள் உலகப்பிரகாரமான மேசியாவைத் தேடுகிறார்கள். இதே உலகம் இயேசு கிறிஸ்துவைப் பகைக்கிறது. ஏனெனில் அவர் அநியாயத்தையும், பெருமையையும், பேராசையையும் யூதருடைய பாரம்பரியங்களையும், கோட்பாடுகளையும் வெறுத்தார். இதைப் பற்றி இயேசு கிறிஸ்து கூறும்போது, “உலகம் உங்களைப் பகைக்கமாட்டாது; அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று நான் சாட்சிகொடுக்கிறபடியினாலே அது என்னைப் பகைக்கிறது” என்று கூறுகிறார்.

போ (Go) - ἀναβαίνω - **anabainoo** - 305

வினைச்சொல் - ஏறு, முன்னேறு, கரையேறு, வளர், அகப்படு, போ, ஏறிப்போ, எழும்பு, வந்தெட்டியிரு, பரம்பு - மற்ற ஜனங்களோடு கூட்டமாகப் போவது என்று பொருள்படுகிறது. (யோவான் 11:55; மத் 20:17-18; மாற்கு 10:32-33; லூக்கா 2:42; லூக்கா 18:31; லூக்கா 19:28)

“நீங்கள் இந்தப் பண்டிகைக்குப் போங்கள்” - இயேசு கிறிஸ்துவிற்கு அந்தப் பண்டிகைக்குப் போவதற்கு இன்னும் வேளை வரவில்லை. ஆகையினால் அவர்களை இப்பொழுது போகுமாறு கூறுகிறார். இயேசு தமது சீஷர்களோடு அங்கு தனியாகப் போக விரும்பினார். திரளான கூட்டத்தைத் தம்மோடு சேர்த்துக் கொண்டுபோக இயேசு கிறிஸ்து விரும்பவில்லை. ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ராஜாவாக ஆக்கவேண்டுமென்று ஏற்கெனவே முயற்சி பண்ணுகிறார்கள். திரளான கூட்டத்தாரோடு சென்றால், ஜனங்கள் மத்தியில் மிகப்பெரிய பிரச்சனையாக இருக்கும். ஆகையினால் இயேசு தமது வேளையின் பிரகாரம் பண்டிகைக்குத் தனியாகப் போக விரும்புகிறார். (யோவான் 6:15)

“இவைகளை அவர்களுடனே சொல்லி, பின்னுங் கலிலேயாவிலே தங்கினார்” - இயேசு கிறிஸ்து கலிலேயாவிலே மேலும் நான்கு நாட்களுக்குத் தங்கினார். பண்டிகையின் நடுவில் யூதேயாவிற்குப் போனார். (யோவான் 7:14)

39. எல்லா மனுஷருக்காகவும் மரிப்பதற்காககலிலேயாவிலிருந்து இறுதி பிரயாணம்

யோவான் 7:10 அவருடைய சகோதரர் போனபின்பு, அவர் வெளியரங்கமாய்ப் போகாமல் அந்தரங்கமாய்ப் பண்டிகைக்குப் போனார்.

யோவான் 7:11 பண்டிகையிலே யூதர்கள் அவரைத் தேடி: அவர் எங்கேயிருக்கிறார் என்றார்கள்.

7 அதிகாரம்

யோவான் 7:12 ஜனங்களுக்குள்ளே அவரைக் குறித்து முறுமுறுப்புண்டாயிற்று. சிலர்: அவர் நல்லவர் என்றார்கள். வேறுசிலர்: அப்படியல்ல, அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்று சொல்லிக் கொண்டார்கள்.

யோவான் 7:13 ஆனாலும் யூதருக்குப் பயந்திருந்ததினாலே, ஒருவனும் அவரைக் குறித்துத் தாராளமாய்ப் பேசவில்லை.

"அவருடைய சகோதரர் போனபின்பு, அவர் வெளியரங்கமாய்ப் போகாமல் அந்தரங்கமாய்ப் பண்டிகைக்குப் போனார்" - இயேசு கிறிஸ்து தமது சொந்த மகிமையைத் தேடவில்லை. அழிந்து போகும் ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காகவே இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு வந்தார். ஆகையினால் அவர் மனுஷருடைய புகழைத்தேடாமல், அந்தரங்கமாய் பண்டிகைக்குப் போனார்.

"பண்டிகையிலே யூதர்கள் அவரைத் தேடினார்கள்" - யூதமார்க்கத் தலைவர்கள் இயேசுகிறிஸ்துவை அழிப்பதற்காகத் தேடுகிறார்கள். அடுத்து வரும் வசனங்களை வாசிக்கும்போது "ஜனங்களுக்குள்ளே அவரைக் குறித்து முறுமுறுப்புண்டாயிற்று. சிலர்: அவர் நல்லவர் என்றார்கள். வேறுசிலர்: அப்படியல்ல, அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்று சொல்லிக்கொண்டார்கள்" என்று வாசிக்கிறோம். (யோவான் 7:12-13, 30-32,40-53).

"அவர் எங்கேயிருக்கிறார்" - அழிந்துபோன ஆத்துமாக்கள் இன்றும் இயேசு கிறிஸ்துவைக் குறித்து, இந்தக் கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"ஜனங்களுக்குள்ளே அவரைக் குறித்து முறுமுறுப்புண்டாயிற்று" - பண்டிகையிலே ஜனங்கள் தம்மைக் குறித்து முறுமுறுப்பார்கள் என்பது இயேசு கிறிஸ்துவிற்கு நன்றாகத் தெரியும். ஆகையினால் அவர் பண்டிகைக்கு உடனே செல்லவில்லை. ஜனங்களுடைய முறுமுறுப்பெல்லாம் அமர்ந்தபிறகு, நான்கு நாளைக்குப் பின்பே, இயேசு கிறிஸ்து பண்டிகைக்குச் சென்றார்.

"அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன்" - (மத் 24:4,24; 1தீமோ 4:1; யூதா 1:13).

40. தேவாலயத்தில் இயேசு உபதேசம் பண்ணுகிறார்

(1) யூதர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்

யோவான் 7:14 பாதிப்பண்டிகையான போது, இயேசு தேவாலயத்துக்குப் போய், உபதேசம் பண்ணினார்.

யோவான் 7:15 அப்பொழுது யூதர்கள்: இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டார்கள்.

"பாதிப்பண்டிகையான போது, இயேசு தேவாலயத்துக்குப் போய், உபதேசம் பண்ணினார்" - யூதமார்க்கத்தின் பாரம்பரியத்தின் பிரகாரம் பண்டிகையின் முதலாம் நாளிலேயே யூதர்கள் எல்லோரும் பண்டிகைக்கு வரவேண்டும். ஆனால் இயேசு கிறிஸ்துவோ பாதிப் பண்டிகையானபோது வருகிறார். பண்டிகையில் பலவிதமான சடங்குகளை நிறைவேற்றுவார்கள். இவையெல்லாம் யூதர்களுடைய பாரம்பரியம். அவைகள் முக்கியமானவையல்ல என்பதை வெளிப்படுத்துவதற்காகவே இயேசு கிறிஸ்து பாதிப்பண்டிகையானபோது அங்கு வந்திருக்கலாம்.

7 அதிகாரம்

"இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார்" - இயேசு கிறிஸ்து வேதசாஸ்திரிகளைப் போல கல்வி கற்கவில்லை. ஆனால் வேதவாக்கியமும், அவர்களுடைய பாரம்பரியமும், வரலாறும் இயேசு கிறிஸ்துவிற்கு நன்றாகத் தெரிந்திருந்தது. (லூக்கா 2:42-47). இயேசு கிறிஸ்து தேவனிடமிருந்து ஞானத்தையும், அறிவையும் அளவில்லாமல் பெற்றிருந்தார். (ஏசா 11:2; ஏசா 42:1; ஏசா 50:6; ஏசா 61:1; லூக்கா 2:40,52; யோவான் 7:16; யோவான் 8:28,47; யோவான் 12:49; யோவான் 14:10,24; யோவான் 17:8).

(2) இயேசுவின் உபதேசம் பிதாவின் உபதேசம் ஆகும்

யோவான் 7:16 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாய் இருக்கிறது.

யோவான் 7:17 அவருடைய சித்தத்தின் படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான்.

யோவான் 7:18 சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாய் இருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை.

யோவான் 7:19 மோசே நியாயப் பிரமாணத்தை உங்களுக்குக் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும் உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின் படி நடக்கிறதில்லை; நீங்கள் ஏன் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள் என்றார்.

"என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது" - ஏழு இடங்களில் தாம் தேவனுடைய வார்த்தையையே பேசுவதாக இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். (யோவான் 7:16; யோவான் 8:28,47; யோவான் 12:49; யோவான் 14:10,24; யோவான் 17:8) அவர் ஒரு நல்ல ஸ்தானிகர் **(ambassador)**. எல்லா ஊழியக்காரர்களுக்கும் நல்ல முன் மாதிரியாக இருக்கிறவர். (2கொரி 5:20)

"அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான்" - ஒரு உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதா அல்லது வேறு எதனாலாவது உண்டாயிருக்கிறதா என்பதை அறிந்து கொள்வதற்கு ஒரு வழி இருக்கிறது. தேவனால் உண்டாயிருக்கிற உபதேசம் தேவனை மகிமைப்படுத்தும். ஜனங்கள் மத்தியிலே சமாதானத்தை உண்டுபண்ணும். தேவனை நேசிப்பதற்கு மனுஷரை வழிநடத்தும். இவற்றின் அடிப்படையில் தமது உபதேசத்தைச் சோதித்துப் பார்க்குமாறு இயேசு கிறிஸ்து தமது சத்துருக்களிடம் கூறுகிறார்.

"சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாய் இருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை" - இது சுயமான உபதேசத்திற்கு எடுத்துக்காட்டு. இவன் சுயமகிமையைத் தேடுகிறான். இவனிடத்தில் அநீதியிருக்கிறது. இவனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இயேசு கிறிஸ்துவோ தேவனை மகிமைப் படுத்துகிறார். வேதவசனத்திற்கு முரண்பாடாக இயேசு கிறிஸ்து எதையும் உபதேசம் பண்ணவில்லை. அவர் ஒரு உண்மையான தீர்க்கதரிசி. இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களையும், அவருடைய அற்புதமான கிரியைகளையும் சேர்த்துப் பார்க்கும்போது, அவர் உண்மையிலேயே மேசியா என்பது தெளிவாகும்.

"உங்களில் ஒருவனும் அந்த நியாயப் பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை" - ((யோவான் 7:19-23)

யோவான் - தொகுப்புரை

7 அதிகாரம்

(3) இயேசுவை பிசாசு பிடித்தவன் என்று குற்றம் சுமத்துகிறார்கள்

யோவான் 7:20 ஜனங்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நீ பிசாசுபிடித்தவன்; உன்னைக் கொலைசெய்யத் தேடுகிறவன் யார் என்றார்கள்.

"ஜனங்கள்" - பண்டிகையில் திரளான ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். பரிசேயரின் சதியாலோசனை அவர்களில் பலருக்குத் தெரியவில்லை. இயேசு கிறிஸ்து "நீங்கள் ஏன் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள்" என்று கூறியது அவர்களுக்குப் புரியவில்லை. ஆகையினால் அவர்கள் இயேசுவிடம் நீ பிசாசுபிடித்தவன்; உன்னைக் கொலைசெய்யத் தேடுகிறவன் யார் என்றார்கள்.

(4) இயேசு யூதர்களின் நிலையற்ற பழக்கங்களைக் கடிந்து கொள்கிறார் - (மத் 23:3,13)

யோவான் 7:21 இயேசு அவர்களை நோக்கி: ஒரே கிரியையைச் செய்தேன், அதைக்குறித்து எல்லாரும் ஆச்சரியப்படுகிறீர்கள்.

யோவான் 7:22 விருத்தசேதனம் மோசேயினால் உண்டாகாமல், பிதாக்களால் உண்டாயிற்று; பின்பு மோசே அதை உங்களுக்கு நியமித்தான்; நீங்கள் ஓய்வுநாளிலும் மனுஷனை விருத்தசேதனம் பண்ணுகிறீர்கள்.

யோவான் 7:23 மோசேயின் நியாயப் பிரமாணம் மீறப்படாதபடிக்கு ஓய்வுநாளில் மனுஷன் விருத்தசேதனம் பெறலாமென்றால், நான் ஓய்வுநாளில் ஒரு மனுஷனை முழுவதும் சுகமாக்கினதினாலே என்மேல் எரிச்சலாயிருக்கலாமா?

யோவான் 7:24 தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள் என்றார்.

"ஒரே கிரியையைச் செய்தேன், அதைக்குறித்து எல்லாரும் ஆச்சரியப் படுகிறீர்கள்" - ஒரே கிரியை என்பது இயேசு கிறிஸ்து ஓய்வுநாளில் வியாதியாக இருந்த மனுஷனைச் சொஸ்தமாக்கிய கிரியையாகும். (யோவான் 7:23; யோவான் 5:1-16) இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை மீறியதாக பரிசேயர் அவர்மீது குற்றம் சுமத்துகிறார்கள். யூதமார்க்கத்தைப் பாதுகாப்பதற்காக இயேசு கிறிஸ்துவைக் கொலைசெய்ய வேண்டுமென்று சதியாலோசனை செய்கிறார்கள். இயேசு கிறிஸ்து ஓய்வுநாளில் ஒரே ஒரு கிரியை மட்டுமே செய்தார். ஆனால் பரிசேயர்களோ ஏராளமான கிரியைகளை ஓய்வுநாளில் செய்கிறார்கள். ஓய்வு நாளில்தான் சிறுவர்களுக்கு விருத்தசேதனம் பண்ணுகிறார்கள். இதனால் பரிசேயர்களே அவர்களுடைய தீர்ப்பின் பிரகாரம் மிகப்பெரிய பாவிகள் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். (யோவான் 7:21-23)

"மோசே" - மோசே விருத்தசேதனத்தைப் பற்றி யாத் 12:44,48; லேவி 12:3 ஆகிய வசனங்களில் மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார். விருத்தசேதனத்தைப் பற்றிய பிரமாணம் ஆபிரகாமிற்குக் கொடுக்கப்பட்டது. (ஆதி 17:9-14)

"நான் ஓய்வுநாளில் ஒரு மனுஷனை முழுவதும் சுகமாக்கினதினாலே" - முழுவதும் சுகமாக்குவது என்பது ஆத்துமாவும், சரீரமும் சுகமாவதைக் குறிக்கும். (யோவான் 5:8-9).

"தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்" - விருத்தசேதனம் பண்ணுவதினால் பரிசேயர்கள் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறுகிறார்கள். ஆனால் தாங்கள் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறவில்லையென்று அவர்கள் கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்து 38 வருஷமாக வியாதியாக இருந்த மனுஷனை ஓய்வுநாளில் சொஸ்தமாக்கினார். இது அவர்களுக்கு மிகப்பெரிய குற்றமாகத் தெரிந்தது. வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்கும் பிரமாணம், (யாத் 15:26) விருத்தசேதனப் பிரமாணம் (ஆதி 17:9-14) ஆகிய இரண்டுமே முக்கியமானது. யூதர்கள் இவ்விரண்டு பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும். விருத்தசேதனப் பிரமாணத்தை ஏற்றுக் கொண்டு, சுகமாக்கும் பிரமாணத்தைத் தள்ளிவிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

7 அதிகாரம்

விருத்தசேதனப் பிரமாணம் தேவையானது என்றால் சுகமாக்கும் பிரமாணமும் தேவையானதே. ஓய்வுநாளில் விருத்தசேதனம் பண்ணலாம் என்றால் ஓய்வுநாளில் சுகமாக்குவதும் தவறல்ல என்பது இயேசு கிறிஸ்துவின் உபதேசமாகும்.

(5) இயேசுவிடம் யூதர்கள் கூறிய மறுப்புரை

யோவான் 7:25 அப்பொழுது எருசலேம் நகரத்தாரில் சிலர்: இவனையல்லவா கொலைசெய்யத் தேடுகிறீர்கள்?

யோவான் 7:26 இதோ, இவன் தாராளமாய்ப் பேசுகிறானே, ஒருவரும் இவனுக்கு ஒன்றும் சொல்லுகிறதில்லையே, மெய்யாய் இவன் கிறிஸ்துதான் என்று அதிகாரிகள் நிச்சயமாக அறிந்திருக்கிறார்களோ?

யோவான் 7:27 இவன் இன்ன இடத்திலிருந்து வந்தவனென்று நாம் அறிந்திருக்கிறோம், கிறிஸ்து வரும்போதோ, அவர் இன்ன இடத்திலிருந்து வருகிறவரென்று ஒருவனும் அறியமாட்டானே என்றார்கள்.

"இவன் இன்ன இடத்திலிருந்து வந்தவனென்று நாம் அறிந்திருக்கிறோம், கிறிஸ்து வரும்போதோ, அவர் இன்ன இடத்திலிருந்து வருகிறவரென்று ஒருவனும் அறியமாட்டானே" - யூதர்கள் ஏசா 53:8 ஆவது வசனத்திற்கு வியாக்கியானம் தருகிறார்கள். மேசியா இன்ன இடத்திலிருந்து வருவார் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி இவர்கள் எல்லோரும் நன்றாகத் தெரிந்து வைத்திருப்பதினால் இவரை மேசியா என்று பரிசேயர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

(6) இயேசு யூதர்களிடம் கூறிய பதிலுரை

யோவான் 7:28 அப்பொழுது இயேசு தேவாலயத்தில் உபதேசிக்கையில் சத்தமிட்டு: நீங்கள் என்னை அறிவீர்கள், நான் எங்கேயிருந்து வந்தேனென்றும் அறிவீர்கள்; நான் என் சுயமாய் வரவில்லை, என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர், அவரை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள்.

யோவான் 7:29 நான் அவரால் வந்திருக்கிற படியினாலும், அவர் என்னை அனுப்பியிருக்கிற படியினாலும், நானே அவரை அறிந்திருக்கிறேன் என்றார்.

"நீங்கள் என்னை அறிவீர்கள், நான் எங்கேயிருந்து வந்தேனென்றும் அறிவீர்கள்" - யோவான் 7:27 ஆவது வசனத்தில் யூதர்கள் கூறியதற்கு இயேசு கிறிஸ்து இந்த வசனத்தில் பதில் கூறுகிறார். அவர்கள் இயேசு கிறிஸ்துவையும் அறிந்திருக்கிறார்கள். அவர் எங்கேயிருந்து வந்திருக்கிறார் என்பதையும் அறிந்திருக்கிறார்கள். இந்த சத்தியங்களை அவர்கள் ஆராய்ந்து பார்ப்பார்கள் என்றால் இயேசு கிறிஸ்து சுயமாய் வரவில்லையென்பதையும், பிதாவானவரே அவரை அனுப்பினவர் என்பதையும், அவர் சத்தியமுள்ளவர் என்பதையும் பரிசேயர்கள் புரிந்து கொள்வார்கள். அந்தத் தேவனை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். (யோவான் 7:28-29; யோவான் 8:19)

(7) பிரிவினை - இயேசுவைக் கொல்ல சதியாலோசனை - (மத் 26:3)

யோவான் 7:30 அப்பொழுது அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்; ஆனாலும் அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை.

யோவான் 7:31 ஜனங்களில் அநேகர் அவரை விசுவாசித்து: கிறிஸ்து வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப் பார்க்கிலும் அதிகம் செய்வாரோ என்றார்கள்.

7 அதிகாரம்

யோவான் 7:32 ஜனங்கள் அவரைக் குறித்து இப்படி முறுமுறுக்கிறதைப் பரிசேயர் கேட்டபொழுது, அவரைப் பிடித்துக்கொண்டு வரும்படிக்குப் பரிசேயரும் பிரதான ஆசாரியரும் சேவகரை அனுப்பினார்கள்.

"அப்பொழுது அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்" - இயேசு கிறிஸ்துவைக் கைதுபண்ண முயற்சி பண்ணுகிறார்கள். ஆனால் அவரைக் கைதுபண்ண முடியவில்லை. அவருடைய வேளை இன்னும் வரவில்லை. இந்த வேளையில் இயேசு கிறிஸ்து கைதாவது தெய்வீக சித்தமல்ல. தேவனுடைய சித்தத்திற்கு எதிராக அவர்களால் எந்தக் காரியமும் செய்ய முடியவில்லை. (மத் 26:53; லூக்கா 22:53; யோவான் 18:6; எபி 12:22-23).

"அதிகமான அற்புதங்கள்" - (யோவான் 2:11)

"முறுமுறுத்தார்கள்" - (யோவான் 6:41,43,61; யோவான் 7:12)

"சேவகர்" (officers) - (யோவான் 18:3,12,18; யோவான் 19:6; மத் 26:59)

(8) இயேசு பரிசேயருக்கு கூறிய பதிலுரை -

யோவான் 7:33 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: இன்னுங் கொஞ்சக் காலம் நான் உங்களுடனேகூட இருந்து, பின்பு என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்.

யோவான் 7:34 நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்; நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங் கூடாது என்றார்.

தீர்க்கதரிசன எண் - 19

"இன்னுங் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருந்து, பின்பு என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள், நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங் கூடாது" ((யோவான் 7:33-34) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"இன்னும் கொஞ்சக்காலம்" - இன்னும் ஏழு மாதங்கள் கழிந்த பின்பு. அப்போது பஸ்கா பண்டிகை வரும். எல்லா மனுஷருக்கும் இயேசு கிறிஸ்து பஸ்கா ஆட்டுக்குட்டியாக மரிப்பார். அப்போது அவர் தம்மை அனுப்பினவருடைய இடத்திற்குப் போவார்.

"நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள்" - ரோமப்பேரரசார் எருசலேம் பட்டணத்தை அழிப்பதற்கு வருவார்கள். அப்பொழுது தங்களுக்கு ஒரு மீட்பர் வேண்டுமென்று யூதர்கள் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவைத் தேடுவார்கள். ஆனால் அவரைக் காணமாட்டார்கள். இந்த வாக்கியம் ஒரு தீர்க்கதரிசன வசனமாக இருக்கலாம்.

"நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவுங் கூடாது" - இயேசு கிறிஸ்து இருக்கும் இடத்திற்கு இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே போகமுடியும். பாவத்தில் சிக்கியிருக்கும் துன்மார்க்கர்களால் அங்கு போகமுடியாது. நீதிமான்கள் மட்டுமே உயிர்த்தெழுந்த பின்பு, தேவனிடம் செல்வார்கள். (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:23; வெளி 6:9-11).

(9) இயேசுவைப் பற்றியும் அவருடைய உபதேசங்களைப் பற்றியும் யூதர்களுக்குள் விவாதம் -

யோவான் 7:35 அப்பொழுது யூதர்கள்: இவரை நாம் காணாதபடிக்கு எங்கே போவார், கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்களிடத்திற்குப் போய், கிரேக்கருக்கு உபதேசம் பண்ணுவாரோ?

7 அதிகாரம்

யோவான் 7:36 நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்கள் என்றும், நான் இருக்கும் இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்றும், இவர் சொன்ன வார்த்தையின் கருத்து என்னவென்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்.

"இவரை நாம் காணாதபடிக்கு எங்கே போவார்" - யூதருக்கு நித்திய ஜீவனைப் பற்றித் தெரியவில்லை. கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்களிடத்திற்குப் போய், கிரேக்கருக்கு உபதேசம் பண்ணுவார் என்று உலகப்பிரகாரமான காரியங்களைச் சிந்தித்துப் பார்க்கிறார்கள்.

"சிதறியிருக்கிறவர்கள்" - தேசங்கள் மத்தியிலே இஸ்ரவேல் ஜனத்தார் சிதறியிருக்கிறார்கள். சிதறியிருக்கும் யூதரைப் பற்றிய குறிப்பு மூன்று வசனங்களில் மட்டுமே வருகிறது. (யோவான் 7:35; யாக் 1:1; 1பேதுரு 1:1).

சிதறியிருத்தல் **(dispersed)** - διασπορά - **diaspora** - 1290

பெண்பால் பெயர்ச்சொல் - சிதறியிருத்தல்

"கிரேக்கர்" **(Gentiles, Greek)** - கிரேக்கர்கள் புறஜாதியார் என்று அழைக்கப்பட்டார்கள். இதற்குரிய கிரேக்க வார்த்தை "ஹெலேன்" **(Helleen)** இதன் மொழிபெயர்ப்புக்கள். புறஜாதியார் **(Gentile)** - 7 தடவைகள் (யோவான் 7:35; ரோமர் 2:9, 10; ரோமர் 3:9; 1கொரி 10:32; 1கொரி 12:13) கிரேக்கர் **(Greek)** - 20 தடவைகள் (யோவான் 12:20; அப் 14:1; அப் 16:1,3; அப் 17:4; அப் 18:4,17; அப் 19:10,17; அப் 20:21; அப் 21:28; ரோமர் 1:14,16; ரோமர் 10:12; 1கொரி 1:22-24; கலா 2:3; கலா 3:28; கொலோ 3:11)

(10) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் - (மத் 3:11; 20:22-23; லூக் 24:49; யோவான் 14:12-17,26; 15:26; 16:13-15; அப் 1:4-8; 2:1-21,38-39; 5:32; 8:14-21; 9-17; 10:44-48; 11:14-18; 15:7-11; 19:1-6; கலா 3:14)

யோவான் 7:37 பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.

யோவான் 7:38 வேதவாக்கியம் சொல்லுகிற படி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.

யோவான் 7:39 தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்த படியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை.

"பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாள்" - பண்டிகையின் எட்டாவது நாள். இந்த நாளில் இஸ்ரவேல் ஜனங்களுக்காக பலிகள் செலுத்தப்படும். முதல் ஏழு நாட்களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் மற்ற தேசங்களுக்காகப் பலிகளைச் செலுத்துவார்கள். (லேவி 23:34-36). எட்டாவது நாளில் இஸ்ரவேல் ஜனங்களுக்காகப் பலிகள் செலுத்தப் படுவதினால் தேவாலயத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஏராளமானோர் கூடி வந்திருப்பார்கள். இந்தப் பிரதான நாளில் ஆசாரியரில் ஒருவர் சீலோவாம் குளத்திலிருந்து பொற்குடத்தில் தண்ணீர் கொண்டு வருவார். காலை வேளையிலே, பலி செலுத்தப்படும் பொழுது, பலிபீடத்தின்மீது சீலோவாம் தண்ணீரைத் திராட்சரசத்தோடு கலந்து, ஊற்றுவார். அப்போது இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் சந்தோஷமாகக் கர்த்தரைப் பாடித் துதிப்பார்கள். இப்பேர்ப்பட்ட சமயத்தில்தான் இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தைக் கூறுகிறார். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறிக்கும் தீர்க்கதரிசனம். ஒவ்வொரு விசுவாசிக்கும் இந்த ஆசீர்வாதம் தீர்க்கதரிசனமாகக் கூறப் பட்டிருக்கிறது. (யோவான் 7:37-39)

7 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 20

"ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" (தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை) யோவான் 7:37-39) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" - யோவான் 7:27 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சத்தியத்தை இந்த வாக்கியம் உறுதிபண்ணுகிறது. "எவனோ" என்பது எந்தத் தேசத்தாரையும், எந்த ஜாதியாரையும் குறிக்கும். இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறத் துவங்கும் காலத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதியின் அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். (மத் 3:11; யோவான் 14:12; அப் 2:38-39; அப் 5:32; கலா 3:14) "விசுவாசிக்கிறவன் எவனோ" என்னும் வாக்கியத்தின் மூலமாக விசுவாசிக்கிறவர்கள் எல்லோருக்குமே பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் வாக்குபண்ணப் பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. (மாற்கு 16:16; யோவான்3:18,36; யோவான் 5:24; யோவான் 6:35,40; யோவான் 11:25; யோவான் 12:44; யோவான் 14:12; 1பேதுரு 2:6; 1யோவான் 5:5,10)

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நிபந்தனைகள்

1. தாகமாக இருக்க வேண்டும். (யோவான் 7:37) தேவனோடு ஐக்கியமாக இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் விசுவாசிகளிடத்தில் காணப்பட வேண்டும். (சங் 42:2; சங் 63:1; சங் 143:6; ஏசா 41:17; ஏசா 44:3).
2. தேவனிடத்தில் வரவேண்டும். (யோவான் 7:37) தேவனுடைய சமூகத்தில் மிகுந்த தாழ்மையோடு வந்து, அவரிடத்தில் நம்மை முழுவதுமாக அர்ப்பணிக்க வேண்டும். (ஏசா 55:1; மத் 11: 28-30; 1யோவான் 1:7).
3. பானம் பண்ண வேண்டும். (யோவான் 7:37). பரிசுத்த ஆவியானவரின் வரங்கள், கனி, கிரியைகள் ஆகிய அனைத்தையும் நம்முடைய ஜீவியத்தில் முழு இருதயத்தோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். (1கொரி 12:4-13; கலா 5:22-23; வெளி 22:17).
4. வேதவாக்கியம் சொல்லுகிறபடி தேவனிடத்தில் விசுவாசமாயிருக்க வேண்டும். (யோவான் 7:38) வேதவாக்கியங்களை வாசித்து, அவற்றை விசுவாசித்து, அவற்றிற்குக் கீழ்ப்படிய வேண்டும். (யோவான் 14:12-15; மத் 28:20; மாற்கு 16:15-20; லூக்கா 24:49; அப் 1:4-8; அப் 5:32).

"அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்" - விசுவாசிகளின் ஜீவியத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின் ஊழியங்களைச் செய்வதற்கு அளவில்லாத வல்லமைகள் புறப்பட்டு வரும். (யோவான் 14:12)

உள்ளம் **(belly)** - **κοιλία** - **koilia** – 2836

யோவான் - தொகுப்புரை

7 அதிகாரம்

"ஜீவத்தண்ணீருள்ள நதிகள்" - விசுவாசியின் உள்ளத்திலிருந்து பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் மூலமாக கிடைக்கப்பெறும் வல்லமை. ஒரு நதியைப் போன்று தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும். (யோவான் 3:34)

"தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார்" - ஜீவத்தண்ணீருள்ள நதிகள் என்பது பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தைக் குறிக்கும். இயேசு கிறிஸ்து மகிமையடைந்த பின்பு, எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். (யோவான் 3:34, அப் 2:33,38-39) இந்தத் தீர்க்கதரிசனத்தை யோவேல் ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார். (யோவே 2:28= அப் 2: 1-21)

41. பிரிவினை - இயேசுவைக் கொல்ல சதியாலோசனை - (மத் 26:3)

யோவான் 7:40 ஜனங்களில் அநேகர் இந்த வசனத்தைக் கேட்டபொழுது: மெய்யாகவே, இவர் தீர்க்கதரிசியானவர் என்றார்கள்.

யோவான் 7:41 வேறுசிலர்: இவர் கிறிஸ்து என்றார்கள். வேறுசிலர்: கிறிஸ்து கலிலேயாவிலிருந்தா வருவார்?

யோவான் 7:42 தாவீதின் சந்ததியிலும், தாவீது இருந்த பெத்லகேம் ஊரிலுமிருந்து கிறிஸ்து வருவார் என்று வேதவாக்கியம் சொல்லவில்லையா என்றார்கள்.

யோவான் 7:43 இவ்விதமாக அவரைக் குறித்து ஜனங்களுக்குள்ளே பிரிவினையுண்டாயிற்று.

யோவான் 7:44 அவர்களில் சிலர் அவரைப் பிடிக்க மனதாயிருந்தார்கள்; ஆகிலும் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை.

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 4

"தாவீதின் சந்ததியிலும், தாவீது இருந்த பெத்லகேம் ஊரிலுமிருந்து கிறிஸ்து வருவார்" (யோவான் 7:42; ஏசா 11:1,10; எரே 23:5; மீகா 5:1-2).

2. சேவகரின் அறிக்கையும் நிக்கொதேமுவின் ஆலோசனையும்

யோவான் 7:45 பின்பு அந்தச் சேவகர் பிரதான ஆசாரியரிடத்திற்கும் பரிசேயரிடத்திற்கும் திரும்பி வந்தார்கள்; இவர்கள் அவர்களை நோக்கி: நீங்கள் அவனை ஏன் கொண்டு வரவில்லை என்று கேட்டார்கள்.

யோவான் 7:46 சேவகர் பிரதியுத்தரமாக: அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்.

யோவான் 7:47 அப்பொழுது பரிசேயர்: நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா?

யோவான் 7:48 அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா?

யோவான் 7:49 வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்றார்கள்.

யோவான் 7:50 இராத்திரியிலே அவரிடத்திற்கு வந்தவனும் அவர்களிலொருவனுமாகிய நிக்கொதேமு என்பவன் அவர்களை நோக்கி:

யோவான் 7:51 ஒரு மனுஷன் சொல்வதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக்குட் படுத்தலாமென்று நம்முடைய நியாயப் பிரமாணம் சொல்லுகிறதா என்றான்.

யோவான் 7:52 அதற்கு அவர்கள்: நீரும் கலிலேயனோ? கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை ஆராய்ந்து பாரும் என்றார்கள்.

7 அதிகாரம்

யோவான் 7:53 பின்பு அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள்.

"அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" - இயேசு கிறிஸ்துவைச் சேவகர்களால் கைதுபண்ண முடியவில்லை. இயேசு கிறிஸ்து தம்மைக் கைது பண்ணுவதற்கு அனுமதி கொடுக்கவில்லை. தேவன் அனுமதி கொடுக்கும் காரியங்கள் மட்டுமே இந்த உலகத்தில் நடைபெறும்.

"நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா? அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா?" - ஒரு காரியத்தை விசுவாசிக்க வேண்டுமென்றால் அதை அறிவியல் பூர்வமாக நிரூபிக்க வேண்டும் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். நிரூபிக்கப்படாததை நம்புகிறவர்களை வஞ்சிக்கப்பட்டவர்களாகக் கருதுகிறார்கள். ஆனாலும் அதிகாரிகளிலும், பரிசேயரிலும் அநேகர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். (யோவான் 12:42; யோவான் 19:38-39).

"வேதத்தை அறியாதவர்களாகிய இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள்" - என்று பரிசேயர்கள் சேவகரிடம் கூறுகிறார்கள். நியாயப்பிரமாணத்தை அறியாமல் இருப்பதும், அதனால் அதைத் தங்களுடைய ஜீவியத்தில் கடைப்பிடிக்க முடியாமல் இருப்பதும், சாபமான காரியம் என்று பரிசேயர் கூறுகிறார்கள். நியாயப்பிரமாணம் யாரையும் விடுதலை பண்ணாது. அது எந்த மனுஷனையும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து அவனைக் குற்ற உணர்வுள்ளவனாக்கும். (ரோமர் 3:9-23; ரோமர் 7:7-25; 1யோவான் 3:4).

"நீரும் கலிலேயனோ? கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை ஆராய்ந்துபாரும்" - என்று பரிசேயர்கள் நிக்கொதேமுவிடம் கூறுகிறார்கள். அவன் அவர்களிடம் "ஒரு மனுஷன் சொல்வதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக்குட் படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா" என்று கேட்ட கேள்விக்கு பரிசேயர் நிக்கொதேமுவிடம் இவ்வாறு மறுபடியும் கேள்வி கேட்கிறார்கள். பரிசேயர் கூறிய பதில் அவர்கள் வேதவாக்கியத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே காண்பிக்கிறது. (யோவான் 7:27) கிறிஸ்து கலிலேயாவில் பிறக்கவில்லை. அவர் பெத்லகேமிலே பிறந்தார். (மீகா 5: 1-2; மத் 2; லூக்கா 2) யோனா, ஒசியா, எலியா, எலிசா இன்னும் பல தீர்க்கதரிசிகள் வடக்கு ராஜ்யத்திலிருந்தே வந்தவர்கள். யூதேயாவிலிருந்து வந்தவர்கள் அல்ல. பரிசேயர் வேதவாக்கியங்களைச் சரியாகப் படித்திருந்தால் இந்தச் சத்தியம் அவர்களுக்குப் புரிந்திருக்கும்.

"பின்பு அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள்" - சீனாடிக் பதிப்புகளிலும், வத்திகன் பதிப்புகளிலும் **(the Sinaitic and Vatican manuscripts)** யோவான் 7:53-8:11 ஆகிய வசனங்கள் காணப்படவில்லை. அந்தப் பதிப்புகளில் இந்த வசனங்கள் சேர்த்துக் கொள்ளப்படாததினால் இவை வேதாகமத்திற்குரியவையல்ல என்று முடிவு பண்ணக்கூடாது. இவையும் வேதவாக்கியமே. பரிசுத்த ஆவியானவர் இந்த வசனங்களையும், எழுதுமாறு ஏவியிருக்கிறார். தேவனுடைய திருச்சித்தத்தின் பிரகாரமே இந்த வசனங்கள் வேதாகமத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

8 அதிகாரம்

43. இயேசு தேவாலயத்தில் உபதேசம் பண்ணுகிறார்

(1) விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீ

யோவான் 8:1 இயேசு ஒலிவமலைக்குப் போனார்.

யோவான் 8:2 மறுநாள் காலையிலே அவர் திரும்பி தேவாலயத்திற்கு வந்தபோது, ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள். அவர் உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசம் பண்ணினார்.

யோவான் 8:3 அப்பொழுது விபசாரத்திலே கண்டுபிடிகப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவளை நடுவே நிறுத்தி:

யோவான் 8:4 போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள்.

யோவான் 8:5 இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள்.

யோவான் 8:6 அவர்மேல் குற்றஞ்சுமத்து வதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார்.

யோவான் 8:7 அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி,

யோவான் 8:8 அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார்.

யோவான் 8:9 அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய் விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள்.

யோவான் 8:10 இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத் தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க இல்லையா என்றார்.

யோவான் 8:11 அதற்கு அவள்: இல்லை ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே என்றார்.

"இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று" - (லேவி 20:10; உபா 22:22; எண் 5)

"அவர்மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள்" - மோசேயின் பிரமாணத்தை மீறிவிட்டாரா என்று சோதிக்க விரும்பினார்கள். (லேவி 20:10; உபா 22:22-24) மோசேயின் பிரமாணத்தை இயேசு கிறிஸ்து மீறினால் அவரைக் கள்ளத்தீர்க்கதரிசி என்று கூறிவிடலாம் என்பது அவர்களுடைய எண்ணம். அந்த ஸ்திரீயை மரணத்திற்கு ஏதுவாக இயேசு கிறிஸ்து தீர்ப்பளித்தால், அவர் ரோமருடைய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார் என்று அவர்மீது குற்றம் சுமத்தலாம் என்பதும் அவர்களுடைய எண்ணம். ஏதாவது ஒரு வழியில் இயேசு கிறிஸ்துவைக் குற்றப்படுத்த வேண்டும். ஆனால் இயேசு கிறிஸ்துவோ அவர்களுக்குப் பதில் எதுவும் கூறாமல் தரையிலே எழுதினார் என்று வாசிக்கிறோம்.

"இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார்" - தரையில் என்ன எழுதினார் என்பது சுவிசேஷத்தில் கூறப்படவில்லை. பலரும் பலவிதமாக இதற்கு வியாக்கியானம் கூறுகிறார்கள்.

8 அதிகாரம்

நிமிர்ந்துப்பார் (lifted up) - ἀνακύπτω - anakyptoo - 352

வினைச்சொல் - நிமிர், நிமிர்ந்துப்பார் (stand upright) (யோவான் 8:7,10; லூக்கா 13:11) (to look up) (லூக்கா 21:28).

பாவமில்லாத (without sin) - ἀναμάρτητος - anamarteetos - 361

பெயரடை - பாவமில்லாத (sinless)

"உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" - கல்லெறிந்து கொல்வது யூதருடைய பிரமாணத்தின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தண்டனையே. (யாத் 19:13; உபா 13:10; உபா 17:5; உபா 22:21). குற்றவாளிமீது குற்றம் சுமத்துபவர் முதலாவது கல்லை எறிவார். அதன்பின்பு மற்றவர்களும் குற்றவாளி மரிக்கும் வரையிலும் கல்லெறிவார்கள். (எண் 15:36; யோசு 7:25; 1இராஜா 21:13; அப் 7:58-59; அப் 14:19; 2கொரி 11:25) யூதருடைய முறைமையின் பிரகாரம் குற்றவாளியின் கைகளைப் பின்னால் கட்டி, மேல்சட்டையை உரித்துவிட்டு, சந்தியின் நடுவில் நிறுத்துவார்கள். ஜனங்கள் 10 அல்லது 12 அடி தூரத்தில் நிற்பார்கள். குற்றம் புரிந்தவனுக்கு எதிராகச் சாட்சிக் கூறியவர்கள் குற்றவாளிமீது வேகமாகக் கல்லெறிவார்கள். அந்தக் கற்களினால் குற்றவாளி சாகவில்லையெனில், ஒரு பெரிய கல்லினால் அவனுடைய மார்புப்பகுதியில் தாக்கி, அவனைக் கொல்வது வழக்கம்.

"அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள்" - தேவன் மனுஷருக்கு மனச்சாட்சியைக் கொடுத்திருக்கிறார். நாம் செய்யும் காரியம் சரியானதா அல்லது தவறானதா என்பதை நமது மனச்சாட்சியே முடிவு செய்யும். (ரோமர் 2:12-16).

தங்கள் மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டதற்குக் காரணங்கள்

1. இயேசு கிறிஸ்துவிற்கு எதிராக அவர்கள் சதியாலோசனை பண்ணினார்கள். அவர்களுக்கு அந்த ஸ்திரீயின்மீது இருந்த கோபத்தைவிட இயேசு கிறிஸ்துவின்மீது கோபம் அதிகமாக இருந்தது.

2. அந்த ஸ்திரீயோடு தவறு செய்த மனுஷனை அவர்களால் அங்கு கொண்டுவர முடியவில்லை.

3. இயேசு கிறிஸ்து குனிந்து தரையிலே எழுதினார்.

4. உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று இயேசு கிறிஸ்து அவர்களுக்குக் கூறினார்.

5. அவர்களுடைய மாய்மாலம் இயேசு கிறிஸ்துவிற்கும், அங்கு கூடியிருந்தவர்களுக்கும் மறைவாயிருக்க வில்லை. எல்லாம் வெளியரங்கமாய் இருந்தது.

6. இதே பாவத்தை அவர்களும் செய்திருந்த படியினால் அவர்களுக்குள் குற்ற உணர்வு இருந்தது. (ரோமர் 2:1)

"இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள்" - ஸ்திரீயின்மீது குற்றம் சுமத்தியவர்கள் எல்லோரும் போய்விட்டார்கள். இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் வேடிக்கை பார்ப்பதற்காக அங்கு கூடியிருந்தோர் மட்டுமே இப்போது இருக்கிறார்கள். அவர்கள் நடுவே அந்த ஸ்திரீ நிற்கிறாள். (யோவான் 8:10).

"நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" - விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீயை இயேசு கிறிஸ்து ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லை. இந்த நிகழ்ச்சி ஆதிகால கிறிஸ்தவரிடையே ஒரு பிரச்சனையாக இருந்தது. விபச்சாரம் செய்யும் பாவத்தை தேவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். இந்த வசனம் அவர்கள் எதிர்பார்த்தபடி இல்லை.

8 அதிகாரம்

இந்த வசனங்களில் காணப்படும் மையக்கருத்தை ஆதிக்கிறிஸ்தவர்கள் தவறுதலாகப் புரிந்திருக்கலாம். இயேசு கிறிஸ்துவைக் குற்றப்படுத்துவதற்காக யூதமார்க்கத் தலைவர்கள் முயற்சி பண்ணுகிறார்கள். இயேசு கிறிஸ்து நியாயாதிபதி அல்ல. மோசேயின் பிரமாணத்தின் பிரகாரம் நியாயாதிபதிகள் மட்டுமே தண்டனை கொடுக்க முடியும். இயேசு கிறிஸ்து அந்த ஸ்திரீக்கு அந்தத் தண்டனையைக் கொடுத்திருந்தால் யூதமார்க்கத் தலைவர்கள் தங்களுடைய மார்க்க விதிகளை மீறியதாக இயேசுவின்மீது குற்றம் சுமத்துவார்கள்.

இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிப்பதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தார். யாரையும் அழிப்பதற்கு வரவில்லை. ஒருவர் தன் பாவத்திற்காக மனந்திருந்தி, தேவனிடத்தில் மன்னிப்பைக் கோரும்போது, இயேசு கிறிஸ்து அந்த நபரை நிச்சயமாகவே மன்னிப்பார். (மத் 12:31-32; 1யோவான் 1:9)

இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்து "உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை" என்றுதான் கூறினாரேதவிர, "விபச்சாரத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை" என்று கூறவில்லை. இயேசு கிறிஸ்துவைப் பொருத்த வரையில் விபச்சாரம் பாவமே. இயேசு கிறிஸ்து பாவியான அந்த ஸ்திரீயை மன்னித்தார். மனந்திருந்தி தம்மிடத்தில் வரும் எந்தப் பாவியையும் இயேசு கிறிஸ்து மன்னிப்பார். (மத் 9:1-8; லூக்கா 7:37-50). இயேசு அந்த ஸ்திரீயிடம் "நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" என்று கூறுகிறார். இதன் மூலமாக விபச்சாரத்தை அவர் ஒரு பாவமாக ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறார் என்பது தெளிவாகிறது. இயேசு கிறிஸ்து இதே போன்றுதான் பல இடங்களில் கிரியை செய்திருக்கிறார். (மத் 5:27-32; மத் 19:9,18-19)

(2) இயேசு உலகத்திற்கு ஒளியாயிருக்கிறார் - (யோவான் 1: 4- 9; 9:5; 12:35)

யோவான் 8:12 மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக் கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.

"மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி" - இயேசு கிறிஸ்து ஜனங்களிடம் ஒரு முக்கியமான சத்தியத்தை உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் யூதமார்க்கத் தலைவர்கள் அவருடைய உபதேசத்தை இடை மறித்து, அங்கு விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை அவரிடத்தில் கொண்டு வருகிறார்கள். (யோவான் 8:1-2) சில பதிப்புகளில் இருப்பதுபோல யோவான் 7:53-8:11 ஆகிய வசனங்களை எடுத்துவிட்டால், "மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி" என்னும் வாக்கியத்திற்குப் பொருள்கூறமுடியாது. யோவான் 7:52 ஆவது வசனம் தொடர்ச்சியாகவும் இராது.

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" - (யோவான் 6:35) சாதாரணமாக பண்டிகை எட்டு நாட்கள் மட்டுமே நடைபெறும். யூதர்கள் இதை ஒன்பதாவது நாளிலும் கொண்டாடுவார்கள். அப்போது எல்லோரும் விளக்குகளை ஏற்றி வைத்துக் கொள்வார்கள். (நீதி 6:23; சங் 119:105) வேதவாக்கியம் மேசியாவை விளக்காகவும், வெளிச்சமாகவும், ஒளியாகவும் விளக்குகிறது. இயேசு கிறிஸ்து இந்த விசேஷித்த நாளில் தாம் உலகத்திற்கு ஒளியாக இருப்பதாகக் கூறுகிறார். (ஏசா 9:2; ஏசா 49:6; ஏசா 60:1).

(3) தம்மைப் பற்றி இயேசு கொடுத்த சாட்சியை பரிசேயர் குற்றப் படுத்துகிறார்கள்

யோவான் 8:13 அப்பொழுது பரிசேயர் அவரை நோக்கி: உன்னைக் குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய்; உன்னுடைய சாட்சி உண்மையானதல்ல என்றார்கள்.

8 அதிகாரம்

"உன்னைக்குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய்" - (யோவான் 5:31-39)

(4) பிதா தம்மைக் குறித்து சாட்சி கொடுப்பதாக இயேசு கூறுகிறார் - (யோவான் 5:37-38)

யோவான் 8:14 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தாலும், என் சாட்சி உண்மையாயிருக்கிறது; ஏனெனில் நான் எங்கேயிருந்து வந்தேனென்றும், எங்கே போகிறேனென்றும் அறிந்திருக்கிறேன்; நீங்களோ நான் எங்கேயிருந்து வருகிறே னென்றும், எங்கே போகிறேனென்றும் அறியீர்கள்.

யோவான் 8:15 நீங்கள் மாம்சத்துக்கேற்றபடி நியாயந்தீர்க்கிறீர்கள், நான் ஒருவனையும் நியாயந்தீர்க்கிறதில்லை;

யோவான் 8:16 நான் நியாயந்தீர்த்தால், என் தீர்ப்பு சத்தியத்தின்படியிருக்கும்; ஏனெனில் நான் தனித்திருக்கவில்லை, நானும் என்னை அனுப்பின பிதாவுமாக இருக்கிறோம்.

யோவான் 8:17 இரண்டுபேருடைய சாட்சி உண்மையென்று உங்கள் நியாயப் பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே.

யோவான் 8:18 நான் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாய் இருக்கிறேன், என்னை அனுப்பின பிதாவும் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார் என்றார்.

"நீங்கள் மாம்சத்துக்கேற்றபடி நியாயந் தீர்க்கிறீர்கள்" - (யோவான் 5:22; யோவான் 7:24)

"இரண்டு பேருடைய சாட்சி உண்மையென்று உங்கள் நியாயப்பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே" - (உபா 17:6; உபா 19:15; 2கொரி 13:1)

"நான் என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன், என்னை அனுப்பின பிதாவும் என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறார்" - திரித்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஆள்தத்துவமுடையவர்களாக இருப்பதை இந்த வசனம் விளக்குகிறது. (யோவான் 5:17-40; 1யோவான் 5:7) பிதா குமாரனைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார். அற்புதங்களைச் செய்வதற்காகப் பிதா குமாரனை அனுப்பினார். அந்த அற்புதங்கள் மூலமாகவே சாட்சி கொடுக்கிறார். (யோவான் 5:32,36; யோவான் 11:42; யோவான் 14:11; அப் 10:38)

(5) உம்முடைய பிதா எங்கே

யோவான் 8:19 அப்பொழுது அவர்கள்: உம்முடைய பிதா எங்கே என்றார்கள். இயேசு பிரதியுத்தரமாக: என்னையும் அறியீர்கள், என் பிதாவையும் அறியீர்கள்; நீங்கள் என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள் என்றார்.

யோவான் 8:20 தேவாலயத்திலே இயேசு உபதேசம் பண்ணுகிறபோது, தருமப் பெட்டியிருக்கும் இடத்தில் இந்த வசனங்களைச் சொன்னார். அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை.

யோவான் 8:21 இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நான் போகிறேன், நீங்கள் என்னைத்தேடி உங்கள் பாவங்களிலே சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்றார்.

யோவான் - தொகுப்புரை

8 அதிகாரம்

"என்னையும் அறியீர்கள், என் பிதாவையும் அறியீர்கள்; நீங்கள் என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள்" - யூதமார்க்கத் தலைவர்களுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றித் தெரியவில்லை. (யோவான் 7:28 பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவனால் குமாரனிடத்தில் வரமுடியாது. (யோவான் 6:37,39,44) நித்திய ஜீவன் என்பது குமாரனையும் அறிய வேண்டும். அவரை அனுப்பிய பிதாவையும் அறிய வேண்டும். (யோவான் 17:2-3,1 யோவான் 5:20).

"தருமப்பெட்டியிருக்கும் இடத்தில் இந்த வசனங்களைச் சொன்னார்" - பல சமயங்களில் இயேசு கிறிஸ்து இந்த இடத்திலிருந்து உபதேசம் பண்ணியிருக்கிறார். (மாற்கு 12:41; லூக்கா 21:1; யோவான் 8:20). இந்த இடம் தேவாலயத்தில் ஸ்திரீகளுடைய பிரகாரத்தில் உள்ளது.

"அவருடைய வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை" - (யோவான் 7:6)

தீர்க்கதரிசன எண் - 21

"நான் போகிறேன், நீங்கள் என்னைத்தேடி உங்கள் பாவங்களிலே சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது" (யோவான் 8:21) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"என்னைத் தேடுவீர்கள்" - (யோவான் 7:34)

"உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" - இயேசு கிறிஸ்துவை அவர்கள் தேவனென்று விசுவாசிக்கவில்லை. அவிசுவாசம் என்னும் இந்தப் பாவத்திலே அவர்கள் சாவார்கள்.

(6) தன்னைத்தான் கொலைசெய்து கொள்வானோ

யோவான் 8:22 அப்பொழுது யூதர்கள்: நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்கிறானே, தன்னைத்தான் கொலைசெய்து கொள்வானோ என்று பேசிக் கொண்டார்கள்.

யோவான் 8:23 அவர் அவர்களை நோக்கி: நீங்கள் தாழ்விலிருந் துண்டானவர்கள், நான் உயர்விலிருந் துண்டானவன்; நீங்கள் இந்த உலகத்திலிருந்துண்டானவர்கள், நான் இந்தஉலகத்திலிருந்துண்டானவனல்ல.

யோவான் 8:24 ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்.

"அப்பொழுது யூதர்கள்: நான் போகிற இடத்துக்கு வர உங்களால் கூடாது என்கிறானே, தன்னைத்தான் கொலைசெய்து கொள்வானோ என்று பேசிக் கொண்டார்கள்" - இதே யூதர்கள் யோவான் 7:35 ஆவது வசனத்தில் "இவரை நாம் காணாதபடிக்கு எங்கே போவார், கிரேக்கருக்குள்ளே சிதறி இருக்கிறவர்களிடத்திற்குப் போய், கிரேக்கருக்கு உபதேசம் பண்ணுவாரோ?" என்று கேட்டார்கள். இயேசு கிறிஸ்து தமது மரணத்தைப் பற்றிக் கூறுகிறார் என்பதை யூதர்கள் இறுதியாகப் புரிந்து கொள்கிறார்கள். இப்பொழுது அவர்களுக்குரிய பிரச்சனை "இயேசுவை யார் கொலைசெய்வார்கள்" என்பதுதான்.

"நீங்கள் தாழ்விலிருந்துண்டானவர்கள்" - பூமி (1கொரி 15:47)

"நான் உயர்விலிருந்துண்டானவன்" - பரலோகம். (யோவான் 3:13,31; யோவான் 6:33-42; கொலோ 3:1)

8 அதிகாரம்

"நீங்கள் இந்த உலகத்திலிருந்து உண்டானவர்கள், நான் இந்த உலகத்திலிருந்துண்டானவனல்ல" - அவர்கள் இந்த உலகத்திற்குரியவர்கள். ஆகையினால் அவர்களால் கொலைசெய்யவும் முடியும். தங்களைத் தாங்களே கொல்லவும் முடியும். இவை இவ்வுலகத்திற்குரிய காரியங்கள். பிசாசின் கிரியைகள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ இந்த உலகத்திலிருந்து உண்டானவர் அல்ல. அவர் பரலோகத்திலிருந்து உண்டானவர். இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். கிபி. 70 ஆம் ஆண்டில் எருசலேமில் ஏற்பட்ட மிகப்பெரிய பஞ்சத்தினால் ஏராளமான யூதர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள். இவ்வாறாக இயேசு கிறிஸ்து கூறிய வார்த்தை அவர்களுடைய ஜீவியத்தில் உண்மையாயிற்று.

"நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள்" - கிரேக்க மொழியில் பாவங்கள் என்று பன்மையில் உள்ளது. யோவான் 8:21 ஆவது வசனத்தில் "உங்கள் பாவங்களில் சாவீர்கள்" என்று தமிழில் இருந்தாலும், அதன் மூலகிரேக்க பாஷையில் "உங்கள் பாவத்தில் சாவீர்கள்" என்று ஒருமையில் உள்ளது.

"நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" - யோவான் 8:24,28 ஆகிய வசனங்களில் "நானே அவர்" (ஒ ஹம் ட்ங்) என்றுள்ளது. கிரேக்க பாஷையில் "அவர்" (he) என்னும் வார்த்தையில்லை. யாத் 3:14-15 ஆகிய வசனங்களில் தேவனுடைய நாமத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியத்தை இது நமக்கு நினைவுபடுத்துகிறது. நித்தியமானவர் என்பது பொருள். தேவன், இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்.

மேலும் தேவன் மோசேயை நோக்கி, ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்வாயாக; என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்ப்பிரஸ்தாபம்.

(7) நீர் யார்

யோவான் 8:25 அதற்கு அவர்கள்: நீர் யார் என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் ஆதிமுதலாய் உங்களுக்குச் சொல்லியிருக்கிறவர் தான்.

யோவான் 8:26 உங்களைக்குறித்துப் பேசவும் நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்களுண்டு. என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர்; நான் அவரிடத்தில் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லுகிறேன் என்றார்.

யோவான் 8:27 பிதாவைக்குறித்துப் பேசினாரென்று அவர்கள் அறியாதிருந்தார்கள்.

யோவான் 8:28 ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்.

யோவான் 8:29 என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார்.

"அதற்கு அவர்கள்: நீர் யார் என்றார்கள்" - நாங்கள் சாவோம் என்று எப்படிக் கூறலாம். உமக்கு இவ்வாறு கூறுவதற்கு என்ன அதிகாரம் உள்ளது.

யோவான் - தொகுப்புரை

8 அதிகாரம்

"இயேசு அவர்களை நோக்கி: நான் ஆதிமுதலாய் உங்களுக்குச் சொல்லியிருக்கிறவர்தான்" - இயேசு கிறிஸ்து உலகத்தின் வெளிச்சமாக இருக்கிறார். (யோவான் 8:12) "ஆதிமுதலாய்" என்னும் வாக்கியத்தில் கிரேக்க மொழியில் "ஆதி" என்னும் சொல் மட்டுமே உள்ளது. "முதலாய்" **(from)** என்னும் வார்த்தை கிரேக்கமொழியில் இல்லை. ஆகையினால் இந்த வாக்கியத்திற்கு "நான் ஆதியாக இருக்கிறேன்" என்று பொருள் கூறலாம். எல்லாக் காரியங்களின் துவக்கமாகவும், எல்லா அதிகாரங்களுக்கும், வல்லமைகளுக்கும் இயேசு கிறிஸ்து ஆதாரமாக இருக்கிறார். (எபே 1:20-23; எபே 4:15; எபே 5:23; கொலோ 1:18; கொலோ 2:10,19; எபி 1:2-3).

"உங்களைக்குறித்துப் பேசவும் நியாயந் தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்களுண்டு" - பிதாவானவர் தாமே தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அவர் சத்தியமுள்ளவர். நான் செய்யும் காரியங்களைச் சொல்வதற்காகவே பிதா என்னை அனுப்பினார் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். இயேசு கிறிஸ்து பிதாவிடத்தில் கேட்டவைகளேயே உலகத்திற்குச் சொல்லுகிறார். (யோவான் 8:14,16,18,26)

"நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்" - இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தபின்பு, யூதர்கள் அவரை மேசியா என்று புரிந்து கொள்வார்கள். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலமாகவும், அவருடைய பரமேறுதல் மூலமாகவும் அவரே தேவனுடைய குமாரன் என்றும், அவரே உலகத்திற்கு வெளிச்சமானவர் என்பதையும் யூதர்கள் தெரிந்து கொள்வார்கள்.

குமாரன் பிதாவோடு ஐக்கியமாக இருக்கும் காரியங்கள்

1. குமாரன் தாமாக ஒன்றும் செய்வதில்லை. (யோவான் 5:17,19; யோவான் 8:18)
2. குமாரன் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை. (யோவான் 5:30).
3. தமக்குச் சித்தமானதைக் குமாரன் தேடாமல் பிதாவிற்குச் சித்தமானதைத் தேடுகிறார். (யோவான் 5:30; யோவான் 6:38).
4. குமாரனின் உபதேசம் அவருடையதாய் இராமல், அவரை அனுப்பின பிதாவுடையதாய் இருக்கிறது. (யோவான் 7:16; யோவான் 8:26,38).
5. குமாரன் தன் சுயமாய் ஒன்றுஞ்செய்யாமல், பிதா அவருக்குப் போதித்தபடியே சொல்கிறார். (யோவான் 8:28).
6. பிதாவிற்கு பிரியமானவைகளையே குமாரன் எப்பொழுதும் செய்கிறார். (யோவான் 8:29).
7. குமாரன் சுயமாய் வரவில்லை, பிதாவினிடத்திலிருந்து வந்திருக்கிறார். (யோவான் 8:42; யோவான் 16:28)
8. குமாரன் தமக்கு மகிமையைத் தேடுகிறதில்லை. (யோவான் 8:50,54).
9. குமாரன் சொல்லுகிற வசனங்களை அவர் சுயமாய்ச் சொல்லவில்லை. அவரிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார். (யோவான் 10:25,37-38; யோவான் 14:10-11).

(8) விசுவாசிகளுக்கு இயேசுவின் உபதேசம்

யோவான் 8:30 இவைகளை அவர் சொல்லுகையில், அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

யோவான் 8:31 இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்;

8 அதிகாரம்

யோவான் 8:32 சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.

"அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" - இவர்கள் உண்மையிலேயே இயேசு கிறிஸ்துவின் விசுவாசிகள். அவ்வாறு இல்லையென்றால் பரிசுத்த ஆவியானவர் இந்த வசனத்தை வேதாகமத்தில் எழுதியிருக்க மாட்டார்.

"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்" - வேதாகமத்தில் ஏராளமான வாக்குத்தத்தங்கள் உள்ளன. அதேவேளையில் ஏராளமான நிபந்தனைகளும் உள்ளன. "ஆல்" **"if"** என்னும் வார்த்தை வேதாகமத்தில் 1,595 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தை நிபந்தனையைக் குறிக்கும். விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருந்தால் அவருடைய சீஷராக இருப்பார்கள். (யோவான் 8:31-32) இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராவிட்டால் அவருடைய சீஷராக இருக்கமாட்டார்கள்.

"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" - சாபத்திலிருந்து மனுஷரை விடுவிப்பதற்காக இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே மரித்தார். இதுவே வேதாகமத்தின் சத்தியம். பாவம், வியாதி, சாபம் ஆகியவற்றிலிருந்து நாம் விடுதலை பெறவேண்டுமென்றால் இந்தச் சத்தியத்தை நாம் அறிந்திருக்க வேண்டும்.(ரோமர் 10:17;எபி11:6; யாக் 1:5-8).

(9) யூதர்கள் விடுதலையின் சந்ததியாய் இருக்கிறோம் என்கிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (ரோமர் 6:16-23; 1யோவான் 3:8)

யோவான் 8:33 அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாய் இருக்கவில்லை; விடுதலையாவீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள்.

யோவான் 8:34 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 8:35 அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்; குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார்.

யோவான் 8:36 ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.

யோவான் 8:37 நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாரென்று அறிவேன்; ஆனாலும் உங்களுக்குள்ளே என் உபதேசம் இடம் பெறாதபடியால், என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள்.

யோவான் 8:38 நான் என் பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன், நீங்களும் உங்கள் பிதாவினிடத்தில் கண்டதைச் செய்கிறீர்கள் என்றார்.

"நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை" - யூதர்கள் மிகப்பெரிய பொய்யைக் கூறுகிறார்கள். அவர்களுடைய வரலாறே எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்துதான் ஆரம்பமாகிறது. 1,800 வருஷங்களாக யூதர்கள் பல தேசங்களில் அடிமைகளாக இருந்திருக்கிறார்கள். எகிப்து, அசீரியா, பாபிலோன், மேதிய-பெர்சியா, கிரேக்கம், ரோமாபுரி ஆகிய தேசங்களில் யூதர்கள் அடிமைகளாக இருந்தார்கள். கிபி. 70 ஆவது ஆண்டில் கூட அவர்கள் ரோமருக்கு அடிமையாகவே இருந்தார்கள். இந்த வசனத்தை அவர்கள் கூறும்போது யூதேயா தேசம் ரோமாபுரிக்கு அடிமையாயிருந்தது.

"பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்" - பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிறவர்கள் எல்லோருமே அதற்குரிய கிரயத்தைச் செலுத்தியே ஆகவேண்டும். (ஆதி 2:17; எசே 18:4; ரோமர் 8:12-13; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கலா 6:7-8).

8 அதிகாரம்

"அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்; குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார்" - பாவத்திற்கு அடிமையாக இருக்கிறவன் தேவனுடைய வீட்டிலே என்றென்றைக்கும் நிலைத்திருப்பதில்லை. நாம் பாவத்திலிருந்து விடுதலை பெற்றிருப்போமானால் தேவனுடைய வீட்டிலே தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடு நித்திய காலமாக இருப்போம். (ரோமர் 6:16-23; ரோமர் 14:1-3; ரோமர் 15:1-6; 1தெச 4:16).

"குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" - இயேசு கிறிஸ்து ஒருவனை பாவத்திலிருந்து மீட்டு இரட்சிக்கும்போது, அவன் இனிமேல் பாவத்திற்கு அடிமையாக இருப்பதில்லை. (ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; கலா 5:16-26; எபி 12:14; 1யோவான் 2:29; 1யோவான் 3:6-10; 1யோவான் 5:1-4,18)

(10) யூதர்கள் ஆபிரகாமின் சந்ததியாய் இருக்கிறோம் என்கிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (ரோமர் 2:28-29; 9:6)

யோவான் 8:39 அதற்கு அவர்கள்: ஆபிரகாமே எங்கள் பிதா என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே.

யோவான் 8:40 தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள், ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே.

"அதற்கு அவர்கள்: ஆபிரகாமே எங்கள் பிதா என்றார்கள்" - இது உண்மை தான். மாம்சத்தின் பிரகாரம் ஆபிரகாம் அவர்களுடைய பிதாவாக இருக்கிறார். ஆனாலும் அவர்கள் ஆபிரகாமின் உண்மையான பிள்ளைகளாக இல்லை. ஒருவன் மாம்சத்தின் பிரகாரம் ஆபிரகாமின் சந்ததியாக இருந்தால் மட்டும் போதாது. அவன் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்ய வேண்டும். (ரோமர் 2:28-29; ரோமர் 9:4-11).

"நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே" - யூதர்கள் ஆபிரகாமின் சரீரப் பிரகாரமான பிள்ளைகள். அவருடைய ஆவிக்குரிய பிள்ளைகள் அல்ல. இவர்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்பார்களென்றால் ஆபிரகாமிடம் காணப்பட்ட விசுவாசம், கீழ்ப்படிதல், நீதி ஆகியவை இவர்களிடத்திலும் காணப்படும். ஆனால் இவர்களோ இயேசு கிறிஸ்துவைக் கொலைசெய்ய வகைதேடுகிறார்கள். இயேசு கிறிஸ்து சத்தியத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறுகிறார். ஆபிரகாம் இதுபோன்ற காரியத்தைத் தன்னுடைய ஜீவியத்தில் செய்யவே இல்லை.

"தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள்" - இந்த ஒரு வசனத்தில் மட்டுமே இயேசு கிறிஸ்து தம்மை "மனுஷன்" **(man)** என்று குறிப்பிடுகிறார். பொதுவாக இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றிக் குறிப்பிடும்போது "தேவகுமாரன்" **(Son of God)** என்றும், "மனுஷகுமாரன்" **(Son of Man)** என்றுமே குறிப்பிடுகிறார். (யோவான் 1:49,51) அவர் உண்மையிலேயே மனுஷனாகவும், தேவனாகவும் இருந்தார். தேவனுடைய ஒரேபேறான குமாரன். கன்னிகையின் வயிற்றில் பிறந்தவர். (மத் 1:18)

இயேசு கிறிஸ்துவை யூதர்கள் கொலை செய்ய விரும்பியதற்குக் காரணங்கள்

1. இயேசு கிறிஸ்துவின் ராஜரீகம் (மத் 2:2-3,16; யோவான் 18:33-40; யோவான் 19:12-22)
2. சத்தியத்தைக் கூறினார் (லூக்கா 4:21-29; யோவான் 8:40)
3. ஓய்வுநாளில் குணப்படுத்தினார் (மத் 12:9-14; மாற்கு 3:1-6; யோவான் 5:16; யோவான் 9:16)

8 அதிகாரம்

4. பொறாமை (மத் 26:3-4; மத் 27:18; மாற்கு 14:1; மாற்கு 15:10; லூக்கா 22:2; யோவான் 11:48)

5. அறியாமை (மத் 26:64-66; மாற்கு 14:62-64; யோவான் 12:40; அப் 3:17)

6. தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம். (லூக்கா13:33-35;யோவான் 12:38-40; யோவான் 18:31-32; யோவான் 19:11, 28,36-37; அப் 2:22-36; அப் 3:18)

7. தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறினார். (யோவான் 5:18; யோவான் 10:24-39; யோவான் 19:7)

8. அவிசுவாசம் (யோவான் 5:38-47; யோவான் 6:36; யோவான் 9:40-41; யோவான் 12:36-38)

9. தம்மைத் தேவன் என்று கூறினார். (யோவான் 8:53-59; யோவான் 10:33; யோவான் 1:1-2; எபி 1:5-14)

10. தங்களுடைய அதிகாரம் போய் விடும் என்று பயந்தார்கள். (யோவான் 11:46-53; யோவான் 12:10-11,19)

(11) யூதர்கள் பிதாவின் சந்ததியாய் இருக்கிறோம் என்கிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (யோவான் 3:5; 1யோவான் 3:8-10)

யோவான் 8:41 நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் செய்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல; ஒரே பிதா எங்களுக்குண்டு, அவர் தேவன் என்றார்கள்.

யோவான் 8:42 இயேசு அவர்களை நோக்கி: தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்; நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார்.

யோவான் 8:43 என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா?

யோவான் 8:44 நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற் கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.

யோவான் 8:45 நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை.

யோவான் 8:46 என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை.

யோவான் 8:47 தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவி கொடுக்கிறான்; நீங்கள் தேவனால் உண்டாயிராத படியினால் செவிகொடாமலிருக்கிறீர்கள் என்றார்.

"நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் செய்கிறீர்கள்" - யூதர்கள் பிசாசின் கிரியைகளைச் செய்கிறார்கள். (1யோவான் 3:8) ஆதியிலிருந்தே அவர்களுடைய பிதாக்கள் கொலைகாரர்களாக இருந்தார்கள். இவர்கள் சாத்தானின் பிள்ளைகள். (யோவான் 8:41-44)

8 அதிகாரம்

"நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல; ஒரே பிதா எங்களுக்குண்டு, அவர் தேவன் என்றார்கள்" - தாங்கள் விக்கிரகாராதனைக்காரர்கள் அல்ல என்று யூதர்கள் இயேசுவிடம் கூறுகிறார்கள். விக்கிரகாராதனை ஆவிக்குரிய வேசித்தனமாகக் கருதப்பட்டது. தேவனுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையேயுள்ள திருமண உடன்படிக்கையின் மீறுதலே விக்கிரகாராதனை ஆகும். (நீதி 2:17; ஏசா 1:21; ஓசி 1:2; ஓசி 4:12; 2 2நாளா 21:11; எசே 16).

"தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள்" - இயேசுகிறிஸ்து தேவனைத் தமது பிதா என்று அழைக்கிறார். யூதர்களும் தேவனைத் தங்களுடைய பிதா என்று அழைக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவிற்கும், யூதருக்கும் பிதா ஒருவரே என்றால் அவர்கள் இயேசு கிறிஸ்துவைத் துன்பப்படுத்தமாட்டார்கள். அவரிடத்தில் அன்பாக இருப்பார்கள்.

"என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்கிறதினால் அல்லவா?" - இயேசு கிறிஸ்துவின் உபதேசம் யூதருடைய மாய்மாலத்தை வெளிப்படுத்துகிறது. அவர்களுடைய பாவங்களைக் கடிந்து கூறுகிறது. ஆகையினால் அவர்கள் இயேசுவின் உபதேசத்தைக் கேட்க மனதில்லாமல் இருக்கிறார்கள்.

பிசாசு (devil) - διάβολος - diabolos – 1228

பெயரடை - பிசாசான, அவதூறு (செய்கிறவன்) (adversary, slanderer, accuser) - இந்த வசனத்திலும், மேலும் பல வசனங்களிலும் பிசாசு என்பது சாத்தானையே குறிக்கும். (யோவான் 13:2; மத் 4:1-11; மத் 13:39; மத் 25:41; லூக்கா 4:1-13; லூக்கா 8:12; அப் 10:38; அப் 13:10; எபே 4:27; எபே 6:11; 1தீமோ 3:6-7; 2தீமோ 2:26; எபி 2:14; யாக் 4:7; 1பேதுரு 5:8; 1யோவான் 3:8-10; யூதா 1:9; வெளி 2:10; வெளி 12:9,12; வெளி 20:2,10) புறங்கூறுகிறவர்களும், குற்றம் சுமத்துகிறவர்களும் பிசாசு என்னும் வார்த்தையினாலேயே அழைக்கப் படுகிறார்கள். (யோவான் 6:70; 1தீமோ 3:11; 2தீமோ 3:3; தீத்து 2:3)

இச்சை (lusts) - ἐπιθυμία - epithymia - 1939

பெண்பால் பெயர்ச்சொல் - இச்சை, ஆசை (desire, crave, long for, lust) - சாத்தான் கொடுக்கும் இச்சைகள் மாம்சத்திற்குரியவைகள். அவை எப்போதும் மனுஷருடைய ஆவிக்குரியக் காரியங்களோடு யுத்தம் பண்ணும். மனுஷரிடத்தில் ஆர்வம் இருப்பது தவறல்ல. ஆனால் அது பேராசையாக மாறி, தேவனுடைய பிரமாணத்தை மீறி, பாவமான காரியங்களை இச்சிக்கக் கூடாது.

"பிசாசானவன் ஆதிமுதற் கொண்டு மனுஷகொலை பாதகனாயிருக்கிறான்" - இது காயீனுடைய மரணத்தைக் குறிக்கவில்லை. பாவத்தினால் மனுக்குலம் முழுவதுமே மரித்துக் கொண்டிருப்பதைக் குறிப்பிடுகிறது. (ஆதி 2:17; ரோமர் 5:12-21; எபி 2:14)

துவக்கத்திலிருந்து (from the beginning) - ἀπό - apo - 575

முன்னிடைச் சொல் - ஓரிடத்தில் இருந்து, துவக்கத்திலிருந்து

ஆதிமுதல் (from the beginning) - ἀρχή - archee - 746

பெண்பால் பெயர்ச்சொல் - ஆதி, ஆதிமுதல், ஆரம்பம், முதல், அதிகாரமுள்ளவர்கள், அதிகாரம், துரைத்தனம், துவக்கம், மூலஉபதேசம், உலகமுண்டானது முதல், உலகத்தை சிருஷ்டித்தது முதல்

8 அதிகாரம்

ஆதிமுதல் இருந்த காரியங்கள்

1. சிருஷ்டிப்பு (மத் 19:4,8; மத் 24:21; மாற்கு 10:6; மாற்கு 13:19; 2பேதுரு 3:4)
2. மானிட இனம் (யோவான் 8:44; 1யோவான் 3:8)
3. கர்த்தருடைய ஊழியம் (லூக்கா 1:2; யோவான் 15:27; 1 யோவான் 1:1)
4. பவுலின் பொதுவாழ்வு (அப் 26:4)
5. நாம் கேட்கும் சத்தியம் (1யோவான் 2:7,13,14,24; 1யோவான் 3:11; 2யோவான் 1:5-6)
6. தேவனுடைய சப்தம் (2தெச 2:13)

"அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை" - பிசாசானவன் சிறிதுகாலம் சத்தியத்திலே இருந்தான். பின்பு தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினான். அவன் சத்தியத்திலே நிலைநிற்க வில்லை. (எசே 28:11-17; ஏசா 14:12-14) லூசிபரின் கீழ்ப்படியாமையினால் பூமிக்கு ஜலப்பிரளயம் சாபமாக வந்தது என்று ஒருசிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். (ஆதி 1:2; எரே 4:23-26; 2பேதுரு 3:5-8).

"சத்தியம் அவனிடத்தில் இல்லை" - சாத்தான் பொய்யனாகவும், பொய்க்குத் தகப்பனாகவும் இருக்கிறான். அவன் சத்தியத்தைக் கேட்டாலும் அதற்குக் கீழ்ப்படியவில்லை. பொய்யையே பேசுகிறான். இது அவனுடைய சுபாவம். (யோவான் 8:39-47) இந்த வாக்கியம் அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கும் என்று சிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். அவன் இஸ்ரவேல் ஜனங்களோடு சமாதான உடன்படிக்கை செய்து, தனது உடன்படிக்கையைப் பாதியில் மீறிவிடுகிறான்.

"என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை" - இயேசு கிறிஸ்துவினிடத்தில் பாவம் உண்டென்று அவர்களால் குற்றப்படுத்த முடியவில்லை. அவரிடத்தில் எந்தத் தவறையும் அவர்களால் காணமுடியவில்லை. ஆகையினால் அவர்கள் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். (யோவான் 8:9; யோவான் 3:20; யோவான் 16:8)

(12) யூதர்கள் இயேசுவை சமாரியன் என்றும் பிசாசு பிடித்தவன் என்றும் கூறுகிறார்கள் - இதற்கு இயேசுவின் மறுப்புரை - (மத் 1:18; 3:16-17; லூக் 1:35; அப் 10:38)

யோவான் 8:48 அப்பொழுது யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: உன்னைச் சமாரியனென்றும், பிசாசு பிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே என்றார்கள்.

யோவான் 8:49 அதற்கு இயேசு: நான் பிசாசுபிடித்தவனல்ல, நான் என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன், நீங்கள் என்னைக் கனவீனம் பண்ணுகிறீர்கள்.

யோவான் 8:50 நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை; அதைத் தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார்.

யோவான் 8:51 ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"உன்னைச் சமாரியனென்றும், பிசாசு பிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே" - யூதருக்குச் சமாரியரைப் பிடிக்காது. யூதரைப் பொறுத்த அளவில், சமாரியர் என்பது ஒரு இழிவான வார்த்தை. அவர்கள் இயேசு கிறிஸ்துவை இழிவான வார்த்தையைக் கூறி அவமதிக்கிறார்கள்.

பிசாசு **(devil)** - δαιμόνιον - **daimonion** - 1140

யோவான் - தொகுப்புரை

8 அதிகாரம்

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிசாசு, பேய், அசுத்த ஆவி, அந்நிய தேவதை **(demon)** (மத் 12:24)

"நான் என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன்" - (யோவான் 8:28)

"ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை" - (யோவான் 3:16)

(13) இயேசுவின் மகிமையைப் பற்றிய விளக்கம் - (ஏசா 7:14; 9:6-7; யோவான் 1:1-2)

யோவான் 8:52 அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: நீ பிசாசு பிடித்தவனென்று இப்பொழுது அறிந்திருக்கிறோம்; ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள். நீயோ: ஒருவன் என் வார்த்தையைக் கைக் கொண்டால் என்றென்றைக்கும் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்கிறாய்.

யோவான் 8:53 எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரியவனோ? அவர் மரித்தார், தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; உன்னை நீ எப்படிப்பட்ட வனாக்குகிறாய் என்றார்கள்.

யோவான் 8:54 இயேசு பிரதியுத்தரமாக: என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும், என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர், அவரை உங்கள் தேவனென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.

யோவான் 8:55 ஆயினும் நீங்கள் அவரை அறியவில்லை, நான் அவரை அறிந்திருக்கிறேன்; அவரை அறியேன் என்று சொல்வேனாகில் உங்களைப் போல நானும் பொய்யனாயிருப்பேன்; அவரை நான் அறிந்து, அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டிருக்கிறேன்.

யோவான் 8:56 உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்.

"ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் என்றென்றைக்கும் மரணத்தை ருசிபார்ப்பதில்லை" - என்று இயேசு கிறிஸ்து கூறியதாக யூதர்கள் கூறுகிறார்கள். அவர் இரண்டாம் மரணமாகிய நித்திய மரணத்தைக் கூறுகிறார். ஆனால் இவர்களோ இயேசு கிறிஸ்துவின் வார்த்தையைப் புரட்டுகிறார்கள். யூதர்கள் சரீர மரணத்தையே சிந்தித்துப் பார்க்கிறார்கள். ஆபிரகாமும், தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள் என்று வரலாறு பேசுகிறார்கள். நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால் நாம் மரித்தாலும், அவர் சபையை எடுத்துக் கொள்ள வரும்போது நாம் மறுபடியும் உயிரோடு எழுந்திருப்போம். (எபி 9:27; 1கொரி 15:51-58).

"என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும்" - யூதர்கள் தங்களை மேன்மைப்படுத்த விரும்புகிறார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ தம்மைத் தாழ்த்துகிறார். சிலுவையின் மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்துகிறார். (2நாளா 25:19; சங் 49:6; சங் 94:4; சங் 97:7; ரோமர் 1:30)

"என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர்" - இயேசு கிறிஸ்துவின் மூலமாகத் தேவன் அற்புதங்களைச் செய்கிறார். இயேசு கிறிஸ்துவின் வசனங்களை அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். இதன் மூலமாகப் பிதா குமாரனை மகிமைப்படுத்துகிறார்.

"நீங்கள் அவரை அறியவில்லை, நான் அவரை அறிந்திருக்கிறேன்; அவரை அறியேன் என்று சொல்வேனாகில் உங்களைப் போல நானும் பொய்யனாயிருப்பேன்" - யூதர்கள் பொய்யர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தேவனை அறியவில்லை. என்றாலும் தாங்கள் தேவனை அறிந்திருப்பதாகக் கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்து பிதாவை அறிந்திருக்கிறார். அவருக்குக் கீழ்ப்படிகிறார்.
(யோவான் 8:39-56)

8 அதிகாரம்

களிகூர்ந்தான் (rejoiced) - ἀγαλλιάω - agalliaoo - 21

வினைச்சொல் - களிப்புடனிரு, மிகுந்த சந்தோஷமாயிரு, சந்தோஷத்தினால் குதி (rejoice exceedingly) (1பேதுரு 1:6,8; 1பேதுரு 4:13; லூக்கா 10:21).

காண் (see) - εἴδω - eidoo - 1492

வினைச்சொல் - காண், அறி, பார், தெரிந்திரு, நோக்கு, உணர், அறிந்திரு, விளங்கு

ஆபிரகாம் கண்ட காரியங்கள்

1. தேவனுடைய திட்டத்தைக் கண்டார். தமது ஜனங்களை மீட்பதற்காகத் தேவன் மேசியாவை அனுப்புவார். கானான் தேசத்தைத் தம்முடைய ஜனங்களுக்குத் தேவன் நித்திய சுதந்தரமாகக் கொடுப்பார். (ஆதி 12:1-3; ஆதி 17:1-22)

2. மேசியாவை இந்த உலகத்திற்கு மனுஷராக அனுப்புவது தேவனுடைய திட்டம் என்பதை ஆபிரகாம் கண்டார். (ரோமர் 4:13-22; ரோமர் 9:4-7; கலா 3:16)

3. திரித்துவத்தின் இரண்டாம் நபராகிய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை ஆபிரகாம் கண்டார். (ஆதி 18:1-8,19-20; ஆதி 19:24).

(14) ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே இயேசு இருக்கிறார் - (மீகா 5:2; யோவான் 1:1-2)

யோவான் 8:57 அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள்.

யோவான் 8:58 அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

"ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" - இயேசு கிறிஸ்து நித்தியமானவர். ஆபிரகாமிற்கு முன்பே இருந்தவர். இப்போதும் இருக்கிறவர். இனிமேலும் இருக்கிறப்போகிறவர். இந்த வசனத்தில் "நான் இருக்கிறேன்" (I am) என்பது தேவனுடைய நித்திய நாமங்களில் ஒன்றாகும். (யாத் 3:14-15; மீகா 5:1-2; யோவான் 1:1-2; யோவான் 8:24) இயேசு கிறிஸ்து தம்மை "நான் இருக்கிறேன்" என்று கூறியபோது அவர் தமது தெய்வத்துவத்தைப் பற்றிக் கூறுகிறார் என்று யூதர்கள் புரிந்து கொண்டார்கள்.

44. இயேசுவை கொல்வதற்கு சதியாலோசனை - (மத் 26:3)

யோவான் 8:59 அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள். இயேசு மறைந்து, அவர்கள் நடுவிலே கடந்து, தேவாலயத்தை விட்டுப்போனார்.

"அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள். இயேசு மறைந்து, அவர்கள் நடுவிலே கடந்து, தேவாலயத்தை விட்டுப்போனார்" - (யோவான் 8:40) இயேசு கிறிஸ்து தம்மை "நான் இருக்கிறேன்" என்று கூறி தேவனாக வெளிப்படுத்துகிறார். இது யூதருக்கு தேவதூஷணமாகத் தெரிகிறது. நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் தேவதூஷணம் சொல்லுகிறவனைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும். (லேவி 24:16) அவர்களுடைய கோபம் தணியட்டும் என்று இயேசு கிறிஸ்து சிறிது காலம் தேவாலயத்தை விட்டு அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் போனார்.

9 அதிகாரம்

45. பிறவிக்குருடன்

(1) இவன் குருடனாய் பிறந்தது யார் செய்த பாவம்

யோவான் 9:1 அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார்.

யோவான் 9:2 அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள்.

யோவான் 9:3 இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்.

"ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ" - பக்தியுள்ள ஆத்துமாக்கள் நன்மையைப் பெறும்படியாக மறுபடியும் பிறப்பார்கள் என்று யூதர்கள் நம்பினார்கள். தண்டனை பெறுவதற்காக அல்ல, நன்மையைப் பெறுவதற்காகவே மறுபடியும் பிறப்பார்கள். துன்மார்க்கரோ நித்திய ஆக்கினையை அடையும்படியாக காவலில் அடைக்கப்படுவார்கள் என்பது யூதருடைய நம்பிக்கை. ஆசியாவிலே, சில தேசங்களிலும் யூதர்களில் சிலரும், துன்மார்க்கர் தண்டனையை அனுபவிப்பதற்காக மறுபடியும் பிறப்பதாக நம்புகிறார்கள். இந்தப் பிறவியில் யாருக்காவது உடல் ஊனம் இருக்குமானால் அந்த நபர் அவருடைய முந்திய பிறவியில் பாவம் செய்திருக்கிறார் என்பது இதன் பொருள்.

சரீரத்தில் காணப்படும் அங்கவீன அடையாளங்கள் ஆத்துமாவில் காணப்படும் பாவத்தின் வெளிப்பாடு என்பது இவர்களுடைய நம்பிக்கை. சான்றாக, முந்திய பிறவியில் பெற்றோரை அவமதித்தோருக்கு இந்தப் பிறவியில் தலைவலி வரும். யாரையாவது முந்திய பிறவியில் விஷம் கொடுத்து கொன்றிருந்தால் இந்தப் பிறவியில் அவருக்கு காக்காய் வலிப்பு நோய் வரும். பிறருடைய மனைவியை இச்சித்தவருக்கு கண்களில் வேதனைகள் உண்டாகும். தாயைக் கொலைசெய்தவர் குருடராகப் பிறப்பார்கள் என்பது சிலருடைய நம்பிக்கை.

"அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல" - முந்திய பிறவி, முந்திய பிறவியில் செய்த பாவங்கள், பாவங்களுக்கு அடையாளமே அங்கவீனங்கள் ஆகிய கோட்பாடுகளை இயேசு கிறிஸ்து ஏற்றுக் கொள்ளவில்லை. இவற்றிற்கு வேத வாக்கியத்தின் பிரகாரம் எந்த ஆதாரமும் இல்லை. ஒரு நபர் சரீரப்பிரகாரமாக மரித்த பின்பு, மறுபடியுமாகப் பூமியில் வந்து, குழந்தையாகப் பிறப்பதில்லை. மனுஷனுடைய பாவத்தினாலும், சாத்தானுடைய வல்லமையினாலும் வியாதியும், வேதனைகளும் வருவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. (எபே 2:1-3; லூக்கா 13:16; அப் 10:38) அதே வேளையில் சரீரத்தைப் பேணாமல், சரியான உணவு உட்கொள்ளாமல், போதுமான அளவு ஓய்வு எடுத்துக் கொள்ளாமல், தாறுமாறாக ஜீவிப்போருக்குச் சரீரத்தில் பலவீனங்களும், நோய்களும் வருவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

"தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" - இங்கு பிறவிக் குருடனைக் குறித்து வாசிக்கிறோம். இவன் குருடனாகப் பிறந்தது இவன் செய்த பாவத்தினாலுமல்ல. இவனைப் பெற்றவர்களுடைய பாவத்தினாலுமல்ல என்று இயேசு கிறிஸ்து தெளிவாகக் கூறுகிறார். இவன் பார்வையடைவதன் மூலமாக தேவனுடைய கிரியைகள் இவன் மூலமாக வெளிப்படப் போகிறது. அதுமட்டுமல்ல, இவன் குருடனாகப் பிறந்திருப்பதற்குத் தேவனும் காரணமல்ல. தேவன் நோய்களைக் குணப்படுத்துகிறவர். சாத்தான் நோய்களை உண்டுபண்ணுகிறவன். (மத் 12:22; அப் 10:38; யோவான் 10:10; 1யோவான் 3:8)

யோவான் - தொகுப்புரை

9 அதிகாரம்

(2) இயேசு பிறவிக்குருடனை சொஸ்தமாக்குகிறார்

யோவான் 9:4 பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.

யோவான் 9:5 நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்.

யோவான் 9:6 இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி:

யோவான் 9:7 நீ போய், ஸிலோவாம் குளத்திலே கழுவு என்றார். ஸிலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பி வந்தான்.

"ஸிலோவாம் குளம்" - எசேக்கியா ராஜா இதைக் கட்டினான். (2இராஜா 20:20)

குளம் (pool) - κολυμβήθρα - kolymbeethra - 2861

பெண்பால் பெயர்ச்சொல் - குளம் - குளிப்பதற்கு ஏற்ற குளம். (யோவான் 5:2,4,7; யோவான் 9:7).

(3) குருடனும் அயலகத்தாரும் -

யோவான் 9:8 அப்பொழுது அயலகத்தாரும், அவன் குருடனாயிருக்கையில் அவனைக் கண்டிருந்தவர்களும்: இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தவனல்லவா என்றார்கள்.

யோவான் 9:9 சிலர்: அவன்தான் என்றார்கள். வேறு சிலர்: அவனுடைய சாயலாயிருக்கிறான் என்றார்கள். அவனோ: நான்தான் அவன் என்றான்.

யோவான் 9:10 அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது என்றார்கள்.

யோவான் 9:11 அவன் பிரதியுத்தரமாக: இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் ஸிலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன் என்றான்.

யோவான் 9:12 அப்பொழுது அவர்கள்: அவர் எங்கே என்றார்கள். அவன்: எனக்குத் தெரியாது என்றான்.

"இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் ஸிலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன்" - இயேசு இவ்வளவு காரியங்களையும் ஏன் செய்தார் என்பது இங்கு விளக்கப்படவில்லை. இதோ ஒரு தெய்வீகக் காரணத்திற்காகவே இயேசு கிறிஸ்து இந்தக் காரியங்களையெல்லாம் செய்திருக்க வேண்டும்.

(4) குருடனும் பரிசேயரும்

யோவான் 9:13 குருடனாயிருந்த அவனைப் பரிசேயரிடத்திற் குக் கொண்டுபோனார்கள்.

யோவான் 9:14 இயேசு சேறுண்டாக்கி, அவன் கண்களைத் திறந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது.

யோவான் 9:15 ஆகையால் பரிசேயரும் அவனை நோக்கி: நீ எப்படிப் பார்வையடைந்தாய் என்று மறுபடியும் கேட்டார்கள். அதற்கு அவன்: அவர் என் கண்களின்மேல் சேற்றைப் பூசினார், நான் கழுவினேன், காண்கிறேன் என்றான்.

யோவான் - தொகுப்புரை

9 அதிகாரம்

யோவான் 9:16 அப்பொழுது பரிசேயரில் சிலர்: அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக் கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். வேறுசிலர்: பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான் என்றார்கள். இவ்விதமாய் அவர்களுக்குள்ளே பிரிவினை உண்டாயிற்று.

யோவான் 9:17 மறுபடியும் அவர்கள் குருடனை நோக்கி: உன் கண்களைத் திறந்தானே, அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்றார்கள். அதற்கு அவன்: அவர் தீர்க்கதரிசி என்றான்.

"இயேசு சேறுண்டாக்கி, அவன் கண்களைத் திறந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது" - யூதமார்க்கத்துப் பாரம்பரியத்தின் பிரகாரம், ஓய்வுநாளில் வேலை செய்வது குற்றம். இயேசு கிறிஸ்து ஓய்வுநாளில் குருடனுடைய கண்களைத் திறந்தது, பரிசேயருடைய பார்வைக்கு மிகப்பெரிய குற்றமாகத் தெரிந்தது. ஒரு பள்ளத்தில் விழுந்த மிருகத்தை ஓய்வுநாளில் தூக்கிவிடுவது தவறல்ல. ஆனால் நரகத்தில் வீழ்ந்திருக்கும் மனுஷனைத் தூக்கிவிடுவது அவர்களுடைய பாரம்பரியத்தின்படி குற்றம்.

"அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக் கொள்ளாததினால் அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல" - ஒரு மனுஷன் தேவனிடத்திலிருந்து வந்தவனா, இல்லையா என்பதை அவன் ஓய்வுநாளைக் கைக் கொள்ளுகிறானா, இல்லையா என்பதை வைத்து பரிசேயர்கள் தீர்மானம் பண்ணுகிறார்கள். மற்றவர்கள் முன்பாக தான் ஒரு பக்திமான் என்று நடித்துக் காண்பிப்போரை தேவன் அங்கீகரிப்பதில்லை. இருதயத்தில் பயபக்தியும், தாழ்மையும் உள்ளவர்களையே தேவன் அங்கீகரிக்கிறார்.

"பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்களை எப்படிச் செய்வான்" - பிறவிக் குருடன் பரிசேயர்கள் மத்தியில் இருந்தான். பரிசேயர்களால் அவனைக் குணப்படுத்த முடியவில்லை. குருடனைக் குணப்படுத்துவது தேவனுடைய கிரியை. தேவனுடைய மனுஷரால் மட்டுமே இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய முடியும்.

"உன் கண்களைத் திறந்தானே, அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய்" - என்று பரிசேயர்கள் குருடனிடம் கேட்டார்கள். மார்க்கத் தலைவர்களைவிட கண் திறக்கப்பட்ட குருடன் அதிக புத்திமானாயிருக்கிறான். இவனுக்கு இயேசு கிறிஸ்து ஒரே ஒரு அற்புதம்தான் செய்தார். சிறிது நேரம்தான் இவன் இயேசுவைக் கண்டான். ஆனாலும் இயேசுகிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசி என்று கண்டு கொண்டான்.

(5) குருடனின் பெற்றோரும் யூதரும்

யோவான் 9:18 அவன் குருடனாயிருந்து பார்வையடைந்ததை யூதர்கள் நம்பாமல், பார்வையடைந்தவனுடைய தாய் தகப்பன்மாரை அழைப்பித்து,

யோவான் 9:19 அவர்களை நோக்கி: உங்கள் குமாரன் குருடனாய்ப் பிறந்தான் என்று சொல்லுகிறீர்களே, அவன் இவன்தானா? இவனானால், இப்பொழுது இவன் எப்படிப் பார்வையடைந்தான் என்று கேட்டார்கள்.

யோவான் 9:20 தாய்தகப்பன்மார் பிரதியுத்தரமாக: இவன் எங்கள் குமாரன்தான் என்றும், குருடனாய்ப் பிறந்தான் என்றும் எங்களுக்குத் தெரியும்.

யோவான் 9:21 இப்பொழுது இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது; இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்பதும் எங்களுக்குத் தெரியாது; இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனைக் கேளுங்கள், இவனே சொல்லுவான் என்றார்கள்.

9 அதிகாரம்

யோவான் 9:22 அவனுடைய தாய்தப்பன்மார் யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள். ஏனெனில் இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்கு முன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள்.

யோவான் 9:23 அதினிமித்தம்: இவன் வயதுள்ளவனாயிருக்கிறான், இவனையே கேளுங்கள் என்று அவன் தாய் தகப்பன்மார் சொன்னார்கள்.

"அவன் குருடனாயிருந்து பார்வையடைந்ததை யூதர்கள் நம்பவில்லை" - குருடன் பார்வையடைந்தான். ஆனால் பரிசேயர்களோ இன்னும் குருடராக இருக்கிறார்கள். பார்வையுள்ளவனைக் குருடனாகக் காண்கிறார்கள். தாங்கள் காணும் காரியங்களை அவர்களால் நம்பவே முடியவில்லை. இயேசு கிறிஸ்துவை ஒரு தீர்க்கதரிசி என்றுகூட அவர்களால் நம்ப முடியவில்லை. ஏனெனில் ஓய்வுநாளில் இயேசு கிறிஸ்து பிறவிக் குருடனுடைய கண்களைத் திறந்ததினால் அவர் தேவனுடைய பிரமாணத்திற்கு எதிராகக் கிரியைகளைச் செய்வதாக நினைத்தார்கள்.

"அவனுடைய தாய்தப்பன்மார் யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச் சொன்னார்கள். ஏனெனில் இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்குமுன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள்" - இயேசு கிறிஸ்துவை மேசியா என்று யாராவது அறிக்கையிட்டால் அவர்கள் ஜெபாலயத்திலிருந்து புறம்பே தள்ளப்படுவார்கள். ஜெபாலயத்தோடு அவர்கள் எந்தவிதத் தொடர்பும் வைத்துக் கொள்ள முடியாது. கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு எதிராக இயற்றப்பட்ட புதிய பிரமாணம். ஆகையினால் கிறிஸ்தவ விசுவாசிகள் ஜெபாலயங்களில் அங்கத்தினர்களாக இருக்க முடியாமல் தங்களுக்கென்று சபை கூடுதலை நியமித்துக் கொண்டார்கள்.

(6) குருடனும் பரிசேயரும்

யோவான் 9:24 ஆதலால் அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந் தரம் அழைத்து: நீ தேவனை மகிமைப்படுத்து; இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்றார்கள்.

யோவான் 9:25 அவன் பிரதியுத்தரமாக: அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்றான்.

யோவான் 9:26 அவர்கள் மறுபடியும் அவனை நோக்கி: உனக்கு என்ன செய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள்.

யோவான் 9:27 அவன் பிரதியுத்தரமாக: முன்னமே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ என்றான்.

யோவான் 9:28 அப்பொழுது அவர்கள் அவனைவைது: நீ அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர்.

யோவான் 9:29 மோசேயுடன் தேவன் பேசினாரென்று அறிவோம், இவன் எங்கேயிருந்து வந்தவனென்று அறியோம் என்றார்கள்.

யோவான் 9:30 அதற்கு அந்த மனுஷன்: அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கேயிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம்.

யோவான் 9:31 பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லை என்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்.

யோவான் 9:32 பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே.

9 அதிகாரம்

யோவான் 9:33 அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான்.

யோவான் 9:34 அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று சொல்லி, அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள்.

"நீ தேவனை மகிமைப்படுத்து" - என்று பரிசேயர்கள் குருடனாயிருந்த மனுஷனிடம் கூறுகிறார்கள். இந்த வாக்கியம் ஆணையிடும் போது கூறப்பட வேண்டியதாகும். தேவனை மகிமைப்படுத்து என்பது தேவன் பேரில் ஆணையிடு என்று கூறுவதற்குச் சமம். (யோசுவா 7:19) குருடனாய் இருந்த மனுஷனை தேவன் பேரில் ஆணையிட வைக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை பாவியென்று பரிசேயர்கள் அறிவித்தார்கள். அதே வாக்கியத்தை இந்த மனுஷனும் தன்னுடைய வாயினால் கூற வேண்டுமென்று முயற்சி பண்ணினார்கள். ஆனால் குருடனாயிருந்த மனுஷனோ மிகவும் ஞானமாகப் பதில் கூறுகிறான். "அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்". (யோவான் 9:25)

"அவர்கள் மறுபடியும் அவனை நோக்கி: உனக்கு என்னசெய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள்" - மூன்றாம் முறையாக பரிசேயர்கள் குருடனாயிருந்த மனுஷனைப் பார்த்து, அவன் எப்படிப் பார்வையடைந்தான் என்று கேட்கிறார்கள். (யோவான் 9:10,15,26). பரிசேயரிடம் இந்த மனுஷன் மட்டுமே பயமில்லாமல் தைரியமாகப் பேசுகிறான். (யோவான் 9:27) இதனால் மார்க்கத்தலைவர்கள் அவன்மீது கோபம் கொண்டு, அவனை ஜெபாலயத்திலிருந்து புறம்பே தள்ளி விடுகிறார்கள். (யோவான் 9:28-34).

வைதல் (reviled) - **λοιδορέω** - **loidoreoo** - 3058

வினைச்சொல் - வைதல், வையப்படு **(vilify, rail at; to rebuke, to abuse by words)** (நீதி 12:18, அப் 23:4; 2கொரி. 4:12; 1பேதுரு 2:23)

"மோசேயுடன் தேவன் பேசினாரென்று அறிவோம், இவன் எங்கேயிருந்து வந்தவனென்று அறியோம்" - முதல் முறையாக பரிசேயர்கள் சத்தியத்தைப் பேசுகிறார்கள். இயேசு கிறிஸ்து எங்கேயிருந்து வந்தார் என்பது தங்களுக்குத் தெரியாது என்று அறிவிக்கிறார்கள். அதுவரையிலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி, எல்லாந் தெரிந்ததாகக் கூறி வந்தார்கள். யோசேப்பின் குமாரன் என்றும், தேவனுடைய குமாரன் அல்ல என்றும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி இதுவரையிலும் கூறி வந்தார்கள். (மத் 13:55; மாற்கு 6:3; யோவான் 6:42; யோவான் 7:27, 52)

"பாவிகளுக்கு தேவன் செவி கொடுக்கிறதில்லை என்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்" - இந்த வாக்கியத்தை தேவன் கூறியதாக நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. இது யூதருடைய பாரம்பரிய நம்பிக்கை. பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று யூதர்கள் நம்பினார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ பாவிகளைத் தேடிவந்தவர். பாவிகளுக்கு அவர் செவிகொடுக்கிறார். இந்த இடத்தில் இவன் கூறியது இந்தச் சூழ்நிலைக்கு மட்டுமே பொருந்தும். குருடனுடைய கண்களைத் திறப்பதற்கு தேவன் பாவிகளைப் பயன்படுத்தமாட்டார். இயேசு கிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்தவர். இல்லையென்றால் அவரால் தன்னைக் குணமாக்கியிருக்க முடியாது என்று குருடனாக இருந்தவன் சாட்சிக் கூறுகிறான். (யோவான் 9:31-34). இந்த வாக்கியத்திற்கு இப்படித்தான் வியாக்கியானம் பண்ண வேண்டுமே தவிர, பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லை என்று தீர்மானம் பண்ணிவிடக்கூடாது. தேவன் பாவிகளுடைய ஜெபத்தைக் கேட்பார். எப்போதும் கேட்பார். வேதாகமத்திலே பாவிகளுடைய ஜெபத்தைத் தேவன் கேட்டதற்கு பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.

யோவான் - தொகுப்புரை

9 அதிகாரம்

பாவிகளுடைய ஜெபங்களைத் தேவன் கேட்டதற்கு எடுத்துக்காட்டுக்கள்

1. ஆசீர்வாதத்திற்காக யாக்கோபின் ஜெபம் (ஆதி 28)
2. விடுதலைக்காக இஸ்ரவேல் ஜனங்களின் ஜெபம் (நியா 3:9,15; நியா 6:7-10; நியா 10:6-18; நியா 20:18-28)
3. இரக்கத்திற்காக ஆகாபின் ஜெபம் (1இராஜா 21:25-29)
4. இரக்கத்திற்காக மனாசேயின் ஜெபம் (2நாளா 33:9-13)
5. பாவமன்னிப்பிற்காக பாவமான ஸ்திரீயின் ஜெபம் (லூக்கா 7:36-50)
6. பாவமன்னிப்பிற்காக ஆயக்காரனின் ஜெபம் (லூக்கா 18:9-14)
7. குணமடைவதற்காக ராஜாவின் மனுஷனின்ஜெபம்(யோவான் 4:49-53)
8. இரட்சிப்பிற்காக கொர்நேலியு, அவன் வீட்டார் ஆகியோரின் ஜெபம். (அப் 10:1-6= அப் 11:14-18; அப் 15:7-13)

பாவிகள் ஜெபம் பண்ணும் பொழுது, அவர்கள் மனந்திருந்தினால், தேவன் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார். இந்த வாக்குத்தத்தத்தைத் தவிர வேறு எதையும் தேவன் அவர்களுக்கு வாக்குபண்ணவில்லை. (1யோவான் 1:9) இதுதவிர, தேவன் பாவிகளின் ஜெபத்தைக் கேட்டு, அவர்களை ஆசீர்வதித்தால் அது தேவனுக்குப் பிரியமான, அவருக்குச் சித்தமான காரியம்.

"முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று சொல்லி, அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள்" - இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் அதற்கு முன்னமே கட்டுப்பாடு செய்திருந்தார்கள். (யோவான் 9:22) குருடனாயிருந்த மனுஷன் உண்மையைப் பேசினான். சத்தியத்திற்குச் சாட்சி கொடுத்தான். அங்கு உண்மை எடுபடவில்லை. அவனை ஜெபாலயத்திலிருந்து புறம்பே தள்ளி விட்டார்கள்.

ஜெபாலயத்திலிருந்து ஒருவனைப் புறம்பே தள்ளுவது மூன்று விதமாக இருக்கும். அவையாவன:

1. நித்தின் **(niddin)** - முப்பது நாட்களுக்கு ஜெபாலயத்திலிருந்து புறம்பே தள்ளுதல். ஜெபாலய ஆராதனைகளில் இந்த முப்பது நாட்களும் அவன் பங்குபெறக்கூடாது. தன்னுடைய தலை முடியையோ, தாடியையோ சவரம் பண்ணக்கூடாது. துக்க வஸ்திரம் தரித்திருக்க வேண்டும்.

2. செரெம் **(cherem)** - தொடர்ந்து கலகம் பண்ணுவோரை இந்த அடிப்படையில் ஜெபாலயத்திலிருந்து புறம்பே தள்ளுவார்கள். அவனைச் சபித்து, யூத ஜனங்களோடு எந்த சம்மந்தமும் கலக்கக்கூடாது தடை பண்ணி விடுவார்கள். தேவாலயத்திற்குள்ளோ, ஜெபாலயத்திற்குள்ளோ வருவதற்கு அவனுக்குத் தடை பண்ணப்பட்டிருக்கும்.

3. ஷம்மதா **(shammatha)** - தொடர்ந்து கலகம் பண்ணுவோருக்கு இந்தத் தண்டனை வழங்கப்படும். யூதஜனங்களோடு எந்தவிதத் தொடர்பும் வைத்துக் கொள்ள முடியாதவாறு அவன் விலக்கி வைக்கப்பட்டிருப்பான். இது மிகவும் கடுமையான தண்டனையாகும்.

(7) இயேசுவும் குணமாக்கப்பட்ட மனுஷனும்

யோவான் 9:35 அவனை அவர்கள் புறம்பே தள்ளி விட்டதை இயேசு கேள்விப்பட்டு, அவனைக் கண்டபோது: நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார்.

9 அதிகாரம்

யோவான் 9:36 அதற்கு அவன்: ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார் என்றான்.

யோவான் 9:37 இயேசு அவனை நோக்கி: நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார்.

யோவான் 9:38 உடனே அவன்: ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டான்.

46. தேவாலயத்தில் உபதேசம்

(1) இயேசுவின் ஊழியம் - (மத் 5:17; 10:34; 20:28; லூக் 4:18; 12:49; 19:10; யோவான் 10:10,16; 12:46; அப் 10:38; தீத்து 2:14; எபி 4:14; 1பேதுரு 3:18; 1யோவான் 3:5-8)

யோவான் 9:39 அப்பொழுது இயேசு: காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும் படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார்.

"காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்" - என்று இயேசு கிறிஸ்து கூறினார். அவருடைய வருகையின் விளைவை இது குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு உண்டு. அவருடைய வருகையின் நோக்கத்தை யோவான் 12:47 கூறுகிறது. மனுஷரை இரட்சிப்பதற்கே அவர் வந்தார். ஒருவன் இயேசு கிறிஸ்து கொடுக்கும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளவில்லையென்றால் இறுதியில் அவன் நியாயத்தீர்ப்பைப் பெறுவான். (மத் 13:14-16, யோவான் 3:16-20)

(2) பரிசேயரின் கேள்வியும் இயேசுவின் பதிலும்

யோவான் 9:40 அவருடனேகூட இருந்த பரிசேயரில் சிலர் இவைகளைக் கேட்டபொழுது: நாங்களும் குருடரோ என்றார்கள்.

யோவான் 9:41 இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிற படியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது என்றார்.

"நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது" - என்று இயேசு கிறிஸ்து பரிசேயரிடம் கூறுகிறார். அவர்கள் அறியாமல் தவறு செய்தால் ஒருவேளை மன்னிக்கப்படலாம். ஆனால் பரிசேயரோ அறிந்தும் தவறு செய்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விரோதத்தினாலே அவரை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிக்கிறார்கள். ஆகையினால் அவர்களுடைய பாவம் நிலைநிற்கிறது.

10 அதிகாரம்

(3) நல்ல மேய்ப்பனைப் பற்றிய உவமை - *(சங் 23; எபி 13:20)*

யோவான் 10:1 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக் காரனுமாயிருக்கிறான்.

யோவான் 10:2 வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்.

யோவான் 10:3 வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகிறான்.

யோவான் 10:4 அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்து போகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்கு பின்செல்கிறது.

யோவான் 10:5 அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின் செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்.

யோவான் 10:6 இந்த உவமையை இயேசு அவர்களுடனே சொன்னார்; அவர்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை.

"மெய்யாகவே மெய்யாகவே" - *(யோவான் 1:51)*

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" - இயேசு கிறிஸ்து 135 இடங்களில் இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறார். புதிய ஏற்பாட்டில் மற்றவர்கள் இரண்டு இடங்களில் இந்த வாக்கியத்தைப் பயன் படுத்தியிருக்கிறார்கள். *(லூக்கா 3:8; அப் 5:38)* இயேசு கிறிஸ்து இந்த வாக்கியத்தைக் கூறும்போது, அவர் தமது அதிகாரத்தை உறுதிபண்ணுகிறார். அப் 5:38 ஆவது வசனத்தில் உள்ளது ஒரு ஆலோசனையாகும்.

"ஆட்டுத்தொழுவம்" - ஆடுகளை இரவு வேளைகளில் தங்க வைக்கும் இடம். மிருகங்களிடமிருந்து பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கு ஆடுகளைத் தொழுவங்களில் அடைத்து வைப்பார்கள். தொழுவத்திற்கு ஒரு பாதுகாப்பான வாசலும் இருக்கும். *(எண் 32:16-36; 1சாமு 24:3; 2நாளா 32:28; சங் 78:70)*.

கள்ளன் **(thief)** - **κλέπτης** - **kleptees** - 2812

ஆண்பால் பெயர்ச்சொல் - திருடன், கள்ளன் - *(மத் 6:19; மத் 24:43; லூக்கா 12:33,39; யோவான் 10:1, 10; 1கொரி 6:10; 1பேதுரு 4:15)*; திருடன் **(a pilferer)** *(யோவான் 12:6)* இந்த வசனத்தில் கள்ளன் என்பது கள்ளப் போதகர்களைக் குறிக்கும். இவர்கள் மனுஷருக்கு உபதேசம் பண்ணுவதில் கவனம் செலுத்தாமல் தங்களுடைய ஆதாயத்திற்காக மற்றவர்களைக் குறைகூறுவார்கள். தேவையில்லாமல் சபிப்பார்கள்.

கொள்ளைக்காரன் **(robber)** - **λῃστής** - **leestees** - 3027

ஆண்பால் பெயர்ச்சொல் - கள்ளர், கொள்ளைக்காரன் - பலாத்காரமாகத் திருடுகிறவன். *(யோவான் 10:8; யோவான் 18:40; 2கொரி 11:26)* திருடன் **(thief)** என்று சில வசனங்களில் தவறுதலாக மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. *(மத் 21:13; மத் 26:55; மத் 27:38,44; மாற்கு 11:17; மாற்கு 14:48; மாற்கு 15:27; லூக்கா 10:30,36; லூக்கா 19:46; லூக்கா 22:52)*

10 அதிகாரம்

நல்ல மேய்ப்பரின் குணநலன்கள்

1. தனிநபர் ஞானம் - தேவனையும், அவருடைய வார்த்தையையும் நன்றாக அறிந்திருப்பார். (யோவான் 10:5; 2கொரி 5:17; யோவான் 3:5; கலா 5:16-26; 1கொரி 12)

2. தெய்வீக அழைப்பு - சுய மகிமைக்காகவோ, உலக லாபத்திற்காகவோ ஊழியம் செய்யாமல் தெய்வீக அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து, ஊழியம் செய்கிறார். (யோவான் 10:2; அப் 13:3; 1கொரி 12:28; எபே 4:11; ரோமர் 11:29)

3. பிரதிஷ்டை - தேவனுடைய சித்தம், தேவனுடைய மகிமை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஊழியம் செய்வார். காணாமல்போன ஆத்துமாக்களிடத்தில் கரிசனையோடு இருந்து, சபையின் நன்மைக்காக ஊழியம் செய்வார். (யோவான் 10:9-13; லூக்கா 19:10; அப் 10:28; 2கொரி 5:14-21; எபே 4:12)

4. தெய்வீக அபிஷேகம் - தன்னுடைய கல்வி, ஞானம், முயற்சி, திறமை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் தராமல் தெய்வீக வழிநடத்துதலையும், உதவியையும் எதிர்பார்த்து ஊழியம் செய்வார். (லூக்கா 11:13; லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான்14:12-17,26;யோவான் 15:26; அப் 1:4-8; அப் 5:32; 1கொரி 2:1-10; 1கொரி 12:1-11; 2கொரி 3)

5. ஆர்வம் - தன்னிடத்தில் பொறுப்பாக ஒப்படைக்கப் பட்டிருக்கும் ஆத்துமாவிற்கு உத்திரவாதம் கொடுப்பார். அவர்களை அன்போடு நேசித்துப் பராமரிப்பார். அவர்களுடைய பிரச்சனைகளைக் கரிசனையோடு கவனித்துக் கேட்பார். (யோவான் 10:3,9; அப் 20:26-35; எபே 1:15-19; எபே 3:13-21; 1தெச 2:4-13; 2தீமோ 4:1-5; எபி 13:7,17)

6. நல்ல முன்மாதிரி - ஆத்துமாக்களை வழிநடத்துவார். துரத்திவிடமாட்டார். ஆத்துமாக்களுக்குப் போஜனம் கொடுப்பா ர்.ஆத்துமாக்களை அழித்துவிட மாட்டார். தான் உபதேசித்த பிரகாரம் ஜீவிப்பார். (யோவான் 10:3-4; 1கொரி 4:9-13; 2கொரி 4:8-18; 2கொரி 6:1-10; தீமோ 3:1-13; 1தீமோ 4:11-16; 2தீமோ 2; தீத்து 1)

7. தெய்வீக வெற்றி - வைராக்கியத்தோடும், பயமில்லாமலும் ஊழியம் செய்வார். தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஆத்துமாக்களைப் பாதுகாத்துப் பராமரிப்பார். அவர்களுக்காக தியாகம் பண்ணுவார். அவர்களைச் சந்தித்து அவர்களுடைய தேவைகளை அறிந்து அவர்களுக்கு உதவி புரிவார். (யோவான் 10:9-18; மாற்கு 16:17-18; யாக் 5:14-16; லூக்கா 19:10; எரே 23:1-8; எசே 13:1-9; எசே 34)

"வாசலைக் காக்கிறவன்" - ஆட்டுத் தொழுவத்தில் ஒரு வாசல் இருக்கும். அதைக் காக்கிறவன் ஒருவன் இருப்பான். காலைவேளையில் அவன் தொழுவத்தின் வாசலைத் திறந்துவிட்டு, ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்புவான். அதுபோலவே மாலை வேளையில் மேய்ந்துவிட்டுத் திரும்ப வரும் ஆடுகளைத் தொழுவத்திற்குள் அடைத்து, ஆடுகளைப் பாதுகாத்துக் கொள்வான்.

"அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான்" - கிழக்குத் தேசங்களில் ஆடுகளை மேய்க்கிறவன் ஒவ்வொரு ஆட்டையும் பேர்சொல்லி அழைப்பான். ஆடுகளும் தங்களுடைய பெயரைத் தெரிந்திருக்கும். கூப்பிடுகிறவனுடைய சத்தத்தையும் அறிந்து கொள்ளும். தன் பெயரைச் சொல்லிக் கூப்பிடும்போது அந்த ஆடு மேய்ப்பனிடம் வரும். ஆடுகள் மொத்தமாக இருந்தாலும், மேய்ப்பன் தனித்தனியே ஆடுகளின் பெயரைச் சொல்லிக் கூப்பிடும்போது அது தனித்தனியாக வரும்.

10 அதிகாரம்

"அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான்" - கிழக்குத் தேசங்களில் ஆடுகளை மேய்க்கிறவன் ஆடுகளுக்கு முன்பாக நடந்துபோவான். புல்லுள்ள இடங்கள், தண்ணீர் தடாகம் ஆகியவற்றைக் கண்டுபிடித்து, அங்கு தன்னுடைய ஆடுகளை வழிநடத்திச் செல்லுவான்.

"ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிற படியினால் அவனுக்கு பின்செல்கிறது" - ஆடுகள் எப்போதும் தங்கள் மேய்ப்பனின் பின்னாலேயே செல்லும். அந்நியரின் சத்தத்திற்குச் செவிகொடுக்காது.

"உவமை" **(wayside saying; proverb; a saying deviating from the usual manner of speaking)** - இதற்கான கிரேக்க வார்த்தை "பரோமியா" **(paroimia)** என்பதாகும். இதற்கு இணையான மற்றொரு வார்த்தை "பழமொழி". இதன் கிரேக்கச் சொல் "பாரபோலே" **(parabolee)** என்பதாகும். இந்தக் கிரேக்கச் சொல் யோவான் சுவிசேஷத்தில் பயன்படுத்தப்படவில்லை. இந்த வசனத்திலும் யோவான் 16:25,29; 2பேதுரு 2:22 ஆகிய வசனங்களிலும் "பரோமியா" **(paroimia)** என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. யோவான் 10:1-6 ஆகிய வசனங்கள் உவமையின் விரிவாக்கம். யோவான் 10:7-30 ஆகிய வசனங்கள் உபதேசம் பண்ணப் பட்டிருக்கும் சத்தியமாகும்.

உவமை **(parable)** - **παροιμία** - **paroimia** - 3942

பெண்பால் பெயர்ச்சொல் - உவமை, பழமொழி

பழமொழி **(proverb)** - **παραβολή** - **parabolee** - 3850

பெண்பால் பெயர்ச்சொல் - உவமை, ஒப்பனை, பழமொழி, பாவனை

இயேசு கிறிஸ்து உவமையாகக் கூறிய காரியங்கள்

1. நானே ஆடுகளுக்கு வாசல் (யோவான் 10:7,9; யோவான் 6:35).
2. எனக்கு முன்னே வந்து தங்களை மேசியா என்று சொல்லிக் கொண்டவர்கள் எல்லோரும் கள்ளரும், கொள்ளைக் காரருமாயிருக்கிறார்கள். (யோவான் 10:8).
3. நானே இரட்சிப்பின் வாசல் (யோவான்10:9; யோவான் 3:15-20,36; யோவான் 5:24; யோவான் 14:6).
4. என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான். (யோவான் 10:9; யோவான் 8:32)
5. பிசாசு திருடவும், (லூக்கா 8:12), கொல்லவும் **(kill)** (எபி 2:14), அழிக்கவும் **(destroy)** (யோவான் 10:10; மாற்கு 9:22; லூக்கா 13:16; அப் 10:38; யோபு 2:7) வருகிறான்.
6. நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10; மத் 4:23; மத் 8:17; லூக்கா 4:18; லூக்கா 10:38; 1பேதுரு 2:24; எபி 2:14; ஏசா 53).
7. நானே நல்ல மேய்ப்பன். பிரதான மேய்ப்பன், மேய்ப்பர்களுக்குத் தலைவன். (யோவான் 10:11,14; 1பேதுரு 5:4; எபி 13:20). கிறிஸ்து சபையின் தலையாக இருக்கிறார். (எபே 1:20-23; எபே 5:25-31; கொலோ 1:18,24), இயேசு கிறிஸ்து சகல அதிகாரத்திற்கும், வல்லமைக்கும் தலைவராக இருக்கிறார். (கொலோ 2:10; 1பேதுரு 3:22).
8. நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். அவை மரிக்க வேண்டிய இடத்தில் தாம் மரித்து, அவற்றை இரட்சிக்கிறார். (யோவான் 10:11,15,17-18; ஏசா 53; 1பேதுரு 2:24).

10 அதிகாரம்

9. கூலிக்கு அமர்த்தப்பட்ட மேய்ப்பர்கள் ஆபத்து வரும்போது, ஆடுகளைப் பாதுகாக்காமல், விட்டு, ஓடிப்போய் விடுவார்கள். ஆடுகள் மரணத்திற்கும், அழிவிற்கும், பிரிவிற்கும் நேராகக் கடந்து செல்லும். (யோவான் 10:12-13; அப் 20:28-31; ரோமர் 16:17; 2கொரி 11:14-15; 1தீமோ 4; 2தீமோ 4).

10. நான் என்னுடையவைகளை அறிந்தும், என்னுடையவைகளால் அறியப்பட்டும் இருக்கிறேன். (யோவான் 10:14,27; யோவான் 17:1-3).

11. நான் பிதாவை அறிந்திருக்கிறேன். பிதா என்னை அறிந்திருக்கிறார். (யோவான் 10:15; யோவான் 7:29; யோவான் 8:55).

12. இந்தத் தொழுவத்திலுள்ளவைகள் அல்லாமல் (யூதர்கள்) வேறே ஆடுகளும் (புறஜாதியார்) எனக்கு உண்டு. அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். (யோவான் 10:16; ரோமர் 10:12; 1கொரி 12:13; கலா 3:28; எபே 1:10; எபே 2:11-22; எபே 3:6-15).

13. நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிற படியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். (யோவான் 10:17; 1பேதுரு 2:24; கொலோ 2:20).

14. ஒருவனும் என் ஜீவனை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன். (யோவான் 10:18; யோவான்19:11; ஏசா 53:7).

15. நான் உயிர்த்தெழுவேன். (யோவான் 10: 17-18; 1கொரி 15; மத் 28).

16. என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன். அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை. (யோவான் 10:25-29; மத் 19:27-30; மாற்கு 10:28-31; லூக்கா 9:23; லூக்கா 18:28-30; கலா 6:7-8; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13).

(4) நல்ல மேய்ப்பனைப் பற்றிய உவமையின் விளக்கம் -

யோவான் 10:7 ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 10:8 எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள்; ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை.

யோவான் 10:9 நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்.

யோவான் 10:10 திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.

யோவான் 10:11 நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.

யோவான் 10:12 மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்.

10 அதிகாரம்

யோவான் 10:13 கூலியாள் கூலிக்காக வேலை செய்கிற வனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்.

யோவான் 10:14 நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறது போலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்,

யோவான் 10:15 நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டு மிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்.

யோவான் 10:16 இந்தத் தொழுவத்திலுள்ளவைகள் அல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.

யோவான் 10:17 நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்.

யோவான் 10:18 ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள மாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக் கொண்டேன் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 22

"நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" (யோவான் 10:14-18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

(5) யூதர்களுக்குள் பிரிவினை - (யோவான் 7:12,30,40)

யோவான் 10:19 இந்த வசனங்களினிமித்தம் யூதருக்குள்ளே மறுபடியும் பிரிவினையுண்டாயிற்று.

யோவான் 10:20 அவர்களில் அநேகர்: இவன் பிசாசு பிடித்தவன், பயித்தியக்காரன்; ஏன் இவனுக்குச் செவிகொடுக்கிறீர்கள் என்றார்கள்.

யோவான் 10:21 வேறே சிலர்: இவைகள் பிசாசுபிடித்தவனுடைய வசனங்களல்லவே. குருடருடைய கண்களைப்பிசாசு திறக்கக்கூடுமோ என்றார்கள்.

"பிரிவினை" - இயேசு கிறிஸ்துவைக் குறித்து யூதருக்குள்ளே உண்டான மூன்றாவது பிரிவினை. (யோவான் 7:43; யோவான் 9:16; யோவான் 10:19)

"பிசாசுபிடித்தவன்" - (யோவான் 8:48; மத் 12:24)

"பயித்தியக்காரன்" - வேதாகமத்தில் ஒருசிலரைப் பயித்தியக்காரன் என்று குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். தாவீது (1சாமு 21:13-15); இயேசு (மாற்கு 3:21; யோவான் 10:20); ரோதை (அப் 12:15); தீர்க்கதரிசி (2இராஜா 9:11); பவுல் (அப் 26:11,24-25).

பயித்தியமாவதற்குக் காரணங்கள்

1. எதிரிகளின் ஆக்கிரமிப்பு **(invasion)** (எரே 25:16);
2. தன்னை உயர்த்துதல் **(self-exaltation)** (எரே 29:26);
3. பாடுகள் **(sufferings)** (உபா 28:34);
4. ஒடுக்கப்படுதல் **(oppression)** (பிர 7:7);
5. பாவம் **(sin)** (எரே 51:7; ஓசி 9:7).

10 அதிகாரம்

"அவர்களில் அநேகர்: இவன் பிசாசு பிடித்தவன், பயித்தியக்காரன்; ஏன் இவனுக்குச் செவிகொடுக்கிறீர்கள் என்றார்கள். வேறே சிலர்: இவைகள் பிசாசுபிடித்தவனுடைய வசனங்களல்லவே. குருடருடைய கண்களைப் பிசாசு திறக்கக்கூடுமோ என்றார்கள்" - பிசாசுகளும் அற்புதங்களைச் செய்யும். (மத் 24:24; 2தெச 2:8-12; வெளி 13; வெளி 19:20; யாத் 7:10-12; யாத் 8:7,18-19)

47. தேவாலயத்தில் இயேசுவின் உபதேசம்

(1) யூதர்கள் இயேசுவிடம் விசாரிக்கிறார்கள்

யோவான் 10:22 பின்பு எருசலேமிலே தேவாலயப்பிரதிஷ்டைபண்டிகை வந்தது; மாரிகாலமுமாயிருந்தது.

யோவான் 10:23. இயேசு தேவாலயத்தில் சாலொமோனுடைய மண்டபத்திலே உலாவிக் கொண்டிருந்தார்.

யோவான் 10:24 அப்பொழுது யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு: எது வரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்குச் சந்தேகம் உண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்றார்கள்.

"தேவாலயப் பிரதிஷ்டை பண்டிகை" - அந்தியோகஸ் எபிபேனஸ் (Antiochus Epiphanes) தேவாலயத்தை மாசுபடுத்தினான். இது கி.மு. 164 ஆம் ஆண்டு நடைபெற்றது. இவன் தேவாலயத்தின் பலிபீடத்திலே ஒரு பெண் பன்றியைப் பலியிட்டு, அதன் இரத்தத்தையும், கொழுப்பையும் தேவாலயம் முழுவதும் தெளித்தான். அவன் செய்த அருவருப்பான காரியம் இரண்டு நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றது. யூதர்கள் தேவாலயத்தைச் சுத்திகரிக்க விரும்பினார்கள். யூதாஸ் மக்கபேயஸ் (Judas Maccabaeus) தேவாலயத்தைச் சுத்திகரிப்பதற்கு ஒரு குழு அமைத்து, சுத்திகரித்தான். இந்தச் சுத்திகரிப்பு யூதருடைய கூடாரப்பண்டிகைக்கு (யோவான் 7:2) மூன்றரை மாதங்களுக்குப் பின்பும், பஸ்கா பண்டிகைக்கு நான்கு மாதங்களுக்கு முன்பும் நடைபெற்றது. இதைத் தேவாலயப் பிரதிஷ்டை பண்டிகை என்று யூதர்கள் அழைத்தார்கள். இயேசுகிறிஸ்து ஐந்து பண்டிகைகளில் கலந்து கொண்டதாக யோவான் சுவிசேஷத்தில் எழுதியிருக்கிறார். (யோவான் 2:13; யோவான் 5:1; யோவான் 7:2,10; யோவான் 10:22; யோவான் 12:1; யோவான் 13:1).

பிரதிஷ்டை பண்டிகை (dedication) - ἐγκαίνια - enkainia - 1456

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிரதிஷ்டை பண்டிகை

புதிய (new) - καινός - kainos - 2537

பெயரடை - புது, புதிய, நவமான, புதிதான

"சாலொமோனுடைய மண்டபம்" - தேவாலயத்தின் வெளிப்பிரகாரம் புறஜாதியாருடைய பிரகாரம் எனவும் இது அழைக்கப்படுகிறது. யூதரும், புறஜாதியாரும் இங்கு தங்கியிருப்பது வழக்கம். இதன் கிழக்குப் பகுதியில் உள்ளது சாலொமோனுடைய மண்டபம் என்று அழைக்கப்பட்டது. சாலொமோன் இந்த மண்டபத்தைக் கட்டினான். மிகவும் அழகான சலவைக்கற்களால் இதை நேர்த்தியாகக் கட்டினான். நேபுகாத்நேச்சார் எருசலேம் பட்டணத்தைப் பிடித்தபோது, சாலொமோன் மண்டபம் மிகவும் அழகாக இருந்ததினால், அதை அழிக்காமல் விட்டுவிட்டான்.

"எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாவுக்குச் சந்தேகம் உண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும்" - யூதருடைய ஆர்வம் அதிகமாயிற்று. இயேசு கிறிஸ்துவை எப்படியாவது பிடிக்க வேண்டும் என்று தீவிரமாக இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தம்மை யூதருடைய ராஜா என்று அவர் வாயினாலேயே அறிக்கையிட வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

10 அதிகாரம்

அப்பேர்ப்பட்ட காரியம் விரைவில் நடந்தால் இயேசுவைப் பிலாத்துவிடம் அழைத்துச் சென்று, அவர்மீது குற்றம் சுமத்தலாம் என்று ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் பொறுமையாக இருக்க முடியவில்லை.

(2) இயேசு தமது தெய்வத்துவத்தை வலியுறுத்துகிறார் - (யோவான் 1:1; 5:17-47; 14:9; 17:2)

யோவான் 10:25 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்க வில்லை; என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறது.

யோவான் 10:26 ஆனாலும், நான் உங்களுக்கு சொன்னபடியே, நீங்கள் என் மந்தையின் ஆடுகளாயிராத படியினால்விசுவாசியாமலிருக்கிறீர்கள்.

யோவான் 10:27 என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப்பின்செல்லுகிறது.

யோவான் 10:28 நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை.

யோவான் 10:29 அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக் கொள்ள ஒருவனாலும் கூடாது.

யோவான் 10:30 நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்.

"அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை" - இயேசு கிறிஸ்து அவர்களிடம் "என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறது" என்று கூறினார். ஆனால் அவர்கள் அதை விசுவாசிக்கவில்லை. இதன் மூலமாக இவர்கள் இயேசு கிறிஸ்துவின் ஆடுகளாக இருக்க முடியாது. (யோவான் 10:25-26).

"என் பிதாவின் நாமத்தினாலே" - தாம் செய்த எல்லாக் கிரியைகளையும் இயேசு கிறிஸ்து தமது பிதாவின் நாமத்தினாலேயே செய்தார். (யோவான் 5:43)

நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு மனுஷர் தொடர்ந்து செய்ய வேண்டிய மூன்று காரியங்கள்

1. விசுவாசிக்க வேண்டும் - இயேசு கிறிஸ்துவை முழுவதுமாகவும், தொடர்ச்சியாகவும் விசுவாசிக்க வேண்டும். (யோவான் 10:26, யோவான் 6:47)

2. இயேசு கிறிஸ்துவின் சப்தத்தைக் கேட்க வேண்டும். அவருடைய வார்த்தையைக் கேட்பவர்களாக மட்டுமல்லாமல், அதன்படி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். (யோவான் 10:27; யாக் 1:22-27; யாக் 2:9-26; யோவான் 10:6)

3. இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும். ஆரம்பத்தில் ஒருசில நாட்கள் மட்டும் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிவிட்டு, நின்று விடக்கூடாது. அநுதினமும் பின்பற்ற வேண்டும். (யோவான் 10:6, யோவான் 10:27; லூக்கா 9:23). தங்களுக்குத் தேவனைத் தெரியும். ஆகையினால் தங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று யூதர்கள் கூறினார்கள். ஆனால் யூதர்களுடைய எண்ணம் தவறு என்று இயேசு கிறிஸ்து அறிவிக்கிறார். (யோவான் 5:37-47; யோவான் 8:54-55).

"நித்திய ஜீவன்" - (யோவான் 6:27)

10 அதிகாரம்

"நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை" - நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு யோவான் 10:26 ஆவது வசனத்தில் இயேசு கிறிஸ்து கூறியிருக்கும் நிபந்தனைகளை இவர்கள் கைக்கொள்வதினால் அவர்கள் கெட்டுப் போவதில்லை.

> பறித்துக்கொள் **(pluck)** - ἁρπάζω - **harpazoo** - 726
>
> வினைச்சொல் - இழு, பறித்துக்கொள், பிடித்துக்கொள், பீறு, எடுத்துக்கொள் **(take by force)** (மத் 11:12; யோவான் 6:15; அப் 23:10); **(catch)** (யோவான் 10:12); **(catch away or up)** (மத் 13:19; அப் 8:39; 2கொரி 12:2-4; 1தெச 4:17; வெளி12:5);**(pull)** (யூதா 1:23); **(pluck)** (யோவான் 10:28-29).

"அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்" - பிதாவானவர் மனுஷரை விடவும், தூதர்களை விடவும், பிசாசுகளை விடவும் எல்லாரை விடவும் பெரியவராக இருக்கிறார். எல்லாச் சத்துருக்களைவிட பிதாவானவர் பெரியவர். ஆகையினால் "அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது" என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு நாம் செய்ய வேண்டிய காரியம் எளிமையானது. நாம் தேவனிடத்தில் வரவேண்டும். அவருடைய இரட்சிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். நம்முடைய ஜீவியத்தில் அவருடைய வல்லமை வெளிப்படுவதற்கு நாம் தடைபண்ணாமல், அனுமதிக்க வேண்டும். நம்முடைய சுயாதீன சித்தத்திற்குத் தேவன் யாரையும் பலவந்தம் பண்ணமாட்டார். பாவம் செய்கிறவர்கள் தங்களுடைய சுய விருப்பத்தின் பிரகாரமாகவும், சுய தீர்மானத்தின் பிரகாரமாகவுமே பாவம் செய்கிறார்கள். எடுத்துக்காட்டாக, லூசிபர் (ஏசா 14:12-14; 1தீமோ 3:6), தேவதூதர்கள் (2பேதுரு 2:4; யூதா 1:6-7), ஆதாமிற்கு முன்பாக இருந்தவர்கள் (எரே 4:23-26; 2பேதுரு 3:5-7), பிசாசுகள் (மத் 8:29), ஆதாமும், ஏவாளும் (ஆதி 3; ரோமர் 5: 12-21).

"நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" - திரித்துவத்தில் ஒன்றாய் இருக்கிறோம். (யோவான் 17:11, 21-23), திரித்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் மூன்று தெய்வங்களாகப் பிரிந்திருப்பதில்லை. (தானி 7:9-14; 1யோவான் 5:7; அப் 7:55; ரோமர் 8:34; 1கொரி 8:6; 1கொரி 11:3; எபே 1:20-23; எபே 4:1-6; 1தீமோ 2:5; எபி 1:3; எபி 8:1; எபி 12:2; 1பேதுரு 3:22; வெளி 5: 1-7).

(3) இயேசுவை கொல்வதற்கு முயற்சி - (மத் 26:3)

> யோவான் 10:31 அப்பொழுது யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள்.
>
> யோவான் 10:32 இயேசு அவர்களை நோக்கி: நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன், அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்றார்.
>
> யோவான் 10:33 யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன் மேல் கல்லெறிகிறதில்லை; நீ மனுஷனாயிருக்க, உன்னை தேவன் என்று சொல்லி, இவ்விதமாக தேவதூஷணஞ்சொல்லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்.

"யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள்" - இயேசு கிறிஸ்து தேவதூஷணம் கூறுகிறார் என்று யூதர்கள் நினைத்தார்கள். தாமும், பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம் என்று இயேசு கூறியதை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆகையினால் பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாண முறைமையின்படி தேவதூஷணம் சொல்பவரைக் கல்லெறிவதற்காக யூதர்கள் கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள்.

10 அதிகாரம்

"நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன், அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள்" - என்று இயேசு கிறிஸ்து யூதர்களிடம் கேட்கிறார். இயேசு கிறிஸ்து வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்கினார். பிசாசுகளைத் துரத்தினார். குஷ்டரோகிகளைச் சுத்தமாக்கினார். மரித்தோரை உயிரோடு எழுப்பினார். ஏராளமான ஜனங்களுக்குப் போஜனம் கொடுத்தார். சத்தியத்தை உபதேசம் பண்ணினார். இப்படிப்பட்ட நன்மைகளைச் செய்த தமக்கு அவர்கள் தரும் வெகுமதி இதுதானா என்று இயேசு கிறிஸ்து அவர்களிடம் கேட்கிறார்.

(4) இயேசு தமது தெய்வத்துவத்திற்கு சாட்சி கூறுகிறார் - (யோவான் 1:1,14; 5:17-47)

யோவான் 10:34 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவர்களாயிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய் உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா?

யோவான் 10:35 தேவவசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறாததாயிருக்க,

யோவான் 10:36 பிதாவினால் பரிசுத்தமாக்கப் பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவதூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?

யோவான் 10:37 என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால், நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டியதில்லை.

யோவான் 10:38 செய்தேனேயானால், நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும், பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி அந்தக் கிரியைகளை விசுவாசியுங்கள் என்றார்.

"தேவர்களாயிருக்கிறீர்கள்" - சங் 82:6 ஆவது வசனத்திலிருந்து மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. "வேதம்" (law) என்பது பரிசுத்த வேதாகமம் முழுவதையும் குறிப்பிடலாம். (யோவான் 12:34; யோவான் 15:25). சாதாரண நியாயாதிபதிகளையே தேவர்கள் என்று அழைத்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ தேவனுடைய குமாரனாக இருக்கிறார். தேவனோடு ஒன்றாய் இருக்கிறார். அப்பேர்ப்பட்டவரை "தேவனாயிருக்கிறார்" என்று கூறுவதில் தவறொன்றும் இல்லை.

48. இயேசுவைக் கொல்வதற்கு முயற்சி - (மத் 26:3)

யோவான் 10:39 இதினிமித்தம் அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கத் தேடினார்கள், அவரோ அவர்கள் கைக்குத் தப்பி,

யோவான் 10:40 யோர்தானுக்கு அக்கரையிலே முன்னே யோவான் ஞானஸ்நானங் கொடுத்துக் கொண்டிருந்த இடத்துக்குத் திரும்பிப்போய், அங்கே தங்கினார்.

யோவான் 10:41 அநேகர் அவரிடத்தில் வந்து: யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை; ஆகிலும் இவரைக் குறித்து யோவான் சொன்னதெல்லாம் மெய்யாயிருக்கிறது என்றார்கள்.

யோவான் 10:42 அவ்விடத்திலே அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ள வர்களானார்கள்.

"இதினிமித்தம் அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கத் தேடினார்கள், அவரோ அவர்கள் கைக்குத் தப்பினார்" - இயேசு கிறிஸ்துவை மறுபடியும் கைது பண்ணுவதற்குத் தேடினார்கள். (யோவான் 7:30, 32, 44) ஆனால் அவர் எப்படித் தப்பினார் என்று இங்கு கூறப்படவில்லை.

யோவான் - தொகுப்புரை

10 அதிகாரம்

"யோர்தானுக்கு அக்கரையிலே" - (யோவான் 1:28) எரிகோவிற்கு எதிரே இருக்கும் இந்தப் பகுதியிலே இயேசு கிறிஸ்து தங்கினார். இதன் பின்பு, லாசருவை உயிருடன் எழுப்புவதற்காகப் பெத்தானியாவிற்குச் சென்றார். அதன்பின்பு, அவர் எப்பிராயீம் என்னப்பட்ட ஊருக்குப் போனார். இது வனாந்தரத்திற்குச் சமீபமாய் இருந்தது. (யோவான் 11:54).

"யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை" - ஆனாலும் அற்புதம் செய்யக்கூடிய வல்லமை யோவானிடம் இருந்தது. அவன் எலியாவின் ஆவியையும், பலத்தையும் உடையவன். எலியா அற்புதங்களைச் செய்ததுபோன்று, யோவான் ஸ்நானனாலும் அற்புதங்களைச் செய்திருக்க முடியும். ஆனாலும் யோவான் ஒரு அற்புதமும் செய்யவில்லை.

11 அதிகாரம்

49. மரித்த லாசரு உயிருடன் எழும்புகிறான்

(1) சூழ்நிலையும் நோக்கமும்

யோவான் 11:1 மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானியா கிராமத்திலுள்ளவனாகிய லாசரு என்னும் ஒருவன் வியாதிப் பட்டிருந்தான்.

யோவான் 11:2 கர்த்தருக்கப் பரிமளதைலம் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே; அவனுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருந்தான்.

யோவான் 11:3 அப்பொழுது அவனுடையசகோதரிகள்: ஆண்டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதி யாயிருக்கிறான் என்று சொல்ல, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள்.

யோவான் 11:4 இயேசு அதைக் கேட்ட பொழுது: இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார்கள்.

யோவான் 11:5 இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்.

யோவான் 11:6 அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்டபொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்.

வியாதியாயிரு (sick) - ἀσθενέω - astheneoo - 770

வினைச்சொல் - வியாதியாயிரு, வியாதியாய்கிட, வியாதிப்பட்டிரு, பிணியாளியாயிரு, பலவீனமாயிரு (to be weak) (2கொரி 11:21,29; 2கொரி 12:10), (impotent) (யோவான் 5:3,7), (sick) (யோவான் 4:46; யோவான் 11:1-6; அப் 19:12)

"லாசரு" - மறுபெயர் எலெயேசர் (Eleazar). தேவன் உதவி புரிகிறார் என்பது இந்தப் பெயரின் பொருள். இந்த லாசருவும், லூக்கா 16:19-31 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மனுஷனும் ஒரே நபரல்ல. அவன் இந்த லாசரு மரிப்பதற்கு முன்பாகவே மரித்துவிட்டான்.

"பெத்தானியா" (Bethany) - ஒலிவ மலையின் கிழக்குப் பகுதியிலுள்ள சமவெளியில் அமைந்துள்ள கிராமம். எருசலேமிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. (யோவான் 11:18; லூக்கா 10:38-41) இயேசு கிறிஸ்து இங்கு ஒரு பண்டிகையில் கலந்திருக்கிறார். (மத் 26:6-13; யோவான் 12:1-9) இயேசுகிறிஸ்து எருசலேமிற்குள் பவனி சென்றபோது, ஒரு கழுதையின்மீது ஏறிச்சென்றார். அந்தக் கழுதை இந்த ஊரிலிருந்துதான் கொண்டுவரப்பட்டது. (மாற்கு 11:1-11).

"மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும்" - இயேசு கிறிஸ்துவிற்குச் சேவை செய்தவர்கள். (லூக்கா 10:38-42; லூக்கா 12:2) இயேசுவின் நண்பர்கள். (யோவான் 11:5)

"கர்த்தருக்குப் பரிமளதைலம் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே; அவளுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருந்தான்" - மார்த்தாளும், மரியாளும் லாசருவின் சகோதரர்கள். யோவான் 12:3-8 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்துவை அபிஷேகம் பண்ணியவள் இந்த மரியாளே. (மத் 26:6) இந்த நிகழ்ச்சிக்கு முன்பாக மரியாள் இயேசுவை அபிஷேகம் பண்ணினாளா என்று தெரியவில்லை. இந்தச் சுவிசேஷத்தை எழுதின யோவான் இந்த நிகழ்ச்சி நடைபெற்று, பல வருஷங்களுக்குப் பின்பே, இந்த விசேஷங்களை எழுதினார்.

அனுப்பு (sent) - ἀποστέλλω - apostelloo - 649

வினைச்சொல் - அனுப்பு, அனுப்பிவிடு, துரத்திவிடு, ஆள் அனுப்புதல் (send a messenger)

11 அதிகாரம்

"வியாதியாயிருக்கிறான்" - மரிக்கும் தருவாயில் இருக்கிறான். இயேசு கிறிஸ்து எப்படியும் வந்து, வியாதியாக இருக்கும் லாசருவைக் குணப்படுத்துவார் என்று நினைத்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவோ தமது மனதில் வேறுசில திட்டங்கள் வைத்திருந்தார். "அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்ட பொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்" (யோவான் 11:6) என்று வாசிக்கிறோம்.

"இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது" - இயேசு கிறிஸ்து இந்த ஊரிலிருந்து 18 மைல் தூரத்தில் இருக்கிறார். லாசரு வியாதியாக இருக்கிறான். அவன் மரித்துப் போவான் என்பது இயேசுவிற்குத் தெரியும். இது தற்காலிக மரணமே. இந்த வியாதியினால் அவன் மரித்தாலும் இயேசு கிறிஸ்து மறுபடியும் அவனை உயிரோடு எழுப்புவார். இதனால் ஜனங்கள் தேவனை மகிமைப்படுத்துவார்கள்.

"தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்" - லாசரு மரித்துப் போனான். அவனுடைய மரணத்தினால் இயேசு கிறிஸ்து மகிமையடையவில்லை. மரித்த லாசருவை இயேசு உயிரோடு எழுப்பினார். இதனால் எல்லோரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள். இன்றைய தினத்திலும் கூட தேவன் வியாதியினாலும், மரணத்தினாலும் மகிமையடைவதில்லை. வியாதி குணமாவதினாலும், மரணத்திலிருந்து மனுஷர் உயிர்த்தெழுவதினாலுமே தேவன் மகிமையடைகிறார். ஒரு மனுஷன் வியாதியாக இருக்கும்போது, இயேசு கிறிஸ்து அவனுடைய வியாதியைக் குணப்படுத்தி, மகிமையடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பிணியாளிகளுக்கு மட்டுமே, வைத்தியன் தேவை. ஒருவன் சுகமாக இருக்கும் பொழுது, அவனைக் குணப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

"அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்டபொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார்" - இயேசு கிறிஸ்து பின்னும் இரண்டு நாள் தங்கினதினால் அவருக்கு மார்த்தாள்மீதும், மரியாள்மீதும், லாசருமீதும் அன்பில்லை என்று கூற முடியாது. தெய்வீக வல்லமை லாசருவினிடத்தில் பரிபூரணமாகக் கிரியை நடப்பிக்க வேண்டும் என்பதற்காகவே இயேசு கிறிஸ்து பின்னும் இரண்டுநாள் தங்கினார்.

(2) யூதேயாவிற்கு மறுபடியும் பிரயாணம் - (யோவான் 10:40)

யோவான் 11:7 அதன்பின்பு அவர் தம்முடைய சீஷரை நோக்கி: நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்றார்.

யோவான் 11:8 அதற்கு சீஷர்கள்: ரபீ, இப்பொழுது தான் யூதர் உம்மைக் கல்லெறியத்தேடினார்களே, மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா என்றார்கள்.

யோவான் 11:9 இயேசு பிரதியுத்தரமாக: பகலுக்குப் பன்னிரண்டு மணிநேரம் இல்லையா? ஒருவன் பகலிலே நடந்தால் அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டான்.

யோவான் 11:10 ஒருவன் இரவிலே நடந்தால் தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால் இடறுவான் என்றார்.

யோவான் 11:11 இவைகளை அவர் சொல்லியபின்பு அவர்களை நோக்கி: நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார்.

யோவான் 11:12 அதற்கு அவருடைய சீஷர்கள்: ஆண்டவரே, நித்திரை யடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள்.

யோவான் 11:13 இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக்குறித்து அப்படிச் சொன்னார்; அவர்களோ நித்திரைசெய்து இளைப்பாறுகிறதைக்குறித்துச் சொன்னாரென்று நினைத்தார்கள்.

யோவான் 11:14 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: லாசரு மரித்துப் போனான் என்று வெளிப்படையாய்ச் சொல்லி;

11 அதிகாரம்

யோவான் 11:15 நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர் களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார்.

யோவான் 11:16 அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமா மற்றச் சீஷர்களை நோக்கி: அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்றான்.

"இப்பொழுது தான் யூதர் உம்மைக் கல்லெறியத்தேடினார்களே" - ஒருசில வாரங்களுக்கு முன்பு தான் யூதர்கள் இயேசுவைக் கல்லெறியத் தேடினார்கள். (யோவான் 10:31-42)

"நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரை யடைந்திருக்கிறான்" - மரண மடைந்திருக்கிறான் என்று பொருள்படும். (யோவான்11:13-14;1தெச4:13-17;1தெச 5:6-10; அப் 7:60; 1கொரி 11:30; 1கொரி 15:18,20)

"லாசரு மரித்துப்போனான்" - லாசரு வியாதியாக இருக்கிறான் என்று தம்மிடத்தில் ஒருவன் வந்து சொன்னபோதே அவன் மரித்துவிட்டான் என்பது இயேசுவிற்குத் தெரியும். இயேசு கிறிஸ்து ஆவிக்குரிய வரத்தினால் எல்லாக் காரியங்களையும் தெரிந்து வைத்திருக்கிறார்.

"நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர் களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன்" - இயேசு கிறிஸ்து வியாதியாக இருந்த லாசருவோடு இல்லை. அதனால் அவன் வியாதி குணமாகவில்லை. மரித்துவிட்டான். இப்பொழுது இயேசு கிறிஸ்து அங்கு போகிறார். மரித்த லாசருவை உயிரோடு எழுப்புவார். இதைப் பார்க்கும் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களுக்கு அவரே மேசியா என்பது நிரூபிக்கப்படும். இதற்காக இயேசு அங்கேயிராததினால் சந்தோஷப்படுகிறார்.

"திதிமு என்னப்பட்ட தோமா" **(Didymus)** - பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவன். (மத் 10:3;மாற்கு 3:18;லூக்கா 6:15; அப் 1:13-14). இயேசு கிறிஸ்துவிடம் கேள்வி கேட்டவன் (யோவான் 14:5). இயேசு உயிர்த்தெழுந்த பின்பு அவரைக் கண்டவன். (யோவான் 20:24-29; யோவான் 21:1-2). யூதர்கள் புறஜாதியார் ஊருக்குப் போகும்போது தங்களுடைய பெயரைக் கிரேக்கம், அல்லது லத்தீன் மொழியில் மாற்றிக் கொள்வார்கள். இதன் மூலமாக கிரேக்கரோடும், ரோமரோடும் தாங்கள் எளிதாகப் பழகலாம் என்று நினைத்தார்கள். இந்தப் பிரகாரமாகவே தோமா தன் பெயரை திதிமு என்று அழைக்கிறான்.

"அவரோடேகூட மரிக்கும்படி நாமும் பேவோம் வாருங்கள்" - இயேசு லாசருவின்மீது அன்பாக இருந்தார். எருசலேமில் தமக்குச் சத்துருக்கள் இருக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியும். அவர்கள் தம்மைக் கொலைசெய்ய வகைபார்ப்பார்கள் என்பதையும் இயேசு கிறிஸ்து அறிந்திருக்கிறார். என்றாலும் லாசருவின்மீதுள்ள அன்பினாலும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்னும் காரணத்தினாலும், ஆபத்துக்கள் இருக்கின்ற போதிலும் இயேசு கிறிஸ்து பெத்தானியாவிற்குப் போகிறார். எருசலேமிற்குப் போனால் இயேசு கிறிஸ்துவை நிச்சயமாகக் கொன்றுவிடுவார்கள் என்று தோமா நினைத்தான். அவரைக் கொல்லும்போது அவருடைய சீஷர்களையும் கொல்வதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் அவரோடேகூட மரிக்கும்படி நாமும் போவோம் வாருங்கள் என்று தோமா மற்ற சீஷர்களைச் கூப்பிடுகிறான்.

(3) இயேசும் மார்த்தாளும்

யோவான் 11:17 இயேசு வந்தபோது அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலுநாளாயிற் றென்று கண்டார்.

யோவான் 11:18 பெத்தானியா ஊர் எருசலேமுக்குச் சமீபமாய் ஏறக்குறைய இரண்டுமைல் தூரத்திலிருந்தது.

11 அதிகாரம்

யோவான் 11:19 யூதரில் அநேகர் மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சகோதரனைக் குறித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படி அவர்களிடத்தில் வந்திருந்தார்கள்.

யோவான் 11:20 இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப்பட்டபோது, அவருக்கு எதிர்கொண்டுபோனாள்; மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள்.

யோவான் 11:21 மார்த்தாள் இயேசுவினிடத்தில்வந்து: ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்.

யோவான் 11:22 இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக் கொள்ளுவதெதுவோ அதை தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்.

யோவான் 11:23 இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார்.

யோவான் 11:24 அதற்கு மார்த்தாள்: உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள்.

யோவான் 11:25 இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக் கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;

யோவான் 11:26 உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார்.

யோவான் 11:27 அதற்கு அவள்: ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள்.

"இயேசு வந்தபோது அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலுநாளாயிற்றென்று கண்டார்" - லாசரு மரித்து நாலுநாள் ஆயிற்று. இயேசு கிறிஸ்து தாம் இருந்த ஊரில் இரண்டு நாள் தங்கியிருந்தார். லாசருவின் வியாதியைப் பற்றி செய்தி சொல்ல வந்தவன் ஒரு நாள் பிரயாணம் பண்ணினான். இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் பெத்தானியாவிற்குப் பிரயாணம் பண்ணிவர ஒருநாளாயிற்று. ஆகமொத்தம் லாசரு மரித்து நாலுநாளாயிற்று. யூதர்கள் தங்களுடைய பாரம்பரியத்தின் பிரகாரம் மரித்தவர்களுடைய ஆவி அவர்களுடைய சரீரத்தை மூன்றுநாள் சுற்றிவரும் என்று நம்புகிறார்கள். இந்த மூன்றுநாட்களும் துக்கம் அனுசரிப்பார்கள். அழுது புலம்புவார்கள். ஒருவேளை அந்த ஆவி இவர்களுடைய அழுகைக்கு இரக்கப்பட்டு, பரிதாபப்பட்டு, மறுபடியும் அந்த சரீரத்திற்குள் வந்துவிடும். இறந்தவர் உயிர்ப் பிழைத்தார் என்பது யூதமார்க்கத்துத் தலைவர்களுடைய நம்பிக்கை. நான்காவது நாளில் மரித்தோரின் உடல் நாற்றமெடுக்கும். அப்போது அந்த நபருடைய ஆவி அவருடைய கல்லறையை விட்டு புறப்பட்டுப் போய்விடும். இதனால் நான்காம் நாளில் மரித்தோரின் உற்றார் உறவினர் எல்லோரும் தங்கள் மார்புகளில் அடித்துக் கொண்டு, மிகுந்த சத்தமிட்டு அழுவார்கள். சில இடங்களில் நான்கு நாட்களுக்கும், ஏழு நாட்களுக்கும் இவ்வாறு துக்கம் அனுசரிப்பார்கள். (ஆதி 27:41)

"யூதரில் அநேகர் மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சகோதரனைக் குறித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படி அவர்களிடத்தில் வந்திருந்தார்கள்" - இறந்தவரின் உறவினருக்கு ஆறுதல் சொல்வதற்காக உற்றார் உறவினர், எல்லோரும் அவர்களுடைய வீட்டிற்கு வருவது வழக்கம். பலநாட்களுக்கு இவ்வாறு வந்துபோவார்கள். இறந்தவரின் உறவினர்கள் கல்லறையிலிருந்து திரும்பி வரும்போது ஆறுதல் சொல்லும்படி வந்திருக்கிறவர்கள் வரிசையாக நின்று, அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைக் கூறுவார்கள். இதன் பின்பும், பல நாட்களுக்கு அவர்களுடைய உற்றார் உறவினர்கள் அந்த வீட்டிற்கு வந்து ஆறுதல் கூறுவது வழக்கம். (யோவான் 11:31)

11 அதிகாரம்

ஆறுதல் சொல் (comfort) - παραμυθέομαι - paramutheomai - 3888

வினைச்சொல் - ஆறுதல் சொல், தேற்று (to speak tenderly)

"மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள்" - துக்க வீட்டில் உள்ளவர்கள் தரையில் உட்கார்ந்திருப்பது அக்காலத்து வழக்கம்.(எஸ்றா 9:3-4;நெகே 1:4; சங் 137:1; ஏசா 47:1; லூக்கா 1:79; மத் 27:61).

"ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதை தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன்" - என்று மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து கேட்கிறாள். இயேசு கிறிஸ்து ஏற்கெனவே பல அற்புதங்களைச் செய்திருக்கிறார். மரித்தோரை உயிரோடே எழுப்பியிருக்கிறார். வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்கியிருக்கிறார். இவையெல்லாவற்றையும், மார்த்தாள் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறாள். ஆகையினால் இயேசு கிறிஸ்துவிடம் விசுவாசத்தோடு தமது பிரச்சனையைக் கூறுகிறாள். இயேசு கிறிஸ்துவும் தம்முடைய பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட வாக்குத் தத்தத்தைக்கூறியிருக்கிறார். (மத் 7:7-11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; லூக்கா 11:1-13; லூக்கா18:1-14; யோவான் 14:1-15; யோவான் 15:7,16;யோவான் 16:23-26) மார்த்தாளுக்குஇயேசு கிறிஸ்துவின் வல்லமையைப் பற்றித் தெரியும். அவருடைய தெய்வீக ஆற்றலில் மார்த்தாள் நம்பிக்கை வைக்கிறாள்.

"உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான்" -(யோவான் 6:39,40,44,54;யோவான் 12:48; தானி 12:2,13)

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" - (யோவான் 6:35)

"ஜீவன்" - இயேசு கிறிஸ்துவில் எல்லா ஜீவனும் இருக்கிறது. (1யோவான் 5:11-12; யோவான் 1:4; யோவான் 3:15-20,36; யோவான் 5:24; யோவான் 14:6)

"என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" - இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களும் சரீரப்பிரகாரமாக மரித்துப் போவார்கள். (எபி 9:27) ஆனாலும், இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதலின் நாளிலே தம்முடைய பிள்ளைகளை உயிரோடே எழுப்புவார். அவர்கள் நித்திய காலமாக ஜீவிப்பார்கள். (1கொரி 15:20-23,51-58; 1தெச 4:13-18)

"உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" - இம்மையில் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிறவன் மறுமையில் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வான். (யோவான் 6:27)

"இதை விசுவாசிக்கிறாயா" - இயேசு கிறிஸ்து மார்த்தாளிடம் உயிர்த்தெழுதலைப் பற்றி தாம் கூறுவதை விசுவாசிக்கிறாயா என்று கேட்கிறார். இதை விசுவாசிக்கிறவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்றும், மேசியா என்றும் விசுவாசிப்பார்கள். ஆனால் மார்த்தாளுடைய சிந்தையில் அவளுடைய சகோதரனாகிய லாசருவின் மரணமே நிறைந்திருக்கிறது. உலகப்பிரகாரமான காரியம் அவளை ஆட்கொள்கிறது. ஆவிக்குரிய காரியங்களை அவளால் தரிசிக்க முடியவில்லை.

(4)இயேசுவும் மரியாளும்-(லூக் 10:38)

யோவான் 11:28 இவைகளைச் சொன்ன பின்பு, அவள் போய், தன் சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து: போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள்.

யோவான் 11:29 அவள் அதைக் கேட்டவுடனே, சீக்கிரமாய் எழுந்து, அவரிடத்தில் வந்தாள்.

யோவான் 11:30 இயேசு இன்னும் கிராமத்துக்குள் வராமல், மார்த்தாள் தம்மைச் சந்தித்த இடத்திலே இருந்தார்.

11 அதிகாரம்

யோவான் 11:31 அப்பொழுது, வீட்டிலே அவளுடனேகூட இருந்து அவளுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்த யூதர்கள், மரியாள் சீக்கிரமாய் எழுந்துபோகிறதைக் கண்டு: அவள் கல்லறையினிடத்தில் அழுகிறதற்குப் போகிறாள் என்று சொல்லி, அவளுக்குப் பின்னே போனார்கள்.

யோவான் 11:32 இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள்.

"இவைகளைச் சொன்னபின்பு, அவள் போய், தன் சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து: போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார்" என்றாள் - இயேசு கிறிஸ்து மரியாளையும், தம்மிடத்தில் வருமாறு அழைக்கிறார். அவளுடைய சகோதரனைத் தாம் உயிரோடு எழுப்பப்போவதை அவளும் காண வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். அவள் வருவது வரைக்கும், இயேசு கிறிஸ்து சிறிதுநேரம் காத்திருக்கிறார். (யோவான் 11:28-38).

"இயேசு இன்னும் கிராமத்துக்குள் வராமல், மார்த்தாள் தம்மைச் சந்தித்த இடத்திலே இருந்தார்" - யூதருடைய கல்லறைத் தோட்டம் கிராமங்களுக்கு வெளியே இருக்கும்.

"அவள் கல்லறையினிடத்தில் அழுகிறதற்குப் போகிறாள் என்று சொல்லி, அவளுக்குப் பின்னே போனார்கள்" - ஒரு நபர் மரித்துப் போனால் நான்கு நாட்களுக்குத் துக்கம் அனுசரிப்பார்கள். அடிக்கடி கல்லறைக்குப் போய் அழுவார்கள். உறவினர் கல்லறைக்குப் போகும்போது, உற்றார் உறவினரும் அவர்களோடு கூடவே போவார்கள். அவர்களை தனியாக எங்கும் அனுப்ப மாட்டார்கள். (யோவான் 11:17)

இயேசுகிறிஸ்துவிற்கு முன்பாக அவருடைய பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கியவர்கள்

1. சாஸ்திரிகள் (மத் 2:11)
2. யவீரு (மாற்கு 5:22)
3. சொஸ்தமான ஸ்திரீ (மாற்கு 5:33)
4. சீரோபேனிக்கேயா ஸ்திரீ(மாற்கு 7:25)
5. பேதுரு (லூக்கா 5:8)
6. குஷ்டரோகி (லூக்கா 5:12)
7. கதரேனர் (லூக்கா 8:28)
8. சமாரியர் (லூக்கா 17:16)
9. மரியாள் (யோவான் 11:32)

"நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" - தன் சகோதரன் மரிப்பதற்கு முன்பாக இயேசு கிறிஸ்து வந்திருந்தால் அவர் அவனுடைய வியாதியைச் சொஸ்தமாக்கியிருப்பார் என்று மரியாள் நினைக்கிறாள். லாசருவை உயிரோடு எழுப்ப வேண்டுமென்று அவள் விண்ணப்பம் பண்ணவில்லை.

(5) இயேசுவின் மனதுருக்கம்

யோவான் 11:33 அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து:

யோவான் 11:34 அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து பாரும் என்றார்கள்.

யோவான் 11:35 இயேசு கண்ணீர் விட்டார்.

யோவான் 11:36 அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்!

11 அதிகாரம்

"அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித் துயரமடைந்தார்" - இயேசு கிறிஸ்து ஆவியிலே கலங்கி **(groaned)** துயரமடைந்தார் **(troubled)**. கலங்குதல் என்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "எம்ப்ரிமயோமாய்" **(embrimaomai)** என்பதாகும். இதற்கு கோபப்படுதல் என்று பொருள்.**(anger; be very angry, moved with indignation)** (யோவான் 11:33,38; மத் 9:30; மாற்கு 1:43; மாற்கு 14:5) சாத்தான் லாசருவிற்கு வியாதியைக் கொண்டுவந்து, அவனைக் கொன்றுபோட்டான். சாத்தானின் கிரியையினால் அங்கு ஏற்பட்ட துக்கத்திற்காக இயேசு கிறிஸ்து சாத்தான்மீது கோபப்படுகிறார். இதன்பின்பு, அவர் தமது ஆவியில் துயரமடைகிறார். துயரமடைவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல் "தாராசோ" **(tarassoo)**. **(to stir, agitate in mind)** சாத்தானுடைய மரணத்தின் வல்லமையினால் இயேசு கிறிஸ்து சாத்தானின் அந்தகாரச் சக்திகளோடுபோராடுகிறார். (எபி 2:14). இந்த வார்த்தை மத் 14:26; மாற்கு 6:50; லூக்கா 1:12; யோவான் 5:4,7; யோவான் 12:27; யோவான் 14:1 ஆகிய வசனங்களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கலங்கு **(groaned)** - ἐμβριμάομαι - **embrimaomai** - 1690

வினைச்சொல் - கண்டிப்பாய்க் கட்டளையிடு, கண்டிப்பாய் சொல்லு, கலங்கு

துயரமடை **(troubled)** - ταράσσω - **tarassoo** - 5015

வினைச்சொல் - கலங்கு, கலக்கமடை, துயரமடை

"இயேசு கண்ணீர் விட்டார்" **(Jesus wept)** - வேதாகமத்தில் மிகச்சிறிய வசனம். ஆயினும் மிகுந்த வல்லமையுள்ள வசனம். இயேசு கிறிஸ்துவின் மானிடத் தன்மையில் காணப்படும் இரக்கத்தையும், மனதுருக்கத்தையும் இந்த வசனம் அளவில்லாமல் வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்து தமது பிள்ளைகள் எல்லோரையும் சிநேகிதராகப் பாவிக்கிறார். ஒரு சிநேகிதர்மீது அவர் எவ்வளவு பாசமாக இருக்கிறார் என்பதை இந்த வசனம் விளக்குகிறது. லாசரு மரித்ததினால் அவருடைய உற்றார் உறவினரும் அழுகிறார்கள். அவர்களோடு சேர்ந்து, இயேசு கிறிஸ்துவும் அழுதார். லாசருமீது இயேசுவிற்கு இருந்த அன்பையும், மனதுருக்கத்தையும் அவருடைய கிரியை வெளிப்படுத்திக் காண்பிக்கிறது.(யோவான் 11:33,36; ஏசா 53:3; எபி 2:16-18;எபி 4:15; ரோமர் 12:15). இயேசு கிறிஸ்து அழுததற்கு வேறொரு காரணமும் இருக்கலாம். பாவமும், மரணமும் பயங்கரமானது. அவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் நித்தியகாலமாகப் பாடுகளை அனுபவிப்பார்கள். யூதமார்க்கத்தார் தம்மை மேசியாவாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இதனால் அந்த தேசமே அழிக்கப்படும் என்பதை நினைத்து, இயேசு அழுதிருக்கலாம். (யோவான்11:46-54; லூக்கா13:34-35;லூக்கா19:41; மத் 23:37-39).

(6) இயேசு லாசருவை அடக்கம் பண்ணிய கல்லறையினிடத்திற்கு வருகிறார்

யோவான் 11:37 அவர்களில் சிலர்: குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள்.

யோவான் 11:38 அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கிக் கல்லறையினிடத்திற்கு வந்தார். அது ஒரு குகையாயிருந்தது; அதின்மேல் ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது.

"குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா" - என்று அங்கிருந்தவர்களில் சிலர் கேட்டார்கள். நிச்சயமாகவே இயேசு கிறிஸ்துவால் அதைச் செய்ய முடியும். குருடனுடைய கண்களைத் திறந்ததைவிட மிகப்பெரிய அற்புதத்தை இயேசு கிறிஸ்து இன்னும் சிறிது நேரத்தில் செய்யப் போகிறார். அதை அவர்கள் அறியாமல் இவ்வாறு கூறுகிறார்கள்.

11 அதிகாரம்

"அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கிக் கல்லறையினிடத்திற்கு வந்தார்" - (யோவான் 11:33)

"அது ஒரு குகையாயிருந்தது; அதின்மேல் ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது" - கற்பாறைகளிலும், குகைகளிலும் யூதர்கள் கல்லறைகளைச் செதுக்கி வைப்பார்கள். பெரிய கல்லை எடுத்து, குகையின் வாசலில் சாய்வாக வைத்து, கல்லறையை மூடிவைப்பார்கள்.

(7) மார்த்தாளின் அவிசுவாசம்

யோவான் 11:39 இயேசு: கல்லை எடுத்துப் போடுங்கள் என்றார். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே என்றாள்.

"ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலுநாளாயிற்றே" - என்று லாசருவின் சகோதரியாகிய மார்த்தாள் கூறுகிறாள். லாசரு மரித்து நான்கு நாளாயிற்று. ஆகையினால் அவனுடைய சரீரம் நாற்றமெடுக்க ஆரம்பித்தது. (யோவான் 11:17)

(8) இயேசுவின் விசுவாசம்

யோவான் 11:40 இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்.

"நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா" - இந்த வாக்கியத்தை இயேசு கிறிஸ்து மார்த்தாளிடம் எப்போதுசொன்னார் என்று வேதத்தில் எழுதப்படவில்லை. இந்தச் சம்பவத்தில் நடைபெற்ற பல காரியங்கள் வேதாகமத்தில் எழுதப்படாமல் இருக்கலாம். (யோவான் 21:25).

(9) இயேசுவின் ஜெபம்

யோவான் 11:41 அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப்போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

யோவான் 11:42 நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்.

"இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்தார்" - இயேசு கிறிஸ்து தம்முடைய கண்களைத் திறந்து, பரலோகத்தை நோக்கிப் பார்த்தார். (மத் 17:8; லூக்கா 6:20; லூக்கா 16:23; யோவான் 4:35; யோவான் 6:5; யோவான் 17:1).

"பிதாவே" - இயேசு கிறிஸ்து ஜெபத்தில் பிதாவே என்னும் வாக்கியத்தை 15 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். (மத் 11:25-26; மத் 26:39,42; லூக்கா 23:34,46; யோவான் 11:41; யோவான் 12:27-28; யோவான்17:1,5,11,21,24-25; லூக்கா 10:21; லூக்கா 22:42; மாற்கு 14:36) யோவான் 17 ஆவது அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து ஏறெடுத்த நீண்ட ஜெபத்தை நாம் வாசிக்கிறோம். அதற்கு அடுத்தபடியாக இந்த ஜெபமும் ஒரு நீண்ட ஜெபமாகும்.

"நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" - இயேசு கிறிஸ்து பெத்தானியாவிற்கு வருவதற்கு முன்பாகவே இந்தக் காரியத்தைக் குறித்து, ஜெபித்து, தேவனுடைய சித்தத்தை அறிந்திருக்கிறார். (யோவான் 11:3-6) தேவனுடைய சித்தத்தின் பிரகாரமாகவே லாசரு நோய்வாய்ப் பட்டிருக்கும்போது, இயேசு கிறிஸ்து உடனடியாக வராமல் அவன் மரித்து நான்கு நாட்கள் ஆனபின்பு வருகிறார்.

11 அதிகாரம்

கிறிஸ்து நடப்பித்த அற்புதங்களின் நோக்கங்கள்

1. ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக (யோவான் 2:23; யோவான் 4:48; யோவான் 11:42; யோவான் 12:37; யோவான் 14:11; அப் 2:43;அப் 4:30; அப் 5:12; அப் 8:13; அப் 14:3; அப் 15:12; அப் 19:11;ரோமர் 15:18-29).
2. தீர்க்க தரிசனத்தை நிறைவேற்றும்படியாக (ஏசா 11:2; ஏசா 61:1-2; மத் 8:17; லூக்கா 4:18).
3. தேவனுடைய சித்தத்தைச் செயல் படுத்துவதற்காக (யோவான் 5:30; யோவான் 6:38; யோவான் 10:10; எபி 10:7).
4. சாத்தானுடைய கிரியைகளை அழிப்பதற்காக(லூக்கா 13:16; அப் 10:38; 1யோவான் 3:8).
5. பரிபூரண ஜீவனைக் கொடுப்பதற்காக (யோவான் 10:10).
6. தாமே மேசியா என்பதையும், தேவனுடைய குமாரன் என்பதையும் நிரூபிப்பதற்காக (யோவான் 5:17-19,30-36; யோவான் 10:25,36-38; யோவான் 14:10-11; யோவான் 15:24; யோவான் 20:30-31; அப் 2:32).
7. தேவனுடைய வார்த்தையையும், அன்பையும் உறுதிபண்ணுவதற்காக (யோவான் 5:20;எபி 2:3-4; மாற்கு 16:15-20; 2கொரி 12:12; யோவான் 14:12).
8. தேவன் இயேசு கிறிஸ்துவோடு கூட இருக்கிறார் என்பதை நிரூபிப்பதற் காக (யோவான் 3:2; அப் 10:38).
9. சாத்தான்மீது தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காக (லூக்கா 10:19; லூக்கா 13:16; மத் 12:28; அப் 10:38).
10. தேவனுடைய ராஜ்யத்தை நிரூபிப்பதற்காக (மத் 12:28; 1கொரி 4:20).
11. தேவனை மகிமைப்படுத்துவதற்காக (யோவான் 2:11; யோவான் 11:4; மத் 9:8; மத் 15:31; மாற்கு 2:12; லூக்கா 4:15; லூக்கா 5:26; லூக்கா 7:16; லூக்கா 13:13).
12. சுவிசேஷ ஊழியர்களுக்கு ஒரு முன்மாதிரியை ஏற்படுத்துவதற்காக (மத் 10:1-8; மத் 28:20,மாற்கு 6:7-13; லூக்கா 9:6; லூக்கா 10:9; யோவான் 17:18; மாற்கு 16:15-20; யோவான் 14:12; அப் 1:1-8; ரோமர் 15:18-29)
13. பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தின் மூலமாகக் கிடைக்கும் வல்லமையை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காக (மத் 20:22-23; லூக்கா 4:18; யோவான் 3:34,மத் 3:11; லூக்கா 24:49; அப் 1:4-8; யோவான் 7:37-39).
14. சரீரம், ஆவி, ஆத்துமா ஆகிய மூன்றுக்குமே பரிபூரண இரட்சிப்பு கிடைக்கும் என்பதை வெளிப் படுத்துவதற்காக (மத் 4:23-24; மத் 8:17; மத் 9:35; மத் 13:15; யோவான் 10:10; 1பேதுரு 2:24; ஏசா 53:4-5).

(10)இயேசுவின் வல்லமை - லாசருவை உயிருடன் எழுப்புகிறார்

யோவான் 11:43 இவைகளைச் சொன்ன பின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.

யோவான் 11:44 அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார்.

11 அதிகாரம்

"லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்"- யோவான் 5:25 ஆவது வசனம் முதன் முறையாக நிறைவேறுகிறது. அங்கு கூடியிருந்த எல்லா ஜனங்களும் இயேசு கிறிஸ்து உரத்த சத்தமாகக் கூப்பிட்டதைக் கேட்டார்கள். மரித்தோர்கூட இயேசுவின் சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள்.

"அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது" - மரித்தோரை அடக்கம் பண்ணும்போது, கால்களையும், கைகளையும் சீலைகளினால் கட்டுவது வழக்கம். ஆகையினால் லாசரு வெளியே வந்தும், அவனால் நடக்க முடியவில்லை. அருகில் இருந்தவர்களை நோக்கி, இயேசு கிறிஸ்து "இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள்" என்று கூறுகிறார்.

சீலை (napkin) - σουδάριον - **soudarion** - 4676

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - சீலை, கச்சை (sweat cloth) (யோவான் 20:7; லூக்கா 19:20; அப் 19:12)

50. அற்புதத்தின் விளைவு

யோவான் 11:45 அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

யோவான் 11:46 அவர்களில் சிலர் பரிசேயரிடத்தில் போய், இயேசு செய்தவைகளை அவர்களுக்கு அறிவித்தார்கள்.

"அவர்களில் சிலர் பரிசேயரிடத்தில் போய், இயேசு செய்தவைகளை அவர்களுக்கு அறிவித்தார்கள்" - இயேசு கிறிஸ்து மரித்த லாசருவை உயிரோடு எழுப்பியதை அங்கு கூடியிருந்த ஜனங்கள் கண்டார்கள். அவர்களில் அநேகர் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

அந்தக் கூட்டத்தில் பரிசேயர்களால் அனுப்பப்பட்ட வேவுகாரர்களும் இருந்தார்கள். அவர்கள் இந்தச் சங்கதியைப் பரிசேயரிடத்தில் அறிவித்தார்கள்.

51. இயேசுவைக் கொல்ல முயற்சி - (மத் 26:3)

யோவான் 11:47 அப்பொழுது பிரதான ஆசாரியரும் பரிசேயரும் ஆலோசனைச் சங்கத்தைக் கூடிவரச்செய்து, நாம் என்னசெய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே.

யோவான் 11:48 நாம் இவனை இப்படி விட்டுவிட்டால், எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப்போடுவார்களே என்றார்கள்.

"நாம் என்னசெய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே" - இயேசு கிறிஸ்து அற்புதம் செய்கிறார் என்பதைப் பிரதான ஆசாரியரும், பரிசேயரும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய இருதயம் மேலும் கடினமடைகிறது. இயேசு கிறிஸ்துவின் உபதேசத்திற்கு எதிர்த்து நிற்க வேண்டுமென்று தீர்மானமாக இருக்கிறார்கள்.

"நாம் இவனை இப்படி விட்டுவிட்டால், எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப் போடுவார்களே" - இயேசு கிறிஸ்துவை அழித்து விடவேண்டும். இல்லையெனில், ஜனங்கள் இயேசுவைப் பின்பற்றி, அவரை ராஜாவாக ஆக்கிவிடுவார்கள். அப்போது, ரோமர்கள் தங்களுக்கு எதிராக வந்து, தங்களுடைய ஸ்தானத்தையும், அந்தஸ்தையும் அகற்றிப்போடுவார்கள் என்று பரிசேயரும், பிரதான ஆசாரியரும் பயந்தார்கள். தேவாலயத்தை ஆளுகை செய்யும் பொறுப்பைத் தங்களிடமிருந்து ரோமர் எடுத்துப் போடுவார்கள் என்று கலங்கினார்கள்.

11 அதிகாரம்

52. இயேசுவின் மரணத்தைப் பற்றி காய்பாவின் தீர்க்கதரிசனம் - (யோவான் 18:14)

யோவான் 11:49 அப்பொழுது அவர்களில் ஒருவனும் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாகிய காய்பா என்பவன் அவர்களை நோக்கி: உங்களுக்கு ஒன்றுந்தெரியாது;

யோவான் 11:50 ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான்.

யோவான் 11:51 இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப் போகிறாரென்றும்,

யோவான் 11:52 அந்த ஜனங்களுக்காக மாத்திர மல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப் போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்.

"அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாகிய காய்பா என்பவன்" - நியாயப்பிரமாணத்தின் பிரகாரம் ஆசாரியர்கள் தங்களுடைய ஜீவிய காலம் முழுவதும் பதவியிலிருப்பார்கள். ஆனால் இங்கு பிரதான ஆசாரியருடைய பதவி ஒவ்வொரு வருஷமாக மாறுவதாகக் காண்கிறோம். ரோமரும், ஏரோதுவும் தங்களுக்குப் பிடித்தவரை பிரதான ஆசாரியராக நியமித்து, பதவியில் அமர்த்துவார்கள். யோசபஸ் **(Josephus)** என்னும் திருச்சபை வரலாற்று ஆசிரியர் காய்பாவைப் பற்றி எழுதும்போது, காய்பா என்பது அவனுடைய மறுபெயர் என்றும், அவனுடைய உண்மையான பெயர் யோசேப்பு என்றும் எழுதியிருக்கிறார்.

தீர்க்கதரிசன எண் - 23

"உங்களுக்கு ஒன்றுந்தெரியாது; ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிருக் கிறீர்கள்........................" (யோவான் 11:49-52) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. யூதஜனங்களுக்காக இயேசு கிறிஸ்து மரிக்க வேண்டும் என்று காய்பா கூறினான்.

"அந்த ஜனங்களுக்காகமாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப் போகிறார்" - சிதறியிருக்கும் யூதர்களை மாத்திரம் இந்தத் தீர்க்கதரிசனம் குறிக்குமென்றால் இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நிறைவேறும். (மத் 24:31; ஏசா 11:11-12; எசே 37) இந்தத் தீர்க்கதரிசனம் யூதரையும், புறஜாதியாரையும் குறிக்குமென்றால் இது ஆயிரம் வருஷ அரசாட்சியில் நிறைவேறும். (எபே 1:10; 1கொரி 15:24-28).

53. இயேசுவைக் கொல்ல முயற்சி - (மத் 26:3; மாற்கு 14:1; லூக் 22:1)

யோவான் 11:53 அந்நாள்முதல் அவரைக் கொலை செய்யும்படிக்கு ஆலோசனை பண்ணினார்கள்.

யோவான் 11:54 ஆகையால் இயேசு அதன்பின்பு வெளியரங்கமாய் யூதருக்குள்ளே சஞ்சரியாமல், அவ்விடம் விட்டு வனாந்தரத்துக்குச் சமீபமான இடமாகிய எப்பிராயீம் என்னப்பட்ட ஊருக்குப்போய், அங்கே தம்முடைய சீஷருடனேகூடத் தங்கியிருந்தார்.

"அந்நாள்முதல் அவரைக்கொலை செய்யும் படிக்கு ஆலோசனைபண்ணினார்கள்" - இயேசுகிறிஸ்துவைக் கொலைசெய்ய வேண்டுமென்று பிரதான ஆசாரியரும், பரிசேயரும் சதியாலோசனை பண்ணிய நாட்களில் ஆலோசனைச் சங்கத்தார் மத்தியிலே ஒத்த கருத்து ஏற்படவில்லை. அவர்களுக்குள் பிரிந்திருந்தார்கள். இயேசு கிறிஸ்து அவர்களுடைய பிரிவினையைப் பயன்படுத்தி, தமது ஊழியத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார். உபதேசம் செய்து, அற்புதங்களை நடத்தி வந்தார்.

11 அதிகாரம்

"இயேசு அதன்பின்பு வெளியரங்கமாய் யூதருக்குள்ளே சஞ்சரிக்கவில்லை" - யோவான் 11:53 ஆவது வசனத்தில் ஆலோசனைச் சங்கத்தார் இயேசு கிறிஸ்துவைக் கொலைசெய்ய வேண்டுமென்று ஒன்றுபடுகிறார்கள். அந்த நாளிலிருந்து இயேசு கிறிஸ்து யூதருக்குள்ளே வெளியரங்கமாய் சஞ்சரிக்கவில்லை. யூதமார்க்கத் தலைவர்கள் இயேசுவைச் சீக்கிரமாய் கொலைசெய்ய வேண்டும் என்று தீர்மானம் பண்ணியதற்கு அவர் சமீபத்தில் நடப்பித்த மூன்று அற்புதங்களே காரணமாகும். அவையாவன:

1. ஓய்வுநாளில் திமிர்வாதக்காரனை இயேசு குணமாக்கினார். (யோவான் 5:1-16)
2. ஓய்வுநாளில் பிறவிக்குருடனைக் குணமாக்கினார்.(யோவான்9:16,22,34)
3. மரித்த லாசருவை உயிரோடு எழுப்பினார். (யோவான் 11:46-54)

இந்த மூன்று அற்புதங்களும், யூதர்கள் மத்தியிலே கலக்கத்தை உண்டுபண்ணிற்று. இயேசு கிறிஸ்து தாம் கூறிய பிரகாரம், தேவனுடைய குமாரனாக இருப்பாரோ, மேசியாவாகவா இருப்பரோ என்று ஜனங்கள் சிந்திக்க ஆரம்பித்தார்கள். இயேசு கிறிஸ்துவின் செல்வாக்கு ஜனங்கள் மத்தியிலே வேகமாக வளர்ந்தது. யூதமார்க்கத் தலைவர்களால் இயேசுவின் பிரபலியத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஆகையினால் அவரை எப்படியாவது கொலைபண்ண வேண்டுமென்று சதியாலோசனை பண்ணினார்கள்.

"எப்பிராயீம்" **(Ephraim)** - எருசலேமிற்கு வடக்கே 20 மைல் தூரத்தில் உள்ள பட்டணம். பெத்தேலுக்கு அருகிலுள்ளது. (2நாளா 13:19; யோசு 15:9) பஸ்கா பண்டிகை வரும் வரையிலும், இயேசு கிறிஸ்து இந்தப் பட்டணத்தில் இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார்.

54. இயேசுவைப் பிடிப்பதற்குக் கட்டளை - (மத் 26:3)

யோவான் 11:55 யூதருடைய பஸ்கா பண்டிகை சமீபமாயிருந்தது. அதற்கு முன்னே அநேகர் தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளும் பொருட்டு நாட்டிலிருந்து எருசலேமுக்குப் போனார்கள்.

யோவான் 11:56 அங்கே அவர்கள் இயேசுவைத் தேடிக்கொண்டு தேவாலயத்தில் நிற்கையில், ஒருவரையொருவர் நோக்கி: உங்களுக்கெப்படித் தோன்றுகிறது, அவர் பண்டிகைக்கு வரமாட்டாரோ என்று பேசிக்கொண்டார்கள்.

யோவான் 11:57 பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவரைப் பிடிக்கும்படி யோசித்து, அவர் இருக்கிற இடத்தை எவனாவது அறிந்திருந்தால், அதை அறிவிக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தான்.

"யூதருடைய பஸ்காபண்டிகை" - (யோவான் 2:13)

"அநேகர் தங்களைச் சுத்திகரித்துக் கொள்ளும் பொருட்டு நாட்டிலிருந்து எருசலேமுக்குப் போனார்கள்" - யூதர்கள் இறந்த சரீரங்களையோ, அல்லது அசுத்தமான பொருட்களையோ தொடக்கூடாது. தொட்டால் அது அவர்களுக்குத் தீட்டாக இருக்கும். தீட்டுப்பட்டவர்கள் லேவியருடைய பிரமாணத்தின் பிரகாரம் தங்களைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். (எண் 9:6-10)

"பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவரைப் பிடிக்கும்படி யோசித்தார்கள்" - கைது பண்ணும்படி யோசித்தார்கள். யோவான் 7:30, 32,44; யோவான் 10:39).

12 அதிகாரம்

55. இயேசுவின் அபிஷேகம் - (மத் 26:6; மாற்கு 14:3; லூக் 7:36)

யோவான் 12:1 பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார்.

யோவான் 12:2 அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனே கூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான்.

யோவான் 12:3 அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது.

யோவான் 12:4 அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து:

யோவான் 12:5 இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான்.

யோவான் 12:6 அவன் தரித்திரரைக் குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனான படியினாலும், பணப்பையை வைத்துக் கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்.

யோவான் 12:7 அப்பொழுது இயேசு: இவளைவிட்டுவிடு, என்னை அடக்கம் பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்.

யோவான் 12:8 தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன் என்றார்.

“பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார்” - நிசான் மாதம் ஒன்பதாம் நாள். இயேசு கிறிஸ்து எரிகோவிற்கு வந்து, அங்கு சகேயுவின் வீட்டில் இரவு தங்கினார். (லூக்கா 19:1-10) ராத்தல் திரவியங்களைப் பற்றிய உவமையை இயேசுகிறிஸ்து அங்குக் கூறிவிட்டு, எருசலேமிற்குப் புறப்பட்டுச் சென்றார். (லூக்கா 19:11-28) இரண்டு சீஷர்களை அனுப்பி, கழுதையையும், அதன் குட்டியையும் கொண்டு வருமாறு கூறினார். எருசலேமிற்குத் தமது முதலாவது பயணத்தைச் செய்து, பெத்தானியாவிற்கு மாலைப்பொழுதில் திரும்பி வருகிறார். (மத் 21:1-17)

“இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு” - (யோவான் 11:1-44)

“அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்” - கடைசி வாரத்தில் இயேசு கிறிஸ்து பங்குபெற்ற மூன்று இராவிருந்துகளில் இது முதலாவதாகும். (மாற்கு 14:3)

இராத்தல் (pound) - λίτρα - litra - 3046

பெண்பால் பெயர்ச்சொல் - இராத்தல் . (மாற்கு 14:3, யோவான் 19:39)

“மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசினாள்” - கடைசி வாரத்தில் இரண்டு அபிஷேகம் இதைப் போன்று நடைபெற்றது. (மாற்கு 14:3,8) இயேசு கிறிஸ்துவின் ஆரம்ப ஊழியக்காலத்தில் அவருக்கு மற்றுமொரு அபிஷேகமும் நடைபெற்றது. கப்பர்நகூமில் சீமோன் என்னும் பரிசேயனுடைய வீட்டில் இந்த அபிஷேகம் நடைபெற்றதாக லூக்கா 7:36-50 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிறோம்.

“யூதாஸ்காரியோத்து” - (யோவான் 6:71)

12 அதிகாரம்

பணம் (pence) - δηνάριον - **deenarion** - 1220

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பணம், காசு

திருடன் (thief) - κλέπτης - **kleptees** - 2812

ஆண்பால் பெயர்ச்சொல் - திருடன் (யோவான் 10:1)

பை (bag) - γλωσσόκομον - **gloossokomon** - 1101

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பை - நாதசுரங்களில் பயன்படுத்தப்படும் ஊதுகளை இந்தப் பைகளில் எடுத்துச் செல்வார்கள். (யோவான் 12:6; யோவான் 13:29)

சுமத்தல் (bare) - βαστάζω - **bastazoo** - 941

வினைச்சொல் - சும, சகி, கொண்டு போ, சுமத்தல், சுமந்துகொள், சுமந்துவா, எடுத்துக்கொள், தாங்கு, தூக்கிக்கொள் **(to lift up; bear, carry off)** - இந்த வசனத்தில் இந்த வார்த்தை யோவான் 20:15 ஆவது வசனத்தில் கூறியிருக்கிற பிரகாரம் திருடுதல் என்னும் பொருளைக் கொடுக்கும். ஆகையினால் தான், யூதாஸ்காரியோத்து திருடன் என்று அழைக்கப்படுகிறான்.

"இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்" - இயேசு கிறிஸ்து தமது மரணத்தைப் பற்றி இங்கு கூறுகிறார். சீஷர்களால் இந்த உபதேசத்தைப்புரிந்து கொள்ள முடியவில்லை.

56. லாசருவைக் கொல்ல சதியாலோசனை

யோவான் 12:9 அப்பொழுது யூதரில் திரளான ஜனங்கள் அவர் அங்கேயிருக்கிறதை அறிந்து, இயேசுவினிமித்தமாகமாத்திரம் அல்ல, அவர் மரித்தோரிலிருந்தெழுப்பின லாசருவைக் காணும்படியாகவும் வந்தார்கள்.

யோவான் 12:10 லாசருவினிமித்தமாக யூதர்களில் அநேகர் போய், இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தபடியால்,

யோவான் 12:11 பிரதான ஆசாரியர்கள் லாசருவையும் கொலைசெய்ய ஆலோசனை பண்ணினார்கள்.

"அவர் மரித்தோரிலிருந்தெழுப்பின லாசருவைக் காணும்படியாகவும் வந்தார்கள்" - ஜனங்கள் இயேசு கிறிஸ்துவைக் காண்பதை விட அவர் செய்யும் அற்புதங்களைக் காண்பதற்கு விரும்பு கிறார்கள். மனுஷர்களுடைய உள்ளத்திலே எதையாவது புதுமையாகக் காணவேண்டும் என்னும் ஆவல் உள்ளது. ஆகையினால் இங்கு மரித்து, உயிரோடு எழுப்பப்பட்ட லாசருவைக் காண கூடி வருகிறார்கள்.

கொலைசெய் (to kill) - ἀποκτείνω - **apokteinoo** - 615

வினைச்சொல் - கொல், அழி, கொலைசெய் - நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, மரண தண்டனை கொடுக்கப்படுதல் என்பது இதன் பொருளல்ல. ஒரு மனுஷனைப் பலவந்தமாகக் கொலைபண்ணுதல் என்னும் பொருளையே இந்த வாக்கியம் தரும். (மத் 14:5; லூக்கா 9:22;லூக்கா 20:14;அப் 3:15; அப் 7:52; அப் 23:12) மார்க்கத் தலைவர்கள் தங்களுடைய ஆசையை நிறைவேற்றுவதற்காக ஒரு குற்றமும் செய்யாதஇயேசுகிறிஸ்துவைக் கொலை செய்யத் துணிந்து விடுகிறார்கள்.

"லாசருவினிமித்தமாக யூதர்களில் அநேகர் போய், இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" - பிரதான ஆசாரியர்கள் லாசருவைக் கொலைசெய்ய வேண்டுமென்று ஆலோசனை பண்ணியது ஜனங்களில் சிலருக்குப் பிடிக்கவில்லை. இயேசுவைக் கொலைசெய்வதற்கும் அவர்கள் சம்மதம் தெரிவிக்கவில்லை. அப்பேர்ப்பட்ட ஜனங்கள் பிரதான ஆசாரியர்களிடத்திலிருந்து பிரிந்து இயேசு கிறிஸ்துவிடம் வருகிறார்கள்.

12 அதிகாரம்

57. வெற்றிப்பவனி - (சக 9:9;மத் 21:1; மாற்க 11:1; லூக் 19:28)

யோவான் 12:12 மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு,

யோவான் 12:13 குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்.

யோவான் 12:14 அல்லாமலும்: சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக் குட்டியின்மேல் ஏறிவருகிறார் என்று எழுதியிருக்கிறபிரகாரமாக,

யோவான் 12:15 இயேசு ஒரு கழுதைக் குட்டியைக் கண்டு அதின்மேல் ஏறிப்போனார்.

யோவான் 12:16 இவைகளை அவருடைய சீஷர்கள் துவக்கத்திலே அறியவில்லை. இயேசு மகிமையடைந்த பின்பு, இப்படி அவரைக் குறித்து எழுதியிருக்கிறதையும், தாங்கள் இப்படி அவருக்கு செய்ததையும் நினைவு கூர்ந்தார்கள்.

யோவான் 12:17 அன்றியும் அவருடனே கூட இருந்த ஜனங்கள் அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து வெளியே வரவழைத்து, அவனை உயிரோடே எழுப்பினாரென்று சாட்சி கொடுத்தார்கள்.

யோவான் 12:18 அப்படிப்பட்ட அற்புதத்தை அவர் செய்தார் என்று ஜனங்கள் கேள்விப்பட்டதினால் அவர்கள் அவருக்கு எதிர்கொண்டு போனார்கள்.

யோவான் 12:19 அப்பொழுது பரிசேயர் ஒருவரையொருவர் நோக்கி: நீங்கள் செய்கிறதெல்லாம் வீணென்று அறிகிறதில்லையா? இதோ, உலகமே அவனுக்குப் பின்சென்று போயிற்றே என்றார்கள்.

"மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறார்" - பஸ்கா பண்டிகைக்கு முந்திய நான்காவது நாள். நிசான் மாதம் 11 ஆம் நாள். இயேசு கிறிஸ்து எருசலேம் நகரத்திற்கு இரண்டாம் முறையாகப் பவனி வரும் நாள். (மாற்கு 11:1-7;லூக்கா 19:29-35; யோவான் 12:12). இயேசு கிறிஸ்து பெத்தானியாவை விட்டு வருகிறார். எருசலேமிலிருந்து திரளான ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை வரவேற்கிறார்கள். (மாற்கு 11:8-10; லூக்கா 19:36-40; யோவான் 12:12-19) இயேசு எருசலேம் பட்டணத்திற்காக அழுகிறார் (லூக்கா19:41-44) அவர் தேவாலயத்திற்குள் சென்று, அங்கு சுற்றிப் பார்த்துவிட்டு, மறுபடியும் பெத்தானியாவிற்குத் திரும்பி வந்து, இரவில் தங்குகிறார். (லூக்கா 11:11)

ஆர்ப்பரித்தார்கள் (cried) - κράζω - krazoo - 2896

வினைச்சொல் - கூப்பிடு, அலறு, ஆர்ப்பரி, கூக்குரலிடு, சொல், சத்தமிடு, அமளியுண்டாக்கு, ஓலமிடு (shouting out) (யோவான் 12:44; யோவான் 7:37; யோவான் 11:43; யோவான் 18:40; யோவான் 19:6,15; மத் 12:19; மத் 15:22)

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 5

"ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப் பட்டவர்" (யோவான் 12:13; சங் 118:25-26) "ஓசன்னா" என்பது அரமாயிக் மொழிச்சொல். ஆண்டவரே எங்களை இரட்சியும், ஆண்டவரே எங்களுக்கு உதவி புரியும் என்பது இந்த வார்த்தையின் பொருள்.

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 6

"சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, உன் ராஜா கழுதைக் குட்டியின்மேல் ஏறிவருகிறார்" (யோவான் 12:15; சக 9:9)

12 அதிகாரம்

மகிமையடைந்தார் (glorified) - δοξάζω - doxazoo - 1392

வினைச்சொல் - மகிமைப்படுத்து, புகழ், மேன்மைப்படுத்து, உயர்த்து - யோவான் சுவிசேஷத்தில் இந்த வாக்கியம்23தடவைபயன்படுத்தப்பட்டிருக்கிது. மற்ற சுவிசேஷங்களில் மொத்தம் 14 தடவைகளே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

"அவருடனேகூட இருந்த ஜனங்கள் அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து வெளியே வரவழைத்து, அவனை உயிரோடே எழுப்பினாரென்று சாட்சி கொடுத்தார்கள்" - இயேசு கிறிஸ்து லாசருவை உயிரோடு எழுப்பிய போது, இவர்கள் அந்த அற்புதத்தைத் தங்கள் கண்களால் கண்டார்கள். தாங்கள் கண்ட சத்தியத்திற்கு இவர்கள் சாட்சி பகர்ந்தார்கள். இவர்களுடைய சாட்சியின்மூலமாக ஏராளமானோர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். (யோவான் 12:17-18).

"பரிசேயர் ஒருவரையொருவர் நோக்கி: நீங்கள் செய்கிறதெல்லாம் வீணென்று அறிகிறதில்லையா?" - இயேசு கிறிஸ்துவிடம் திரளான ஜனங்கள் போவதைப் பரிசேயர்கள் கண்டு, மிகுந்த வேதனையடைகிறார்கள். அதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டுமென்று ஆலோசனை பண்ணுகிறார்கள். ஆனாலும் பரிசேயர்கள் ஜனங்களுக்காக பயப்படுகிறார்கள். அவர்கள் எல்லோரும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறபடியினால், தங்களுக்கு விரோதமாக எழும்பி, தங்களை அழித்து விடுவார்களோ என்று பரிசேயர்கள் பயப்படுகிறார்கள்.

பிரயோஜனப்படு (prevail) - ὠφελέω - oopheleoo - 5623

வினைச்சொல்- உதவிசெய், பிரயோஜனப்படு,குணமடை, ஆதாயப்படு, பலனடைலாபப்படு(profit). (profit) (மத் 15:5,மத் 16:26,மாற்கு 7:11; மாற்கு8:36,யோவான்6:63,ரோமர்2:25; 1கொரி 13:3; 1கொரி 14:6;கலா 5:2; எபி4:2;எபி13:9);(be advantaged) (லூக்கா 9:25); (be bettered) (மாற்கு 5:26);(prevail)(மத் 27:24; யோவான் 12:19). தமிழ் வேதாகமத்தில் "வீண்" என்று வாசிக்கிறோம். கிரேக்க மொழியில்"பிரயோஜனமில்லை" என்றுள்ளது.

"இதோ,உலகமே அவனுக்குப் பின்சென்று போயிற்றே" - ஏராளமான ஜனங்கள் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிச் சென்றார்கள். முழு உலகமும் இயேசுவைப் பின்பற்றிச் சென்றால், நலமாக இருக்கும். புதிய பூமியில் இந்த வாக்கியம் அப்படியேநிறைவேறும். (வெளி 21; 2பேதுரு 3:13; ஏசா 65:17; ஏசா 66).

58. தேவாலயத்தில் இயேசு கிறிஸ்துவின் உபதேசம்

(1) சூழ்நிலை - கிரேக்கர்கள் இயேசுவை தேடுகிறார்கள்

யோவான் 12:20 பண்டிகையில் ஆராதனை செய்யவந்தவர்களில் சில கிரேக்கர் இருந்தார்கள்.

யோவான் 12:21 அவர்கள் கலிலேயாநாட்டுப் பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்புவினிடத்தில் வந்து: ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அவனைக் கேட்டுக்கொண்டார்கள்.

யோவான் 12:22 பிலிப்பு வந்து, அதை அந்திரேயாவுக்கு அறிவித்தான்; பின்பு அந்திரேயாவும் பிலிப்புவும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள்.

"பண்டிகையில் ஆராதனை செய்ய வந்தவர்களில் சில கிரேக்கர் இருந்தார்கள்" - இவர்கள் புறஜாதி மார்க்கத்திலிருந்து யூதமார்க்கத்திற்கு மாறியவர்கள். (1இராஜா 8:41-42; மத் 23)

ஆராதனைசெய் (worship) - προσκυνέω - proskyneoo - 4352

வினைச்சொல் - பணிந்துகொள், தொழுதுகொள், வணங்கு, தாழவிழு, ஆராதனைசெய் (to prostrate one's self, do homage) - தாழ விழுந்து வணங்குதல். இவர்கள் தேவாலயத்திற்குவரும்போதுபுறஜாதியாருக்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் வெளிப்பிரகாரத்தில் கூடிவந்து ஆராதனை செய்வார்கள். (வெளி 11:2). அவர்கள் யூதமார்க்கத்திற்கு மாறவில்லையென்றால், பண்டிகையின் போஜனத்தில் பங்குபெற அவர்களுக்கு அனுமதியில்லை. (யாத் 12:48).

யோவான் - தொகுப்புரை

12 அதிகாரம்

"பிலிப்பு" - பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவன். (மத் 10:3,மாற்கு 3:18;லூக்கா 6:14; அப் 1:13). இயேசு கிறிஸ்து பிலிப்புவை அழைக்கிறார். (யோவான் 1:43-50). நாத்தான்வேலின் சகோதரன் (யோவான் 1:45-50; யோவான் 1:41). பிலிப்புவின் பெயர் காணப்படும் வசனங்கள். (யோவான் 6:5-7; யோவான் 12:20-22; யோவான் 14:8-13).

"அந்திரேயா" - பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவன் (மத் 10:2; மாற்கு 3:18; லூக்கா 6:14; அப் 1:13). மீன்பிடிக்கிறவன், பேதுருவின் சகோதரன்.(மத் 4:18; யோவான் 1:41-44). யோவான் ஸ்நானனின் சீஷனாக இருந்தான். (யோவான் 1:40). அந்திரேயாவின் பெயர் காணப்படும் வசனங்கள் (மாற்கு 13:3-4; யோவான் 6:8; யோவான் 12:20-22).

(2) இயேசு தமது மரணத்தை முன் குறித்துக் கூறுகிறார் -(மத் 27:45)

யோவான் 12:23 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது.

யோவான் 12:24 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்.

தீர்க்கதரிசன எண் - 24

"மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்த தேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்" (யோவான் 12:23-24) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.இயேசு கிறிஸ்து பாடுகளை அனுபவிக்கும் வேளை வந்துவிட்டது. மகிமைப்படும் வேளை யூதருக்கும் புறஜாதியாருக்கும் நடுவில் இருக்கும் திரை அகற்றப்படும்போது வரும். அந்தத் திரை அகற்றப்படும்போது, யூதரும், புறஜாதியாரும் ஒரே சரீரமாக இருப்பார்கள். (மத் 27:51; 1கொரி 12:13; ரோமர் 1:16; ரோமர் 10:9-14; எபே 2:12-18; எபே 3:6; கலா 3:28)

மணி (corn) - κόκκος-kokkos- 2848

ஆண்பால் பெயர்ச்சொல் - விதை, மணி (grain) (மத் 13:31; மத் 17:20; மாற்கு 4:31;லூக்கா 13:19; லூக்கா 17:6; யோவான் 12:24; 1கொரி 15:37).

இயேசு கிறிஸ்து தம்மை ஒரு கோதுமை மணிக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார். அவருடைய மரணம் கோதுமை மணி விதைக்கப்படுவதற்கு ஒப்பாயிருக்கிறது. விதை நிலத்திற்குள் இருப்பதுபோன்று, இயேசு கிறிஸ்துவையும் அடக்கம் பண்ணினார்கள். விதைக்கப்பட்ட விதை முளைத்து எழும்பும். அதுபோல இயேசு கிறிஸ்துவும் உயிர்த்தெழுந்தார். முளைக்கும் விதை பயிராகி, பலன் தரும். அதுபோலவே, உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளுக்கு நித்திய ஜீவனைத் தருகிறார். இயேசு கிறிஸ்து மகிமையடைந்திருக்கிறார். மிகுந்த பலனைத் தருகிறார். இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்தாத சபை மகிமையான சபையாக இருக்க முடியாது. (யோவான் 7:37-39; அப் 2:33; எபே 1)

இயேசுகிறிஸ்துவின் மரணமும், உயிர்த்தெழுதலும் விளக்கப்பட்டுள்ள விதம்

1. தேவை - அவருடைய மரணம் அவசியமானது
2. காரணம் - நிலத்தில் விழுந்தது.
3. இடம் - நிலத்திற்குள்
4. தற்போதுள்ள நிலைமை - செத்திருக்கிறது.
5. சுயநலமின்மை - தனித்திருக்கவில்லை.
6. உயிர்த்தெழுதல் - கொடுக்கிறது
7. நோக்கம் - மிகுந்த பலன், உலகத்தின் மீட்பு

12 அதிகாரம்

8. ஆச்சரியம் - மரணமும், உயிர்த்தெழுதலும் ஆச்சரியமான காரியம்.

நாம் விதையை நிலத்தில் விதைக்கிறோம். அந்த விதை முளைத்து, அதிகமாகப் பலன் தரும் என்று நம்புகிறோம். அதுவும் பலன் தருகிறது. அதன் பலனைப் புசிக்கிறோம். ஆனாலும், இந்தக் காரியங்களெல்லாம் எப்படி நடைபெறுகிறது என்று நமக்குத் தெரியவில்லை. இது நமக்கு இரகசியமாகவே இருக்கிறது. பூமி, காற்று, தண்ணீர், சூரியஒளி ஆகியவையெல்லாம் சேர்ந்து, ஒரு புதிய ஜீவனை எப்படி உண்டுபண்ணுகிறது என்று நமக்குப் புரியவில்லை. ஆனாலும், நமது கண்களுக்கு முன்பாகவே விதைக்கப்படும் விதை முளைக்கிறது. இந்தக் காரியம் நமக்குப் புரியவில்லையென்றாலும், நாம் இதை விசுவாசிக்கிறோம். அதுபோலவே, தேவனுடைய கிரியைகளும் நமக்கு ஆச்சரியமாகவும், இரகசியமாகவும் உள்ளது. இயேசு கிறிஸ்து மரித்தார். அடக்கம்பண்ணப்பட்டார். மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். திரளான ஜனங்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இந்தச் சத்தியம் நமக்கு ஆச்சரியமானதாகவும், புரியாத இரகசியமானதாகவும் இருக்கின்ற போதிலும் இதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

(3) சீஷத்துவத்திற்கு பரீட்சை - (12:25-26) (மத் 16:24)

யோவான் 12:25 தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்.

யோவான் 12:26 ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.

"தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" - வேதாகமத்தில் இதே போன்ற பொருளைக் கூறும் வசனங்கள் பல உள்ளன. (யோவான் 12:25; நீதி 13:7; மத் 10:39; 2கொரி 6:4-10; 2கொரி 12:1-11;எபே 3:17-19; பிலி 3:7).

"தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன்" - வேதாகமத்தில் இரண்டு விதமான சிநேகத்தைக் குறித்து நாம் வாசிக்கிறோம். ஒன்று நம்மை நாமே சிநேகிப்பது. அல்லது மற்ற மனுஷரையோ, உலகப்பொருளையோ சிநேகிப்பது. இதற்கான கிரேக்க வார்த்தை "பிலேயோ" **(phileo).** மற்றொரு சிநேகம் தேவனிடத்தில் சிநேகமாக இருப்பது. இதற்கான கிரேக்க வார்த்தை "அகாபோ" **(agapao).** யோவான் 11:3,36 ஆகிய வசனங்களில் பிலேயோ சிநேகமே கூறப்பட்டிருக்கிறது. கிறிஸ்து லாசருவினிடத்தில் பிலேயோ சிநேகத்தைக் காண்பித்தார். யோவான் 11:5 ஆவது வசனத்தில் பிலேயோ சிநேகம் கூறப்படவில்லை. ஏனெனில் அங்கு லாசருவின் சகோதரிகளைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது.

சிநேகி (loveth) - **φιλέω** - **phileoo** - 5368

வினைச்சொல் - விரும்பு, நேசி, முத்தஞ்செய், அன்பாயிரு, சிநேகி, அன்புகூர்

சிநேகித்தல் (loveth) - **ἀγαπάω** - **agavaoo** - 25

வினைச்சொல் - அன்பு செலுத்துதல், சிநேகித்தல், அன்பு கூருதல்

(அ)தேவன் மனிதனிடம் காட்டும் அன்பு யோவா. 3:16

(ஆ)கிறிஸ்து தனி மனிதனிடம் காட்டும் அன்பு மாற்கு 10:21

(இ)ஒரு மனிதன் மற்ற மனிதர்களிடம் காட்டும் அன்பு 2கொரி. 12:15

யோவான் - தொகுப்புரை

12 அதிகாரம்

(ஈ) மனிதர் உலகப்பிரகாரமான பொருட்களிடம் காட்டும் அன்பு லூக். 11:43. இந்தச் சொல் பொதுவாக தன்னலம் கருதாத நீதியான கிறிஸ்தவ அன்பைக் குறிக்கும்.

ஜீவன் (life) - **ψυχή** - **psychee** - 5590

பெண்பால் பெயர்ச்சொல் - பிராணன், ஜீவன், ஆத்துமா, மனம், உயிர் (மாற்கு 8:36)

இழந்துபோ (lose) - **ἀπόλλυμι** - **apollymi** - 622

வினைச்சொல் - இழந்துபோ, கொலை செய், அழி, கெடு, கொல், சங்கரி (யோவான் 3:15).

"தன் ஜீவனை வெறுக்கிறவன்" - (லூக்கா 14:26)

"ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக் கடவன்" - (யோவான் 10:26)

(4) ஜெபம் - வானத்திலிருந்து உண்டான சத்தம் - (12:27-29) (மத் 3:17; 17:5)

யோவான் 12:27 இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்.

யோவான் 12:28 பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது: மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று.

யோவான் 12:29 அங்கே நின்று கொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள்: இடிமுழக்கமுண்டாயிற்று என்றார்கள். வேறு சிலர்: தேவதூதன் அவருடனே பேசினான் என்றார்கள்.

"என் ஆத்துமா கலங்குகிறது" - (யோவான் 11:33; யோவான் 13:21; யோவான் 14:1,27)

"பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்" - இயேசு கிறிஸ்து இந்த வேளையினின்று இரட்சியும் என்று பிதாவிடம் ஜெபிக்க மாட்டார். ஏனெனில் அவர் இதற்காகவே இந்த வேளைக்குள் வந்திருக்கிறார்.

"சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று" - மத் 3:17; மத் 17:5; உபா 5:22-25 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிற பிரகாரமாக மனுஷர் கேட்கக்கூடிய விதத்தில் வானத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று.

"மகிமைப்படுத்தினேன்" - சாத்தானைத் தோற்கடித்ததன் மூலமாக கிறிஸ்து தேவனை மகிமைப்படுத்துவதைக் குறிக்கும். (மத் 4:1-11)

"இன்னமும் மகிமைப்படுத்துவேன்" - கல்வாரி சிலுவையிலே இயேசு கிறிஸ்து சாத்தானை முழுமையாகத் தோற்கடிப்பதைக் குறிக்கும். (கொலோ 2:14-17).

"அங்கே நின்றுகொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள்: இடிமுழக்கமுண்டாயிற்று என்றார்கள்" - ஜனங்கள் ஒரு சத்தத்தைக் கேட்டார்கள். அந்த சத்தத்திலுள்ள வார்த்தைகளை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இடிமுழக்கம் போன்ற ஒரு தொனியைக் கேட்டார்கள். பவுலுக்கு உண்டான கிறிஸ்துவின் சத்தம்போன்றுள்ளது. (அப் 9:7= அப் 22:9)

(5) கிறிஸ்துவின் சிலுவையில் உலகத்திற்கு நியாயத்தீர்ப்பு - (கலா 3:13; கொலோ 2:14; எபி 2:14; 1பேதுரு 2:24)

யோவான் 12:30 இயேசு அவர்களை நோக்கி: இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று.

யோவான் 12:31 இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்.

12 அதிகாரம்

யோவான் 12:32 நான் பூமியிலிருந்து உயர்த்தப் பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்.

யோவான் 12:33 தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப் போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்.

"இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று" - என்று இயேசு கிறிஸ்து புறஜாதியாரிடம் கூறுகிறார். புறஜாதியார் இயேசு கிறிஸ்துவிடம் வந்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவில் அவர்கள் வைத்திருக்கும் விசுவாசத்தை உறுதிபண்ணுவதற்காகவே இந்த சத்தம் உண்டாயிற்று.

தீர்க்கதரிசன எண் - 25

"இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான். நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" (யோவான் 12:31-32) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நியாயத்தீர்ப்பு (judgment) - κρίσις - krisis - 2920

பெண்பால் பெயர்ச்சொல் - நியாயத்தீர்ப்பு, நியாயம், ஆக்கினை, தீர்ப்பு - இந்த வார்த்தை நியாயத்தீர்ப்பு **(judgment)** என்று 41 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மற்ற மொழி பெயர்ப்புக்கள். **(damnation)** (மத் 23:33; மாற்கு 3:29; யோவான் 5:29); **(condemnation)** (யோவான் 3:19; யோவான் 5:24); **(accusation)** (2பேதுரு 2:11; யூதா 1:9) சிலுவையின்மீது இந்த உலகத்திற்கு உண்டாயிருக்கிற நியாயத்தீர்ப்பைக் குறித்து, இந்த வாக்கியம் விளக்குகிறது.

அதிபதி (prince) - ἄρχων - archoon - 758

ஆண்பால் பெயர்ச்சொல் - தலைவன், அதிகாரி, அதிபதி, பிரபு - சாத்தானே உலகத்தின் அதிபதி. **(ruler of the world system)** (யோவான் 12:31; யோவான் 14:30; யோவான் 16:11) ; **(ruler of demons)** (மத் 12:24; மாற்கு 3:22); **(ruler of the air)** (எபே 2:2).

"இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" - தள்ளப்படுதல் என்பதற்கு யோவான் 9:34-35; மத் 21:39; மாற்கு 12:8; லூக்கா 20:15; அப் 7:58 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொல்லே இங்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" - உயர்த்தப்படுதல் என்பதன் கிரேக்க வார்த்தை "ஹுப்ஸோ" **(hupsoo)** என்பதாகும். இதற்கு உயர்த்துதல், வானத்தில் உயர்த்துதல் என்று பொருள். **(to lift up on high, exalt)** (மத் 11:23; மத் 23:12; லூக்கா 1:52; லூக்கா 10:15; லூக்கா 14:11; லூக்கா 18:14; அப் 2:33; அப் 5:31; அப் 13:17; 2கொரி 11:7; 1பேதுரு 5:6) இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, உயர்த்தப்படுகிறார். சிலுவையில் உயர்த்தப்படுவதை இந்த வாக்கியம் குறிப்பதோடு இயேசு கிறிஸ்து வானத்திற்கு உயர்த்தப்படுவதையும் குறிப்பிடுகிறது. (யோவான் 3:14; யோவான் 8:28; யோவான் 12:32,34). **(lift up)** (யாக் 4:10)

உயர்த்தப்படு (lifted up) - ὑψόω - hypsooo - 5312

வினைச்சொல் - உயர்த்து, உயர்த்தப்படு

12 அதிகாரம்

"எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" - இயேசு கிறிஸ்து பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது அவர் எல்லோரையும் தம்மிடத்தில் இழுத்துக் கொள்ளுவார். பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும், இயேசு கிறிஸ்து செய்த அற்புதங்கள் மூலமாகவும் ஜனங்களைத் தம்மிடமாக இழுத்துக் கொள்வார். விசுவாசிகள் மூலமாக நடைபெறும் அற்புதங்கள் சுவிசேஷச் செய்தியை உறுதிபண்ணுகிறது. (யோவான் 7:37-39; யோவான் 14:12; அப் 2:33,மாற்கு 16:17-20; லூக்கா 24:49; எபி 2:3-4) இயேசு கிறிஸ்துவின் மகிமையின் நாளிலும், அவருடைய ஆளுகையின்போதும் எல்லா மனுஷரும் அவரிடமாக இழுத்துக் கொள்ளப்படுவார்கள். (ஆதி 49:10; ஏசா 11:10; எபே 1:10)

(6) இயேசுவிடம் கேட்கப்பட்ட கேள்வி

யோவான் 12:34 ஜனங்கள் அவரை நோக்கி: கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம், அப்படியிருக்க மனுஷகுமாரன் உயர்த்தப்பட வேண்டியதென்று எப்படிச் சொல்லுகிறீர்; இந்த மனுஷகுமாரன் யார் என்றார்கள்.

"கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார்" - (சங் 89:29; சங் 110:4; ஏசா 9:6-7; தானி 7:14)

(7) இயேசு ஜனங்களுக்கு புத்திமதி கூறிவிட்டு அவர்களை விட்டு மறைகிறார்

யோவான் 12:35 அதற்கு இயேசு: இன்னும் கொஞ்சக்காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்: இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்: இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான்.

யோவான் 12:36 ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்றார். இவைகளை இயேசு சொல்லி, அவர்களை விட்டு மறைந்தார்.

"இன்னும் கொஞ்சக்காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்" - மேசியா எப்போதும் இருப்பார். (யோவான் 12:34) சூரியனுடைய ஒளியை நாம் பகலில் மட்டுமே காணமுடியும். இரவில் காணமுடியாது. ஆனாலும் சூரியன் பகலிலும், இரவிலும் உள்ளது. அதுபோலவே மேசியா எப்போதும் இருந்தாலும், அவரைக் காண்பதற்கும் ஒரு காலம் உண்டு. ஆகையினால் இயேசு கிறிஸ்து ஜனங்களிடம் "இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக் கையில் நடவுங்கள்" என்று கூறுகிறார். இருள் சீக்கிரமாக வந்து விடும். அப்போது ஜனங்கள் இயேசுகிறிஸ்துவைத் தேடுவார்கள். ஆனாலும் கண்டுகொள்ள மாட்டார்கள். (லூக்கா 17:22; யோவான் 7:34; மத் 21:43). இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான்.

59. தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக ஜனங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை-(மத் 13:10)

யோவான் 12:37 அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை.

யோவான் 12:38 கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறும்படி இப்படி நடந்தது.

யோவான் 12:39 ஆகையால் அவர்கள் விசுவாசிக்கமாட்டாமல்போனார்கள். ஏனெனில் ஏசாயா பின்னும்:

யோவான் 12:40 அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும் படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக் காமலிருக்கும்படிக்கும்,அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார் என்றான்.

12 அதிகாரம்

யோவான் 12:41 ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக்குறித்துப் பேசுகிறபோது இவைகளைச் சொன்னான்.

"அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை" - இயேசு கிறிஸ்து பல அற்புதங்களைச் செய்தார். அவர்களுக்கு முன்பாகவே அவைகளைச் செய்தார். தங்கள் கண்களால் அந்த அற்புதங்களையெல்லாம் கண்டார்கள். ஆனாலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை. இன்றைய தினமும் ஏராளமான ஜனங்கள் அற்புதங்களைக் காண்கிறார்கள். ஆனால் அவர்கள் இயேசு கிறிஸ்துவைக் காணபதில்லை.

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 7

"கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது" (யோவான் 12:38; ஏசா 53:1)

"கர்த்தருடைய புயம்" - கர்த்தருடைய அற்புதமான வல்லமையைக் குறிப்பதற்கு கர்த்தருடைய புயம் என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (சங் 98:1; ஏசா 52:10; ஏசா 53:1; ஏசா 59:16; ஏசா 63:5; அப் 4:30; அப் 11:21; அப் 13:11).

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 8

"அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும்படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும்படிக்கும், அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார்" (யோவான் 12:40; ஏசா 6:9-10)

ஜனங்களுக்கு கண்கள் இருந்தும், குருடாயிருக்கிறார்கள். இருதயம் இருந்தும் உணராமலிருக்கிறார்கள். (மத் 13:14-15; 2கொரி 2:15-16; யோவான் 9:39-41; யோவான் 15:22-25)

விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்கள்

1. மனமாற்றம் - தேவனோடு நடப்பதற்கு ஏதுவாக நமது சரீரப் பிரகாரமான நடையில் மாற்றம்.(சங் 19:7; சங் 51:13; ஏசா 6:10; ஏசா 60:5; மத் 13:15; மத் 18:3; மாற்கு 4:12;லூக்கா 22:32; யோவான் 12:40; அப் 3:19; அப் 15:3; அப் 28:27; யாக் 5:19-20)

2. சரீர சுகமாதல் - தேவனிடத்தில் புதிய ஆரோக்கியதைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக சரீர ஆரோக்கியத்தில் மாற்றம்.(யாத் 15:26; சங் 91; சங் 103:3;ஏசா 6:10;ஏசா 53; மத் 8:17;யோவான் 10:10; ரோமர் 8:11; 1பேதுரு 2:24; 3யோவான் 1:2; யாக் 5:14-16)

மனுஷருடைய இரட்சிப்பு என்பது அவர்களுடைய ஆத்துமாவின் இரட்சிப்பையும்,சரீரத்தின் குணமாதலையும் குறிக்கும். (மத் 8:17; மத் 9:5,35; மத் 10:1-8,மத் 12:28; மத் 13:15; யோவான் 10:10; அப் 10:38). இயேசு கிறிஸ்துவால் நமது பாவங்களையும் மன்னிக்க முடியும். நமது சரீர வியாதிகளையும் குணமாக்க முடியும். இதுவே பூரண சுவிசேஷம். இதுவே இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் வல்லமை.

"ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக்குறித்துப் பேசுகிறபோது இவைகளைச் சொன்னான்" - ஏசாயா இயேசு கிறிஸ்துவின் மகிமையைக் கண்டான். ஆறு இடங்களில் இயேசு கிறிஸ்து தம்மையும், ஏசாயாவையும் இணைத்து கூறியிருக்கிறார். இதன் மூலமாக இயேசு கிறிஸ்துவின் தெய்வத்துவமும், அவர் எக்காலத்திற்கும் உரியவர் (pre-existence) என்பதும் தெளிவாகிறது.

60. அதிகாரிகளின் சுபாவம் - (அப் 6:7)

யோவான் 12:42 ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர்நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள்.

யோவான் 12:43 அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்.

12 அதிகாரம்

"அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" - இரண்டு பேர்களுடைய பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது.(யோவான்19:38-39).

"அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" - இந்த வசனத்தில் விரும்புதல் என்பதற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கும் கிரேக்கச் சொல் "அகாபே"(**agapao**). (யோவான் 12:25) மனுஷர் தங்களைப் புகழ வேண்டும். தங்களுக்கு ஐசுவரியம் பெருக வேண்டும். ஆதாயம் வரவேண்டும். இயேசு கிறிஸ்துவின் மூலமாக நிந்தைகள் எதுவும் வரக்கூடாது என்று விரும்பினார்கள். (எபி 11:26; எபி 13:13; 1பேதுரு 4:14)

விரும்பினார்கள் (loved) - **ἀγαπάω** - **agavaoo** - 25

வினைச்சொல் - அன்பு செலுத்துதல், சிநேகித்தல், அன்பு கூருதல்

(அ)தேவன் மனிதனிடம் காட்டும் அன்பு யோவா. 3:16

(ஆ)கிறிஸ்து தனி மனிதனிடம் காட்டும் அன்பு மாற்கு 10:21

(இ) ஒரு மனிதன் மற்ற மனிதர்களிடம் காட்டும் அன்பு 2கொரி. 12:15

(ஈ)மனிதர் உலகப்பிரகாரமான பொருட்களிடம் காட்டும் அன்பு லூக். 11:43. இந்தச் சொல் பொதுவாக தன்னலம் கருதாத நீதியான கிறிஸ்தவ அன்பைக் குறிக்கும்.

61. இயேசு தம்மைப் பற்றி ஜனங்களிடம் கூறிய கடைசி சாட்சி

யோவான் 12:44 அப்பொழுது இயேசு சத்தமிட்டு: என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்.

யோவான் 12:45 என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான்.

யோவான் 12:46 என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்.

யோவான் 12:47 ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற் போனால், அவனை நான் நியாயந் தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந் தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன்.

யோவான் 12:48 என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.

யோவான் 12:49 நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்.

யோவான் 12:50 அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்.

"அப்பொழுது இயேசு சத்தமிட்டு......... கூறினார்" - மிகுந்த சத்தமாகப் பேசினார். (யோவான் 7:27; யோவான் 11:43) இயேசு கிறிஸ்து ஜனங்களோடு பேசிய கடைசி சம்பாஷணை. (யோவான் 12:44-50).

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பின வரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்" - இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசம் அவரோடு முடிந்துபோவதில்லை. இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் அவருடைய பிதாவாகிய தேவனையும் நாம் விசுவாசிக்கிறோம். இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய ஒரேபேறான குமாரன் என்று நாம் விசுவாசிக்கிறோம். (யோவான் 5:23; யோவான் 7:14-19; யோவான் 10:30; யோவான் 12:44-50; யோவான் 13:20).

யோவான் - தொகுப்புரை

12 அதிகாரம்

"நான் உலகத்தில் ஒளியாக வந்தேன் - (லூக்கா 5:32)

நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

1. கிறிஸ்துவின் வார்த்தைகளை விசுவாசிப்பதற்கு ஏதுவாக நாம் அவைகளைக் கேட்க வேண்டும். (யோவான் 12:47; ரோமர் 10:14).

2. கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கைக்கொள்வதற்கு ஏதுவாக நாம் அவைகளை விசுவாசிக்க வேண்டும். (யோவான் 12:47; ரோமர் 10:14).

3. நாம் இரட்சிக்கப்படுவதற்கு ஏதுவாகக் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கைக்கொள்ள வேண்டும். (மத் 10:22; ரோமர் 6:22; எபி 3:6,12-14; எபி 6:11; 1பேதுரு 1:9,13; வெளி 2:26).

"ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை" - இயேசு கிறிஸ்து இப்போது ஜனங்களை நியாயந்தீர்க்கமாட்டார். அவர் உலகத்தை நியாயந்தீர்க்க வராமல், உலகத்தை இரட்சிக்கவந்தார். அவருடைய வார்த்தைகள் கடைசி நாட்களில் அவிசுவாசிகளை நியாயம்தீர்க்கும். (யோவான் 12:45-46)

தீர்க்கதரிசன எண் - 26

"என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந் தீர்க்கும்." (யோவான் 12:48) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

தள்ளிவிடு (rejecteth) - ἀθετέω - **atheteoo** - 114

வினைச்சொல் - மறு, வியர்த்தமாக்கு, தள்ளிவிடு, அசட்டைப் பண்ணு (to count as nothing, despise) (யோவான் 12:48; மாற்கு6:26; மாற்கு 7:9; லூக்கா 7:30; லூக்கா 10:16; 1கொரி 1:19;கலா 2:21; கலா 3:15; 1தெச 4:8; 1தீமோ 5:12; எபி 10:28; யூதா 1:8).

"கடைசி நாள்"-யோவான் சுவிசேஷத்தில் 6 இடங்களில் கடைசி நாளைக் குறித்து வாசிக்கிறோம். ((யோவான் 6:39,40,44,54; யோவான் 11:24; யோவான் 12:4)

"நான் சுயமாய்ப் பேசவில்லை" - இயேசு கிறிஸ்து தமது சுயமகிமைக்காக எதையும் செய்யவில்லை. அவர் பிதாவின் மகிமையையே தேடுகிறார். அவருடைய சித்தத்தையே செய்கிறார். இயேசு கிறிஸ்து உபதேசிக்க வேண்டிய சத்தியங்களை அவரை அனுப்பின பிதா அவருக்குக் கட்டளையிட்டுக் கூறியிருக்கிறார். அதை மட்டுமே இயேசு கிறிஸ்து உபதேசிக்கிறார்.

"அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன்" - இயேசுகிறிஸ்து பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் அவரை அனுப்பின பிதாவே அவருக்குக் கட்டளையிட்டார்" (யோவான் 12:49) இதுவே நித்திய ஜீவனின் வல்லமை. (யோவான் 6:63; யோவான் 12:50; 1யோவான் 3:23; 1யோவான் 5:10-13).

இயேசு கிறிஸ்து ஜனங்கள் மத்தியில் செய்யும் கடைசி ஊழியமாக யோவான் இந்தச் சுவிசேஷத்தில் குறிப்பிடுகிறார். பஸ்காவிற்கு முந்திய இரண்டாம் நாளில் அதாவது நிசான் மாதம் 13 ஆம் தேதி நடைபெற்ற எந்தக் காரியத்தையும் யோவான் இந்த சுவிசேஷத்தில் எழுதவில்லை.

இயேசு கிறிஸ்து எருசலேமிற்கு அதிகாலமே புறப்பட்டுச் செல்கிறார். அவருடைய சீஷர்கள் இயேசு கிறிஸ்துவிடம் அத்திமரத்தைப்பற்றிக் கேள்வி கேட்கிறார்கள். (மாற்கு 11:20-26). இயேசு கிறிஸ்து தேவாலயத்தில் உபதேசம் செய்து, மிகவும் முக்கியமான முதலாவது தீர்க்கதரிசனத்தைக் கூறுகிறார்.(மத்21:23-23:39,மாற்கு11:27-12:44; லூக்கா 20:1-21:38) இயேசு கிறிஸ்து தேவா லயத்தை விட்டு ஒலிவமலைக்குச் செல்கிறார். அங்கு முக்கியமான இரண்டாவதுதீர்க்க தரிசனத்தைக் கூறுகிறார். (மத்24:1-5:46; மாற்கு 13:1-37) அதன்பின்பு அவர் பெத்தானியாவிற்குத் திரும்பி வருகிறார். குஷ்டரோகியாக இருந்த சீமோனுடைய வீட்டிலே இரண்டாவது இராப்போஜனத்தில் பங்கு பெறுகிறார். அங்கு இயேசு கிறிஸ்துவிற்கு இரண்டாம் அபிஷேகம் நடைபெறுகிறது. (மத் 26:1-13; மாற்கு 14:1-9)

13 அதிகாரம்

62. கடைசி பஸ்கா - (மத் 26:20; மாற்கு 14:17; லூக் 22:14)

(1) இயேசுவின் வேளை - (2:4; 7:30; 8:20; 12:23,27; 17:1)

யோவான் 13:1 பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத் திலிருக்கிற தம்முடையவர் களிடத்தில் அன்புவைத்த படியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்.

"பஸ்கா பண்டிகைக்கு முன்னே" - நிசான் மாதம் 14 ஆம் தேதி. பஸ்கா பண்டிகைக்கு ஆயத்தநாள். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நாள். கடைசி இராப்போஜனத்தின் போது, யூதாஸ் காரியோத்து இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுக்க சதிபண்ணுகிறான்.(மத் 26:14-29; மாற்கு 14:10-25; லூக்கா 22:1-38; யோவான் 13:1-38). இந்த சம்பாஷணை இயேசு கிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும் கெத்செமனே தோட்டத்திற்குப் போகும்போது நடைபெற்றது.(மத்26:30-35; மாற்கு 14:26-31; லூக்கா 22:39; யோவான் 14:1-18:1). கெத் செமனே தோட்டத்தில் இயேசுகிறிஸ்து கைது பண்ணப்படுவதும்,பிலாத்து அவரை விசாரிப் பதும் (மத் 26:36-27:31,மாற்கு 14:32-15:19; லூக்கா 22:40-23:25; யோவான் 18:2-19:15). இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதும், அவருடைய சரீரத்தைக் கல்லறையில் அடக்கம் பண்ணுவதும் (மத் 27:31-66; மாற்கு 15:20-47; லூக்கா 23:26-56; யோவான் 19:16-42).

"தம்முடைய (இயேசு கிறிஸ்துவினுடைய) வேளை வந்தது" - (யோவான் 2:4; யோவான்7:30; யோவான் 8:20; யோவான் 12:23,27; யோவான் 17:1; லூக்கா 22:53)

"முடிவுபரியந்தம்" - இது ஒரு குறிப்பிட்ட காலத்தை வெளிப்படுத்தவில்லை. தம்முடைய சீஷர்களுக்காக இயேசு கிறிஸ்து மிகுந்த தாழ்மையோடு ஊழியம் செய்வதற்கு ஆயத்தமாக இருந்ததைக் குறிப்பிடுகிறது.

(2) போஜனம் பண்ணுகிறார்கள் - யூதாஸ் சோதிக்கப்படுகிறான்

யோவான் 13:2 சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக் கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில்;

"அவர்கள் போஜனம்பண்ணிக் கொண்டிருக்கையில்" - கிரேக்க மொழியில் "அவர்கள் போஜனம்பண்ணி முடித்தபின்பு" (ended) என்றிருக்கிறது. இராப்போஜனத்திற்கு அவர்கள் ஆயத்தமாக்கின பின்பு என்று பொருள். (மத் 26:14-19) முதலாவதாக இயேசு கிறிஸ்து சீஷர்களுடைய கால்களைக் கழுவ வேண்டும். (யோவான் 13:3-17; லூக்கா 7:44)

"சீமோனின் குமாரனாகிய யூதாஸ் காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு" - ஏற்கெனவே பிசாசானவன் யூதாஸ்காரியோத்தின் இருதயத்தைத் தூண்டிக் கொண்டிருக்கிறான். (மத் 26:14-19)

(3) இயேசு தாழ்மைக்கு எடுத்துக் காட்டாக சீஷர்களுடைய கால்களைக் கழுவுகிறார்

யோவான் 13:3 தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து;

யோவான் 13:4 போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு,

13 அதிகாரம்

யோவான் 13:5 பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.

"தம்முடைய கையில் பிதா எல்லா வற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்தார்" - அடிமைகளே மற்றவர்களுடைய கால்களைக் கழுவுவார்கள். இயேசு கிறிஸ்து ஒரு அடிமையைப் போன்று தம்மைத் தாழ்த்துகிறார்.தமது தெய்வத்துவம்,அதிகாரம், வரப்போகிற மகிமை ஆகியவற்றைத் தம்மைத் தாழ்த்துவதற்கு முன்பாகச் சிந்தித்துப் பார்க்கிறார். தம்முடைய மேன்மை அதிகமாக இருந்தாலும், இயேசு கிறிஸ்து தம்மைத் தாழ்த்தி, சீஷர்களுடைய கால்களைக் கழுவுகிறார்.

"இயேசு கிறிஸ்து போஜனத்தை விட்டெழுந்தார்" - போஜன ஆயத்தம் முடிவு பெற்ற பின்பு, இயேசு கிறிஸ்து போஜன மேஜையிலிருந்து எழுந்து, தமது சீஷர்களுடைய கால்களைக் கழுவத் துவங்குகிறார். சீஷர்கள் தங்களுக்குள் யார் பெரியவன் என்று விவாதம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்.(லூக்கா 22:24). இயேசு கிறிஸ்து அவர்களுடைய பெருமையின் ஆவியைக் கடிந்து கொண்டார். ஒரு சிறுபிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அவர்கள் சிறுபிள்ளையைப்போல இருக்க வேண்டும் என்று உபதேசம் பண்ணினார். ஒருவருக்கொருவர் அதிகாரம் செலுத்த முயற்சி பண்ணக்கூடாது. இயேசு கிறிஸ்து ஊழியம் கொள்ள வராமல், ஊழியம் செய்ய வந்தார். (மத் 18:1-10). பல சமயங்களில் இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களின் பெருமையான ஆவியைக் கடிந்து கூறியிருக் கிறார்.(மத் 20:20-28; மாற்கு 10:35-45) வருஷங்கள் சென்று விட்டதால், சீஷர்கள் இந்த உபதேசத்தை மறந்திருக்கலாம். அவர்கள் உலகப் பெருமையையும், உலக மகிமையையும் நாடியிருக்கலாம். அவர்களுக்குத் தாழ்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறுவதற்காக இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார்.

"வஸ்திரங்களைக் கழற்றிவைத்தார்" - தம்முடைய மேலங்கியைக் கழற்றி வைத்தார். (யோவான் 19:2,5) வேலை செய்யும்போதும், தூங்கும்போதும் யூதர்கள் தங்களுடைய மேலங்கியைக் கழற்றி வைப்பது வழக்கம்.

"ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டார்" - அடிமையானவன் வேலை செய்யும்போது, அரையிலே தன்னுடைய துணியைக் கட்டிக் கொள்ள வேண்டும். யூதாஸ்காரியோத்தின் கால்களை இயேசு கிறிஸ்து முதலாவதாகக் கழுவியதாகச் சிலர் கூறுகிறார்கள். தம்முடைய இரக்கத்தினாலே அவனைச் சூழ்ந்து கொண்டார். ஒரு விரோதியிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதைக் காண்பிப்பதற்காக இயேசு கிறிஸ்து யூதாசின் கால்களைக் கழுவியிருக்கலாம். (யோவான் 13:5,10-12).

"சீஷருடைய கால்களைக் கழுவினார்" - கழுவுதல் என்பதற்கு இங்கு பயன்படுத்தப் பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை "நிப்டோ" **(niptoo)** சரீரத்தில் ஒரு பகுதியைக் கழுவுதல் என்பது இதன் பொருள். (மத் 6:17; மத் 15:2; மாற்கு 7:3; யோவான் 9:7-15; யோவான் 13:5-14; 1தீமோ 5:10) மற்றொரு வார்த்தை "பேப்டோ" **(baptoo)** சரீரத்தை முழுக்குதல் என்பது இதன் பொருள். (வெளி 19:13; யோவான் 13:26; லூக்கா 16:24) பேப்டோ என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்தே பேப்டைஸ் **(baptize)** "ஞானஸ்நானம் கொடுத்தல்" என்னும் சொல் வந்திருக்கிறது. (மத் 3:6)

கழுவு (wash) - **νίπτω** - **niptoo** - 3538

வினைச்சொல் - கழுவு

முழுக்கு (immerse) - **βάπτω** - **baptoo** - 911

வினைச்சொல் - முழுக்கு

துடை (wipe) - **ἐκμάσσω** - **ekmassoo** - 1591

வினைச்சொல்- துடை(யோவான் 11:2; யோவான் 12:3; லூக்கா 7:38,44)

13 அதிகாரம்

(4) பேதுருவின் கலக்கம்

யோவான் 13:6 அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான்.

(5) இயேசு செய்வதை பேதுரு அப்பொழுது அறியவில்லை

யோவான் 13:7 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார்.

"நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுதுநீ அறியாய், இனிமேல் அறிவாய்" - என்று இயேசு கிறிஸ்து சீமோன் பேதுருவிடம் கூறுகிறார். தாம் செய்து கொண்டிருக்கும் காரியத்தின் நோக்கத்தை இயேசுகிறிஸ்துவிரைவில் தமது சீஷர் களுக்கு அறிவிப்பார். யோவான் 13:12-17 ஆகிய வசனங்களில் தாம் சீஷர்களின் கால்களைக் கழுவியதற்கான காரணங்களை இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

(6) தனது கால்களைக் கழுவக்கூடாது என்று பேதுரு கூறுகிறான்

யோவான் 13:8 பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார்.

"நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது" - தமது சீஷர்களின் கால்களைக் கழுவுவது இயேசுகிறிஸ்துவிற்கு கண்ணியமான செயல் அல்ல, அவருடைய வயதிற்கு உகந்த செயல் அல்ல என்னும் பொருள்பட பேதுரு இயேசுவிடம் கூறுகிறான். ஒரு சில கிரேக்க வார்த்தைகள் மொத்தமாகச் சேர்க்கப்பட்டு, இந்தப் பொருளைத் தருமாறு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

ஒன்றுமில்லை (never) - οὐ - ou - 3364

எதிர்மறை எச்சம் - மாட்டாது, வேண்டாம், ஒன்றுமில்லை

- μή - mee - மே

எதிர்மறை எச்சம் இல்லாம் - வேண்டாம்

நோக்கி (unto) - εἰς - eis - 1519

முன்னிடைச்சொல் - நோக்கி, மூலம்

'ο - ho - 3588

கிரேக்க மொழியில் சிறப்புச்சுட்டு - குறிப்பிட்ட நபர்களையோ அல்லது பொருட்களையோ குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. வலியுறுத்தும் இலக்கணக்கூறாகவும் பயன் படுத்தப்படுகிறது.

αἰών - aioon - 165

ஆண்பால் பெயர்ச்சொல் - காலம், உலகம், பிரபஞ்சம், அநாதி, சதாகாலங்கள்

(அ) என்றென்றைக்கும் அதாவது கடந்த காலத்தில் - யோவான் 6:5; 80:32

(ஆ) ஒரு குறிப்பிட்ட காலம் அதாவது இம்மை அல்லது மறுமை - மத். 12:32; மாற். 10:30

"நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை" - என்று இயேசு கிறிஸ்து பேதுருவிடம் கூறுகிறார். சீஷர்களுடைய கால்களைக் கழுவுவதைவிட ஒரு மேலான காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் தங்களைத் தாழ்த்த வேண்டும் என்னும் உபதேசத்தை இயேசு கிறிஸ்து நடைமுறையில் செயல்படுத்திக் காண்பித்துக் கொண்டிருக்கிறார். நமது ஆத்துமாவில் பெருமை வரக்கூடாது. பெருமை நமது ஆத்துமாவை அழித்துப்போடும். (மத் 18:1-8; மத் 23:8-12; லூக்கா 14:7-11; லூக்கா 18:14;1பேதுரு 5:1-8)

யோவான் - தொகுப்புரை

13 அதிகாரம்

(7) பின்பு பேதுரு தன் கைகளையும் தலையையும் கழுவ வேண்டுமென்று கூறுகிறான்

யோவான் 13:9 அதற்குச் சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும், என் தலையையுங்கூட கழுவவேண்டும் என்றான்.

"ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என் கைகளையும், என் தலையையுங்கூட கழுவவேண்டும்" - என்று பேதுரு இயேசுவிடம் கூறுகிறான். ஆவிக்குரிய சுத்திகரிப்பைக் குறித்து, இயேசு கிறிஸ்து கூறுவதை பேதுரு கடைசியாகப் புரிந்து கொள்கிறான். ஆகையினால் தம்மை முழுவதுமாகக் கழுவ வேண்டுமென்று இயேசுவிடம் விண்ணப்பம் பண்ணுகிறான்.

(8) யூதாசைத் தவிர எல்லோரும் சுத்தமாயிருக்கிறார்கள்

யோவான் 13:10 இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்.

யோவான் 13:11 தம்மைக் காட்டிக் கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார்.

"முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்" - பஸ்காவிற்கு ஆயத்தம் பண்ணுவதற்காக இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் இரண்டு தடவை ஸ்நானம் பண்ணியிருந்திருப்பார்கள். ஆகையினால் அவர்களுடைய சரீரங்களில் அழுக்கு இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஸ்நானம் பண்ணிய இடத்திலிருந்து பஸ்காவைப்புசிக்கும் இடம் வரையிலும் அவர்கள் தங்கள் பாதங்களால் நடந்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய பாதங்களில் தூசியிருப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் இயேசு, "முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும்" என்று கூறுகிறார். (லூக்கா 7:44)

"நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல" - என்று கூறி இயேசு கிறிஸ்து யூதாஸ்காரியோத்தின் பாவமான நிலைமையைக் குறிப்பிடுகிறார். சீஷர்கள் தங்கள் பாவங்களிலிருந்து கழுவப்பட்டார்கள். ஆனால் யூதாஸ் காரியோத்தோ தன்னுடைய உள்ளத்தில் சாத்தானுக்கு இடம் கொடுத்து, பாவம் செய்யத் துணிகிறான். (யோவான் 13:11).

சுத்தம் (clean) - καθαρός - katharos - 2513

பெயரடை - சுத்தமுள்ள, தூயதான, சுத்தமாயிருக்கிற, சுத்த (pure) (மத் 5:8; அப் 20:26; ரோமர் 14:20; 1தீமோ 1:5; 1தீமோ 3:9; 2தீமோ 1:3; 2தீமோ 2:22; தீத்து 1:15; எபி 10:22; யாக் 1:27; 1பேதுரு 1:22; வெளி15:6;வெளி 21:18,21;வெளி 22:1); (clean) (மத் 23:26; மத் 27:59; லூக்கா 11:41; யோவான் 13:10-11; யோவான் 15:3; அப் 18:6; வெளி 19:8,14); (clear) (வெளி 21:18)

(9) இயேசுவின் தாழ்மை நமக்கு ஓர் எடுத்துக்காட்டு - (மத் 18:2)

யோவான் 13:12 அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக் கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?

யோவான் 13:13 நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்.

யோவான் 13:14 ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.

யோவான் - தொகுப்புரை

13 அதிகாரம்

யோவான் 13:15 நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.

யோவான் 13:16 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப் பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல.

யோவான் 13:17 நீங்கள் இவைகளை அறிந்திருக்கிற படியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

"நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள்" - இயேசு கிறிஸ்துவிற்குப் போதகர், ஆண்டவர் என்று இரண்டு பட்டங்களைக் கொடுக்கிறார்கள். மிகவும் விசேஷித்த ஞானமுள்ளோருக்கு மட்டுமே இவ்வாறு இரண்டு பட்டங்களைக் கொடுப்பது வழக்கம்.

"ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" - இயேசு கிறிஸ்து தம்மைத் தாழ்த்தி, தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவுகிறார். இயேசு கிறிஸ்துவே இந்தக் காரியத்தைச் செய்யும்போது, அவருடைய சீஷர்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் நிச்சயமாகவே கழுவ வேண்டும். ஒருவனும் தனது சுய மகிமையைத் தேடாமல் பிறனுடைய நன்மையையும் தேட வேண்டும். (பிலி 2:1-7) மற்றவர்களுடைய கால்களைக் கழுவும் செயல் தன்னைத்தான் வெறுத்து, பிறர்மீது அன்பை வெளிப்படுத்தும் செயலாகும். நான்காம் நூற்றாண்டு வரையிலும், திருச்சபையில் விசுவாசிகளுடைய கால்களைக் கழுவும் வழக்கம் இல்லை. புதிய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களிலும் இந்தப் பழக்கம் இருந்ததாகக் குறிப்பு எதுவும் இல்லை. ஆதரிக்கப்படும் விதவைகள் பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவ வேண்டும். (1தீமோ 5:10) ஆனால் இந்தப் பழக்கம் சபை ஒழுங்காக நியமிக்கப்படவில்லை.

"ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல" - (மத் 10:24-25; லூக்கா 6:40; யோவான் 15:20)

"நீங்கள் இவைகளை அறிந்திருக்கிற படியினால்" - இவைகள் என்பது கால்களைக் கழுவுவதைக் குறிக்காது. தேவையுள்ளவர்களுக்கு உதவி புரிவதைக் குறிக்கும். சிறுமையானவர்களை ஆதரிப்பதைக் குறிக்கும்.

(10) யூதாஸ் தம்மை காட்டிக் கொடுக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 26:20,மாற்கு 14:17;லூக் 22:21)

யோவான் 13:18 உங்களெல்லாரையுங் குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்து கொண்டவர்களை அறிவேன்; ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத் தக்கதாக, என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.

யோவான் 13:19 அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 13:20 நான் அனுப்பு கிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

யோவான் 13:21 இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சாட்சியாகச் சொன்னார்.

யோவான் 13:22 அப்பொழுது யாரைக் குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு, ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்தார்கள்.

13 அதிகாரம்

யோவான் 13:23 அந்தச் சமயத்தில் அவருடைய சீஷரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தான்.

யோவான் 13:24 யாரைக்குறித்துச் சொல்லுகிறாரென்று விசாரிக்கும்படி சீமோன் பேதுரு அவனுக்குச் சைகை காட்டினான்.

யோவான் 13:25 அப்பொழுது அவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டு: ஆண்டவரே, அவன் யார் என்றான்.

யோவான் 13:26 இயேசு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ் காரியோத்துக்குக் கொடுத்தார்.

"உங்களெல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை" - யோவான் 13:10-11 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் யூதாஸ் காரியோத்தை இந்த வசனம் மறுபடியும் குறிப்பிடுகிறது.

"நான்தெரிந்துகொண்டவர்களைஅறிவேன்" - இயேசு கிறிஸ்து இரவு முழுவதும் ஜெபம் பண்ணி, தமது சீஷர்களைத் தெரிந்து கொண்டார். (லூக்கா 6:12-16). அவர் யூதாஸ்காரியோத்தையும் தம்முடைய சீஷரில் ஒருவராகத் தெரிந்து கொண்டார். அவன் துன்மார்க்கனாக இருக்க வேண்டு மென்பதோ, அல்லது அவன் துன்மார்க்கனாக ஆகவேண்டுமென்பதோ இயேசு கிறிஸ்துவின் விருப்பமல்ல. ஆனாலும் யூதாஸ்காரியோத்து இயேசு கிறிஸ்துவிற்கு உண்மையுள்ளவனாக இருக்கமாட்டான், அவரைக் காட்டிக் கொடுப்பான் என்பதை கிறிஸ்து தாமே முன்னறிகிறார். அவன் இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்து, தனக்கு அழிவைத் தேடிக் கொள்வான். இயேசு கிறிஸ்து யூதாஸ்காரியோத்தைத் திருத்துவதற்கு முயற்சி பண்ணுகிறார். ஆனால் அவனோ சாத்தானுக்குத் தன் உள்ளத்தில் இடம் கொடுத்து விடுகிறான். வேதவாக்கியம் நிறைவேறுகிறது.

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 9

"என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" (யோவான் 13:18; சங் 41:9)

யூதாஸ்காரியோத்து இயேசு கிறிஸ்துவோடு அப்பம் புசித்தான். அது அவனுடைய பாவத்தை அதிகரித்தது. கிழக்குத் தேசத்தில் ஒருவன் தன் விரோதியோடு அப்பம் புசிக்கும்போது அந்த விரோதியைத் தன்னுடைய நண்பனாக்கிக் கொள்வான். உப்பிட்டவனுக்குத் துரோகம் செய்யமாட்டான். ஆனால் இங்கு யூதாஸ்காரியோத்து, இயேசு கிறிஸ்துவோடு போஜனம் பண்ணிவிட்டு, அவரையே காட்டிக்கொடுக்கத் தீர்மானம் பண்ணுகிறான்.

"என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" - இந்த வாக்கியம் கிழக்குத் தேசத்தின் வழக்குச் சொல். வளர்த்த கடா மார்பில் பாய்கிறது என்னும் வழக்குச் சொல்லுக்குச் சமமானது. கிழக்குத் தேசத்தில் குதிரையை நன்றாகத் தீனி போட்டு, பராமரித்து வளர்ப்பார்கள். அது தன் எஜமானையே குதிகாலைத் தூக்கி, எத்தி விடும். இது நம்பிக்கைத் துரோகத்தைக் குறிக்கும் வழக்குச் சொல்.

"அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்" - சீஷர்கள் தங்கள் விசுவாசித்தில் வளரவேண்டும். நிலைத்திருக்க வேண்டும். இதற்காகவே இயேசு கிறிஸ்து பல அற்புதங்களைச் செய்திருக்கிறார். அவர்களுக்கும் அற்புதங்களைச் செய்யும் வல்லமையைக் கொடுத்திருக்கிறார்.

"நானே அவர்" - (யோவான் 8:28,58; யோவான் 18:5-6)

"நான் அனுப்புகிறவனை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான்" - (யோவான் 12:44)

13 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 27

"உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 13:21) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இயேசு கிறிஸ்து யூதாஸ்காரியோத்தின் கால்களையும் கழுவுகிறார். இதன்பின்பே இந்தத் தீர்க்கதரிசனத்தை இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

"உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" - (மத் 26:14-16,45-50; மாற்கு 14:10-11; லூக்கா 22:3-6,47-48)

"அப்பொழுது யாரைக்குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்கள் ஐயப்பட்டு, ஒருவரையொருவர் நோக்கிப்பார்த்தார்கள்" - யாருமே யூதாஸ்காரியோத்தைச் சந்தேகப் படவில்லை. (யோவான் 13:22-26) அவன் பணப்பையை வைத்திருக்கிறவன். ஆகையினால் அனைவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரவானாக இருந்தான். அவன் ஒரு நல்ல நடிகனாக இருந்திருக்க வேண்டும். பிசாசின் வல்லமையினால் அவன் தவறு ஒன்றும் செய்யாதவன்போல தன் முகத்தை வைத்திருந்திருக்கலாம்.

"அந்தச் சமயத்தில் அவருடைய சீஷரில் இயேசுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டிருந்தான்" - இந்தச் சுவிசேஷத்தை எழுதிய யோவானை இந்த வாக்கியம் குறிக்கும்.(யோவான் 19:26; யோவான் 20:2; யோவான் 21:7,20-24)

தீர்க்கதரிசன எண் - 28

"நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான்" (யோவான் 13:26) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"துணிக்கை" **(a morsel)** - இதன் கிரேக்கச் சொல் "ப்சோமியோன்" **(psoomion)** என்பதாகும். இந்தச் சொல் இந்த வசனத்திலும், யோவான் 13:27,30 ஆகிய வசனங்களிலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது அவர்களுடைய இராப்போஜனத்தின் ஒரு பகுதி. விருந்து கொடுக்கிறவர் அப்பத்தின் ஒரு பகுதியாகிய துணிக்கையை எடுத்து, ரசத்தில் தோய்த்து, விருந்தினருக்குக் கொடுப்பார். அதைப் பெற்றுக் கொள்ளும் விருந்தினர்கள் கௌரவிக்கப் படுகிறார்கள். இயேசு கிறிஸ்து யூதாஸ்காரியோத்தின் மனச்சாட்சியோடு யோவான் 13:21 ஆவது வசனத்தில் பேசிப்பார்த்தார். இப்பொழுது அவனுடைய இருதயத்தில் பேசிப் பார்க்கிறார். ஆனால் ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை. யூதாஸ்காரியோத்தின் இருதயம் கடினமாயிற்று.

துணிக்கை (sop) - ψωμίον - **psoomion** - 5596

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - துணிக்கை

(11) யூதாஸ் தன்னை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கிறான்

யோவான் 13:27 அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்.

யோவான் 13:28 அவர் இப்படி அவனுடனே சொன்னதின் கருத்தைப் பந்தியிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை.

யோவான் 13:29 யூதாஸ் பணப்பையை வைத்துக் கொண்டிருந்தபடியினால், அவன்போய், பண்டிகைக்குத் தேவையானவைகளைக் கொள்ளும் படிக்காவது, தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது, இயேசு அவனுடனே சொல்லியிருப்பார் என்று சிலர் நினைத்தார்கள்.

யோவான் 13:30 அவன் அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப்போனான்; அப்பொழுது இராக்காலமாயிருந்தது.

13 அதிகாரம்

"அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான்" - சாத்தான் என்னும் சொல் யோவான் சுவிசேஷத்தில் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பாகவே சாத்தான் தன்னுடைய வஞ்சனையை யூதாசின் இருதயத்தில் விதைத்துவிட்டான். (மத் 26:14-16) இயேசு கிறிஸ்து யூதாசிடம் பேசியபோது, அவன் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினான். இப்போதோ சாத்தான் தன்னை ஆளுகை செய்வதற்கு யூதாஸ் இடம் கொடுத்து விடுகிறான்.(லூக்கா 22:3)

"இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்" என்றார் - யூதாஸ் சாத்தானுக்கு இடம் கொடுத்திருப்பது இயேசுவிற்குத் தெரியும். இதற்கு மேல் யூதாசிடம் பேசி, ஒரு பயனும் இல்லை என்பதை இயேசு நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார். ஆகையினால் அவன் செய்யப் போகிற வேலையைச் சீக்கிரமாகச் செய்யுமாறு இயேசு கிறிஸ்து யூதாசை அனுப்புகிறார். (சங் 41:6=சங் 41:9)

(12) பஸ்காவில் இயேசுவின் கடைசி உபதேசம் - (மத் 26:30)

யோவான் 13:31 அவன் புறப்பட்டுப் போனபின்பு இயேசு: இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார்.

யோவான் 13:32 தேவன் அவரில் மகிமைப்பட்டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்.

யோவான் 13:33 பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்.

யோவான் 13:34 நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

யோவான் 13:35 நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 29

"இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப் படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார். தேவன் அவரில் மகிமைப்பட்டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்துவார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்............" (யோவான் 13:31-33) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தை இரட்சிப்பதற்காக வந்தவர். ஆகையினால் அவர் மகிமைப்படுகிறார். இயேசு கிறிஸ்து உலகத்தை இரட்சிப்பதினால் அவரை அனுப்பிய பிதாவும், அவரில் மகிமைப்படுகிறார்.

"இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாது" - இந்த நாளில் மட்டும் இயேசு கிறிஸ்து அவர்களோடு இருப்பார். அதன்பின்பு, இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்படுவார். மூன்று நாள் அடக்கம்பண்ணப்பட்டிருப்பார். மூன்றாம் நாளில் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுவார். அதன்பின்பு நாற்பது நாட்களுக்கு இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் அவர்களுக்குத் தரிசனம் தருவார். பின்பு வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார். (மத் 12:40; அப் 1:3,11). இந்தச் சத்தியத்தை இயேசு கிறிஸ்து யூதருக்குச் சொல்லியிருக்கிறார். (யோவான் 7:34; யோவான் 8:21) தம்முடைய பிள்ளைகளை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து மறுபடியும் வருவார். (யோவான் 13:36; யோவான் 14:1-3)

13 அதிகாரம்

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" - லேவி 19:18 ஆவது வசனத்தில் நாம் வாசிக்கும் கற்பனையே இங்கும் கூறப்பட்டிருக்கிறது. "உன்னில் நீ அன்புகூருவது போல் பிறனிலும் அன்புகூருவாயாக". இந்தக் கற்பனையில் "நான் உங்களில் அன்பாயிருந்தது போல" என்னும் வாக்கியத்தை இயேசு கிறிஸ்து சேர்த்திருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் அன்புகூருவதை விட அதிகமாகவே பிறரிடத்தில் அன்புகூர்ந்தார். ஆகையினால்தான், அவர் பாவிகளை இரட்சிப்பதற்காக தமது ஜீவனையே ஒப்புக் கொடுத்தார். சீஷர்கள் மற்றவர்களை நேசிக்க வேண்டும். மற்றவர்களுக்காக சீஷர்கள் தங்கள் ஜீவனையே தரவேண்டும். நரகத்திலிருந்து அவர்களை இரட்சிக்க வேண்டுமென்றால்,அதற்காக என்னனென்ன தியாகங்களையெல்லாம் செய்ய வேண்டுமோ அவை எல்லாவற்றையும் செய்வதற்குச் சீஷர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும். (ரோமர் 5:8-11)

புதிய (new) - καινός - kainos - 2537

பெயரடை - புது, புதிய, நவமான, புதிதான

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர் களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" - சீஷர்களிடத்தில் பொறாமையும், பெருமையும் இருந்தது. இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில் அன்பாய் இருந்ததுபோல, அவர்களும் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். பொதுவாகப் போதகரின் உபதேசம், அவருடைய சீஷரிடத்தில் இருக்கும். இயேசு கிறிஸ்துவோ தமது சுபாவம் தம்முடைய சீஷரிடத்தில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். இயேசு கிறிஸ்துவினிடத்தில் இருந்த அன்பு, அவருடைய சீஷரிடத்திலும் இருக்க வேண்டும். (1யோவான் 3:11-18; 1யோவான் 4:7-21)

"ஒருவரிலொருவர்" - இந்த வாக்கியம் இரண்டு கிரேக்க வார்த்தைகளின் தமிழாக்கமாகும். அவையாவன: "என்" (en), "அல்லேலோயோன்" (alleeloon) இந்த வாக்கியம் இந்த வசனத்திலும் மாற்கு 9:50; ரோமர் 15:5. ஆகிய வசனங்களிலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

இல் (among) - ἐν - en - 1722

முன் இடைச்சொல் - ஆல், இல், உடன்

ஒருவரிலொருவர் (one to another) - ἀλλήλων - alleeloon - 240

மறுபெயர் பன்மை. ஒருவரை யொருவர், ஒருவரோடொருவர், ஒருவருக்கொருவர் தங்களுக்குள்ளே, உங்களுக்குள்ளே, ஒருவரிலொருவர், ஒன்றையொன்று, ஒருவர் பேரிலொருவர்

63. ஒலிவமலையில் இயேசுவின் பிரசங்கம் - (மத் 26:30)

(1) பேதுரு தம்மை மறுதலிக்கப் போவதை இயேசு முன்குறித்துக் கூறுகிறார் - (மத் 26:31; மாற்கு 14:26; லூக் 22:31)

யோவான் 13:36 சீமோன்பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய் என்றார்.

யோவான் 13:37 பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன் என்றான்.

யோவான் 13:38 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ? சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று, மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

13 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 30

"நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய்" (யோவான் 13:36) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"ஆண்டவரே, நான் இப்பொழுதுஉமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" - என்று பேதுரு தன்னைப் பற்றிச் சரியாகத் தெரியாமலேயே இயேசுகிறிஸ்துவிடம் பேசுகிறான். ஏன் அவருக்குப் பின்னே போகமுடியாது என்பதைத் தெரிந்து கொள்வதில் ஆர்வத்தோடு இருக்கிறான். இயேசுகிறிஸ்து விற்காகத் தன் ஜீவனைக் கொடுப்பதாக வாக்குக் கொடுக்கிறான். ஆனால் அவன் இயேசுகிறிஸ்துவை மறுதலித்து விடுவான் என்பது அவனுக்கே தெரியாது. நம்மைப் பற்றி நமக்குத் தெரியாத காரியங்களெல்லாம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிற்கு நன்றாகத் தெரியும். (யோவான் 13:38).

தீர்க்கதரிசன எண் - 31

"சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்" - (யோவான் 13:38) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

மறுதலி **(denied) - ἀπαρνέομαι - aparneomai** - 533

வினைச்சொல்-வெறுமறுதலி**(utterly denied)** - பொதுவாக மனுஷரை மறுதலிப்பதையே இந்த வாக்கியம் குறிப்பிடும். (மத் 26:34-35,75; மாற்கு 14:30-31,72; லூக்கா 22:34,61)

14 அதிகாரம்

(2) சபை எடுத்துக் கொள்ளப்படப் போவதைப் பற்றிய முதலாவது அறிவிப்பு - (1தெச 4:13)

யோவான் 14:1 உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.

யோவான் 14:2 என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்.

யோவான் 14:3 நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்.

யோவான் 14:4 நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 32

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு..............."(யோவான்14:1-3)இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. சபை எடுத்துக் கொள்ளப்படும்போது நிறைவேறும். (1தெச 4:16;1கொரி 15:23, 51-58).

யோவான் சுவிசேஷத்தில் காணப்படும் கலங்கிய காரியங்கள்

1. தண்ணீர் (யோவான் 5:4-7)
2. ஆவி(யோவான் 11:33;யோவான் 13:21)
3. ஆத்துமா (யோவான் 12:27)
4. இருதயம் (யோவான் 14:1,27)

"என் பிதா" இயேசு கிறிஸ்து "என்பிதா" என்னும் வாக்கியத்தைப் பல இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். யோவான் சுவிசேஷத்தில் 38 இடங்களிலும், மத்தேயு சுவிசேஷத்தில் 15 இடங்களிலும், லூக்கா சுவிசேஷத்தில் 4 இடங்களிலும், இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மாற்கு சுவிசேஷத்தில் "என் பிதா" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்படவேயில்லை. (யோவான் 4:21)

வீடு **(house)** - **οἰκία** - **oikia** - 3614

பெண்பால் பெயர்ச்சொல் - வீடு **(dwelling place)** - பிதாவின் வாசஸ்தலம் பரலோகமாகும். (2கொரி 12:1-4; வெளி 4-5;எபே 1:20; எபி 8:1; எபி 9:24; அப் 1:11)

வாசஸ்தலங்கள் **(mansions)** - **μονή** - **monee** - 3438

பெண்பால் பெயர்ச்சொல் - வாசஸ்தலம், வாசம் பண்ணுதல் **(abiding places, mansions)** - இந்த வாக்கியம் இந்த வசனத்திலும், யோவான் 14:23 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

ஸ்தலம் **(place)**-**τόπος** - **topos** - 5117

ஆண்பால் பெயர்ச்சொல் - இடம், ஸ்தலம்,ஸ்தானம், பட்டணம் போன்றது. **(a place of habitation, as a city)**(லூக்கா 4:37;லூக்கா 10:1; யோவான் 4:20;1கொரி 1:2;1தெச 1:8; எபி 11:10-16; எபி 12:22-23; எபி 13:14; வெளி 21:2,9-27)

"நான் மறுபடியும் வருவேன்" - இந்த வாக்கியம் சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிக்கும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம்வருகையைக்குறிக்காது.(1தெச4:16; 1கொரி 15:23,51-58; பிலி 3:21;கொலோ 3:4; எபே 5:27).சபை எடுத்துக் கொள்ளப்படும் போது இயேசு கிறிஸ்து தமக்காக மரித்த எல்லாப் பரிசுத்தவான்களையும் உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களையும் எடுத்துக் கொள்வார். அதன்பின்பு, இயேசு கிறிஸ்து அவர்களோடு தமது இரண்டாம் வருகையில் பூமிக்குத் திரும்பிவருவார். (சக 14:5; யூதா 1:14; வெளி 19:11-21).

14 அதிகாரம்

"நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" - கிறிஸ்து பரலோகத்தில் இருக்கிறபடியினால், சபை எடுத்துக் கொள்ளப்படும்போது, நாமும் பரலோகத்திற்குப் போவோம். (அப் 1:11; எபே 1:20; எபி 8:1; எபி 9:24)

(3) ஜீவியத்தின் பிரதான கேள்வி

யோவான் 14:5 தோமா அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான்.

(4) இயேசுவின் பதிலுரை

யோவான் 14:6 அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

யோவான் 14:7 என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்.

"நானே..........இருக்கிறேன்" (I am) - இந்த வாக்கியம் இரண்டு கிரேக்க வார்த்தைகளினால் ஆனது. அவையாவன: "ஈகோ" (egoo) "எமி" (eimi) யோவான் சுவிசேஷத்தில்இயேசுகிறிஸ்து 21 இடங்களில் தம்மைப் பற்றி இவ்வாறு கூறியிருக்கிறார். (யோவான் 4:26; யோவான் 6:35,48,51; யோவான் 8:12,1 8:24,28,58; யோவான் 10:7,9,11,14;யோவான் 11:25; யோவான் 13:19; யோவான் 14:6; யோவான் 15:1,5; யோவான் 18:5,8).

நான் (I) - ἐγώ - egoo - 1473

பிரதி பெயர்ச்சொல் - நான், எனக்கு

இருக்கிறேன்(am) - εἰμί - eimi - 1510

வினைச்சொல் - இரு

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" - இயேசு கிறிஸ்துவே வழி. அவரே சத்தியம். அவரே ஜீவன்.

இயேசு கிறிஸ்து எவ்வாறு வழியாக இருக்கிறார்

1. தேவனிடத்திற்குச் செல்லும் ஒரே வழி (The only way to God) (மத் 7:14; யோவான் 10:1,7,9; யோவான் 14:6)
2. தப்பிச்செல்லும் வழி (The way of escape) (1கொரி 10:13)
3. பரிசுத்தத்திற்குச் செல்லும் வழி (The way into the holiest) (எபி 9:8-15; எபி 10:19-23)
4. புதிய ஜீவனுள்ள வழி (The new and living way)(எபி 10:20;எபி 5:9)
5. சத்தியத்தின் வழி (The way of truth) (2பேதுரு 2:2)
6. சரியான வழி (The right way) (2பேதுரு 2:15)
7. நீதியின் வழி (The way of righteousness) (2பேதுரு 2:21; 1கொரி 1:30)

"சத்தியம்" - யோவான் சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து சத்தியம் என்னும் வார்த்தையை 22 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார். மற்ற சுவிசேஷங்களில் 4 தடவைகள் மட்டுமே பயன்படுத்தியிருக்கிறார்.இயேசு கிறிஸ்துவே தேவனுடைய சத்தியம். அந்தச் சத்தியம் நம்மை விடுதலையாக்கும். (யோவான் 8:32-36; யோவான் 14:6) இயேசுகிறிஸ்து போதகர். சத்தியத்திற்கு ஆதாரமாக இருக்கிறவர். (மத் 22:16; மாற்கு 12:14; யோவான் 1:14,17).

"ஜீவன்" - யோவான் சுவிசேஷத்தில் இயேசு கிறிஸ்து ஜீவன் என்னும் வார்த்தையை 44 தடவைகள் பயன்படுத்தியிருக்கிறார். மற்ற சுவிசேஷங்களில் 38 தடவைகள் மட்டுமே பயன்படுத்தியிருக்கிறார். (யோவான் 6:27)

14 அதிகாரம்

"என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" - (அப் 4:12; எபே 2:18)

"என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்" - (யோவான் 12:44)

"இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள்" - (யோவான் 1:18)

(5) உண்மையான விசுவாசிகளின் ஆவல்

யோவான் 14:8 பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான்.

(6) தேவனுடைய உண்மையான வெளிப்பாடு

யோவான் 14:9 அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்?

யோவான் 14:10 நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிற தில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்.

யோவான் 14:11 நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்.

"நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறோம்" - (லூக்கா 22:3)

(7) இயேசுவை விசுவாசிக்கிறவர்களால் செய்யக்கூடிய காரியங்கள் - (மத் 18:18)

யோவான் 14:12 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.

"என்னை விசுவாசிக்கிறவன்" - இந்த வாக்கியம் எல்லா விசுவாசிகளையும் குறிக்கும்.(யோவான்3:15-18,36;யோவான்5:24; யோவான் 6:35,47; யோவான் 7:37-39; யோவான் 11:25; யோவான் 12:44-46; மாற்கு 9:23; மாற்கு 16:15-20; அப் 10:43; ரோமர் 1:16; ரோமர் 3:26; 1யோவான் 5:1-10)

"கிரியைகள்" (works) - இதன் கிரேக்க வார்த்தை 'எர்கோன்" (ergon). கிரியை, வேலை, ஊழியம், வேலைப்பாடு (works, deeds, acts) இயேசுகிறிஸ்து இந்த வாக்கியத்தில் கிரியைகள் என்று கூறியிருப்பது அற்புதங்கள், சுகமாதல்கள், அடையாளங்கள், தெய்வீக வல்லமையினால் நடைபெறும் வல்லமையான காரியங்கள் போன்றவற்றைக் குறிக்கும். (மத் 11:20-23; மத் 13:54-58; மத் 14:2; யோவான் 5:20,36; யோவான் 9:3; யோவான் 10:25,32; யோவான் 14:10-12). இயேசு கிறிஸ்து தமது கிரியைகளினால் சகல வியாதிகளையும் சொஸ்தமாக்கினார். பிசாசுகளைத் துரத்தினார். மரித்தோரை எழுப்பினார். குஷ்டரோகிகளைச் சுத்தமாக்கினார். சாத்தானின் அந்தகாரச் சக்தியினால் அடிமைகளாக இருந்தவர்களை விடுவித்தார். (மத் 4:23-24,மத் 9:35; அப் 10:38) திரளான ஜனங்களுக்குப் போஜனம் கொடுத்தார், தண்ணீரின்மீது நடந்தார், தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றினார்.

கிரியைகள் (works) - ἔργον - ergon - 2041

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - கிரியை, வேலை, ஊழியம், வேலைப்பாடு

14 அதிகாரம்

“என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்” - இந்த வாக்குத்தத்தம் எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. (லூக்கா 10:19; லூக்கா 24:49; அப் 1:4-8) எல்லா விசுவாசிகளும் தேவனுடைய தெய்வீக வல்லமையைப் பெற்றுக் கொள்ள முடியும். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். (யோவான் 7:37-39) விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும்போது, ஆவிக்குரிய கிரியை களைச் செய்வதற்குப் பெலனடைவார்கள்.

“இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்” - இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரை அளவில்லாமல் பெற்றிருக்கிறார். எந்த மனுஷருக்கும் இயேசு கிறிஸ்துவைவிட அதிகமான வல்லமை கொடுக்கப்படவில்லை. (யோவான் 3:34; ஏசா 11:2; ஏசா 61:1-2). ஆகையினால், பெரிய காரியங்கள் என்பது இயேசு கிறிஸ்து செய்த காரியங்களைவிட பெரிய காரியங்கள் என்று பொருள்கூறமுடியாது. மனுஷன் தனக்குரிய கிரியைகளைச் செய்வதற்குப் பதிலாக தன்னுடைய மனுஷ வல்லமைக்கு அப்பாற்பட்ட பெரிய கிரியைகளைப் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் செய்வான்.

பெரிய கிரியைகளுக்கான காரணங்கள்

1. உலகத்தின் அதிபதியாகிய சாத்தான் புறம்பே தள்ளப்பட வேண்டும். (யோவான் 12:31)
2. சிலுவையில் சாத்தானின் தோல்வி (கொலோ 2:14-17; 1பேதுரு 2:24)
3. முழுமையான இரட்சிப்பு (யோவான் 19:30; கொலோ 2:14-17; 1பேதுரு 1:10-12)
4. இயேசு கிறிஸ்து மகிமை அடையும் வரையிலும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் கொடுக்கப்படாது (யோவான் 7:37-39; அப் 1:4-8; அப் 2:33).
5. விசுவாசிகளுக்காக கிறிஸ்துவின் பரிந்து பேசும் ஜெபம். (ரோமர் 8:34; எபி 7:25).
6. இயேசு கிறிஸ்துவின் மகிமை மறுபடியும் உண்டாகிறது. (யோவான் 17:5)
7. கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவம் (எபி 4:14-16; எபி 6:20; எபி 7:11-28; எபி 9:11-15)
8. எல்லா வல்லமைகளுக்கும் தலைவர் (எபே 1:20-23; 1பேதுரு 3:22; கொலோ 2:10)
9. விசுவாசிகளுக்குக் கொடுப்பதற்காக சகல அதிகாரமும் இயேசு கிறிஸ்துவிற்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. (மத் 28:18-20; யோவான் 14:12-15; அப் 1:8)
10. மரணம், பாதாளம், கல்லறை ஆகியவற்றின்மீது முழுமையான வெற்றி (எபி 2:14-15; வெளி 1:18; கொலோ 2:14-15)
11. இயேசு கிறிஸ்துவே சபையின் தலைவர். (எபே 1:20-23; கொலோ 1:16-18,24)
12. வாக்குத்தத்தங்களின் பிரகாரம் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைத் தருகிறார். (மத் 26:28;2கொரி 3:6-15; எபி 8:6) பெரிய வல்லமையினால் இதை உறுதிபண்ணுகிறார்.(எபி 2:1-4; மாற்கு 16:15-20; லூக்கா 24:49; 2கொரி 3:6-15; 2பேதுரு 1:1-10)
13. கிறிஸ்துவில் பரிபூரணமான கிருபை சாத்தியமாய் இருக்கிறது. (யோவான் 1:17; கொலோ 2:10)
14. பாடுகளைத் தொடர்ந்து இரட்சிப்பின் மகிமை வெளிப்படும். (1பேதுரு 1:10-12; எபி 2:1-4; 2கொரி 3)
15. எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியும். (எபி 10:19-38; எபே 2:14-18)

14 அதிகாரம்

16. யூதரையும், புறஜாதியாரையும் தேவன் ஒன்றுபோல் ஆசீர்வதிக்கும் காலம். (எபே 2:14-18; எபே 3:1-11; ரோமர் 10:9-14)

17. தேவன் கிறிஸ்துவை அனுப்பியதுபோன்று, சகல அதிகாரத்தோடும், வல்லமையோடும் மனுஷரை அனுப்பும் காலம். (யோவான் 17:18; யோவான் 20:21)

18. எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆவியானவரின் வரங்களையும், கனியையும், அபிஷேகத்தையும் பெற்றுக் கொள்ளும் காலம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஒரு பகுதியை மட்டுமே பரிசுத்தவான்கள் பெற்றுக் கொண்டார்கள். (யோவான் 7:37-39; யோவான் 14:12-15; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23)

19. கிறிஸ்துவிலும், பரிசுத்த ஆவியானவரிலும் அளவில்லாத ஆசீர்வாதங்களைப் பெறும் காலம். சுவிசேஷத்தின் வாக்குத்தத்தங்கள் முழுமையான ஆசீர்வாதங்களைத் தரும் காலம். (யோவான் 17:20; யோவான் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 15:7,16; 2கொரி 2:20; 2பேதுரு 1:1-12)

20. தேவன் எல்லாத் தேசங்களையும் ஆசீர்வதிக்கும் காலம். (மத் 28:18-20; மாற்கு 16:15-20; லூக்கா 24:47-49; அப் 1:4-8; ஆதி 12:1-3). விசுவாசிகள் உலகம் முழுவதும் சென்று இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்.

21. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். (யோவான் 14:12)

(8) விசுவாசிகளுக்கு தேவன் செய்யும் காரியம்

யோவான் 14:13 நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.

யோவான் 14:14 என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.

"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும் படியாக, அதைச் செய்வேன்" - விசுவாசிகள் இயேசுகிறிஸ்துவிடம் ஜெபிக்கும்போது அவர் நமது ஜெபங்களுக்குப் பதில் கொடுக்கிறார். நம்மை இரட்சிக்கிறார். நமது வியாதிகளைக் குணப்படுத்துகிறார். இதன் மூலமாகப் பிதா இயேசு கிறிஸ்துவில் மகிமைப்படுகிறார். நாம் விசுவாசிக்கும்போது, கேட்பதைப் பெற்றுக் கொள்வோம் என்று சந்தேகப்படாமல் விசுவாசிக்க வேண்டும். (எபி 11:6; யாக் 1:5-8; மாற்கு 11:22-24).

(9) தேவனிடத்தில் அன்பாயிருக்கிறவர்கள் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்

-(லூக் 11:13; அப் 2:38-39; 10:45; 11:17; 15:8; கலா 3:14)

யோவான் 14:15 நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.

யோவான் 14:16 நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.

யோவான் 14:17 உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.

14 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 33

"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.................." (யோவான் 14:16-21) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று, நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

இயேசு கிறிஸ்து தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியஸ்தராக இருப்பார். (1தீமோ 2:5) அவருடைய மத்தியஸ்தத்தின் மூலமாகவும், பரிந்து பேசும் ஜெபத்தின் மூலமாகவும் கிருபையின் எல்லா ஆசீர்வாதங்களும் நமக்கு வரும். (ரோமர் 8:34; எபி 7:25)

"வேறொரு" - இயேசு கிறிஸ்து வேறொரு தேற்றரவாளன் என்று குறிப்பிட்டிருப்பதினால் இந்த வாக்கியம் அவரைக் குறிக்காது. மற்றொரு தெய்வீக நபரைக் குறிக்கும்.

தேற்றரவாளன் **(Comforter)** - παράκλητος-parakleetos-3875

ஆண்பால் பெயர்ச்சொல் - தேற்றரவாளன், நீதிபரர் (யோவான் 14:26)

"என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு" - பரிசுத்த ஆவியானவர் நம்மோடு என்றென்றைக்கும் இருப்பார். நம்மை விட்டு எடுத்துக் கொள்ளப் படமாட்டார். சபை எடுத்துக் கொள்ளப்படும் வரையில் மட்டுமே பரிசுத்த ஆவியானவர் நம்மோடு இருப்பார் என்று நினைக்க வேண்டியதில்லை. அவர் இப்போது நம்மோடு இருப்பதுபோலவே, உபத்திரவக் காலத்திலும், ஆயிரம் வருஷ அரசாட்சியிலும் நித்திய காலமாகவும் இருப்பார். (அப் 2:16-21; வெளி 7:14; வெளி 12:17= வெளி 19:10; சக 12:10) பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்தை விட்டு எடுத்துக் கொள்ளப்பட்டால், மனுஷருக்குப் புதிய ஏற்பாட்டின் ஆசீர்வாதங்கள் எதுவும் கிடைக்காது. (2தெச 2:7)

உலகம்**(world)**-κόσμος-kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு,லௌகிகம்- அவிசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளமாட்டார்கள்.(ரோமர் 8:9,14-16; கலா 4:6; 1கொரி 3:16-17)

"உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது" - இந்த வாக்கியத்தில் உலகம் என்பது அவிசுவாசிகளைக் குறிக்கும். அவர்கள் பரிசுத்த ஆவியானவரைக் காணவும், புரிந்து கொள்ளவும் மறுக்கிறார்கள். (1கொரி 2:14) பரிசுத்த ஆவியானவரைத் தன்னுடைய ஜீவியத்தில் பெற்றுக் கொண்டு, அவரைக் கிரியை செய்வதற்கு இவர்கள் அனுமதிப்பதில்லை. (யோவான் 1:12; யோவான் 3:5,16-20,36; யோவான் 5:24; யோவான் 16:7-15).

"அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" - பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுடைய உள்ளத்தில் வாசம் பண்ணுகிறார். அவர்களுக்குள் இருக்கிறார். ஆகையினால் விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரை அறிந்திருக் கிறார்கள். இயேசு கிறிஸ்து இந்த வசனத்தில் தமது சீஷர்களிடத்தில் பேசுகிறார். இயேசு கிறிஸ்துவின் சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் ஒரு குறிப்பிட்ட அளவு கொடுக்கப்பட்டிருக்கிறார். இயேசு கிறிஸ்து பரமேறிய பின்பு, இவர்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை நிறைவாகப் பெற்றுக் கொள்வார்கள். யோவான் 7:37-39;லூக்கா 24:49;அப் 1:4-8).

"அவர் உங்களுடனே வாசம்பண்ணி" - இந்த வாக்கியத்தில் "உடனே" என்பதன் கிரேக்கவார்த்தை"பாரா"**(para)** என்பதாகும். பரிசுத்த ஆவியானவர் சீஷர்களோடு இருந்தார். **(beside, alongside of)** அதுமட்டுமல்லாமல்ஆவியானவர் அவர்களுக் குள்ளும்இருந்தார்**(in them)**. (மத் 10:1-8,20; மாற்கு6:7-13;லூக்கா9:1-10; லூக்கா 10:1-20) பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் இருந்தாலும், அவர்கள் பரிசுத்த ஆவியான வரின் அபிஷேகத்தைப் பூரணமாகப் பெற்றுக் கொள்ளவில்லை. (யோவான் 3:34) இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியானவரை அளவில்லாமல் கொடுப்பார். (மத் 3:11; யோவான் 1:31-33; யோவான் 7:37-39; லூக்கா 11:13; லூக்கா 24:49; அப் 1:4-8; அப் 2:16-21,33, 38-39; அப் 5:32; கலா 3:14).

14 அதிகாரம்

உடன் (with) - παρά - para - 3844

முன்னிடைச்சொல் - உடைய, முதல், ஆறாம் வேற்றுமையுடன் இருந்து, நான்காம் வேற்றுமையுடன் இல், இரண்டாம் வேற்றுமை இன்

(10) ஆவிக்குரிய ஐக்கியமும் வல்லமையும்

யோவான் 14:18 நான் உங்களைத் திக்கற்றவர் களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்.

யோவான் 14:19 இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்.

யோவான் 14:20 நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.

யோவான் 14:21 என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்.

"நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்"-திக்கற்றவர்கள் (orphans) என்பதன் கிரேக்க வார்த்தை "ஆர்பனோஸ்" **(orphanos).** இந்த வாக்கியம் இந்த வசனத்திலும், யாக் 1:27 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு போதகருக்கு அவருடைய சீஷர்கள் அவருக்குப் பிள்ளைகளாக இருப்பார்கள். போதகர் மரித்த பின்பு, சீஷர்கள் அனாதைகளைப் போன்று இருப்பார்கள். இயேசு தமது சீஷர்களைப் பிள்ளைகளே என்று அழைக்கிறார். (யோவான் 13:33) ஆகையினால், இப்பொழுது தாம் போன பின்பு அவர்களை திக்கற்றவர்களாய் விடேன் என்று வாக்குப் பண்ணுகிறார்.

திக்கற்றவர்கள் (comfortless) - ὀρφανός - orphanos - 3737

பெயரடை - திக்கற்றவர்களான (orphans)

"உங்களிடத்தில் வருவேன்" - ஆம். இயேசு கிறிஸ்து அவர்களிடத்தில் வந்தார். (யோவான் 20; அப் 1:3).

"இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது" - இன்னும் இருபது மணி நேரத்தில் இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்துப் போவார். அவரைச் சிலுவையிலிருந்து கீழே இறக்கி, கல்லறையில் அடக்கம்பண்ணுவார்கள். அதன் பின்பு, அவிசுவாசிகளான இந்த உலகம் இயேசு கிறிஸ்துவைக் காணாது.

"நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்" - இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுகிற படியினால், அவருடைய சீஷர்களும் உயிர்த்தெழுவார்கள். அவருடைய உயிர்த்தெழுதல் சீஷர்கள் விசுவாசிக்கும் சத்தியங்களை நிரூபிப்பதாக உள்ளது. (1கொரி 15) ஆகையினால், உலகம் இயேசு கிறிஸ்துவைக் காணாவிட்டாலும், சீஷர்கள் அவரைக் காண்பார்கள்.

"நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" - (லூக்கா 22:3)

"என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்" - இயேசுகிறிஸ்துவின் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டால் மட்டும் போதாது. அவைகளைக் கைக்கொள்ளவும் வேண்டும். (யோவான் 6:27, யோவான் 10:6,26)

"நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்" - இயேசு கிறிஸ்துஒவ்வொருவிசுவாசிக்கும் கொடுக்கும் வாக்குத்தத்தம். (யோவான் 7:37-39; யோவான் 14:12-15; யோவான் 15:16)

14 அதிகாரம்

(11) விசுவாசிகளுக்கு தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார்

யோவான் 14:22 ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன என்றான்.

"ஸ்காரியோத்தல்லாத யூதா" - யாக்கோபின் சகோதரன். ஒரு அப்போஸ்தலன். (லூக்கா 6:16; அப் 1:13). மறுபெயர் லபேயு **(Lebbaeus)**, ததேயு **(Thaddaeus)** (மத் 10:3; மாற்கு 3:18).

(12) விசுவாசிகளிடத்தில் தேவன் வாசம்பண்ணுகிறார்-(1கொரி 6:17)

யோவான் 14:23 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்.

யோவான் 14:24 என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடைய தாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.

யோவான் 14:25 நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

தீர்க்கதரிசன எண் - 34

"ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்........................" (யோவான்14:23-26) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று, இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" - இந்த வாக்கியத்தில் "நாங்கள்", "வாசம்பண்ணுவோம்" என்று பன்மையில் கூறப்பட்டிருக்கிறது. பிதாவும், குமாரனும் ஒற்றுமையாகக் கிரியை செய்கிறார்கள். இருவருமே சர்வ ஞானமுள்ளவர்கள். இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை விட்டு, புறப்படும் காலத்தையும், இயேசு கிறிஸ்துவின் மகிமை அவரிடம் மறுபடியும் கொடுக்கப்படும் காலத்தையும் இது குறிக்கும். (யோவான் 17:5) இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் 33 வருஷங்கள் மனுஷராக இருந்தபோது, அவர் மனுஷத்துவத்தின்வரையறைக்குட்பட்டிருந்தார். அவரால் ஒரு வேளையில் ஓரிடத்தில் மட்டுமே இருக்க முடிந்தது. ஆனால் இப்போதோ இயேசுகிறிஸ்து சர்வ வியாபகராக இருக்கிறார் **(He is omnipresent)**.

(13) பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன்

யோவான் 14:26 என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.

"தேற்றரவாளன்" - பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் வார்த்தை. இதற்கான கிரேக்க வார்த்தை "பேரக்லேடோஸ்"**(parakletos)** என்பதாகும். யோவான் மட்டுமே புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். (யோவான் 14:16,26; யோவான் 15:26; யோவான் 16:7) பரிந்துபேசுகிறவர் **(Advocate)**.(1யோவான் 2:1) தேற்றர வாளன் என்பவருக்கு ஒருவருக்கு உதவி செய்யக்கூடியவர். ஆறுதல் கூறக்கூடியவர் என்று பொருள். இந்தப் பூமியில் பரிசுத்த ஆவியானவர் நமது தேற்றரவாளராக இருக்கிறார். பரலோகத்தில் இயேசு கிறிஸ்து நமது தேற்றரவாளராக இருப்பார்.

தேற்றரவாளன் (Comforter) -

παράκλητος-parakleetos - 3875

ஆண்பால் பெயர்ச்சொல் - தேற்றரவாளன், நீதிபரர்

14 அதிகாரம்

“நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்” - (யோவான் 16:8)

(14) தேவனுடைய சமாதானம்

யோவான் 14:27 சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

“சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்” - இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிப்பதன் மூலமாக அவருடைய பிள்ளைகளுக்குக் கிடைக்கும் மிகப்பெரிய ஆசீர்வாதம் அவருடைய சமாதானமாகும். இயேசு கிறிஸ்துவின் சமாதானம் உலகம் கொடுக்கக்கூடிய சமாதானம் போன்று இராது. இது உலக சமாதானம். இயேசு கிறிஸ்து கொடுப்பது தெய்வீக சமாதானம். அவர்கள் சமாதானத்தின் பிரபுவைக் கொலை செய்துவிட்டார்கள். (அப் 4:27) இன்னும் அவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையினால் அவர் அவர்களை ஆளுகை செய்ய வரும்வரையிலும், அவர்களுக்குச் சமாதானம் இராது. (சங் 2; 1தெச 5:3; 1கொரி 15:24-28).

“உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக” - (யோவான் 14:1-3)

(15) இயேசு பிதாவினிடத்திற்கு போகிறார் -(யோவான் 14:6,12,16,26; 15:26; 16:7,23; அப் 1:4; 2:33; ரோமர் 8:34; எபி 1:3; 4:14; 7:25)

யோவான் 14:28 நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர் களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்.

யோவான் 14:29 இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்கு முன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன்.

யோவான் 14:30 இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.

யோவான் 14:31 நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும் படிக்கு இப்படி நடக்கும். எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 35

“நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்..........................” (யோவான் 14:28-31) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று, இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

“என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்” - திரித்துவத்தில் பிதாவே தலைவராக இருக்கிறார். (யோவான் 14:16; யோவான் 16:23-26; 1கொரி 11:3). இயேசு கிறிஸ்து பிதாவானவரோ, பரிசுத்த ஆவியானவரோ அல்ல.

“இந்த உலகத்தின் அதிபதி” - சாத்தான். (யோவான் 12:31; எபே 2:2; 1கொரி 4:4).

யோவான் - தொகுப்புரை

14 அதிகாரம்

"அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" - இயேசு கிறிஸ்துவிடத்தில் சாத்தானுடைய பாவமோ, அவனுடைய சுபாவமோ இல்லை. இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் செய்யவில்லை. ஆகையினால் பாவத்தின் சம்பளமாகிய மரணம் அவருக்குக் கிடையாது. சாத்தானுக்கு இயேசுவைக் கொல்ல உரிமையில்லை. ஆனபோதிலும், பிதாவாகிய தேவன் தமது ஒரேபேறான குமாரனைச் சிலுவையில் மரிப்பதற்கு ஒப்புக்கொடுத்தார். இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் அறியாதவர். உலகத்தின் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார். ஒரு பாவமும் அறியாத இயேசு கிறிஸ்துவைச் சாத்தான் சிலுவையில் அறைந்ததால், இயேசுகிறிஸ்துவினிடத்தில் சாத்தானுக்கு ஒன்றுமில்லை. அவன் ஒரு பொய்யன் என்பதும், மாய்மாலக்காரன் என்பதும், உறுதியாகிறது. இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டவர்களிடத்திலும், சாத்தானுக்கு ஒரு அதிகாரமும் இல்லை. கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து சாத்தானின் சகல அந்தகாரச் சக்திகளையும் முறியடித்தார்.

"நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன்" - இந்த ஒரு வசனத்தில் மட்டுமே இயேசு கிறிஸ்து தமது பிதாவிடத்தில் அன்பாக இருப்பதாகக் கூறுகிறார். ஆறு இடங்களில் தாம் குமாரன்மீது அன்பாக இருக்கிறார் என்று பிதா கூறுவதை வாசிக்கிறோம். (யோவான் 3:35; யோவான் 10:17; யோவான் 15:9; யோவான் 17:23-26).

"பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன்" - இயேசு கிறிஸ்து பிதாவில் அன்பாயிருக்கிறார். அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார். பிதா குமாரனுக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறார்.

"எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள்" - இந்த வசனமும், மத் 26:30 ஆவது வசனமும் ஒன்றாக இருக்கலாம். அவ்வாறாயின், யோவான் 14 ஆவது அதிகாரம் இராப்போஜன அறையைவிட்டு புறப்படுவதற்கு முன்பாகப் பேசிய வசனங்களாகும். யோவான் 15-17 ஆகிய அதிகாரங்கள் கெத்செமனே தோட்டத்திற்குப் போகும் வழியில் பேசியவை.

14 அதிகாரம்

"அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" - இயேசு கிறிஸ்துவிடத்தில் சாத்தானுடைய பாவமோ, அவனுடைய சுபாவமோ இல்லை. இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் செய்யவில்லை. ஆகையினால் பாவத்தின் சம்பளமாகிய மரணம் அவருக்குக் கிடையாது. சாத்தானுக்கு இயேசுவைக் கொல்ல உரிமையில்லை. ஆனபோதிலும், பிதாவாகிய தேவன் தமது ஒரேபேறான குமாரனைச் சிலுவையில் மரிப்பதற்கு ஒப்புக்கொடுத்தார். இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் அறியாதவர். உலகத்தின் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார். ஒரு பாவமும் அறியாத இயேசு கிறிஸ்துவைச் சாத்தான் சிலுவையில் அறைந்ததால், இயேசுகிறிஸ்துவினிடத்தில் சாத்தானுக்கு ஒன்றுமில்லை. அவன் ஒரு பொய்யன் என்பதும், மாய்மாலக்காரன் என்பதும், உறுதியாகிறது. இயேசு கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டவர்களிடத்திலும், சாத்தானுக்கு ஒரு அதிகாரமும் இல்லை. கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து சாத்தானின் சகல அந்தகாரச் சக்திகளையும் முறியடித்தார்.

"நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன்" - இந்த ஒரு வசனத்தில் மட்டுமே இயேசு கிறிஸ்து தமது பிதாவிடத்தில் அன்பாக இருப்பதாகக் கூறுகிறார். ஆறு இடங்களில் தாம் குமாரன்மீது அன்பாக இருக்கிறார் என்று பிதா கூறுவதை வாசிக்கிறோம். (யோவான் 3:35; யோவான் 10:17; யோவான் 15:9; யோவான் 17:23-26).

"பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன்" - இயேசு கிறிஸ்து பிதாவில் அன்பாயிருக்கிறார். அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார். பிதா குமாரனுக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறார்.

"எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள்" - இந்த வசனமும், மத் 26:30 ஆவது வசனமும் ஒன்றாக இருக்கலாம். அவ்வாறாயின், யோவான் 14 ஆவது அதிகாரம் இராப்போஜன அறையைவிட்டு புறப்படுவதற்கு முன்பாகப் பேசிய வசனங்களாகும். யோவான் 15-17 ஆகிய அதிகாரங்கள் கெத்செமனே தோட்டத்திற்குப் போகும் வழியில் பேசியவை.

15 அதிகாரம்

64. கெத்செமனே தோட்டத்திற்குப் போகும் வழியில் உபதேசம்

(1) மெய்யான திராட்சச்செடி

யோவான் 15:1 நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர்.

"மெய்யான திராட்சச்செடி" - இஸ்ரவேல் ஜனங்கள் பொய்யான திராட்சச் செடியாக மாறிவிட்டார்கள். கசப்பான பழங்களைத் தந்தார்கள். (ஏசா 5:1-7) இயேசு கிறிஸ்து மெய்யான திராட்சச் செடியாக இருக்கிறார். நல்ல பழங்களைத் தருகிறார்.

(2) இரண்டு விதமான கொடிகள்

யோவான் 15:2 என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.

"என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்" - கொடி என்பது இயேசு கிறிஸ்துவின் எல்லா விசுவாசிகளையும் குறிக்கும். கொடியானது கனி தரவேண்டும். கனிதரும் அந்தக் கொடியை நன்றாகச் சுத்தம்பண்ணி, அதிக கனி கொடுக்குமாறு பராமரிப்பார்கள்.

அந்தக் கொடி கனி கொடுக்க வில்லையென்றால், அதைச் செடியில் இராதவாறு அறுத்துப்போடுவார்கள். அறுத்துப் போடுகிறவர் பிதாவானவர். மனுஷனல்ல. தேவனுடைய கரத்திலிருந்து யாராலும் அவருடைய பிள்ளைகளைப் பறித்துக் கொள்ள முடியாது.

கனிதராத கொடிகளைத் தேவனே அறுத்துப் போடுவார். தேவன் இவ்வாறு அறுத்துப் போடமாட்டார் என்று சொல்வோமென்றால், அவருடைய கிரியைகளை நாம் மட்டுப்படுத்துகிறவர்களாக இருப்போம். கனிகொடாத செத்துப்போன கொடிகளைத் தேவனுடைய வல்லமையைவிட மகத்துவமானது என்று பெருமைப்பட்டுக் கொண்டிருப்போம்.

திராட்சத் தோட்டக்காரனிடம்போய், கனிகொடாத கொடிகளை அறுத்துப் போடக்கூடாது என்று யாராவது சொல்ல முடியுமா. கனிகொடுக்கும் என்று நம்பிதான், தோட்டக்காரர் திராட்சச் செடியை வளர்க்கிறார். கனிகொடுக்கும் கொடியைப் பராமரிக்கிறார். கனிகொடாத கொடியை அறுத்துப் போடுகிறார்.

(3) உண்மையான விசுவாசிகள்

யோவான் 15:3 நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்.

"நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" - இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தினாலே அவருடைய சீஷர்கள் கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு முன்பாகவும், பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாகவும் சுத்தமாக இருக்கிறார்கள்.

சுத்தம் (clean) - καθαρός - katharos - 2513

பெயரடை - சுத்தமுள்ள, தூயதான, சுத்தமாயிருக்கிற, சுத்த (யோவான் 13:11) - இருதயச் சுத்தத்தை இந்த வாக்கியம் குறிப்பிடும். (மத் 5:8)

(4) கனிகொடுப்பதற்கு நிபந்தனை

யோவான் 15:4 என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திரா விட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள்.

15 அதிகாரம்

யோவான் 15:5 நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.

"என்னில் நிலைத்திருங்கள்" - நிலைத்திரு **(remain, continue, dwell, and abide)** என்பதன் கிரேக்க வார்த்தை "மேனோ" **(menoo)** என்பதாகும். கிறிஸ்துவில் நாம் நிலைத்திருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லையென்றால், நம்மால் ஆவிக்குரிய கனியைத் தரமுடியாது. ஆகையினால் நாம் கிறிஸ்துவாகியசெடியில்நிலைத்திருக்கும் கொடிகளாக இருக்க வேண்டும். (லூக்கா 22:3)

நிலைத்திரு **(Abide)** - **μένω** - **menoo** - 3306

வினைச்சொல் - தங்கியிரு, நிலைத்திரு, தரித்திரு, இரு, வாசம் பண்ணு, நிலைக்கொண்டிரு, நிலைநில்

"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்" - இயேசு கிறிஸ்துவே மெய்யான திராட்சச்செடி. விசுவாசிகள் கொடிகள். விசுவாசிகள் கிறிஸ்துவில் நிலைத்திருப்பது மிகவும் அவசியம். ஒருவன் கிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லை என்றால், அவனால் ஆவிக்குரிய கனியைக் கொடுக்க முடியாது. ஆகையினால் தான் இயேசு கிறிஸ்து "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று கூறுகிறார்.

(5) கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும்

யோவான் 15:6 ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப் பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்.

"ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்" - விசுவாசி கிறிஸ்துவில் நிலைத்திருக்கவில்லையென்றால், அவனுடைய ஆவிக்குரிய ஜீவியம் உலர்ந்து போகும். உலர்ந்து போன ஜீவியத்தில் ஆவியின் கனியை எதிர்பார்க்க முடியாது. திராட்சைத் தோட்டத்தில்கூட உலர்ந்துபோன கொடி கனிதராது. அப்படிப்பட்ட கனிகொடாத உலர்ந்துபோன கொடிகளை எல்லாம் சேர்த்து, அக்கினியிலே போட்டு, எரிப்பார்கள்.

(6) ஜெபத்திற்கு பதில் கிடைக்க நிபந்தனை

யோவான் 15:7 நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" - நமது ஜெபங்களுக்கு இயேசு கிறிஸ்து பதில் தரவேண்டுமென்றால், நமக்கு நியமிக்கப் பட்டிருக்கும் நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.யோவான் 15 ஆவது அதிகாரத்தில் நாம் பல நிபந்தனைகளை வாசிக்கிறோம். (யோவான் 15:6,10,18,19,20, 22,24)

"நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" - தேவனுடைய பிள்ளைகள் தங்களுடைய தேவைகளை ஜெபத்தில் ஏறெடுக்க வேண்டும். நாம் கேட்டுக் கொள்வதெதுவோ அது நமக்குச் செய்யப்படும் என்பது தேவனுடைய வாக்குத்தத்தம். இரண்டு ஏற்பாடுகளிலுமே நாம் இந்த வாக்குத்தத்தத்தை வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்து நம்முடைய தேவைகளைச் சந்திப்பார். நாம் ஜெபத்தில் கேட்டுக் கொள்வதை நமக்குச் செய்வார். (சங் 23:1; சங் 34:9-10; சங் 84:11; மத் 7:7-11; மத் 17:20,மத்18:18-20,மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபே 3:20; எபி 11:6; யாக் 1:5-8; 1யோவான் 3:21-22; 1யோவான் 5:14-15)

15 அதிகாரம்

"கர்த்தாவே, உமக்குச் சித்தமானால் எனக்கு இந்தக் காரியத்தைச் செய்யும்" என்று நாம் ஜெபிக்கிறோம். இது தவறு ஒன்றுமில்லை. ஆனாலும், தேவனுடைய சித்தம் இதுதான் என்று தெளிவாகத் தெரிந்த பின்பும், அதை அவர் நமக்குச் செய்வாரா என்னும் சந்தேகம் நமக்கு வரக்கூடாது.

உலகப்பிரகாரமான பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்கவேண்டுமென்று அறிந்திருக்கிறார்கள். நம்முடைய பரலோகப் பிதா நமது தேவையை நன்றாக அறிந்திருக்கிறார். நாம் குறையற்றவர்களாகவும், பரிபூரணமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். (மத் 7:7-11; லூக்கா 11:9-13; ரோமர் 8:32; யாக் 1:5)

(7) கனிகளைக் கொடுப்பதன் நோக்கம்

யோவான் 15:8 நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

யோவான் 15:1-8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற முக்கிய உபதேசங்கள்

1. தேவன் திராட்சைத் தோட்டத்துக்காரர் (யோவான் 15:1).
2. கிறிஸ்து திராட்சச்செடி (யோவான் 15:1,5).
3. விசுவாசிகள் கிறிஸ்துவிலுள்ள கொடிகள் (யோவான் 15:2,5)
4. இயேசு கிறிஸ்துவில் ஒருவன் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான். அப்படிப் பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள். (யோவான் 15:2,6).
5. இயேசு கிறிஸ்துவில் கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார் (யோவான் 15:2,5).
6. இயேசு கிறிஸ்துவிலுள்ள ஒவ்வொரு கொடியும் சுத்தமாக இருக்கிறது - தேவனுடைய வார்த்தையினால் இருதயம் சுத்தமாக இருக்கிறது. அவர்கள் ஒளியில் நடக்கிறார்கள். யோவான் 15:3; மத் 5:8; எபே 5:26; யோவான் 3:5; யாக் 1:18; 1பேதுரு 1:23; 1யோவான் 1:7).
7. கொடிகள் (விசுவாசிகள்) கிறிஸ்துவிலும், கிறிஸ்து விசுவாசிகளிடத்திலும் நிலைத்திருக்க வேண்டும். (யோவான் 15:4-5).
8. கொடியானது தானாய் கனிகொடுக்க மாட்டாதது. (யோவான் 15:4-5).
9. விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருக்காவிட்டால், அவர்கள் மூலமாக கனிகொடுப்பதற்கு இயேசு கிறிஸ்து உதவி புரிய மாட்டார். (யோவான் 15:4-6).
10. கிளைகள் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், அதை அறுத்து, எரித்துப்போடுவார்கள். (யோவான் 15:6).
11. விசுவாசிகள் கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் மட்டும் போதாது. இயேசு கிறிஸ்துவினுடைய வார்த்தைகளும், விசுவாசிகளிடத்தில் நிலைத்திருக்க வேண்டும். அப்போது அவர்கள் கேட்டுக்கொள்ளும் விண்ணப்பங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படும். (யோவான் 15:7).
12. விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருந்து, அதிக கனிகொடுக்கும் போது பிதா மகிமைப்படுவார். (யோவான் 15:8).

(8) கிறிஸ்துவில் நிலைத்திருப்பதற்கு நிபந்தனைகளும் அதனால் ஆசீர்வாதங்களும்

யோவான் 15:9 பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.

15 அதிகாரம்

யோவான் 15:10 நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.

யோவான் 15:11 என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

யோவான் 15:12 நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனை யாயிருக்கிறது.

யோவான் 15:13 ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.

யோவான் 15:14 நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்.

"பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்" - பிதாவானவர் குமாரனுடைய சத்தத்தை எப்போதும் கேட்டுக் கொண்டிருக்கிறார். தமது நாமத்தினாலே கேட்கப்படும் எல்லா விண்ணப்பங்களுக்கும் பதில் கொடுப்பதாக இயேசு கிறிஸ்து வாக்குபண்ணியிருக்கிறார். (யோவான் 14:12-15; யோவான் 15:16; யோவான் 16:23-26).

"என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" - இந்த வாக்கியம் பரிசுத்த வேதாகமத்தில் 359 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவற்றில் தேவனுடைய கற்பனைகளை மனுஷர் கைக்கொள்ள வேண்டும் என்பதே பிரதானமாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இந்தக் கற்பனை மிகவும் முக்கியமானது. விசுவாசிகள் தங்களுடைய ஜீவிய காலம் முழுவதற்கும் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும்.

"நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல" - நாம் எந்த அளவிற்கு இயேசு கிறிஸ்துவின் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பதை இயேசு கிறிஸ்து இந்த வசனத்தில் விளக்குகிறார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் நீதிபரராக இருந்ததுபோன்று, நாமும் நீதிமான்களாக இருக்க வேண்டும். (யோவான் 17:14-16; 1யோவான் 2:29; 1யோவான் 3:7-10; 1யோவான் 4:17; 1யோவான் 5:1-5,18) இயேசு கிறிஸ்து தமது பிதாவிற்குக் கீழ்ப்படிந்தது போன்று, நாமும் இயேசு கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிய வேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படியாமல், அவருடைய கிருபையை யாரும் எதிர்பார்க்கக்கூடாது.

"என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" - ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதில் யோவான் 16:24 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கருத்தோடு தொடர்புடையது. நமது ஜெபங்களுக்குப் பதில் கிடைக்கும்போது, நம்மிடத்தில் சந்தோஷம் நிலைத்திருக்கும். அது நிறைவாயிருக்கும். இந்த சந்தோஷம் வேண்டுமென்றால், நாம் இயேசு கிறிஸ்துவிற்கு பரிபூரணமாகக் கீழ்ப்படிய வேண்டும். (யோவான் 15:10) பிதாவானவர் குமாரனுக்கு எப்போதும் செவிகொடுப்பது போன்று, இயேசு கிறிஸ்து நமக்கு எப்போதும் செவிகொடுப்பார். (யோவான் 11:42) இயேசு கிறிஸ்துவின் சந்தோஷம் நம்மிடத்தில் நிலைத்திருக்கும்போது நமது சந்தோஷம் நிறைவாயிருக்கும். (யோவான் 15:11; யோவான் 16:22,24, யோவான் 17:13) நமக்கு சந்தோஷமும் சமாதானமும் வேண்டுமென்றால், நாம் இயேசு கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்னும் நிபந்தனையும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (யோவான் 14:27, யோவான் 15:9-14).

15 அதிகாரம்

"நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது" - பிதாவானவர் குமாரனுக்குக் கொடுத்திருக்கும் கற்பனையையே இயேசு கிறிஸ்துவானவர் நமக்கும் கொடுக்கிறார். (யோவான் 15:10) இயேசு கிறிஸ்து நம்மிடத்தில் அன்பாயிருக்கிறதுபோல, நாமும் பிறரிடத்தில் அன்பாயிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து நமக்காகத் தமது ஜீவனையே கொடுத்தார். நாமும் பிறருக்காக நமது ஜீவனைக் கொடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். (யோவான் 15:12-14) ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு வேறொன்றுமில்லை.

"நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" - நாம் இயேசு கிறிஸ்துவின் சிநேகதராக இருக்க வேண்டுமென்றால், அவர் நமக்குக் கற்பிக்கிற யாவையும் செய்ய வேண்டும். செய்யாவிட்டால், இயேசு கிறிஸ்துவின் சிநேகிதராக இருக்க முடியாது.

(9) சிநேகிதத்திற்கு ஏழு அடையாளங்கள்

யோவான் 15:15 இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிற தில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.

யோவான் 15:16 நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.

யோவான் 15:17 நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன்.

"இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை" - இயேசு கிறிஸ்து நம்மை அடிமைகளாக நடத்துவதில்லை. நாம் பூமியில் அவருடைய பங்காளிகளாகவும், ஸ்தானிகர்களாகவும் இருக்கிறோம். இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் பிதாவின் கிரியையைச் செய்து அவரை மகிமைப்படுத்தியதுபோன்று, நாமும் கிறிஸ்துவின் கிரியைகளைச் செய்து, கிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டும். (யோவான் 14:12; யோவான் 15:15; யோவான் 17:18; யோவான் 20:21-23) இயேசு கிறிஸ்துவின் சுதந்தரமான பிள்ளைகளாக நாம் இருக்க வேண்டுமென்றால், நாமும் அவருடனே கூடப் பாடுபடவேண்டும். (ரோமர் 8:17)

இயேசு கிறிஸ்து நம்மைத் தெரிந்துகொண்டதற்கான காரணங்கள்

1. நாம் புறப்பட்டுப் போய் கனிதரவேண்டும்.
2. நித்திய கிரியைகளைச் செய்ய வேண்டும்.
3. நம்முடைய ஜெபத்திற்குப் பதிலைத் தரவேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரரிடம் காணப்படவேண்டிய சுபாவங்கள்

1. திராட்சைச்செடியில் நிலைத்திருக்க வேண்டும். (யோவான் 15:5)
2. தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கு அவர் நம்மைத் தெரிந்தெடுக்க வேண்டும். (யோவான் 15:15)
3. தேவனுடையஊழியத்தைச் செய்வதற்கு அவர் நம்மை அபிஷேகிக்க வேண்டும். (யோவான் 15:15)
4. ஊழியக்காரர்கள் கனிதர வேண்டும், சோம்பேறியாக இருக்கக்கூடாது. (யோவான் 6:27; யோவான் 15:16)

15 அதிகாரம்

5. ஊழியம் செய்யப் போகிறவர்களாக இருக்க வேண்டும், காத்துக் கொண்டிருக்கிறவர்களாக இருக்கக் கூடாது.(மத் 28:19-20,மாற்கு4:35-38; மாற்கு 16:15-20; அப் 1:4-8)

6. தங்களுடைய கனியைக் காத்துக் கொள்ள வேண்டும். அழித்துப் போடக்கூடாது. (யோவான் 15:16; யோவான் 6:27)

7. பதில் பெறுவதற்காகத் தேவனிடம் ஜெபிக்க வேண்டும். (யோவான் 15:16)

8. எல்லா மனுஷர்களையும் நேசிக்க வேண்டும். (யோவான் 15:12-17; 1யோவான் 3:4-18; 1கொரி 13)

"நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ" - "என் நாமத்தினாலே" என்பது இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினாலே என்று பொருள்படும். (யோவான் 16:23)

(10) உண்மையான விசுவாசிகளை உலகம் ஏன் பகைக்கிறது - (மத் 10:22; யோவான் 16:3; 17:14; யாக் 4:4; 1யோவான் 2:15-17)

யோவான் 15:18 உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்.

யோவான் 15:19 நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராத படியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.

யோவான் 15:20 ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தின துண்டானால், உங்களையும், துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்.

யோவான் 15:21 அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்.

தீர்க்கதரிசன எண் - 36

"உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்..............." (யோவான் 15:18-21) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்ட படியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது" - இயேசு கிறிஸ்து மூன்றுஇடங்களில் தம்முடைய சீஷருக்கு இந்தச் சத்தியத்தைச் சாட்சியாக அறிவித்திருக்கிறார். (யோவான் 15:19; யோவான் 17:14-16)

தேவனுடைய பிள்ளைகளை உலகம் பகைப்பதற்குக் காரணங்கள்

1. இயேசு கிறிஸ்து இதை முன்னறிவித்தார். (யோவான் 15:18-21)

2. கடிந்து கொள்ளப்படுவதை உலகம் வெறுக்கிறது. (யோவான் 3:19).

3. இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தின் பிரகாரமாக நாம் ஜீவிக்கும்போது துன்மார்க்கருடைய பாவ சுபாவங்கள் வெளிப் படுத்தப்படுகிறது. (ரோமர் 12:2; தீத்து 2:11-12).

4. இயேசு கிறிஸ்துவின் ஒளியினால் துன்மார்க்கத்தின் இருள் வெளிப்படுத்தப் படுகிறது. (யோவான் 3:18-20; பிலி 2:15).

15 அதிகாரம்

5. உலகம்குருடாயிருக்கிறது.(2கொரி4:4).

6. கிறிஸ்துவின் பிள்ளைகள் உலகத்திற்குரியவர்கள் அல்ல. (யோவான் 15:19; யோவான் 17:14-16).

7. கிறிஸ்துவின் பிள்ளைகளோடு உலகம் யுத்தம் பண்ணுகிறது(யோவான் 16:33; எபே 6:12; 1யோவான் 5:4).

8. உலகம் தேவனுக்கு எதிராக இயல்பாகவே விரோதம் பாவிக்கிறது. (யாக் 4:4; மத் 18:7).

9. உலகத்தின் வழிகளைத் தேவனுடைய பிள்ளைகள் வெறுக்கிறார்கள். (1யோவான் 2:15-17).

10. தேவனுடைய பிள்ளைகள் உலகத்திலிருந்து வேறுபட்டு ஜீவிக்கிறார்கள். (யாக் 1:27; ரோமர் 12:2; 2பேதுரு 2:20).

11. ஆவிக்குரிய அனுபவங்களை உலகம் புரிந்து கொள்ளவில்லை. (கலா 2:20; 2கொரி 5:17).

12. உலகம் தேவனைப் புரிந்து கொள்ளவில்லை. (யோவான் 15:21).

துன்பப்படுத்து (**persecuted**) - **διώκω** - **diookoo** - 1377

விளைச்சொல் - துன்பப்படுத்து, கொடுமைப்படுத்த வேண்டுமென்னும் எண்ணத்தோடு துன்பப்படுத்துவது. **(to pursue with malignant intent)** - வேதாகமத்தில் "கொடுமைப்படுத்து" **(persecute)** என்றும், இந்த வார்த்தை மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. (மத் 5:10-12,44; மத் 10:23,மத் 23:34; லூக்கா 21:12; யோவான் 5:16; யோவான் 15:20;அப் 7:52;அப் 9:4-5; அப் 22:4-8;அப் 26:11-15; ரோமர் 12:14;1கொரி4:12;1கொரி 15:9; 2கொரி 4:9; கலா 1:13,23; கலா 4:29; பிலி 3:6; வெளி 12:13).

"என் நாமத்தினிமித்தமே" - இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தின் நிமித்தம். (அப் 4:7,17-18; அப் 5:40-41;அப் 9:14-16,21).

"என்னை அனுப்பினவர்" - பிதாவானவரே தம்மை அனுப்பியதாக இயேசு கிறிஸ்து யோவான் சுவிசேஷத்தில் 43 தடவைகள் குறிப்பிட்டிருக்கிறார். மற்ற சுவிசேஷங்களில் நான்கு தடவை மட்டுமே இந்த வாக்கியத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்.

(11) உலகம் ஏன் தேவனையும் கிறிஸ்துவையும் பகைக்கிறது - (மத் 10:34; யோவான் 3:16-21; 7:7; ரோமர் 8:7; 2கொரி 4:3-4)

யோவான் 15:22 நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுதோ தங்கள் பாவத்தைக்குறித்துப் போக்குச் சொல்ல அவர்களுக்கு இடமில்லை.

யோவான் 15:23 என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான்.

யோவான் 15:24 வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளேசெய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள்.

யோவான் 15:25 முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று.

"நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுதோ தங்கள் பாவத்தைக்குறித்துப் போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை" - இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து தம்மைப் பற்றி வெளிப்படுத்தியிருக்கிறார். சத்தியத்தை உபதேசம் பண்ணியிருக்கிறார். ஜனங்கள் இயேசுவைக் கண்டிருக்கிறார்கள். அவருடைய உபதேசத்தைக் கேட்டிருக்கிறார்கள். உபதேசத்தைக் கேட்டும் அவருக்குக் கீழ்ப்படியவில்லையென்றால், அது மிகப்பெரிய பாவம். தங்கள் பாவத்தைக் குறித்து போக்குச்சொல்லுவதற்கு அவர்களுக்கு இடமில்லை.

15 அதிகாரம்

போக்குச்சொல்லுதல் (cloke) - πρόφασις - prophasis - 4392

பெண்பால் பெயர்ச்சொல் - வஞ்சகம், பார்வை, பாவனை, இச்சகம், **(excuse)** போக்குச்சொல்லுதல் **(pretence)** (மத் 23:14; மாற்கு 12:40; பிலி 1:18); **(shew)** (லூக்கா 20:47); **(colour)** (அப் 27:30); **(cloke)** (யோவான் 15:22; 1தெச 2:5)

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 10

"முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள்" (யோவான் 15:25; சங் 35:19; சங் 69:4; சங் 109:3;சங் 119:161).

முகாந்தரமில்லாமல் (without) - δωρεάν - dorean - 1432

வினையடை - முகாந்தரமில்லாமல், வீணாய் **(freely)** (மத் 10:8; ரோமர் 3:24; 2கொரி 11:7;வெளி 21:6; வெளி 22:17); **(in vain)** (கலா 2:21); **(for naught)** (2தெச 3:8); **(without a cause)**(யோவான் 15:25)

(12) சத்திய ஆவியான தேற்றரவாளன் - (கலா 4:6; வெளி 19:10)

யோவான் 15:26 பிதாவினிடத்தில் நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்.

யோவான் 15:27 நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

தீர்க்கதரிசன எண் - 37

"பிதாவினிடத்தில் நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்........" (யோவான் 15:26-27) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"தேற்றரவாளன்" - (யோவான் 14:26)

"பிதாவினிடத்தில் நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன்" - இயேசு கிறிஸ்துவே பரிசுத்த ஆவியானவரில் அபிஷேகம் பண்ணுகிறவர். (மத் 3:11; யோவான் 1:31-33).

"பிதாவினிடத் திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன்" - இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அல்லது இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினால் பிதாவானவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவார். (யோவான் 14:26).

"அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்" - மனுஷரைப் பரிசுத்த ஆவியினாலே அபிஷேகம் பண்ணும் பிதாவானவர் குமாரனைக் குறித்து பிரசங்கத்திலும், தீர்க்கதரிசனத்திலும் சாட்சி கொடுப்பார்.

1. பிரசங்கத்தில் (லூக்கா 4:18; அப் 2:11-39; 1கொரி 1:17-18,23; 1கொரி 2:1-16)

2. தீர்க்கதரிசனத்தில் (அப் 3:21; அப் 11:27; அப் 13:1,32; அப் 21:10; 1கொரி 12:10,28)

"நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" - சீஷர்களும், இயேசு கிறிஸ்துவிற்காக சாட்சி பகருவார்கள். (அப் 1:8,22).

16 அதிகாரம்

(13) இயேசு உபத்திரவத்தை முன் குறித்துக் கூறுகிறார் - (மத் 5:10; யோவான் 15:18)

யோவான் 16:1 நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

யோவான் 16:2 அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும்.

யோவான் 16:3 அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள்.

தீர்க்கதரிசன எண் - 38

"நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்......." (யோவான் 16:1-16) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இன்னும் நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

இடறலடை (offended) - σκανδαλίζω - skandalizoo - 4624

வினைச்சொல் - இடறலடை, இடறலுண்டாக்கு (to stumble) - ஒரு நபரை அவமதிக்க அடையச் செய்தல், நம்பிக் கீழ்ப்படிய வேண்டியவரை ஒதுக்கிவைத்துவிடுதல் (மத் 5:29-30; மத் 18:6-9; மத் 24:10; மத் 26:31,33; யோவான் 6:61; யோவான் 16:1).

"அவர்கள் உங்களை ஜெபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்" - ஜெபாலயத்திலிருந்து வெளியே தள்ளிவிடுவார்கள். தங்களோடு எந்த சமுதாய உறவும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று தடைபண்ணுவார்கள். (யோவான் 9:22; யோவான் 12:42).

தொண்டு (service) - λατρεία - latreia - 2999

பெண்பால் பெயர்ச்சொல் - தொண்டு, ஆராதனை, தேவாராதனை, காணிக்கை (an offering) (ரோமர் 9:4; ரோமர் 12:1; எபி 9:1,6).

"அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள்" - அவர்கள் பிதாவையும் அறியவில்லை, கிறிஸ்துவையும் அறியவில்லை. ஆகையினால் தேவனுடைய பிள்ளைகளை அவர்கள் சகித்துக் கொள்ளாமல் துன்புறுத்துகிறார்கள். (யோவான் 16:3; யோவான் 15:21)

(14) கிறிஸ்தவர்களின் உபத்திரவத்தைப் பற்றிய தீர்க்கதரிசனத்திற்குக் காரணம்

யோவான் 16:4 அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும் படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை.

யோவான் 16:5 இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை.

யோவான் 16:6 ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது.

"அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லி யிருக்கிறேன்" - இந்தக் காரியங்களை இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடம் ஆரம்பித்திலேயே சொல்லவில்லை. சொல்லியிருந்தால், அவர்கள் சோர்ந்து போயிருப்பார்கள். இப்பொழுது, இந்தச் சத்தியங்களையெல்லாம், இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடம் சொல்ல வேண்டிய வேளை வந்துவிட்டது. ஆரம்பத்தில் இயேசு அவர்களோடு கூட இருந்தார். இப்போது அவர்களைவிட்டு, இயேசு கிறிஸ்து எடுத்துக் கொள்ளப்படப் போகிறார்.

16 அதிகாரம்

“எங்கே போகிறீர்” - இதற்கு முன்பு, இரண்டு தடவை இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. (யோவான் 13:36; யோவான் 14:5) இப்பொழுது சீஷர்களுடைய இருதயம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது. ஆகையினால் எங்கே போகிறீரென்று சீஷர்களில் ஒருவனும் இயேசுவைக் கேட்கவில்லை.

(15) இயேசு பிதாவினிடத்திற்கு போவதன் அவசியம் - (யோவான் 14:12)

யோவான் 16:7 நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.

“நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்” - பிரயோஜனமாய் இருக்கும் என்பதற்கான கிரேக்க வார்த்தை “சம்ப்பெரோ” **(sympheroo)** என்பதாகும். இயேசு கிறிஸ்து போவதினால் அவர் பரிசுத்த ஆவியானவரைத் தம்முடைய பிள்ளைகளுக்கு அனுப்புவார். ஆகையினால் இயேசு கிறிஸ்து போவது பிரயோஜனமாயிருக்கும். இந்த வார்த்தை வேதாகமத்தில் பலவிதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. **(expedient)** (யோவான் 16:7; யோவான் 11:50; யோவான் 18:14; 1கொரி 6:12; 1கொரி 10:23; 2கொரி 8:10; 2கொரி 12:1); **(profit)** (1கொரி 7:35; 1கொரி 10:33; 1கொரி 12:7; எபி 12:10); **(profitable)** (மத் 5:29,30; அப் 20:20); **(better)** (மத் 18:6); **good** (மத் 19:10). இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரிக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமான காரியம். அவர் மரித்து, பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அவர் போகவில்லை என்றால், பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளிடத்தில் வரார்.

பிரயோஜனமாயிரு **(expedient)** - συμφέρω - **sympheroo** - 4851

வினைச்சொல் - நலமாயிரு, பிரயோஜனமாயிரு, தகுதியாயிரு

“தேற்றரவாளன்” - (யோவான் 14:26)

“அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்” - திரித்துவத்தில் பரிசுத்த ஆவியானவர் மூன்றாம் நபர். (1யோவான் 5:7; மத் 28:19; 2கொரி 13:14) பிதாவும், குமாரனும் பரிசுத்த ஆவியானவரை அனுப்புகிறார்கள். (யோவான் 14:16,26; யோவான் 15:26; யோவான் 16:7; லூக்கா 24:49; அப் 2:33)

(16) உலகத்தில் பரிசுத்த ஆவியானவரின் மூன்று அம்ச கிரியை - (14:26; 15:26; 16:13-15; ரோமர் 8:1-26)

யோவான் 16:8 அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.

யோவான் 16:9 அவர்கள் என்னை விசுவாசியாததபடியினாலே பாவத்தைக் குறித்தும்,

யோவான் 16:10 நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும்,

யோவான் 16:11 இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக் குறித்தும், கண்டித்து உணர்த்துவார்.

பரிசுத்த ஆவியானவர் செய்யும் ஊழியங்கள்

1. மறுபடியும் பிறக்க வைக்கிறார். (யோவான் 3:3,5)
2. ஜீவனைக் கொடுக்கிறார். (யோவான் 6:63; ரோமர் 8:11)
3. பெலனைக் கொடுக்கிறார். (யோவான் 7:37-39; யோவான் 14:12-17; லூக்கா 24:49; அப் 1:4-8)

16 அதிகாரம்

4. நித்திய தேற்றரவாளர். (யோவான் 14:16,26; யோவான் 15:26; யோவான் 16:7)

5. சத்தியத்தை உபதேசம் பண்ணுகிறார். (யோவான் 14:17,26; யோவான் 15:26; யோவான் 16:13; 1யோவான் 2:20-27)

6. எல்லா சத்தியத்தையும் ஞாபகப் படுத்துகிறார். (யோவான் 14:26)

7. எல்லா சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார். (யோவான் 16:13)

8. கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறார். (யோவான் 16:13-15)

9. எல்லா நிகழ்ச்சிகளையும் வெளிப் படுத்துகிறார். (யோவான் 16:13)

10. கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறார். (யோவான்16:14)

11. கிறிஸ்துவிற்கு பிரதான சாட்சியாக இருக்கிறார். (யோவான் 15:26; யோவான் 16:13-15; அப் 1:8)

12. பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துகிறார். (யோவான் 16:8)

கண்டித்து உணர்த்து **(reprove)** - **ἐλέγχω** - **elenchoo** - 1651

வினைச்சொல் - குற்றத்தையுணர்த்து, கடிந்துகொள், கண்டி, கண்டனம் பண்ணு, கலக்கம் உண்டாக்கு, தீர்க்கப்படு **(to convince, convict, refute, expose, to bring to shame the person reproved)** - இந்த கிரேக்க வார்த்தை இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

(convince) (யோவான் 8:46; 1கொரி 14:24; தீத்து 1:9; யாக் 2:9); **(convict)** (யோவான் 8:9); **(tell one's fault)** (மத் 18:15); **(reprove)** (லூக்கா 3:19; யோவான் 3:20; யோவான் 16:8; எபே 5:11,13; 2தீமோ 4:2); **(rebuke)** (1தீமோ 5:20; தீத்து 1:13; தீத்து 2:15; எபி 12:5; யூதா 1:15; வெளி 3:19)

"உலகத்தைக் குறித்து கண்டித்து உணர்த்துவார்" - யூதர்களை மட்டுமல்லாமல், மனுக்குலத்தார் அனைவரையும் பரிசுத்த ஆவியானவர் கண்டித்து உணர்த்துவார். (யோவான் 3:16; 1யோவான் 2:2).

"அவர்கள் என்னை விசுவாசியாத படியினாலே பாவத்தைக்குறித்து கண்டித்து உணர்த்துவார்" - அவிசுவாசமே பாவத்தின் அஸ்திபாரம். பாவசுபாவத்திற்கு அவிசுவாசமே ஆதாரம். அவிசுவாசம் மனுஷரை அழித்துப் போடும். (மாற்கு 16:16; லூக்கா 8:13; யோவான் 3:16-20,36; யோவான் 5:24,38; யோவான் 8:24; யோவான் 10:26).

"நீதியைக்குறித்து கண்டித்து உணர்த்துவார்" - மனுஷனுடைய நீதி பிரயோஜனமற்றது. (ஏசா 64:6; ரோமர் 10:3) கிறிஸ்துவே நமது நீதியாக இருக்கிறார். (1கொரி 1:30) இயேசு கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினாலே நாம் நீதிமான்களாக ஆக்கப்படுகிறோம். (ரோமர் 3:22-25; ரோமர் 4:1-22; 2கொரி 5:14-21)

"நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறேன்" - இயேசு கிறிஸ்துவானவர் பிதாவிடம் திரும்பப் போகிறார். பரிசுத்த ஆவியானவர் இந்தப் பூமியில் இயேசு கிறிஸ்துவின் ஸ்தானத்தில் இருந்து, அவருடைய ஊழியத்தைச் செய்வார். (யோவான் 14:12)

"நியாயத்தீர்ப்பைக் குறித்து கண்டித்து உணர்த்துவார்" - இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கிறவர்கள் நியாயத்தீர்ப்பின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். (யோவான் 3:15-20; யோவான் 5:24) இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய சொந்த இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக் கொள்ளாதவர்கள் சாத்தானோடு அழிந்து போவார்கள். (மத் 25:41; யோவான் 3:36; வெளி 20:11-15; வெளி 21:8).

யோவான் - தொகுப்புரை

16 அதிகாரம்

"இந்த உலகத்தின் அதிபதி நியாயந் தீர்க்கப்பட்டதினாலே" - எல்லா விசுவாசிகளும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். அவர்களுடைய அதிபதியாகிய சாத்தான் கல்வாரி சிலுவையிலே இயேசு கிறிஸ்துவினால் தோற்கடிக்கப்பட்டான். தன்னுடைய அழிவையே சாத்தானால் தடுத்து நிறுத்த முடியாது. பெலனற்றவனாக இருக்கிறான். அப்படிப்பட்ட சாத்தானால் தன்னுடைய பிள்ளைகளை அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற அழிவிலிருந்து காப்பாற்ற முடியாது. (யோவான் 16:11; யோவான் 12:31; கொலோ 2:14-17; ரோமர் 16:20; வெளி 20:10-15)

(17) வருங்கால வெளிப்பாடுகளின் தீர்க்கதரிசனங்கள் - (அப் 1:2)

யோவான் 16:12 இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.

யோவான் 16:13 சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப் பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

யோவான் 16:14 அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.

யோவான் 16:15 பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.

"இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" - இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டிய சத்தியங்கள் இன்னும் ஏராளமாய் உள்ளது. ஆனால் சீஷர்களோ அதிகமான உபதேசங்களை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இல்லை. தம்முடைய சீஷர்களின் நிலைமையை உணர்ந்து, இயேசு கிறிஸ்து அவர்களால் எவ்வளவு தாங்கிக் கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு மட்டும் படிப்படியாக உபதேசம் பண்ணுகிறார். (யோவான் 12:6; யோவான் 19:17; அப் 15:10; கலா 6:2,5). ஓய்வுநாள் பிரமாணங்களும், யூதருடைய பண்டிகைகளும் ஒழிந்துபோகும். திருச்சபையிலே யூதர்களைப் போலவே புறஜாதியாரும் சம அந்தஸ்தத்தில் இருப்பார்கள். இந்த உபதேசங்களை சீஷர்களால் இப்போது தாங்கிக்கொள்ள முடியாது. பரிசுத்த ஆவியானவர் அவர்களிடத்தில் வரும்போது, அவர் மூலமாக இயேசு கிறிஸ்து சகல சத்தியங்களையும் உபதேசம் பண்ணுவார். (யோவான் 16:13-15).

தாங்கு (bear) - βασταζω - bastazoo - 941

வினைச்சொல் - சும, சகி, கொண்டு போ, சுமந்துகொள், சுமந்துவா, எடுத்துக்கொள், தாங்கு, தூக்கிக்கொள்

(18) இயேசு பிதாவினிடத்திற்கு போவதன் உபதேசம்

யோவான் 16:16 நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றார்.

"கொஞ்சக்காலம்" - (யோவான் 13:33)

"நான் பிதாவினிடத்திற்குப் போகிற படியினால்" - இயேசு கிறிஸ்து மூன்று இடங்களில் தாம் பிதாவினிடத்திற்குப் போவதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

16 அதிகாரம்

1. நான் என் பிதாவினிடத்திற்குப் போகிற படியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். (யோவான் 14:12-17,26; யோவான் 15:7; மத் 3:11; மத் 17:20; லூக்கா 11:13; லூக்கா 24:49; அப் 1:4-8; அப் 38-39)

2. நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். (யோவான் 16:8-11)

3. நான் பிதாவினிடத்திற்குப் போகிற படியினால் கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள். (யோவான் 16:16)

(19) சீஷர்கள் இந்த உபதேசத்தைத் தவறாக புரிந்து கொள்கிறார்கள்

யோவான் 16:17 அப்பொழுது அவருடைய சீஷரில் சிலர்: நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள் என்றும், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றும் அவர் நம்முடனே சொல்லுகிறதின் கருத்தென்ன என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டதுமன்றி:

யோவான் 16:18 கொஞ்சக்காலம் என்கிறாரே, இதென்ன? அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே என்றார்கள்.

(20) இயேசு பிதாவினிடத்தில் போவதையும் திரும்பவும் வரப் போவதையும் குறித்து விளக்குகிறார்

யோவான் 16:19 அதைக்குறித்துத் தம்மிடத்தில் கேட்கும்படி அவர்கள் விரும்புகிறதை இயேசு அறிந்து, அவர்களை நோக்கி: கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்று நான் சொன்னதைக்குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்களோ?

யோவான் 16:20 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.

யோவான் 16:21 ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள்.

யோவான் 16:22 அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள்; நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப் போடமாட்டான்.

தீர்க்கதரிசன எண் - 39

"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்............" (யோவான் 16:19-28) இந்தத் தீர்க்கதரிசனத்தில் யோவான் 16:19-22,27-28 ஆகிய வசனங்கள் நிறைவேறியுள்ளன. யோவான் 16:23-26 ஆகிய வசனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

யோவான் - தொகுப்புரை

16 அதிகாரம்

“நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்” - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறி விட்டது. (லூக்கா 23:27; லூக்கா 24:41).

“ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள்” - இயேசு கிறிஸ்துவின் மரணத்தினால் சீஷர்களுக்கு உண்டாகும் துக்கமும், அவருடைய உயிர்த்தெழுதலினால் உண்டாகும் சந்தோஷமும் இந்த வசனத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. (யோவான் 16:22)

(21) இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்க வேண்டும்

யோவான் 16:23 அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.

யோவான் 16:24 இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்க வில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.

யோவான் 16:25 இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன்; காலம் வரும், அப்பொழுது நான் உவமைகளாய் உங்களுடனே பேசாமல், பிதாவைக்குறித்து வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன்.

யோவான் 16:26 அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக் கொள்வீர்கள். உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வே னென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை.

“அந்த நாளிலே” - இயேசு கிறிஸ்து பிதாவினிடத்திற்குத் திரும்பிப் போகும் நாளிலே சீஷர்கள் இயேசுவிடம் ஒன்றும் கேட்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவிடத்தில் கேட்பார்கள். அதை அவர் அவர்களுக்குத் தருவார். (யோவான் 14:1-3,12,19-20; யோவான் 16:5,10,16,23-27).

“கேட்டுக்கொள்வதெதுவோ” - வேதாகமத்தில் தேவன் தமது பிள்ளைகளுக்கு ஏராளமான காரியங்களை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். விசுவாசிகள் அவற்றில் எதை வேண்டுமானாலும் தங்களுக்குக் கேட்கலாம். அது அவர்களுக்குக் கொடுக்கப் படும்.

“என் நாமத்தினாலே” - இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே. நாம்ஜெபிக்கும்போது “இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபிக்கிறோம் பிதாவே” என்று கூறி நமது ஜெபத்தை முடிக்கிறோம். இயேசு கிறிஸ்து பிதாவிடம் நமக்காகப் பரிந்து பேசுகிறார். ஆகையினால் நமக்காக பரிந்துபேசும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் ஜெபிக்கிறோம். நாம் ஜெபிக்கும் காரியங்களை இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவிடம் பரிந்து பேசுவார். நீதிமன்றத்தில் நமது வழக்குகளை வழக்கறிஞர் நீதிபதியிடம் எடுத்துரைப்பதுபோன்று, இந்தச் சத்தியம் உள்ளது.

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் நாம் பெற்றுக் கொள்ளும், செய்யும் காரியங்கள்

1. இரட்சிப்பு (மத் 1:21; அப் 4:12)
2. ஞானஸ்நானம் (மத் 28:19; அப் 8:16)
3. ஐக்கியம் (மத் 18:5; லூக்கா 9:48)
4. ஆராதனை (மத் 18:20; 2கொரி 1:10)
5. நற்கிரியைகள் (மாற்கு 9:41)

16 அதிகாரம்

6. பிசாசுகளைத் துரத்துவது (மாற்கு 16:17; லூக்கா 10:17)

7. பிரசங்கம் பண்ணுதல் (லூக்கா 24:47; அப் 8:12)

8. வியாதிகளைச் சுகமாக்குதல் (மாற்கு 16:18; அப் 3:6,16; யாக் 5:14-16)

9. நியாயந்தீர்த்தல் (1கொரி 5:1-5; அப் 13:6-11; 2தெச 3:6)

10. ஜெபம் (யோவான் 14:13-15; யோவான் 15:16; யோவான் 16:23-26)

11. துதி (எபே 5:20; எபி 13:15)

12. எல்லாக் காரியங்களும் (கொலோ 3:17)

13. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்ளுதல் (லூக்கா 11:13; லூக்கா 24:49; யோவான் 7:37-39; யோவான் 14:26; அப் 1:4-8)

14. கிறிஸ்துவின் கிரியைகளைச் செய்தல் (மாற்கு 16:17-20; யோவான் 14:12-15).

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபம் பண்ணுவது நமக்குக் கிடைத்திருக்கும் மிகப்பெரிய சிலாக்கியம். அவர் நாமம் வல்லமையுள்ளது. இயேசுவின் நாமத்தில் நாம் எதைக் கேட்டாலும், பிதாவானவர் அதை நமக்குத் தருவார். (யாக் 1:5-8)

"இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை" - இயேசு கிறிஸ்து இதுவரையிலும் தம்முடைய சீஷரோடுகூடவே இருந்தார். அவர்களுக்கு எது தேவைப்பட்டாலும், அவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் நேரடியாகக் கேட்பார்கள். ஆனால் இப்பொழுதோ இயேசு கிறிஸ்து தமது சீஷர்களை விட்டு, கடந்து செல்ல வேண்டிய வேளை வந்துவிட்டது. இனிமேல் அவர்கள் இயேசு கிறிஸ்துவிடம் நேரடியாகக் கேட்பதற்குப் பதிலாக அவருடைய நாமத்தினாலே கேட்பார்கள்.

"கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்" - இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கேட்பதற்குச் சீஷர்கள் தயங்க வேண்டியதில்லை. விசுவாசத்தோடு கேட்கும் போது, அவர்கள் பெற்றுக் கொள்வார்கள். (மத் 17:20; மத் 21:22; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15; யோவான் 15:16; யோவான் 16:23-26)

"உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" - நமக்கு உதவி புரிவதற்காகவே இயேசு கிறிஸ்து நமது ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார். பிதாவிடத்தில் ஜெபிக்கும்போது தேவனுடைய பிதாதத்துவத்தை நாம் அங்கீகரிக்கிறோம். (மத் 7:11; லூக்கா 11:9-13; யாக் 1:17), ஆகையினால் ஜெபிக்கும்போது தயக்கம் தேவையில்லை. நாம் விசுவாசத்தோடு ஜெபிக்கலாம். (சங் 23:1; சங் 34:9-10; சங் 84:11; சங் 91:1-12; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15)

"உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுகொள்வேன்" - சீஷர்கள் இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பார்கள். அவர்கள் ஜெபிப்பதை இயேசு கிறிஸ்து அவர்களுக்காக பிதாவிடம் கேட்டுக் கொள்வார். (ரோமர் 8:34; எபி 7:25; 1யோவான் 2:1-2). பிதாவானவர் எப்போதும் குமாரனுடைய சத்தத்திற்குச் செவி கொடுக்கிறார். நமக்கு இரட்சிப்பைக் கொடுப்பதற்காகவே இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்தார். பிதாவிடம் நாம் நமக்கு இரட்சிப்பைக் கேட்கும்போது, அவர் அதை நமக்குத் தராமல் இருக்க மாட்டார். (ரோமர் 8:32) இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அதாவது இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தினாலே நாம் ஜெபிக்கும்போது, நமது ஜெபத்தைப் பிதா எப்போதும் கேட்கிறார், அந்த ஜெபத்திற்குப் பதில் கொடுக்கிறார். இந்த இரகசியத்தை நமக்குச் சொல்வதற்காகவே பிதாவானவர் இயேசு கிறிஸ்துவை நம்மிடத்தில் அனுப்பியிருக்கிறார். (யோவான் 16:27).

(22) சீஷர்கள் தவறாக புரிந்து கொண்டதற்கு தெளிவான விளக்கம் - (வசனம் 16)

யோவான் 16:27 நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேனென்று விசுவாசிக்கிற படியினால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்.

16 அதிகாரம்

யோவான் 16:28 நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார்.

(23) சீஷர்கள் தெளிவாக புரிந்து கொள்கிறார்கள்

யோவான் 16:29 அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: இதோ, இப்பொழுது நீர் உவமையாய்ப் பேசாமல், வெளிப்படையாய்ப் பேசுகிறீர்.

யோவான் 16:30 நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மை வினாவவேண்டுவதில்லை யென்றும், இப்பொழுது அறிந்திருக்கிறோம்; இதினாலே நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

(24) உபத்திரவங்களையும் கிறிஸ்தவர்களின் பாடுகளையும் குறித்த தீர்க்கதரிசனங்கள்

யோவான் 16:31 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்.

யோவான் 16:32 இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்.

யோவான் 16:33 என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 40

“இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வாரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்..........” (யோவான் 16:32-33) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

“உலகம்” - (யோவான் 15:19)

“நான் உலகத்தை ஜெயித்தேன்” - ஜெயித்தல், ஜெயம் கொள்ளுதல் **(overcome, conquered)** என்பதற்கான கிரேக்க வார்த்தை “நிகாயோ” **(nikaoo)** என்பதாகும். 28 இடங்களில் இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. யோவான் சுவிசேஷத்தில் இந்த வசனத்தில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருந்தாலும், 1யோவான், வெளிப்படுத்தின விசேஷம் ஆகிய புஸ்தகங்களில் 23 தடவைகள் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மொழிபெயர்ப்பும், வெவ்வேறாக உள்ளன. **(overcome)** (1யோவான் 2:13-14; 1யோவான் 4:4; 1யோவான் 5:4-5; வெளி 2:7,11,17,26; வெளி 3:5,12,21; வெளி 11:7;12:11; வெளி 13:7; வெளி 17:14; வெளி 21:7); **(conquer)** (வெளி 6:2); **(prevail)** (வெளி 5:5); **(got the victory)** (வெளி 15:2). இதுதவிர மேலும் மூன்று இடங்களில் இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (லூக்கா 11:22; ரோமர் 3:4; ரோமர் 12:21)

ஜெயங்கொள் **(overcome)** - **νικάω** - **nikaoo** - 3528

வினைச்சொல் - மேற்கோள், ஜெயி, வெற்றியடை, வெல், ஜெயங்கொள்

17 அதிகாரம்

65. கர்த்தருடைய ஜெபம்

(1) பிதாவையும் குமாரனையும் மகிமைப்படுத்துதல்

யோவான் 17:1 இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து:

"இயேசு இவைகளைச் சொன்னபின்பு" - இவைகள் என்பது யோவான் 13:32-16:33 ஆகிய வசனங்களைக் குறிக்கும். இதன் பின்பு இயேசு கிறிஸ்து நீண்ட ஜெபம் ஒன்றை ஏறெடுக்கிறார். இந்த ஜெபத்தை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. தமக்காக (யோவான் 17:1-5)
2. தமது சீஷர்களுக்காக (யோவான் 17:9-19)
3. எல்லா சீஷர்களுக்காக (யோவான் 17:20-24)
4. தமது சீஷர்களுக்காக (யோவான் 17:25-26)

"தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்தார்" - (யோவான் 11:41)

"வேளை வந்தது" (the hour is come) - (யோவான் 7:30; யோவான் 8:20; யோவான் 12:23,27; யோவான் 13:1)

"நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" - (யோவான் 12:16,28-30)

(2) நித்திய ஜீவன்

யோவான் 17:2 பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங் கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.

யோவான் 17:3 ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.

அதிகாரம் (power) - ἐξουσία - exousia - 1849

பெண்பால் பெயர்ச்சொல் - அதிகாரம், வல்லமை, ஆதீனம் (authority, delegated power) - நித்திய ஜீவனைக் கொடுக்கும் அதிகாரம். பிதாவானவர் தமக்குக் கொடுத்திருக்கும் அனைவருக்கும் நித்திய ஜீவனைக் கொடுக்கும் அதிகாரத்தை இயேசு கிறிஸ்து பெற்றிருக்கிறார்.

"நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு" - எல்லோருக்காகவும் மரித்தார். ஆகையினால் அவரால் எல்லோருக்கும் நித்திய ஜீவனைக் கொடுக்க முடியும். (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17).

"அவருக்கு தந்தருளினார், கொடுத்தார்" - (யோவான் 17:2,6,9,11,12,24).

"நித்திய ஜீவன்" - நாம் இயேசு கிறிஸ்துவோடு பரலோகத்தில் நித்திய காலமாக ஜீவிப்போம்.

17 அதிகாரம்

"உம்மை அறிவது" (know thee) - தேவனை அறிவதே நித்திய ஜீவன். இதற்காகத்தான் வேதாகமத்தில் ஞானமும் அறிவும் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. அறிதல், அறிவு என்னும் பொருளைத் தரும் வாக்கியங்கள் வேதாகமத்தில் 1,401 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. வேதவாக்கியங்கள் எல்லாமே தேவனை அறியும் சத்தியத்தோடு தொடர்புடையதாக இருக்கும். வேதவசனங்கள் தேவனுடைய நித்திய சித்தத்தை உறுதிபண்ணும். தேவனை அறியாமல் இருப்பதும், அவரை அறிந்து கொள்ள மறுப்பதும் அவரை விசுவாசியாமல் இருப்பதும் வேதவாக்கியங்களில் கடிந்து கூறப் பட்டிருக்கிறது. தேவனைப் பற்றிய அறிவு நமக்கு இல்லையென்றால் அந்த அறியாமை நமது ஆத்துமாவை அழித்துப்போடும். (1யோவான் 5:13; 2பேதுரு 1:1-8)

"மெய்த் தேவன்" - பழைய ஏற்பாட்டுக் காலங்களில் பொய்த் தெய்வங்கள் இருந்தன. இவற்றிலிருந்து மெய்யான தேவனை வேறுபடுத்திக் காண்பிப்பதற்காக இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (2நாளா 15:3; எரே 10:10; யோவான் 3:33; யோவான் 8:26; 1தெச 1:9; 1யோவான் 5:20; வெளி 6:10)

வேதாகமத்தில் காணப்படும் மெய்யான காரியங்கள்

1. தேவன் (God) (யோவான் 17:3; 1யோவான் 5:20)
2. பிரமாணங்கள் (Laws) (நெகே 9:13)
3. வழிகள் (Ways) (வெளி 15:3)
4. சாட்சி (Testimony) (யோவான் 21:24)
5. வார்த்தை (Saying) (1தீமோ 3:1; வெளி 19:9)
6. சாட்சி (Record) (யோவான் 8:14; யோவான் 19:35)
7. பழமொழி (Proverb) (2பேதுரு 2:22)
8. சாட்சி (Witness) (எரே 42:5; வெளி 3:14)
9. நியாயத்தீர்ப்பு (Judgment) (சக 7:9; வெளி 16:7)
10. ஐசுவரியங்கள் (Riches) (லூக்கா 16:11)
11. ஒளி (Light) (யோவான் 1:9; 1யோவான் 2:8)
12. தொழுது கொள்ளுகிறவர்கள் (Worshipers) (யோவான் 4:23)
13. அப்பம் (Bread) (யோவான் 6:32)
14. திராட்சைச்செடி (Vine) (யோவான் 15:1)
15. பரிசுத்தம் (Holiness) (எபே 4:24)
16. உத்தம கூட்டாளி (Yokefellow) (பிலி 4:3)
17. ஆசரிப்புக்கூடாரம் (Tabernacle) (எபி 8:2)
18. இருதயம் (Heart) (எபி 10:22)
19. கிருபை (Grace) (1பேதுரு 5:12)
20. மனுஷர் (Men) (ஆதி 42:11,19,31,34)

"அனுப்பினவர்" - தாம் ஏறெடுக்கும் இந்த ஜெபத்தில் இயேசு கிறிஸ்து ஆறு இடங்களில் பிதா தம்மை அனுப்பியதாகக் குறிப்பிடுகிறார். (யோவான் 17:3,8,18,21,23,25). யோவான் சுவிசேஷத்தில் மட்டும் பிதா குமாரனை அனுப்பியதாக 46 இடங்களில் கூறப் பட்டிருக்கிறது. மற்ற சுவிசேஷங்களில் மொத்தம் 4 இடங்களில் மட்டுமே இந்த வாக்கியத்தை நாம் வாசிக்கிறோம்.

(3) நியமித்த கிரியை செய்து முடிக்கப்பட்டிருக்கிறது

யோவான் 17:4 பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்.

17 அதிகாரம்

"பூமியிலே நான் உம்மை மகிமைப் படுத்தினேன்" - இயேசுகிறிஸ்து பூமியிலே தேவனுடைய சித்தத்தைச் செய்தார். பிரசங்கம், உபதேசம், சுகமாக்குதல், பரிசுத்த ஜீவியம் ஆகியவற்றின் மூலமாக இயேசுகிறிஸ்து தேவனுடைய சித்தத்தைச் செய்து, அவரை மகிமைப்படுத்தினார்.

"நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்" - மத் 4:23; அப் 10:38 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கும் கிரியைகளை இயேசு கிறிஸ்து செய்து முடித்தார். மீட்பின் கிரியையை இயேசு கிறிஸ்து இன்னும் சிறிது நேரத்தில் கல்வாரி சிலுவையில் மரித்து, செய்து முடித்து விடுவார். (யோவான் 19:30) பரலோகத்தில் இயேசுகிறிஸ்து தமது கிரியைகளை இன்னும் செய்து கொண்டிருக்கிறார். (ரோமர் 8:34; எபி 4:14-16; எபி 7:25).

(4) கிறிஸ்துவின் மகிமை

யோவான் 17:5 பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.

"உலகம் உண்டாகிறதற்கு முன்னே" - இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே வெறுமையாக்கியதை இந்த வசனம் விளக்குகிறது. (பிலி 2:7) இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்து மூன்று காரியங்களைப் பற்றி கூறுகிறார். அவையாவன:

1. நித்தியமாக இருப்பது **(Eternal pre-existence)** (மீகா 5:1-2; யோவான் 1:1-2; வெளி 1:8,11; வெளி 2:8; வெளி 22:13; கொலோ 1:15-18)
2. தம்மைத் தாமே வெறுமையாக்குவது **(Earthly self-emptying)** (லூக்கா 2:40,52; யோவான் 1:14; பிலி 2:5-11; எபி 1:3-9; எபி 2:9-18; எபி 4:14-16; எபி 5:7)
3. மகிமையைத் திரும்பப் பெற்றுக் கொள்வது **(Restored glory)** (யோவான் 17:5; மத் 28:18; எபே 1:20-23; பிலி 2:9-11; 1பேதுரு 3:22; எபி 12:2; வெளி 3:21)

(5) கிறிஸ்து மனுஷருக்கு பிதாவின் நாமத்தை வெளிப்படுத்துகிறார்

யோவான் 17:6 நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.

யோவான் 17:7 நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள்.

யோவான் 17:8 நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள்.

"உம்முடைய நாமம்" - பிதாவின் அதிகாரம் (யோவான் 5:43; யோவான் 10:25).

"நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்" - இயேசு கிறிஸ்து தமக்குத் தந்த மனுஷர் என்று இங்கு குறிப்பிடுவது பன்னிரெண்டு சீஷர்களை மட்டும் என்றில்லாமல் இருபது சீஷர்களையும், அவர்களோடு சேர்ந்து இயேசு கிறிஸ்துவிடம் வந்து அவரை விசுவாசித்த அனைவரையும் குறிக்கும். இயேசு கிறிஸ்து இந்த மனுஷரைப் பற்றிக் குறிப்பிடும் காரியங்கள்.

17 அதிகாரம்

1. நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன் (யோவான் 17:6, 22,23).

2. அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள் (யோவான் 17:6,9).

3. அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். (யோவான் 17:6,8).

4. நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள் (யோவான் 17:7,8,25).

5. உலகம் அவர்களைப் பகைத்தது. (யோவான் 17:14).

6. நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல (யோவான் 17:14-16).

7. அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன். (யோவான் 17:10).

8. நீர் அவர்களை எனக்குத் தந்தீர். (யோவான் 17:2,6,9,11,12,24).

9. நான் அவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுத்திருக்கிறேன். (யோவான் 17:2-3).

10. நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப் போகவில்லை (யோவான் 17:12).

(6) விசுவாசிகள் அனைவருடைய ஒற்றுமை - (வசனம் 20)

யோவான் 17:9 நான் அவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக் கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே.

யோவான் 17:10 என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன்.

யோவான் 17:11 நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்.

“நான் அவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்” - இயேசு கிறிஸ்து தம்மிடத்தில் விசுவாசம் வைத்திருப்பவர்களுக்காக வேண்டிக் கொள்ளும் காரியங்கள்.

1. நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும் படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான் 17:11,15)

2. நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும் படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொள்ளும் (யோவான் 17:11,21-23)

3. அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடைய வேண்டும். (யோவான் 17:13)

4. உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப் பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன் (யோவான் 17:17-19; யோவான் 10:36)

5. பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்ததை உலகம் ஏற்றுக் கொள்வதாக. (யோவான் 17:24)

6. நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்.

17 அதிகாரம்

7. நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக வேண்டிக் கொள்கிறேன். (யோவான் 17:24)

"என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்" - திரித்துவத்தில் பிதாவும், குமாரனும் சம அந்தஸ்தில் இருக்கிறார்கள். விசுவாசிகளாகிய நாம் இயேசு கிறிஸ்துவிடம் "என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள்" என்று ஜெபத்தில் அறிக்கையிடலாம். ஆனால் "உம்முடையவைகள் என்னுடையவைகள்" என்று நம்மால் இயேசு கிறிஸ்துவிடம் கூறமுடியாது.

(7) கேட்டின் மகன் கெட்டுப்போகிறான்

யோவான் 17:12 நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டு வந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத் தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை.

"கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை" - கேட்டின் மகனாகிய யூதாஸ்காரியோத்தைத் தவிர, வேறு யாரும் கெட்டுப்போகவில்லை. (அப் 1:20-25; சங் 41:9; சங் 69:25-29). பிதாவானவர் இயேசு கிறிஸ்துவிற்குத் தந்தவர்களில் யூதாஸ் காரியோத்தும் ஒருவன். ஆகையினால்தான் இயேசு கிறிஸ்து தமது ஜெபத்தில் பிதாவிடம் யூதாஸ்காரியோத்தைப் பற்றி கணக்கு ஒப்புவிக்கிறார். (மத் 10:1-20; மாற்கு 3:13-19; மாற்கு 6:7-13; லூக்கா 6:12-16).

கெட்டுப்போ (lost) - **ἀπόλλυμι** - **apollymi** - 622

வினைச்சொல் - கொலை செய், அழி, கெடு, கொல், சங்கரி, கெட்டுப்போ - **(to lose)** (யோவான் 6:12,39; யோவான் 12:25; யோவான் 17:12; யோவான் 18:9); **(perish)** (யோவான் 3:15-16; யோவான் 6:27; யோவான் 10:28; யோவான் 11:50); **(destroy)** (யோவான் 10:10); **(die)** (யோவான் 18:14)

"கேட்டின் மகன்" **(son of perdition)** - அழிவின் மகன் **(son of destruction)** என்பது இந்த வாக்கியத்தின் பொருள். ஏனெனில் இவன் தன் அழிவைத் தெரிந்து கொண்டு, அழிவை நோக்கிப் போகிறான். இந்த வாக்கியம் அந்திக்கிறிஸ்துவையும் குறிக்கும். (2தெச 2:3) செப்துவஜிந்த் பதிப்பில் இந்த வாக்கியம் துரோகம் பண்ணுகிற பிள்ளைகளைக் **(children of transgression)** குறிக்கிறது. (ஏசா 57:4) ஒரு குறிப்பிட்ட இலக்கு, குறிப்பிட்ட சுபாவம், குறிப்பிட்ட கொள்கை உடையவர்களை எபிரெயரும், கிரேக்கரும் விசேஷித்த வாக்கியங்களினால் அழைத்தார்கள். அவையாவன:

1. இராஜ்ஜியத்தின் புத்திரர் **(children of the kingdom)** (மத் 8:12; மத் 13:38)
2. மணவாளனுடைய தோழன் **(of the bridechamber)** (மத் 9:15)
3. நரகத்தின் மகன் **(of hell)** (மத் 23:15)
4. கோபாக்கினையின் பிள்ளைகள் **(of wrath)** (எபே 2:3)
5. ஞானத்தின் பிள்ளைகள் **(of wisdom)** (மத் 11:19; லூக்கா 7:35);

யூதாஸ்காரியோத்திற்கும், அந்திக் கிறிஸ்துவிற்கும் பிறப்பு, வளர்ப்பு, மரணம் ஆகிய எதிலும் உறவு ஒன்றும் இல்லை. அவர்கள் ஒரே பெற்றோருக்குப் பிறக்கவில்லை. அவர்கள் இருவரும் தங்கள் கிரியைகளினால் தங்களுடைய அழிவைத் தேடிக் கொண்டார்கள். கிறிஸ்துவின் கரங்களினால் அந்திக் கிறிஸ்து மரிப்பான். யூதாஸ் நான்றுகொண்டு செத்தான். (தானி 7:11; ஏசா 11:4; 2தெச 2:8; வெளி 19:20).

17 அதிகாரம்

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 11

“வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும்கெட்டுப்போகவில்லை” (யோவான் 17:12; சங் 41:9; சங் 69:25-29; சங் 109:8; அப் 1:20-25). ஒருவன் தெரிந்தும் பாவம் செய்தால் அவன் அழிவைத் தெரிந்திருக்கிறான். இரட்சிக்கப்படுவதற்கு அவனுக்கு விருப்பம் இல்லை. ஆகையினால் அழிந்துபோகிறான். யூதாஸ்காரியோத்து பாவம் செய்த பின்பு, தன்னுடைய பாவத்திற்காக மனம் வருந்தி, இயேசு கிறிஸ்துவிடம் வந்து மன்னிப்புக் கோரவில்லை. தம்மிடம் வந்த யாரையும் இயேசு கிறிஸ்து புறம்பே தள்ளமாட்டார். ஆனால், யூதாஸ்காரியோத்தோ இயேசு கிறிஸ்துவிடம் வருவதற்குப் பதிலாக தன்னுடைய அழிவைத் தானே தேடிக்கொள்கிறான்.

(8) விசுவாசிகளின் பரிசுத்தம் - (எபி 12:14; எபி 15:3)

யோவான் 17:13 இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன்.

யோவான் 17:14 நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது.

(9) விசுவாசிகளை தீமையிலிருந்து காக்கும்படி ஜெபம்

யோவான் 17:15 நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

“நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்” - தம்முடைய சீஷர்கள் எல்லாரும் இந்த உலகப் பாடுகளிலிருந்து உடனடியாக விடுதலை பெறுவதற்காக மரித்துப் போகவேண்டுமென்றோ அல்லது உலகத்திலுள்ள ஜனங்களிடமிருந்து தங்களைப் பிரித்து, தனிமையான இடங்களில் வாழவேண்டும் என்றோ இயேசு கிறிஸ்து விண்ணப்பம் பண்ணவில்லை. சோதனைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக சீஷர்கள் இப்படி ஒடிப்போவது இயேசு கிறிஸ்துவின் சித்தமல்ல. அவர்கள் இந்த உலகத்திற்கு இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரிகளாகவும், ஒளியாகவும் ஜீவிக்க வேண்டும். (மத் 5:16; பிலி 2:15; தீத்து 2:11-14;1கொரி 5:10).

“நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்” - (மத் 6:13; 1யோவான் 5:19).

(10) விசுவாசிகளின் பரிசுத்தத்தைப் பற்றிய சாட்சி - (யோவான் 15:3,19)

யோவான் 17:16 நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல.

(11) விசுவாசிகள் ஊழியத்திற்காக வேறுபிரிக்கப்படுகிறார்கள் - (யோவான் 10:36)

யோவான் 17:17 உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.

17 அதிகாரம்

யோவான் 17:18 நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.

யோவான் 17:19 அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப் பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்.

"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்" - பரிசுத்தமாக்குதல் என்பதற்கான கிரேக்க வார்த்தை "ஹாகியோஜோ" **(hagiazo).** தேவனுக்காகவும், தேவனுடைய ஊழியத்திற்காகவும் பரிசுத்தப்படுத்துவது, ஒரு பரிசுத்தமான பயன்பாட்டிற்காக அசுத்தத்திலிருந்து விலகியிருப்பது என்பது இந்த வாக்கியத்தின் பொருள். இதன் அடிப்படைப் பொருள் விலகியிருப்பது என்பதாகும். பாவத்திலிருந்தும், அசுத்தத்திலிருந்தும் நாம் விலகியிருக்கும்போது, நாம் பரிசுத்தமடைகிறோம். தேவனுக்காகவும், தேவனுடைய ஊழியத்திற்காகவும் நாம் நம்மையும், நமது உடைமைகளையும் பரிசுத்தப்படுத்த வேண்டும்.

பரிசுத்தமாக்கப்பட்ட பொருட்கள்

1. விசேஷித்த நாள் (ஆதி 2:3);
2. ஆசரிப்புக்கூடாரம் (யாத் 29:43-44)
3. வஸ்திரங்கள் (லேவி 8:30)
4. வீடுகள் (லேவி 27:9-29)
5. தேவாலயங்கள் (2நாளா 7:16-20)

இந்தப் பொருட்கள் எல்லாவற்றையுமே தேவனுடைய பரிசுத்த ஊழியத்திற்காக அவரிடம் அர்ப்பணிக்க வேண்டும்.

பரிசுத்தமாக்குவதற்கு தேவையில்லாதவர்கள்

1. தேவனுடைய நாமம் (எசே 36:23);
2. தேவன் (1பேதுரு 3:15)
3. கிறிஸ்து (யோவான் 10:36; யோவான் 17:19)
4. ஏற்கெனவே பரிசுத்தமாக்கப்பட்ட சீஷர்கள் யோவான் 13:10; யோவான் 15:3; யோவான் 17:2,6,14,16)

பரிசுத்தப்படுத்துதல் **(Sanctify)** - **αγιάζω** - **hagiazoo** - 37

வினைச்சொல் - பரிசுத்தப்படுத்துதல், பரிசுத்தப்படுதல், பரிசுத்தமாக்குதல், பரிசுத்தஞ்செய்தல், பரிசுத்தம் பண்ணுதல், பரிசுத்தமாக்கப்படுதல்.

(அ) தேவனுக்காகப் பொருட்களையோ அல்லது நபர்களையோ வேறுபிரித்து அர்ப்பணித்தல். மத். 23:17; யோவா. 10:36

(ஆ) சட்டப்பிரகாரமாக, நீதிநெறிப் பிரகாரமாக பரிசுத்தப்படுத்துதல். 1கொரி. 6:11; 7:14

(இ) சடங்குகளின் மூலமாக ஒரு பொருளையோ அல்லது நபரையோ பரிசுத்தப்படுத்துதல். எபி. 9:13; 2தீமோ. 2:21

(ஈ) பரிசுத்தமுள்ளதை அங்கீகரித்தல் (மத். 6:9)

"நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்" - பிதா குமாரனை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அதுபோலவே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் தம்முடைய எல்லா சீஷர்களையும் இந்த உலகத்திற்கு அனுப்புகிறார். இந்த ஜெபத்தில் இயேசு கிறிஸ்து தமது பன்னிரெண்டு சீஷர்களுக்காக மட்டும் என்று ஜெபிக்காமல் தம்முடைய எல்லா சீஷர்களுக்காகவும் ஜெபிக்கிறார். "நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்." (யோவான் 17:20; மத் 28:20; மாற்கு 16:15-20; யோவான் 14:12; யோவான் 20:21; மத் 18:18

17 அதிகாரம்

"அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" - தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்காக இயேசு கிறிஸ்து மரணபரியந்தம் தம்மைத் தாமே வேறு பிரித்து, ஒப்புக்கொடுத்தார். இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக அவரை விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்கிற அனைவருக்கும் இரட்சிப்பு உண்டாகிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து வாசித்து, தியானித்து, அதற்குக் கீழ்ப்படிவதினாலே அவர்கள் தொடர்ந்து பரிசுத்தமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். (1யோவான் 1:7; எபே 5:26).

(12) விசுவாசிகள் ஒன்றாயிருக்க வேண்டும் - (வசனம் 9)

யோவான் 17:20 நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர் களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

யோவான் 17:21 அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விவசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

யோவான் 17:22 நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.

யோவான் 17:23 ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும் படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்,........... ....நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" - பரிபூரணமான ஒற்றுமையை இயேசு கிறிஸ்து இந்த ஜெபத்தில் ஐந்து இடங்களில் கூறியிருக்கிறார். (யோவான் 17:11,21-23) குமாரனைப் பிதா அனுப்பினார் என்பதை இந்த உலகம் விசுவாசிக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் தேவனிடத்தில் ஒன்றாயிருக்கும் போது, பிதா குமாரனை அனுப்பினார் என்பதை இந்த உலகம் விசுவாசிக்கும். (ஏசா 2:2-4; ஏசா 11:9.)

"நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல" - (லூக்கா 22:3)

"நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கு" - விசுவாசிகள் இந்த உலகத்திற்கு சுவிசேஷச் செய்தியை அறிவிக்க வேண்டும். தங்கள் வாயினால் அறிவித்தால் மட்டும் போதாது. தேவனுடைய சத்தியத்தை இந்த உலகம் அறிய வேண்டும். அதற்காக நாம் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால், பிதாவும், குமாரனும் ஒன்றாயிருப்பது போல விசுவாசிகளும் ஒன்றாயிருக்க வேண்டும். ஆதித்திருச்சபையின் விசுவாசிகள் தங்களுக்குள் ஒருமனப்பட்டிருந்தார்கள். (அப் 1:14; அப் 2:1,46; அப் 4:24,32; அப் 5:12) "வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு" (யாக் 3:16) தேவபிள்ளைகள் ஒற்றுமையாக இருக்கும் போது தேவநாமம் மகிமைப்படும்.

(13) விசுவாசிகளின் மகிமை

யோவான் 17:24 பிதாவே, உலகத் தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்.

17 அதிகாரம்

"பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால்" - இயேசு கிறிஸ்து உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே இருந்தார் என்பதை இரண்டாம் முறையாகக் குறிப்பிடுகிறார். (யோவான் 17:5)

(14) உலகம் பிதாவை அறியவில்லை

யோவான் 17:25 நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்.

பிதாவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1. நீதியுள்ள பிதா (Righteous) (யோவான் 17:25)
2. பரிசுத்த பிதா (Holy) (யோவான் 17:11)
3. பரலோகப்பிதா (Heavenly) (மத் 6:14,26,32)
4. இரக்கங்களின் பிதா (Father of Mercies) (2கொரி 1:3)
5. மகிமையின் பிதா (Father of Glory) (எபே 1:17)
6. ஆவிகளின் பிதா (Father of Spirits) (எபி 12:9)
7. சோதிகளின் பிதா (Father of Lights) (யாக் 1:17)
8. வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவர் (Lord of Heaven) (மத் 11:25)

(15) ஊழியம் நிறைவேறிற்று

யோவான் 17:26 நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும் படிக்கும், நானும் அவர்களிலிருக்கும் படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்.

யோவான் 17 ஆவது அதிகாரத்தில் தாம் செய்திருப்பதாக இயேசு கிறிஸ்து கூறிய காரியங்கள்

1. பூமியில் நான் உம்மை மகிமைப் படுத்தினேன் (யோவான் 17:4)
2. நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் (யோவான் 17:4)
3. உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன் (யோவான் 17:6)
4. நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் (யோவான் 17:8)
5. நீர் எனக்குத் தந்தவர்களை நான் காத்துக் கொண்டு வந்தேன். (யோவான் 17:12)
6. நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன் (யோவான் 17:14)
7. நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். (யோவான் 17:18)
8. நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். (யோவான் 17:22)
9. நான் உம்மை அறிந்திருக்கிறேன். (யோவான் 17:25)
10. உம்முடைய நாமத்தைத் தெரியப் படுத்தினேன். (யோவான் 17:26)

17 அதிகாரம்

“அவர்கள்........உம்முடைய” - இந்த ஜெபத்தில் இந்த வார்த்தையைப் போன்று 169 சுட்டுப்பெயர்களை (pronouns) இயேசு கிறிஸ்து பயன்படுத்தியிருக்கிறார். சீஷர்களுக்கு பன்மைச்சுட்டுப்பெயர் பயன்படுத்தப்பட்டிருப்பது போன்று, பிதாவுக்கும், கிறிஸ்துவிற்கும் சில வசனங்களைப் பன்மைச் சுட்டுப்பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. திரித்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் இருப்பதைப் பன்மைச் சுட்டுப் பெயர் விளக்குகிறது. (யோவான் 17:11, 21-23) இவை தவிர 65 இடங்களில் கிறிஸ்துவிற்குச் சுட்டுப் பெயர் ஒருமையிலும், 53இடங்களில் பிதாவிற்குச் சுட்டுப் பெயர் ஒருமையிலும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இத்துடன், தேவனையும், சீஷர்களையும் குறிப்பதற்குப் பன்மைச் சுட்டுப் பெயர் 43 இடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

18 அதிகாரம்

VIII. இயேசுவின் பாடுகள்

1. கெத்செமனே தோட்டத்தில் இயேசு - (மத் 26:36; மாற்கு 14:32; லூக் 22:39)

யோவான் 18:1 இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய சீஷருடனே கூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது, அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள்.

"தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்" - இயேசுகிறிஸ்து தாம் இதுவரையிலும் பேசிய இடத்திலிருந்து புறப்பட்டுப் போகிறார். (யோவான் 14:31)

"கெதரோன்" **(Cedron)** - மறுபெயர் கீதரோன் **(Kidron)** (2சாமு 15:23; 1இராஜா 15:13; 2இராஜா 23:4) கெதரோன் 6 அல்லது 7 அடி அகலமுள்ள சிறிய ஆறு. எருசலேம் மதில் சுவற்றிலிருந்து 200 கெஜம் தூரத்தில் உள்ளது. இந்த ஆற்றைத் தாண்டினால், ஒலிவ மலையின் அடிவாரம் வரும். மழைக்காலத்தில் மட்டுமே இந்த ஆற்றில் தண்ணீர் வரும். தான் வஞ்சிக்கப்பட்ட போது தாவீது இந்த ஆற்றைக் கடந்து சென்றான். (2சாமு 15:23).

"அங்கே ஒரு தோட்டம் இருந்தது" - பழத்தோட்டம். இந்தத் தோட்டத்தின் பெயர் கெத்செமனே **(Gethsemane)** (மத் 26:36-47; மாற்கு 14:30-36; லூக்கா 22:40-44). யூதமார்க்கத்தில் ஐசுவரியவான்களாக இருக்கிறவர்கள் பட்டணத்திற்கு வெளியே ஒரு தோட்டம் அமைத்து, அங்கு ஓய்வாகப் போய் வருவார்கள். கெத்செமனே தோட்டம் இயேசு கிறிஸ்துவின் நண்பருடைய தோட்டமாக இருக்கலாம். அவர் அடிக்கடி அங்கே சென்று தங்குவது வழக்கம். (யோவான் 18:2; லூக்கா 22:40)

2. இயேசுவைக் கொல்ல முயற்சி - இயேசு காட்டிக்கொடுக்கப் படுவதும் கைதுபண்ணப் படுவதும் - (மத் 26:3; 26:47; மாற்கு 14:43; லூக் 22:47)

யோவான் 18:2 இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தபடியினால், அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாசும் அந்த இடத்தை அறிந்திருந்தான்.

யோவான் 18:3 யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு, பந்தங்களோடும் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வந்தான்.

யோவான் 18:4 இயேசு தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும் அறிந்து, எதிர்கொண்டுபோய், அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்றார்.

யோவான் 18:5 அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: நான்தான் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனேகூட நின்றான்.

யோவான் 18:6 நான்தான் என்று அவர் அவர்களிடத்தில் சொன்னவுடனே, அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள்.

யோவான் 18:7 அவர் மறுபடியும் அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார். அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள்.

யோவான் 18:8 இயேசு பிரதியுத்தரமாக: நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே; என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள் என்றார்.

18 அதிகாரம்

யோவான் 18:9 நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகவில்லையென்று அவர் சொல்லிய வசனம் நிறைவேறத்தக்கதாக இப்படி நடந்தது.

யோவான் 18:10 அப்பொழுது சீமோன் பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்; அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பெயர்.

யோவான் 18:11 அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி: உன் பட்டயத்தை உறையிலே போடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்போனோ என்றார்.

"இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே போயிருந்தார்" - இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காலத்தில், நாம் இரண்டு விதமான பகுதிகளைப் பார்க்கிறோம். தலைசாய்ப்பதற்குக் கூட இடமில்லாமல் ஓய்வில்லாமல் ஊழியம் செய்த நேரம், மற்றொன்று தனிமையில் ஓய்வு எடுத்த நேரம். இயேசு கிறிஸ்து சகல ஜனங்களுக்கும் நன்மை செய்வதற்காக ஓய்வில்லாமல் ஊழியம் செய்தார். (அப் 10:38) தமது தனிமையான நேரத்தை இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம் பண்ணவும், பிதாவினிடத்தில் ஜெபம் பண்ணவும் பயன்படுத்தினார்.

"போர்ச்சேவகரின் கூட்டம்" - 600 பேர்கொண்ட போர்ச்சேவகர்களின் பட்டாளம். (யோவான் 18:3,12; அப் 10:1; அப் 21:31; அப் 27:1; மத் 27:27; மாற்கு 15:16) இந்தக் கூட்டத்தில் போர்ச்சேவகர்களின் அதிகாரிகளும், பிரதான ஆசாரியரும் இருப்பார்கள். (யோவான் 7:32,45-46)

கூட்டம் (band) - σπεῖρα - speira - 4686

பெண்பால் பெயர்ச்சொல் - கூட்டம், பட்டாளம்

பந்தங்கள் (lanterns) - φανός - phanos - 5322

ஆண்பால் பெயர்ச்சொல் - பந்தங்கள், தீவட்டி (torch) இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

தீவட்டிகள் (torches) - λαμπάς - lampas - 2985

பெண்பால் பெயர்ச்சொல் - தீவட்டி, விளக்கு, தீபம் (lamps) (மத் 25:1-8; வெளி 4:5; வெளி 8:10; அப் 20:8).

"ஆயுதங்கள்" - பட்டயங்களும், தடிகளும் (லூக்கா 22:52)

"நான்தான்" - (யோவான் 14:6; யாத் 3:14)

"நான்தான் என்று அவர் அவர்களிடத்தில் சொன்னவுடனே, அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள்" - தாம் விரும்பி இருந்தால், இயேசு கிறிஸ்து அவர்களைக் கொன்றுபோட்டிருக்கலாம். இயேசு கிறிஸ்துவின் அனுமதியில்லாமல் அவரை யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. அவர் அங்கிருந்து, தப்பிச் செல்ல வேண்டுமென்று, விரும்பியிருந்தால், அவர்களை விட்டு, இயேசு கிறிஸ்து கடந்து போயிருக்கலாம். என்றாலும், இயேசு கிறிஸ்து எப்போதுமே பிதாவின் சித்தத்தையே செய்கிறார். ஒவ்வொரு காரியத்திற்கும் உரிய ஏற்ற வேளை வரும்போது, அந்தந்தக் காரியங்களைச் செய்கிறார். இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்து "நான்தான்" என்று கூறியவுடனே போர்ச்சேவகரின் கூட்டத்தாரும், ஊழியக்காரரும் தம்முடைய இருதயங்களிலேயே பயமடைந்தவர்களாக பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள்.

"என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள்" - என்று இயேசு கிறிஸ்து போர்ச்சேவகரின் கூட்டத்திடம் சொல்லுகிறார். அவர்களிடம் இயேசு பணிவோடு விண்ணப்பம் பண்ணவில்லை. அதிகாரத்தோடு பேசுகிறார். இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே அவர்களிடத்தில் ஒப்படைத்து விட்டார். அவர்கள் இயேசுவை மட்டுமே தேடிக் கொண்டு வந்தார்கள். தம்முடைய சீஷர்களை அவர்கள் ஒன்றும் செய்யாமல் அனுப்பிவிட வேண்டுமென்று, இயேசு அவர்களிடத்தில் அதிகாரத்தோடு கூறுகிறார்.

18 அதிகாரம்

இயேசு கிறிஸ்து நல்ல மேய்ப்பன். தமது ஆடுகளுக்காகத் தமது ஜீவனையே கொடுக்கிறவர். இயேசு கிறிஸ்துவின் வல்லமை அவருடைய சீஷர்களைப் பாதுகாத்தது. பேதுரு, ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான். சேவகர்கள் இதினிமித்தம் இவர்கள்மீது கோபப்பட்டு, எல்லாச் சீஷர்களையும் கொன்றுபோட்டிருந்திருப்பார்கள். ஆனாலும் இயேசு கிறிஸ்து தமது சீஷர்களைப் பாதுகாக்கிறார். (யோவான் 18:10).

தீர்க்கதரிசன எண் - 41

"நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகவில்லை" (யோவான் 18:9; யோவான் 17:12) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

"பட்டயம்" (sword) - (லூக்கா 22:36)

வெட்டு (smote) - παίω - paioo - 3817

வினைச்சொல் - வெட்டு, அடி, கொட்டு (மத் 26:68; மாற்கு 14:47; லூக்கா 22:64; வெளி 9:5)

"சீமோன்பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்" - சீஷர்கள் ஏற்கெனவே பயமடைந்து, தரையில் விழுந்து கிடந்தார்கள். இப்போது பேதுரு, வேலைக்காரனுடைய வலதுகாதை வெட்டிவிட்டான். அங்கு இயேசு கிறிஸ்து மறுபடியும் ஒரு அற்புதம் செய்கிறார். அவனுடைய வலதுகாதையை மறுபடியும் அதற்குரிய இடத்திலேயே வைத்து, அவனைச் சொஸ்தமாக்குகிறார். இதைக் கண்ட போர்ச்சேவர்களுக்குப் பயம் அதிகரித்திருக்கும். இயேசு கிறிஸ்துவின் அனுமதியில்லாமல் அவரை ஒன்றுமே செய்ய முடியாது என்பதைத் தெளிவாகப் புரிந்து வைத்திருப்பார்கள். (மத் 26:51-56)

"அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பெயர்" - யோவான் மட்டுமே அந்த வேலைக்காரனுடைய பெயரைக் குறிப்பிடுகிறார். ஆனால் இயேசு கிறிஸ்து அவனுடைய காதைக் குணப்படுத்தியதை யோவான் குறிப்பிடவில்லை. (லூக்கா 22:51)

"பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்போனோ" - என்று இயேசு கிறிஸ்து பேதுருவிடம் கேட்கிறார். தமது பாடுகளின் பாத்திரத்தைக் குறித்து (Cup of sufferings) இயேசு கிறிஸ்து இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார். (மத் 20:22-23)

3. இயேசுவை அன்னா என்பவனிடத்திற்கு முதலாவதும், பின்பு காய்பா என்பவனிடத்திற்கும் கொண்டு போகிறார்கள் - (மத் 26:57; மாற்கு 14:53; லூக் 22:63)

யோவான் 18:12 அப்பொழுது போர்ச் சேவகரும், ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவனும், யூதருடைய ஊழியக்காரரும் இயேசுவைப்பிடித்து, அவரைக் கட்டி,

யோவான் 18:13 முதலாவது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டு போனார்கள்; அவன் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தான்.

யோவான் 18:14 ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் இந்தக் காய்பாவே.

"ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவன்" - இயேசு கிறிஸ்துவைக் கைதுபண்ணுவதற்கு ரோமர்கள் அதிகம் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இயேசு கிறிஸ்து மிகப்பெரிய தேசத்துரோகம் பண்ணிவிட்டதாக அவர்மீது யூதர்கள் குற்றம்சுமத்தியிருக்கிறார்கள். அவர் பெரிய கலகக்காரர் என்று நினைத்து, அவரைக் கைதுபண்ணுவதற்காக ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவனையே அனுப்பியிருக்கிறார்கள்.

18 அதிகாரம்

தலைவன் (captain) - χιλίαρχος - chiliarchos - 5506

ஆண்பால் பெயர்ச்சொல் - பிரதான மனுஷர், தலைவன், சேனாபதி, சேனைத்தலைவர்

"முதலாவது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்" - அன்னா என்பவன் ஆலோசனைச் சங்கத்தின் தலைவனாக இருக்கலாம். பலதடவை இவன் பிரதான ஆசாரியனாக நியமிக்கப் பட்டிருக்கிறான். இவனுக்கு ஐந்து குமாரர்களும், ஒரு மருமகனும் இருந்தார்கள். இவனுடைய மருமகன் காய்பா பிரதான ஆசாரியனாக இருந்திருக்கிறான்.

"அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியன்" - பிரதான ஆசாரியருடைய பதவி பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒருவருடைய வாழ்நாள் முழுவதற்கும் கொடுக்கப்பட்டது. ஆனால் ரோமருடைய ஆட்சிக்காலத்தில் ஒவ்வொரு வருஷமும் பிரதான ஆசாரியர் மாறிக்கொண்டே வந்தார்கள். ரோமப்பேரரசின் தேசாதிபதிகள் பிரதான ஆசாரியரை நியமனம் செய்தார்கள்.

"ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் இந்தக் காய்பாவே" - இயேசு கிறிஸ்துவைக் கொலை செய்ய வேண்டுமென்று, காய்பா ஏற்கெனவே தீர்ப்பு வழங்கி விட்டான். (யோவான் 11:49-52) ஆகையினால் இவனுக்கு இயேசு கிறிஸ்துவினுடைய வழக்கில் தீர்ப்பு கூறுவதற்குத் தகுதியில்லை. இயேசு கிறிஸ்துவோ நீதியாக விசாரிக்கப்படவில்லை. சிலுவையில் மரிப்பதற்கு அவர் எந்தப் பாவமும் செய்யவில்லை. உலகத்தின் பாவங்களை மன்னிப்பதற்கு அவர் தம்மைச் சிலுவையில் மரிப்பதற்கு ஒப்புக்கொடுத்தார்.

4. பேதுருவின் முதலாவது மறுதலிப்பு - (மத் 26:69; மாற்கு 14:66; லூக் 22:54; யோவான் 18:25)

யோவான் 18:15 சீமோன்பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின் சென்றார்கள். அந்தச் சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்ததினால், இயேசுவுடனே கூடப் பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் பிரவேசித்தான்.

யோவான் 18:16 பேதுரு வாசலருகே வெளியே நின்றான். அப்பொழுது பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்த மற்றச் சீஷன் வெளியே வந்து, வாசல் காக்கிறவர்களுடனே பேசி, பேதுருவை உள்ளே அழைத்துக்கொண்டு போனான்.

யோவான் 18:17 அப்பொழுது வாசல்காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி: நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றாள். அவன்: நான் அல்ல என்றான்.

யோவான் 18:18 குளிர்காலமானபடியினாலே ஊழியக்காரரும் சேவகரும் கரிநெருப்புண்டாக்கி, நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள்; அவர்களுடனே கூடப் பேதுருவும் நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தான்.

"சீமோன்பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின்சென்றார்கள்" - இந்த வாக்கியத்தில் வேறொரு சீஷன் என்பது யோவானைக் குறிக்கலாம். (யோவான் 13:23; யோவான் 19:26; யோவான் 21:7,20) அல்லது இந்த வார்த்தை நிக்கொதேமுவையோ அல்லது யோசேப்புவையோ குறிக்கலாம். (யோவான் 19:38).

"வாசல்காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி" - யூதருடைய பாரம்பரியத்தின் பிரகாரம் இந்த வேலைக்காரியின் பெயர் பல்லிலா (Ballila) என்று தெரிய வருகிறது. அக்காலத்தில் ஸ்திரீகளே வாசலைக் காக்கிறவர்களாக இருந்தார்கள். (அப் 12:13).

18 அதிகாரம்

"நான் அல்ல" - என்று பேதுரு அந்த ஸ்திரீயிடம் கூறுகிறான். பேதுரு கூறிய மூன்று பொய்களில் முதலாவது பொய். (யோவான் 18:17,25-26)

"அவர்களுடனேகூடப் பேதுருவும் நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தான்" - குளிர் காலமானபடியினாலே ஊழியக்காரரும் சேவகரும் கரிநெருப்புண்டாக்கி, நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். இயேசு கிறிஸ்துவை யூதர்களிடம் ஒப்படைத்து விட்டு, இவர்களெல்லோரும் தங்களுடைய இடங்களில் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறார்கள். விரோதிகள் மத்தியில் குளிர்காய்வது தவறு என்பது பேதுருவிற்குத் தெரியவில்லை.

5. இயேசுவின் விசாரணை - (மத் 26:57; மாற்கு 14:53; லூக் 22:63)

யோவான் 18:19 பிரதான ஆசாரியன் இயேசுவினிடத்தில் அவருடைய சீஷரைக் குறித்தும் போதகத்தைக்குறித்தும் விசாரித்தான்.

யோவான் 18:20 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெப ஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை.

யோவான் 18:21 நீர் என்னிடத்தில் விசாரிக்க வேண்டியதென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றார்.

யோவான் 18:22 இப்படி அவர் சொன்னபொழுது, சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான்.

யோவான் 18:23 இயேசு அவனை நோக்கி: நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால், தகாததை ஒப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய் என்றார்.

யோவான் 18:24 பின்பு அன்னா என்பவன் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அவரைக் கட்டுண்டவராக அனுப்பினான்.

"பிரதான ஆசாரியன் இயேசுவினிடத்தில் அவருடைய சீஷரைக்குறித்தும் போதகத்தைக் குறித்தும் விசாரித்தான்" - இயேசு கிறிஸ்துவினுடைய உபதேசம், தமக்காக அவர் சீஷர்களைச் சேர்த்துக் கொண்டது. புதிய உபதேசங்களைப் பேசி, ஒரு புதிய மார்க்கத்தை ஆரம்பித்தது ஆகிய காரியங்களைக் குறித்து, பிரதான ஆசாரியன் இயேசுவிடம் கேள்வி கேட்கிறான். சட்டப்படி, இயேசு கிறிஸ்துவின்மீது ஏதாவது குற்றம் சுமத்த முடியுமா என்று பார்க்கிறான். ஆனால் அவனுக்கு ஒரு காரணமும் அகப்படவில்லை. இந்த விசாரணை முழுவதும் இரவு வேளையில் நடைபெறுகிறது. இரவு வேளையில் யூதருடைய பிரமாணத்தின் பிரகாரம் யாரையும் விசாரிக்கக்கூடாது. ஓய்வுநாளுக்கு முந்திய நாளிலோ அல்லது பண்டிகையின் முந்திய நாளிலோ யாருக்கும் எந்தத் தண்டனையும் வழங்கக்கூடாது என்பது யூதருடைய பிரமாணம். இயேசு கிறிஸ்துவை விசாரித்த காலத்தில் யூதர்கள் இந்தப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் மீறிவிட்டார்கள். இயேசுவை இரவு வேளையில் விசாரித்தார்கள். பஸ்காவிற்கு முந்திய நாளில் விசாரித்தார்கள். பண்டிகையின் பிரதான ஓய்வுநாளுக்கு முந்திய நாளில் விசாரித்தார்கள். இயேசு கிறிஸ்து விசாரிக்கப்படும்போது, அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது. (ஏசா 53:8; அப் 8:33).

"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெபஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை. நீர் என்னிடத்தில் விசாரிக்க வேண்டிய தென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள்

18 அதிகாரம்

அறிந்திருக்கிறார்களே என்றார்" - இயேசு கிறிஸ்து பிரதான ஆசாரியனுடைய கேள்விக்கு மிகவும் தெளிவாகப் பதில் கூறிவிடுகிறார். எல்லா ஜனங்களுக்கும் மத்தியில் வெளிப்படையாக இயேசு கிறிஸ்து பேசியிருக்கிறார். அவர் இரகசியமாக ஒரு காரியமும் செய்யவில்லை. பிரதான ஆசாரியருக்கு வேவுகாரர்கள் இருந்தார்கள். இயேசு கிறிஸ்துவின் உபதேசம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நியாயப்பிரமாணத்திற்கு எதிராகவும், தீர்க்கதரிசிகளுக்கு எதிராகவும் இயேசு கிறிஸ்து ஒன்றும் பேசவில்லை. தேசத்தில் கலகம் பண்ணவில்லை. இயேசு கிறிஸ்துவின்மீது அவர்கள் கூறிய குற்றச்சாட்டு எதுவும் உண்மையல்ல.

"இப்படி அவர் சொன்னபொழுது, சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான்" - ஒரு வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும்போதே சேவகரில் ஒருவன் இயேசு கிறிஸ்துவிற்குத் தண்டனை கொடுக்கிறான். இயேசு கிறிஸ்து அங்கு நியாயமாக விசாரிக்கப்படவில்லை. இயேசு அங்கு வருவதற்கு முன்பாகவே அவரைக் கொன்றுபோடவேண்டுமென்று பிரதான ஆசாரியன் தீர்மானம் பண்ணிவிட்டான். (யோவான் 18:19, மாற்கு 14:55)

"இயேசு அவனை நோக்கி: நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால், தகாததை ஒப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய் என்றார்" - விசுவாசிகளுக்கு உபத்திரவங்கள் உண்டு. அவர்கள் தங்களுக்கு வரும் பிரச்சனைகளையும், பாடுகளையும் சகித்துக் கொள்ள வேண்டும். அதே வேளையில் தங்கள்மீது யாராவது தவறாகக் குற்றம் சுமத்தும்போதோ, அல்லது தங்களிடத்தில் தவறாக நடந்து கொள்ளும்போதோ அவர்களிடத்தில் நியாயம் கேட்பது தவறு இல்லை. இவ்வாறு செய்வது, மத் 5:39 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிற பிரமாணத்தை மீறும் செயல் ஆகாது.

"பின்பு அன்னா என்பவன் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அவரைக் கட்டுண்டவராக அனுப்பினான்" - இந்த வழக்கு விசாரணை முழுவதும் அன்னாவிற்கு முன்பாக நடைபெறுகிறது. காய்பாவிற்கு முன்பாக நடைபெற்ற வழக்கு விசாரணையை யோவான் எழுதவில்லை.

6. பேதுருவின் இரண்டாம், மூன்றாம் மறுதலிப்புக்கள் - (யோவான் 18:15)

யோவான் 18:25 சீமோன்பேதுரு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது சிலர் அவனை நோக்கி: நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள். அவன்: நான் அல்ல என்று மறுதலித்தான்.

யோவான் 18:26 பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரில் பேதுரு காதறவெட்டினவனுக்கு இனத்தானாகிய ஒருவன் அவனை நோக்கி: நான் உன்னை அவனுடனேகூடத் தோட்டத்திலே காணவில்லையா என்றான்.

யோவான் 18:27 அப்பொழுது பேதுரு மறுபடியும் மறுதலித்தான்; உடனே சேவல் கூவிற்று.

"நான் அல்ல" - பேதுரு கூறிய இரண்டாவது பொய். (யோவான் 18:17,26)

"அப்பொழுது பேதுரு மறுபடியும் மறுதலித்தான்; உடனே சேவல் கூவிற்று" - பேதுரு கூறிய மூன்றாவது பொய். பேதுரு இயேசுவை அவர் கூறிய பிரகாரமாகவே மறுதலித்து விட்டான். (மத் 26:69-75; மாற்கு 14:66-75).

7. பிலாத்துவிற்கு முன்பாக இயேசு - (மத் 27:1,11; மாற்கு 15:1; லூக் 23:1)

யோவான் 18:28 அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவைத் தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டு போனார்கள்; அப்பொழுது விடியற்காலமாயிருந்தது. தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள்.

18 அதிகாரம்

யோவான் 18:29 ஆதலால் பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து: இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ் சாட்டுகிறீர்கள் என்றான்.

யோவான் 18:30 அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில் ஒப்புக் கொடுக்கமாட்டோம் என்றார்கள்.

யோவான் 18:31 அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப் பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள் என்றான். அதற்கு யூதர்கள்: ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை என்றார்கள்.

யோவான் 18:32 தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறித்து இயேசு குறிப்பாய்ச் சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறத் தக்கதாக இப்படிச் சொன்னார்கள்.

யோவான் 18:33 அப்பொழுது பிலாத்து மறுபடியும் அரமனைக்குள் பிரவேசித்து, இயேசுவை அழைத்து: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான்.

யோவான் 18:34 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ என்றார்.

யோவான் 18:35 பிலாத்து பிரதியுத்தரமாக: நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள், நீ என்ன செய்தாய் என்றான்.

யோவான் 18:36 இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப் படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்.

யோவான் 18:37 அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீ சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்.

"அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவைத் தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டுபோனார்கள்" - இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காலத்தில் அவரைப் பலர் வழிநடத்தியிருக்கிறார். அதன் விவரம் வருமாறு.

1. பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவைச் சாத்தானால் சோதிக்கப் படுவதற்காக வழிநடத்தினார். (மத் 4:1-11; லூக்கா 4:1-13)

2. சாத்தானைத் தோற்கடிப்பதற்காக பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவை வழிநடத்தினார். (லூக்கா 4:14-22)

3. யூதர்கள் இயேசு கிறிஸ்துவைக் கொலைசெய்வதற்காக மலையின் உச்சிக்குக் கொண்டுபோனார்கள். (லூக்கா 4:29)

4. திரளான ஜனங்கள் இயேசுவை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டு போனார்கள். (யோவான் 18:13)

5. திரளான ஜனங்கள் இயேசுவைக் காய்பா என்பவனிடத்திற்குக் கொண்டு போனார்கள். (மத் 26:57; மாற்கு 14:53; லூக்கா 22:54; யோவான் 18:24)

18 அதிகாரம்

6. யூதர்கள் இயேசுவைப் பிலாத்துவினிடத்திற்குக் கொண்டு போனார்கள். (மத் 27:2; லூக்கா 23:1; யோவான் 18:28)

7. போர்ச்சேவகர்கள் இயசுவை ஏரோதுவினிடத்திற்குக் கொண்டு போனார்கள். (லூக்கா 23:7)

8. போர்ச்சேவகர்கள் இயேசுவை மறுபடியும் பிலாத்துவினிடத்திற்குக் கொண்டு போனார்கள். (லூக்கா 23:11-25)

9. இயேசுவை அடிப்பதற்காகவும், பரியாசம் பண்ணுவதற்காகவும் போர்ச்சேவகர்கள் கூட்டிக் கொண்டு போனார்கள். (மாற்கு 15:16-19)

10. சிலுவையில் அறைவதற்காக போர்ச்சேவகர்கள் இயேசு கிறிஸ்துவைக் கொண்டுபோனார்கள். (மத் 27:31; மாற்கு 15:20; லூக்கா 23:26,32; யோவான் 19:16).

இயேசு கிறிஸ்து தம்முடைய பிள்ளைகளை நித்திய ஜீவனுக்கு நேராகவே எப்போதும் வழிநடத்திச் செல்கிறார். (லூக்கா 24:50; எபே 4:8-10; சங் 23:1; சங் 77:20).

"தேசாதிபதியின் அரமனை" **(the hall of judgment)** - பிலாத்துவின் வீடு. பிலாத்து தனது அரமனையிலேயே வழக்குகளை விசாரித்து வருகிறான். (மாற்கு 15:16).

"அப்பொழுது விடியற்காலமாயிருந்தது" - பஸ்கா பண்டிகையின் ஆயத்தநாளின் விடியற்காலம். யூதருடைய நேரத்தின் பிரகாரம். இது இரவு 11 மணி முதல் நடுஇரவு 12 மணி வரையிலும் இருக்கலாம். இதற்கடுத்த காலம் ஆறாம்மணி வேளை அல்லது நடுநிசி என்று அழைக்கப்படுகிறது. (யோவான் 19:14).

"தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத் தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள்" - இயேசுகிறிஸ்து இதற்கு முன்பாகவே பஸ்காவைப் புசித்துவிட்டார். (மத் 26:18-20; மாற்கு 14:12-16; லூக்கா 22:7-15) பஸ்கா ஆட்டுக்குட்டி பலியிடப்போகும் வேளையில் இயேசுகிறிஸ்து தாமே பலியாகப் போகிறார். (1கொரி 5:7)

"பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து: இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ் சாட்டுகிறீர்கள்" - யூதர்கள் அரமனைக்குள் வரவில்லை. அரமனைக்குள் போவதை யூதர்கள் தீட்டாகக் கருதினார்கள். ரோமருடைய தேசாதிபதிகளும் யூதருடைய மார்க்கச் சடங்குகளை அங்கீகரித்தார்கள். ஆகையினால் பிலாத்து அரமனையிலிருந்து வெளியே வந்து யூதர்களிடத்தில் பேசுகிறான்.

குற்றவாளி **(malefactor)** - **κακοποιός - kakopoios** - 2555

பெயரடை - குற்றவாளியான, அக்கிரமக்காரனான, தீமைசெய்கிற, பொல்லாங்குசெய்த **(evildoer)** - (1பேதுரு 2:12,14; 1பேதுரு 3:16; 1பேதுரு 4:15)

யூதர்கள் இயேசு கிறிஸ்துவை நியாயம் விசாரிக்க விரும்பவில்லை. தாங்கள் ஏற்கெனவே தீர்மானம் பண்ணியிருந்த, மரண தண்டனையை அவருக்குக் கொடுக்க வேண்டுமென்று விரும்பினார்கள். ஒரு மனுஷனை நியாயம் விசாரிக்காமல், அவனைக் கொல்வதற்குப் பிலாத்துவிற்கு மனதில்லை. ஆகையினால் பிலாத்து இயேசு கிறிஸ்துவை அவர்களிடமே ஒப்படைத்துவிடுகிறான். "இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப் பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள்" என்று கூறுகிறான். (யோவான் 18:31)

"ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை" - என்று யூதர்கள் பிலாத்துவிடம் கூறுகிறார்கள். இது ஒரு பொய். ஏனெனில் தங்களுடைய பிரமாணத்தை மீறுபவரைக் கல்லெறிந்து கொல்லும் அதிகாரம் அவர்களுக்கு உள்ளது. (யோவான் 8:1-11,59; யோவான் 10:31; அப் 7:59) யூதர்கள் இயேசு கிறிஸ்துவிற்குப் பயந்ததினாலும், ஜனங்கள் தங்களுக்கு எதிராகக் கலகம்பண்ணுவார்கள் என்பதினாலும் இயேசு கிறிஸ்துவைக்

18 அதிகாரம்

கொல்லும் பொறுப்பைப் பிலாத்துவிடம் கொடுக்கப் பார்க்கிறார்கள். (யோவான் 19:7,12) தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவதற்கு இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்க வேண்டும். (மத் 20:19; மத் 26:2; யோவான் 3:14; யோவான் 12:32-33) ஒருவரைச் சிலுவையில் அறைந்து கொல்வதற்கு யூதருக்கு அதிகாரமில்லை. ஆகையினால், இயேசு கிறிஸ்துவின்மீது தேசத்துரோகக் குற்றத்தைச் சுமத்துகிறார்கள். இராயனுக்கு எதிராக இயேசு கலகம் பண்ணியதாகப் பொய் கூறுகிறார்கள். பிலாத்து மட்டுமே இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு அதிகாரம் பெற்றவன். (யோவான் 19:7,12).

"தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறித்து இயேசு குறிப்பாய்ச் சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறத்தக்கதாக இப்படிச் சொன்னார்கள்" - யோவான் 12:32-33 ஆகிய வசனங்களின் நிறைவேற்றம்.

"நீ யூதருடைய ராஜாவா" - என்று பிலாத்து இயேசுவிடம் கேட்டான். இயேசு கிறிஸ்து தேவதூஷணம் சொன்னார் என்பது தான் யூதருடைய குற்றச்சாட்டு. ஆனால் அதை மறைத்துவிட்டு, இயேசு இராயனுக்கு எதிராகக் கலகம் பண்ணினார் என்று குற்றம் சுமத்துகிறார்கள். இந்தக் குற்றத்திற்குத்தான் குற்றவாளியைச் சிலுவையில் அறைந்து கொல்ல முடியும்.

"நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ" - தம்மைப் பிலாத்துவிடம் கூட்டிக் கொண்டு வந்த யூதர்கள் இப்படி உமக்குச் சொன்னார்களா அல்லது தம்மீது பிலாத்துவிற்கு ஏதாவது சந்தேகம் உள்ளதா என்று பொருள்படும் விதத்தில் இயேசு இவ்வாறு கேட்கிறார்.

"நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள், நீ என்ன செய்தாய்" - என்று பிலாத்து இயேசுவிடம் கேட்கிறான். இயேசுகிறிஸ்து யூதருடைய ராஜா அல்ல என்றால், யூதர்கள் ஏன் இயேசுவைக் கொலை பண்ண வகைதேடுகிறார்கள் என்று பிலாத்து இயேசுவிடம் கேட்கிறான்.

"என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" - உரியது என்பதன் கிரேக்க வார்த்தை "எக்" **(ek) (of, out from)** இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல. பரலோகத்திற்குரியது. இனிமேல் அது உலகத்திற்குரியதாக இருக்கும். (தானி 2:44; தானி 7:13-27; சக 14; வெளி 5:10; வெளி 11:15)

உரியது **(of)** - ἐκ - **ek** - 1537

முன்னிடைச்சொல் - இல், ஆல், இலிருந்து, விட்டு, இடத்தில், முதல், தரம் இல்லாமல், ஆறாம் வேற்றுமையுடன் உடைய, இன், கொண்டு, புறம்பே, முதற்கொண்டு, ஒடு, வழியாய், தொடங்கி

"நீ சொல்லுகிறபடி நான் ராஜாதான்" - இயேசு கிறிஸ்து ராஜாவாக இருக்குமாறு பிறந்தார். சத்தியத்தைக் குறித்து சாட்சிக் கொடுப்பதற்காக வந்தார். சத்தியவான் எவனும் இயேசு கிறிஸ்துவின் சத்தம் கேட்டு, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவான். (யோவான் 8:47; யோவான் 10:3-4,16,27)

8. இயேசுவிற்கு தண்டனையும் பரபாசிற்கு விடுதலையும் - (மத் 27:15; மாற்கு 15:7; லூக் 23:13)

யோவான் 18:38 அதற்கு பிலாத்து: சத்தியமாவது என்ன என்றான். மறுபடியும் அவன் யூதர்களிடத்தில் வெளியே வந்து: நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்.

யோவான் 18:39 பஸ்காபண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலை பண்ணுகிற வழக்கமுண்டே; ஆகையால் யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலைபண்ண உங்களுக்கு மனதுண்டா என்றான்.

யோவான் 18:40 அப்பொழுது: அவர்களெல்லாரும் இவனையல்ல, பரபாசை விடுதலைபண்ணவேண்டும் என்று மறுபடியும் சத்தமிட்டார்கள்; அந்தப் பரபாசென்பவன் கள்ளனாயிருந்தான்.

யோவான் - தொகுப்புரை

18 அதிகாரம்

"சத்தியமாவது என்ன" - யூதருடைய மார்க்கக் காரியங்கள் பிலாத்துவிற்குச் சரியாகத் தெரியாது. ஆகையினால், குழம்பிப் போய் விடுகிறான். சத்தியம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறான். இயேசுகிறிஸ்துவே சத்தியமாக இருக்கிறார். இயேசு கிறிஸ்துவைக் கண்டுகொண்டு, அவருக்குக் கீழ்ப்படிகிறவன் சத்தியத்தை அறிந்து கொள்வான். (யோவான் 8:32-36; யோவான் 14:6).

"அவன் யூதர்களிடத்தில் வெளியே வந்தான்" - பிலாத்து இரண்டாம் முறையாக நியாயம் விசாரிக்கும் மண்டபத்திலிருந்து யூதரிடம் பேசுவதற்காக வருகிறான். (யோவான் 18:28-29). இந்த முறை வரும்போது, இயேசு கிறிஸ்துவினிடத்தில் தான் ஒரு குற்றமும் காணவில்லையென்று யூதரிடம் கூறுகிறான்.

வழக்கம் (custom) - συνέθεια - synetheia - 4914

பெண்பால் பெயர்ச்சொல் - வழக்கம் - இந்த வார்த்தை இந்த வசனத்திலும் 1கொரி 11:16 ஆவது வசனத்திலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலைபண்ண உங்களுக்கு மனதுண்டா" - என்று பிலாத்து யூதரிடம் கேட்கிறான். பஸ்காபண்டிகையில் பிலாத்து யூதருக்கு ஒருவனை விடுதலைபண்ணுகிற வழக்கமுண்டு. பரபாஸ் என்பவன் கொள்ளைக்காரன். ஜனங்கள் "பரபாசை விடுதலை பண்ண வேண்டாம். இயேசுவை விடுதலை பண்ண வேண்டும்" என்று யூதர்கள் தன்னிடம் கேட்பார்கள் என்று பிலாத்து நினைத்தான். ஆனால் இவன் இப்படிக் கேட்டதினால் இயேசுவைக் கொலைசெய்ய வேண்டுமென்று யூதர்கள் எல்லோரும் மிகுந்த சத்தமிட்டு, கத்துகிறார்கள். (யோவான் 18:40).

"யூதருடைய ராஜா" - பிலாத்து இயேசுவை யூதருடைய ராஜா என்றே கூறுகிறான். அவன் கூறுவது யூதருக்குப் பிடிக்கவில்லை. இயேசுவை விடுதலைபண்ணினால் பிலாத்து, இராயனுக்கு விரோதி என்று கூறி, பிலாத்துவின்மீதே குற்றம் சுமத்திவிடுகிறார்கள். (யோவான் 19:12).

கள்ளன் (robber) - λῃστης - leestees - 3027

ஆண்பால் பெயர்ச்சொல் - கள்ளன் (bandit) (மாற்கு 11:17; மாற்கு 14:48; மாற்கு 15:27). மேசியாவைத் தெரிந்தெடுப்பதற்குப் பதிலாக யூதர்கள் ஒரு கள்ளனைத் தெரிந்தெடுக்கிறார்கள். தங்களுக்கு அழிவைத் தேடிக் கொள்கிறார்கள்.

19 அதிகாரம்

9. இயேசுவின் சிரசின்மேல் முள்முடியை வைக்கிறார்கள் - (மத் 27:27; மாற்கு 15:16)

யோவான் 19:1 அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்.

யோவான் 19:2 போர்ச்சேவகர் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி:

யோவான் 19:3 யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள்.

"பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்" - ரோமப்பேரரசின் முறைமையின் படி இயேசுவை வாரினால் அடித்தார்கள். யூதமார்க்கத்து முறைமையை விட ரோமமார்க்கத்து முறைமையின்படி வாரினால் அடிப்பது மிகவும் கடுமையாக இருக்கும். (மத் 27:26) சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக குற்றவாளியை வாரினால் அடிப்பது வழக்கம். ஆனால் இங்கோ பிலாத்து இயேசுவை வாரினால் அடித்தால் யூதர்கள் திருப்தியடைந்து விடுவார்கள். இயேசுவை விடுதலை பண்ணிவிடலாம் என்று நினைத்தான். (லூக்கா 23:16) ஆனால், யூதர்கள் இந்தத் தண்டனையில் திருப்தியடைய வில்லை. இயேசுவை எப்படியும் சிலுவையில் அறைந்துவிட வேண்டுமென்று, வைராக்கியமாக இருந்தார்கள்.

"முள்ளுகளினால் ஒரு முடி" - (மத் 27:29)

"வாழ்க" (Hail) - வெற்றி பெறுவீராக, சுகமாயிருப்பீராக, ஆரோக்கியமாயிருப்பீராக என்று பொருள்படும்.

10. பிலாத்து இயேசுவை ஜனங்களுக்கு முன்பாக கொண்டு வருகிறான்

யோவான் 19:4 பிலாத்து மறுபடியும் வெளியே வந்து: நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான்.

யோவான் 19:5 இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ, இந்த மனுஷன் என்றான்.

யோவான் 19:6 பிரதான ஆசாரியரும் சேவகரும் அவரைக் கண்டபோது: சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள், நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றான்.

யோவான் 19:7 யூதர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்ன படியினால், அந்த நியாயப்பிரமாணத்தின் படியே, இவன் சாகவேண்டும் என்றார்கள்.

"உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன்" - யூதர்கள் பிலாத்துவின் அரண்மனைக்கு வெளியே இருக்கிறார்கள். பிலாத்து இயேசு கிறிஸ்துவை வெளியே கொண்டுவருகிறேன் என்று கூறுகிறான். அரண்மனைக்கு உள்ளே இயேசு கிறிஸ்துவை வாரினால் அடித்து, அவருடைய சிரசின்மீது முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி வைத்தான். இதனால் அவருடைய சரீரத்தின் தோல்களெல்லாம் பிய்ந்திருந்தது. தலையிலிருந்து இரத்தம் வடிந்தது. இயேசு கிறிஸ்துவை இந்த நிலைமையில் கொண்டு வந்து, யூதரிடம் காண்பித்தால் அவர்களுடைய மனது மாறிவிடும். இயேசு கிறிஸ்துவை அவர்கள் விடுதலை பண்ணுவதற்கு சம்மதம் தெரிவிப்பார்கள் என்று நினைத்தான். ஆனால் யூதமார்க்கத்தாரின் இருதயத்திலோ சிறிதளவும் இரக்கம் இல்லை.

19 அதிகாரம்

இயேசு கிறிஸ்துவை விடுவிக்க அவர்களுக்கு மனதில்லை. இயேசுவைச் சிலுவையில் அறையும் என்று தொடர்ந்து யூதர்கள் பிலாத்துவிடம் சத்தமிட்டுக் கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்துவிடம் தாம் ஒரு குற்றமும் காணவில்லையென்று பிலாத்து மேலும் இரண்டு முறை அறிவிக்கிறான். (யோவான் 19:4,6)

"இதோ, இந்த மனுஷன்" - யூதர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய மார்க்கத்தின் விரோதியாகக் கருதினார்கள். தங்களுடைய அதிகாரத்திற்கு இயேசு கிறிஸ்து இடையூறாக இருப்பதாக யூதமார்க்கத் தலைவர்கள் நினைத்தார்கள். எப்படியாவது இயேசு கிறிஸ்துவை விடுதலை செய்துவிட வேண்டுமென்று பிலாத்து விரும்புகிறான். ஆனால் யூதர்களோ இயேசுவைச் சிலுவையில் அறைந்துவிட வேண்டுமென்று தீர்மானமாக இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து முள்முடியும், சிவப்பங்கியும் தரித்தவராய் வெளியே வந்தார். அவரை அந்த நிலைமையில் காணும்போது யாருடைய மனதும் இளகிவிடும். அவருடைய சரீரம் முழுவதும் வாரினால் அடிக்கப்பட்ட காயங்கள். தலையிலிருந்து இரத்தம் வழிகிறது. இதைப் பார்த்தாவது யூதர்கள் இயேசுவை விடுதலை பண்ண சம்மதிப்பார்கள் என்று நினைத்து, பிலாத்து யூதரிடம் "இதோ, இந்த மனுஷன்" என்று கூறி இயேசுவைக் காண்பிக்கிறான்.

"எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப் பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்டும்" - என்று யூதர்கள் பிலாத்துவிடம் கூறுகிறார்கள். இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறைய வேண்டும் என்பதற்கு யூதர்கள் கூறும் மற்றொரு குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டினால், பிலாத்து பயந்து விடுகிறான். ஆகையினால் இயேசு கிறிஸ்துவை மறுபடியும் விசாரிப்பதற்காக விசாரணை நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் செல்லுகிறான். (யோவான் 19:8-11).

11. இயேசுவை பிலாத்துவிடம் மறுபடியும் கொண்டு போகிறார்கள் - (யோவான் 18:28)

யோவான் 19:8 பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது அதிகமாய்ப் பயந்து,

யோவான் 19:9 மறுபடியும் அரமனைக்குள்ளே போய், இயேசுவை நோக்கி: நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை.

யோவான் 19:10 அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான்.

யோவான் 19:11 இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக் கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்.

"பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது அதிகமாய்ப் பயந்தான்" - பிலாத்துவிற்கு இரண்டு விதமான பயம் இருந்தது. ஒன்று ஆலோசனைச் சங்கத்தாரை எதிர்ப்பது. அவர்களுக்கு விரோதமாக நடந்து கொண்டால், ஆலோசனைச் சங்கத்தார் பிலாத்துவிற்கு எதிராக இராயனிடம் பிராது பண்ணுவார்கள். பிலாத்துவின் பதவிக்கு அது ஆபத்தாகிவிடும். மற்றொரு பயம் என்னவென்றால், குற்றமற்ற ஒருவரைத் தண்டிப்பதற்கு அவனுக்கு மனதில்லை. இயேசு கிறிஸ்து அற்புதங்களைச் செய்தவர். ஒரு பாவமும் அறியாதவர். இயேசு கிறிஸ்துவைப் பற்றி எச்சரிக்கையாக இருக்குமாறு பிலாத்துவின் மனைவி ஏற்கெனவே அவனுக்கு ஆலோசனை கூறியிருக்கிறாள். அதுமட்டுமல்லாமல், தன்னுடைய மனச்சாட்சியின் பிரகாரமாகவும், பிலாத்து இயேசுவைத் தண்டிக்க விரும்பவில்லை.

19 அதிகாரம்

"மறுபடியும் அரமனைக்குள்ளே போய், இயேசுவை நோக்கி: நீ எங்கேயிருந்து வந்தவன் என்றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை" - இயேசு கிறிஸ்து உண்மையிலேயே தேவனுடைய குமாரனா என்பதைப் பிலாத்து அறிந்து கொள்ள விரும்பினான். மற்ற ஜனங்களைவிட இயேசு கிறிஸ்து மிகவும் மாறுபட்டவராக இருந்தார். அவர் ஒரு தெய்வீக புருஷராக இருப்பதைப் பிலாத்து காண்கிறான். ஆகையினால் பிலாத்து இயேசுவிடம் "நீ எங்கேயிருந்து வந்தவன்" என்று கேள்வி கேட்கிறான். நீர் பரலோகத்திலிருந்து வந்தவரா, உமது பூர்வீகம் என்ன, உமது தெய்வீகக் கிரியைகளுக்கு ஆதாரம் என்ன, என்று பல கேள்விகளுக்கு விடை தெரிந்து கொள்வதற்குப் பிலாத்து விரும்பினான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை.

"பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது" - பிலாத்து இயேசுவிடம் "உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலை பண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத்தெரியாதா" என்று கூறுகிறான். ஆனால் இயேசு கிறிஸ்து அவனுக்குப் பிதாவின் சித்தத்தின்படிதான் எல்லாம் நடைபெறும் என்று மிகவும் எளிமையாகவும், உறுதியாகவும் பதில் கூறிவிடுகிறார். தேவனுடைய சித்தமில்லாமல், ஒருவனும் ஒருகாரியத்தையும் செய்ய முடியாது. தம்மைச் சிலுவையில் அறைந்தால் அது பிலாத்துவிற்கு பாவமாக கருதப்படும் என்பது இயேசுவிற்குத் தெரியும். ஏனெனில் பிலாத்து தன்னுடைய மனச்சாட்சிக்குச் செவி கொடுக்கவில்லை. பிலாத்துவின் பாவத்தைவிட யூதமார்க்கத்தாரின் பாவம் மிகவும் அதிகமாக இருக்கும். ஏனெனில் அவர்கள் தெரிந்தும் வேண்டுமென்றே பாவம் செய்கிறார்கள்.

12. பிலாத்து இயேசுவை விடுதலை பண்ண வழிபார்க்கிறான்

யோவான் 19:12 அதுமுதல் பிலாத்து அவரை விடுதலைபண்ண வகை தேடினான். யூதர்கள் அவனை நோக்கி: இவனை விடுதலை பண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல, தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டார்கள்.

"அதுமுதல் பிலாத்து அவரை விடுதலை பண்ண வகைதேடினான்" - இயேசு கிறிஸ்துவை எப்படியாவது விடுதலை பண்ணிவிடவேண்டும் என்று பிலாத்து முயற்சி பண்ணுகிறான். ஆனால் யூதரோ இயேசுவைச் சிலுவையில் அறைந்துவிட வேண்டுமென்று வைராக்கியமாக இருக்கிறார்கள். இயேசுவை விடுதலை பண்ணினால், அது இராயனுக்கு எதிராகச் செய்யப்படும் துரோகம் என்று யூதர்கள் பிலாத்துவின்மீது குற்றம் சுமத்துகிறார்கள்.

"இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுக்குச் சிநேகிதனல்ல, தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி" - யூதர்களுக்கு இராயனையும் பிடிக்காது. அவர்கள் எப்போதும் இராயனுக்கு எதிராக எதிர்த்து நிற்கிறவர்கள். ஆனால் இயேசுவின் மீதுள்ள அவர்களுடைய வெறுப்பு இராயன்மீதுள்ள வெறுப்பைவிட அதிகமாய் இருக்கிறது. யூதர்கள் இராயனுக்கும் சிநேகிதரல்ல. இயேசுவிற்கும் சிநேகிதரல்ல. எப்படியாவது பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு உத்தரவு கொடுக்க வேண்டுமென்று யூதர்கள் பலவிதமாக முயற்சி பண்ணுகிறார்கள்.

13. பிலாத்து இயேசுவை யூதருக்கு முன்பாக நிறுத்துகிறான்

யோவான் 19:13 பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, இயேசுவை வெளியே அழைத்துவந்து, தளவரிசைப்படுத்தின மேடையென்றும், எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே, நியாயாசனத்தின்மேல் உட்கார்ந்தான்.

19 அதிகாரம்

யோவான் 19:14 அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்த நாளும் ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருந்தது; அப்பொழுது அவன் யூதர்களை நோக்கி: இதோ, உங்கள் ராஜா என்றான்.

"பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, இயேசுவை வெளியே அழைத்துவந்தான்" - தான் இராயனுக்கு எதிராகத் துரோகம் பண்ணுவதாக யூதர்கள் தன்மீது குற்றம் சுமத்தியவுடன், பிலாத்து பயந்து விடுகிறான். இக்காலத்தில் திபேரியு (Tiberius) இராயனாக ஆட்சிபுரிந்தான். இவன் ஒரு கொடுங்கோலன். தனக்கு எதிராக யாராவது கலகம் பண்ணியது தெரியவந்தால், உடனே திபேரியு அவனைப் பிடித்துக் கொன்று போடுவான். அதுமட்டுமல்லாமல், திபேரியுவின் ஆட்சிக்காலத்தில், அவனுடைய ஆட்சிக்கு எதிரான சதியாலோசனைகள் மிகவும் அதிகமாக இருந்தன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் யாராவது ஒருவன் திபேரியு இராயனுக்கு விரோதமாகத் துரோகம் பண்ணுகிறான் என்னும் செய்தி அவனுக்குக் கிடைத்தாலே போதும். உடனே திபேரியு இராயன் அவனைப் பிடித்து, கொன்றுபோடுவான். ஆகையினால்தான், இராயனைப் பற்றி பேசியவுடன், பிலாத்து மிகவும் பயப்படுகிறான். யூதர்கள் மண்டபத்திற்கு வெளியே நிற்கிறார்கள். இயேசுவை அவர்களிடத்திற்கு அழைத்து வருகிறான். இயேசுவை விடுவிப்பதற்கு பிலாத்து மறுபடியும் முயற்சி பண்ணுகிறான். இந்த முயற்சி பிலாத்து ஏறெடுக்கும் ஐந்தாவது முயற்சியாகும். (லூக்கா 23:4,15,20,22; யோவான் 18:38; யோவான் 19:4,6,12,13-14).

"தளவரிசைப்படுத்தின மேடையென்றும், எபிரெயு பாஷையிலே கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே, நியாயாசனத்தின் மேல் உட்கார்ந்தான்" - பிலாத்துவின் அரண்மனையின் முன்மண்டபத்தில் கற்களால் கட்டப்பட்டிருந்த மேடை. இந்த மேடைக்கு கிரேக்க மொழியில் "பீமா" (Beema) என்று பெயர். பிலாத்து இந்த இடத்தில் அமர்ந்துதான், இறுதித்தீர்ப்பு வழங்குவது வழக்கம். (மத் 27:19; யோவான் 19:13; அப் 12:21; அப் 18:12-17; அப் 25:6,10,17). இயேசு கிறிஸ்துவும் தமது நியாயத்தீர்ப்பின் நாளில் நியாயாசனத்தின்மீது அமர்ந்து நியாயத்தீர்ப்பு வழங்குவார். (ரோமர் 14:10; 2கொரி 5:10).

நியாயாசனம் (judgment) - Βημα - Beema - 968

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - நியாயாசனம், சிங்காசனம்

"கபத்தா" (Gabbatha) - எபிரெயு பாஷைச் சொல். மேடை என்பது இதன் பொருள்.

"ஆறுமணி நேரம்" - நடுஇரவு 12 மணி.

"இதோ, உங்கள் ராஜா" - பிலாத்து சற்று முன்பு இயேசு கிறிஸ்துவை "இதோ, இந்த மனுஷன்" (யோவான் 19:5) என்று கூறினான். இப்போது இயேசுவை இராஜா என்கிறான்.

14. யூதர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறார்கள் - (மத் 27:25)

யோவான் 19:15 அவர்கள்: இவனை அகற்றும் அகற்றும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா என்றான். பிரதான ஆசாரியர் பிரதியுத்தரமாக: இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை என்றார்கள்.

"அகற்றும் அகற்றும்" (Away) - இதற்கான கிரேக்க வார்த்தை "ஐரோ" (airoo). "சர்ப்பங்களை எடுப்பார்கள்" (மாற்கு 16:18) என்பதற்கும், இந்தக் கிரேக்க வார்த்தையே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைக்கு துரத்துதல், அழித்தல், தூக்கி எறிதல், கொன்றுபோடுதல் என்று பலவிதமாகப் பொருள் கூறலாம். (மத் 22:13; யோவான் 1:29; யோவான் 19:15; அப் 21:36; அப் 22:22; 1யோவான் 3:5)

அகற்று (Away) - αἴρω - airoo - 142

19 அதிகாரம்

வினைச்சொல் - அகற்று

"இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை" - யூதர்கள் இதுவரையிலும் இராயனைத் தங்களுடைய விரோதியாகப் பாவித்தார்கள். இப்போது அவர்கள் இராயனைத் தங்களுடைய இராஜாவாக ஏற்றுக் கொள்கிறார்கள். யூதமார்க்கத் தலைவர்கள் அதிகமாகப் பாவம் செய்கிறார்கள். தங்கள் விரோதியை நண்பர்களாக்குகிறார்கள். நண்பரை விரோதியாக்குகிறார்கள். தேவனைத் தெரிந்தெடுப்பதற்குப் பதிலாகச் சாத்தானைத் தெரிந்தெடுக்கிறார்கள். நித்திய ஜீவனைத் தெரிந்தெடுப்பதற்குப் பதிலாக நித்திய அழிவைத் தெரிந்தெடுக்கிறார்கள்.

15. இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள் - (மத் 27:33; மாற்கு 15:22; லூக் 23:32)

யோவான் 19:16 அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக் கொண்டுபோனார்கள்.

யோவான் 19:17 அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்.

யோவான் 19:18 அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவரோடேகூட வேறிரண்டுபேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள்.

யோவான் 19:19 பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி, சிலுவையின்மேல் போடுவித்தான். அதில் நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று எழுதியிருந்தது.

யோவான் 19:20 இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்திற்குச் சமீபமாயிருந்தபடியினால், யூதரில் அநேகர் அந்த மேல்விலாசத்தை வாசித்தார்கள்; அது எபிரேயு கிரேக்கு லத்தீன் பாஷைகளில் எழுதியிருந்தது.

யோவான் 19:21 அப்பொழுது யூதருடைய பிரதான ஆசாரியர் பிலாத்துவை நோக்கி: யூதருடைய ராஜா என்று நீர் எழுதாமல், தான் யூதருடைய ராஜா என்று அவன் சொன்னதாக எழுதும் என்றார்கள்.

யோவான் 19:22 பிலாத்து பிரதியுத்தரமாக: நான் எழுதினது எழுதினதே என்றான்.

யோவான் 19:23 போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள்; அங்கியையும் எடுத்தார்கள், அந்த அங்கி, தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது.

யோவான் 19:24 அவர்கள்: இதை நாம் கிழியாமல், யாருக்கு வருமோ என்று இதைக்குறித்துச் சீட்டுப்போடுவோம் என்று ஒருவரோடொருவர் பேசிக் கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப்போட்டார்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகப் போர்ச்சேவகர் இப்படிச் செய்தார்கள்.

"அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான்" - இறுதியாக பிலாத்து யூதருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கிறான். திபேரியு இராயனிடம் அவர்கள் பிராது பண்ணிவிடுவார்கள் என்று பயந்து, இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக் கொடுத்தான். அவர்களுடைய விருப்பத்திற்கு இயேசுவை அவர்களிடம் ஒப்புவிக்கிறான். (லூக்கா 23:25) ஆகையினால், மேசியாவைக் கொலைசெய்தார்கள் என்னும் குற்றச்சாட்டு யூதர்மீது விழுகிறது. (அப் 2:23) யூதருடைய விருப்பதையே ரோமர்கள் நிறைவேற்றினார்கள்.

யோவான் - தொகுப்புரை

19 அதிகாரம்

இயேசுவைச் சிலுவையில் அறைவதற்கு ஒப்புக் கொடுத்துவிட்டு, பிலாத்து தன் கைகளைக் கழுவிவிடுகிறான். (மத் 27:24) போர்ச் சேவகர்கள் இயேசு கிறிஸ்துவைப் பரியாசம் பண்ணிய நிகழ்ச்சிகளை யோவான் இந்தச் சுவிசேஷத்தில் எழுதவில்லை. (மத் 27:26; மாற்கு 15:16)

"அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு.......புறப்பட்டுப்போனார்" - தமது சிலுவையை இயேசு கிறிஸ்து தாமே சுமந்து செல்கிறார். சுமந்து செல்லும்பொழுது, வழியில் அதைச் சுமப்பதற்கு அவரிடத்தில் பலனில்லை. ஏற்கெனவே வாரினால் அடிக்கப்பட்டதினாலும், முள்முடி சூட்டப்பட்டதினாலும், அவர் பலவீனமாக இருந்தார். சீமோன் என்பவனை அவர்கள் வழியில் பிடித்து, இயேசுவின் சிலுவையைச் சுமந்து வருமாறு அவனைப் பலவந்தம் பண்ணினார்கள். (மத் 27:32).

"எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம்" - (மத் 27:33)

"பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி, சிலுவையின்மேல் போடுவித்தான்" - பிலாத்துவே இந்த மேல்விலாசத்தை எழுதியதை யோவான் சுவிசேஷத்தில் மட்டுமே வாசிக்கிறோம்.

"இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு" - இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்கள். அந்தச் சிலுவையின்மீது என்ன எழுதப் பட்டிருந்தது என்பதில் வேத பண்டிதர்களுக்குள்ளே கருத்து வேறுபாடு உள்ளது. நான்கு சுவிசேஷங்களிலும் வெவ்வேறு விதமான வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்.

1. மத் 27:37 - இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு
2. மாற்கு 15:26 - யூதருடைய ராஜா
3. லூக்கா 23:38 - இவன் யூதருடைய ராஜா
4. யோவான் 19:19 - நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா

இந்த எழுத்துக்கள் கிரேக்கு, லத்தீன், எபிரெயு ஆகிய பாஷைகளின் எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது.

"இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்திற்குச் சமீபமாயிருந்தது" - எருசலேமின் வடக்கு அலங்கத்திற்கு வெளியே இருந்தது. தமஸ்குவிற்கும், ஏரோதுவின் வாயிலுக்கும் நடுவில் இருந்தது. இயேசுவைப் பிலாத்து விசாரித்த விசாரணை மண்டபத்திலிருந்து இந்த இடம் அரைமைல் தூரத்திலுள்ளது. (மத் 27:33)

"யூதருடைய பிரதான ஆசாரியர்" - இந்த வாக்கியம் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் இதுவரையிலும் தேவனுடைய பிரதான ஆசாரியர்களாக இருந்தார்கள். ஆனால் இப்போது யூதருடைய பிரதான ஆசாரியராக மாறிவிட்டார்கள். தேவனுக்குச் சேவை செய்வதற்குப் பதிலாக யூதருக்குச் சேவை செய்கிறார்கள். தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்குப் பதிலாக யூதருடைய சித்தத்தைச் செய்கிறார்கள்.

"நான் எழுதினது எழுதினதே" - ரோமப் பேரரசின் சட்ட விதிகளின் பிரகாரம் ஒரு தீர்ப்பு கொடுத்துவிட்டால் அதை மாற்ற முடியாது. ஆகையினால்தான், பிலாத்து நான் எழுதினது எழுதினதே என்று கூறுகிறான். இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அவர்கள் அறைந்ததற்கான காரணத்தை ஒருமேல் விலாசமாக எழுதி சிலுவையில் போடுவித்தான். இயேசுகிறிஸ்து யூதருடைய ராஜா. இது சத்தியமான வாக்கியம். அவர் எப்போதுமே ராஜாவாக இருந்தவர், இராஜாவாக இருக்கிறவர், ராஜாவாக இருக்கப்போகிறவர். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, எல்லோருமே இயேசு கிறிஸ்துவை இராஜாவாக அங்கீகாரம் பண்ணுவார்கள். (மத் 23:39; சக 12:10-13:1; வெளி 1:7; லூக்கா 1:32-33; ஏசா 9:6-7)

"போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள்" - இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைவதற்கு நான்கு சேவகர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்பது இந்த வசனத்தின் மூலமாகத் தெரிகிறது.

19 அதிகாரம்

"அங்கி" (coat) - இதற்கான கிரேக்க வார்த்தை "சிடோன்" (chitoon) என்பதாகும். இது உள் அங்கியைக் குறிப்பிடும். முழங்கால் வரையிலும் தொங்குதலாக இருக்கும். (மத் 5:40; லூக்கா 6:29; அப் 9:39) ஒருவர் இதைப் போன்று இரண்டு அங்கிகளை அணிவது ஆடம்பரமாகக் கருதப்பட்டது. ஆகையினால் சீஷர்கள் இரண்டு அங்கிகளை அணிவதற்குத் தடைபண்ணப் பட்டிருந்தார்கள். (மத் 10:10; மாற்கு 6:9; லூக்கா 3:11; லூக்கா 9:3). ஒரு நபர் அங்கியை மட்டும் அணிந்திருந்து, அதற்கு மேல் எந்த வஸ்திரமும் அணியவில்லை யென்றால், அவர் நிர்வாணமாக இருப்பதாகவே ஜனங்கள் கருதினார்கள். (1சாமு 19:24)

அங்கி (coat) - χιτών - chitoon - 5509

ஆண்பால் பெயர்ச்சொல் - வஸ்திரம், அங்கி

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 12

"என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப் போட்டார்கள்" (யோவான் 19:24; சங் 22:18)

16. இயேசுவின் சிலுவையின் அருகே நின்ற ஸ்திரீகள்

யோவான் 19:25 இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள்.

யோவான் 19:26 அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார்.

யோவான் 19:27. பின்பு அந்த சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்.

"கிலெயோப்பா" (Cleophas) - மறுபெயர் அல்பேயு (Alpheus) (மத் 10:3; மாற்கு 3:18; லூக்கா 6:15; லூக்கா 10-13, 24:18).

"தமக்கு அன்பாயிருந்த சீஷன்" - இது யோவானைக் குறிக்கும். (யோவான் 13:23; யோவான் 21:7,20,24) இயேசு கிறிஸ்து கல்வாரிச் சிலுவையில் மரித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய உலகப் பிரகாரமான தந்தையாகிய யோசேப்பு, மரித்துவிட்டார். மரியாளின் வயிற்றில் பிறந்த இயேசுவின் சகோதரர்கள் அவரை மேசியாவாக இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. தாம் மரிக்கும் அந்த வேளையில்கூட தமது தாயாகிய மரியாளுக்கு ஒரு குறைவும் வரக்கூடாது என்று இயேசு கிறிஸ்து விரும்புகிறார். ஆகையினால், தமது தாயைப் பராமரிக்கும் பொறுப்பை தமக்கு அன்பான சீஷனாகிய யோவானிடம் ஒப்புக்கொடுக்கிறார். "தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்த சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார்." இயேசு கிறிஸ்து யாரையும் கைவிடவே மாட்டார். (லூக்கா 8:19)

17. இயேசுவின் மரணம் - (மத் 27:45; மாற்கு 15:33; லூக் 23:44)

யோவான் 19:28 அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார்.

யோவான் 19:29 காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக்கொடுத்தார்கள்.

யோவான் 19:30 இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்.

19 அதிகாரம்

யோவான் 19:31 அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்த படியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப் போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக் கொண்டார்கள்.

யோவான் 19:32 அந்தப்படி போர்ச்சேவகர் வந்து, அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள்.

யோவான் 19:33 அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை

யோவான் 19:34 ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது.

யோவான் 19:35 அதைக் கண்டவன் சாட்சிகொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருந்தான்.

யோவான் 19:36 அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது.

யோவான் 19:37 அல்லாமலும் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் என்று வேறொரு வேதவாக்கியம் சொல்லுகிறது.

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 13

"தாகமாயிருக்கிறேன்" - (யோவான் 19:28; சங் 69:21).

"காடி" (hyssop) - (மத் 27:34; மாற்கு 15:23)

"முடிந்தது" (It is finished) - இதற்கான கிரேக்க வார்த்தை "டெலேயோ" (teleoo) என்பதாகும். இதற்குப் பலவிதமாக பொருள் கூறலாம். **"make an end"** (மத் 11:1); **"finish"** (மத் 13:53; மத் 19:1; மத் 26:1; யோவான் 19:30; 2தீமோ 4:7; வெளி 10:7; வெளி 11:7; வெளி 20:5); **"expire"** (வெளி 20:7); **"fulfil"** (அப் 13:29; ரோமர் 2:27; கலா 5:16; யாக் 2:8; வெளி 15:8; வெளி 17:17; வெளி 20:3); **"fill up"** (வெளி 15:1); **"accomplish"** (லூக்கா 12:50; லூக்கா 18:31; லூக்கா 22:37; யோவான் 19:28); **"perform"** (லூக்கா 2:39); **"pay"** (மத் 17:24; ரோமர் 13:6).

முடிந்தது (finished) - τελέω - **teleoo** - 5055

வினைச்சொல் - ஒடிப்போ, நிறைவேற்று

இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்ததினால் முடிவுபெற்ற காரியங்கள்

1. கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிக் கூறியிருக்கும் எல்லா வேத வாக்கியங்களும் நிறைவு பெறுகிறது. **(Fulfillment of all scriptures of the sufferings of Christ)** (சங் 22; ஏசா 53; லூக்கா 24:25-26,44; யோவான் 19:28; 1பேதுரு 1:11; 1பேதுரு 3:18)

2. சாத்தானின் தோல்வி **(Defeat of Satan)** (யோவான் 12:31-32; கொலோ 2:14-17; எபி 2:14-15)

யோவான் - தொகுப்புரை

19 அதிகாரம்

3. யூதருக்கும் புறஜாதியாருக்கும் நடுவேயுள்ள திரை கிழிந்து போகிறது. (Breaking down of the middle wall of partition to make Jews and Gentiles one) (எபே 2:14-18; எபே 3:6; 1கொரி 12:13; கலா 3:28; ரோமர் 10)

4. தேவனிடம் யாருடைய துணையும் இல்லாமல், நாமே செல்லும் சிலாக்கியம் கிடைக்கிறது. (Way for personal access to God) (எபே 2:18-19; எபி 10:19-38)

5. மரணத்தின் ஆட்சி அகற்றப்படுகிறது. (Cancellation of the reign of death) (ரோமர் 5:12-21; ரோமர் 6:9; ரோமர் 8:2; 1கொரி 15:1-58; 2கொரி 3:6-15; எபி 2:14-15)

6. பாவத்தின் வல்லமை அகற்றப்படுகிறது. (Cancellation of sin's power) (ரோமர் 6:1-23; ரோமர் 98:2; 1கொரி 15:54-58)

7. மரணபரியந்தம், கீழ்ப்படிதல், நேசித்தல் என்பது நடைமுறையில் விளக்கப்படுகிறது. (Demonstration of obedience and love to death) (பிலி 2:8; எபி 5:8-10; 1பேதுரு 2:21; 1பேதுரு 4:1)

8. கிறிஸ்துவின் பரிபூரணம் (Perfection of Christ) (எபி 2:10; எபி 5:8-11)

9. எல்லாப் பாவங்களுக்கும் இரட்சிப்பு (Salvation from all sin) (மத் 26:28; எபே 1:7; கொலோ 1:14; எபி 9:15; வெளி 1:5; வெளி 5:9-10)

10. தேவனுக்கும், மனுஷனுக்கும் இடையே சமாதானம் உண்டாகிறது. (Making of peace between God and man) (கொலோ 1:20-22; 2கொரி 5:14-21; ரோமர் 5:1-11)

11. எல்லோருக்கும் பாவத்தின் கிரயமாகிய மரணம் செலுத்தப்படுகிறது. (Death penalty paid for all) (2கொரி 5:14-21; 1கொரி 6:19-20; எபி 2:9-15; ரோமர் 5:6-8; 1பேதுரு 1:19)

12. மனுஷரைச் சாத்தான் கட்டியிருக்கும் கட்டுக்கள் அவிழ்க்கப்படுகிறது. மனுஷர் பாவத்திலிருந்தும், சாத்தானிடமிருந்தும் விடுவிக்கப் படுகிறார்கள். (Cancellation of the mortgage claim of Satan and freeing of man and his dominion from sin and Satan) (1கொரி 6:19-20; ரோமர் 8:18-24; ரோமர் 14:7-9; 2கொரி 5:14-15; 1தெச 5:10; எபி 2:9-15; வெளி 5:9-10; வெளி 21:1-22:5; 1பேதுரு 1:19)

13. தேவனுடைய பூரண நீதி திருப்தியாக விளங்குகிறது. Satisfaction of the full justice of God (ஆதி 2:17; ரோமர் 3:21-26; ரோமர் 5:1-11; யோவான் 3:16)

14. எல்லோருக்கும் சரீர சுகமாகுதல் உண்டாகிறது. (Physical healing for all) (மத் 8:17; மத் 13:15; ஏசா 53:4-5; 1பேதுரு 2:24; யோவான் 10:10; யாக் 5:14-16)

15. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும், அவருடைய பூரண வல்லமையும் விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. (A way for the full endowment of power and full anointing of the Holy Spirit) (கலா 3:13-14; யோவான் 7:37-39; லூக்கா 24:49; அப் 1:4-8,33)

16. பழைய உடன்படிக்கை ஒழிந்துபோகிறது. புதிய உடன்படிக்கை முத்திரைப் போடப்படுகிறது. (Blotting out of the Old Covenant and making and sealing of the New Covenant) (கொலோ 2:14-17; எபே 2:14-18; மத் 26:28; 2கொரி 3:6-15; கலா 3:13-25; கலா 4:21-31; எபி 7:11-28; எபி 8:6-10:1-18)

19 அதிகாரம்

"இயேசு கிறிஸ்து தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்" - இயேசு கிறிஸ்து இதுவரையிலும் தமது தலையை நேராக வைத்திருந்தார். தமது ஜீவனைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார். இப்போது, தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் தமது ஆவியை ஒப்புக்கொடுக்கிறார். (யோவான் 10:18).

"இயேசு கிறிஸ்து தமது ஆவியை ஒப்புக்கொடுத்தார்" - சிலுவையில் இயேசு கிறிஸ்துவின் சரீரம் தொங்கிக் கொண்டிருக்கிறது. அவருடைய சரீரத்தை விட்டு, இயேசு கிறிஸ்துவின் ஆவியும், ஆத்துமாவும் பிரசங்கம் பண்ணுவதற்காக பாதாளத்திற்குச் சென்றது. (1பேதுரு 3:19) நீதிமான்களுடைய ஆவிகளை விடுதலைபண்ணுவதற்காக இயேசு கிறிஸ்து பாதாளத்திற்குச் சென்றார். (சங் 16:10; மத் 12:40; எபே 4:8-10; எபி 2:14-15). மரித்த சரீரத்தை அடக்கம்பண்ணும்போது அதன் ஆவியும் சேர்ந்தே அடக்கம் பண்ணப்படுவதில்லை. (யாக் 2:26; பிலி 1:21-24; 2கொரி 5:8; எபி 12:22-23; ஏசா 14:9; சங் 16:10; வெளி 6:9-11; வெளி 20:11-15) ஆவியும், ஆத்துமாவும் மரிப்பதில்லை. (1பேதுரு 3:4; 1பேதுரு 4:6; லூக்கா 16:19-31; மத் 10:28). ஒரு நபர் மரிக்கும்போது அவருடைய சரீரத்தை விட்டு, ஆவியும், ஆத்துமாவும் வெளியேறும். உயிர்த்தெழும்போது அந்த ஆவியும், ஆத்துமாவும் அவற்றின் சரீரத்தோடு மறுபடியும் ஒன்றுசேரும். (யாக் 2:26; 1இராஜா 17:20-22; யோபு 14:10; 2சாமு 12:19-23; லூக்கா 8:49-56; லூக்கா 16:22; லூக்கா 23:43-46; 2கொரி 5:8; பிலி 1:21-24; வெளி 6:9-11; 2பேதுரு 1:13-15).

"அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்தது" - மறுநாள் பெரிய ஓய்வுநாளாகும். **"high day"** (யோவான் 19:31) பண்டிகையின் பிரதான ஓய்வுநாள். இந்த ஓய்வுநாளும், வாரத்தின் ஓய்வுநாளும் வெவ்வேறானவை. வாரத்தின் ஓய்வுநாள் மேலும் இரண்டு நாள் கழித்து வருகிறது. (லேவி 23:6-11, மத் 12:40) "இரவிலே பிரேதம் மரத்திலே தொங்கலாகாது" என்று யூதருடைய பிரமாணம் கூறுகிறது. (உபா 21:22-23).

"அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப் போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக் கொண்டார்கள்" - ஒரு குற்றவாளியைச் சிலுவை மரத்தில் தொங்கவிடும்போது அந்த நபரை விரைவாகச் சாகவைப்பதற்காக அந்த நபருடைய காலெலும்புகளை முறிக்கும் பழக்கம் அக்காலத்தில் இருந்தது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் காலெலும்புகளை அவர்கள் முறிப்பதற்கு முன்பாகவே அவர் மரித்துவிட்டார். ஆகையினால் அவருடைய காலெலும்புகளைப் போர்ச்சேவகர் முறிக்கவில்லை. (யோவான் 19:36)

"போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது" - இயேசு கிறிஸ்து உலகத்தின் பாவங்களுக்காக மரித்தார். தமது திருஇரத்தத்தை நமக்காகச் சிந்தினார். (மத் 26:28; 1கொரி 15:3; ரோமர் 5:6-8; கலா 1:4; கொலோ 1:14,20-22).

"அதைக் கண்டவன் சாட்சிகொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது" - இந்த வசனத்தில் அதைக் கண்டவன் என்பது இந்தச் சுவிசேஷத்தை எழுதிய யோவானைக் குறிக்கும். (யோவான் 19:25-26; யோவான் 21:24-25).

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 14

"அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை" (யோவான் 19:36; யாத் 12:46; எண் 9:12; சங் 34:20)

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 15

"தாங்கள் குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்கள்" - (யோவான் 19:37; சங் 22:16; சக 12:10; வெளி 1:7)

19 அதிகாரம்

18. இயேசுவை அடக்கம் பண்ணுகிறார்கள் - (மத் 27:57; மாற்கு 15:42; லூக் 23:50)

யோவான் 19:38 இவைகளுக்குப்பின்பு அரிமத்தியா ஊரானும், யூதருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனுமாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போகும்படி பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான்; பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையால் அவன் வந்து, இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோனான்.

யோவான் 19:39 ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான்.

யோவான் 19:40 அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம் பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்தவர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினார்கள்.

யோவான் 19:41. அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டமும், அந்தத் தோட்டத்தில் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறையும் இருந்தது.

யோவான் 19:42 யூதருடைய ஆயத்தநாளான படியினாலும், அந்தக் கல்லறை சமீபமாயிருந்தபடியினாலும், அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள்.

"அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு" **(Joseph of Arimathaea)** - இயேசு கிறிஸ்துவின் இரகசிய சீஷர்களில் ஒருவன். ஆலோசனைச் சங்கத்தில் இவனும் ஒரு அங்கத்தினர். (யோவான் 19:38-42; மத் 27:57-60; மாற்கு 15:42-47; லூக்கா 23:50-56) இவனுடைய சொந்த ஊர் ராமா **(Ramah)**. செப்துவஜிந்தில் இந்த ஊர் அர்மதாயீம் **(Armathaim)** (2சாமு 1:1,19) என்று அழைக்கப்படுகிறது.

"நிக்கொதேமு" - (யோவான் 3:1) இவன் இயேசு கிறிஸ்துவிடம் முதலாவது வரும்போது, இராத்திரியிலே வந்தான் என்று வாசிக்கிறோம். இப்போது, அவனிடத்தில் பயமோ, வெட்கமோ இல்லை. வெளிப்படையாக வருகிறான்.

"நிக்கொதேமு என்பவன் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான்" - மரித்தோரின் சடலங்களை அடக்கம் பண்ணும்போது, சரீரத்தின் துர்நாற்றம் வெளியே வராமல் இருப்பதற்காக அந்தச் சரீரத்தில் வாசனைத் திரவியங்களைத் தடவுவது வழக்கம். இறந்தவர் மரியாதைக்குரியவராக இருந்தால், வாசனைத்திரவியங்களை அதிகமான அளவு கொண்டு வருவார்கள். இந்த வசனத்தில் நிக்கொதேமு நூறு இராத்தல் கொண்டு வந்தான் என்று வாசிக்கிறோம். சாதாரண சரீரத்தை அடக்கம் பண்ணுவதை விட, இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம் பண்ணுவதற்கு அதிக அளவில் வாசனைத் திரவியத்தைக் கொண்டு வருகிறார்கள். நிக்கொதேமுவைத் தவிர, ஸ்திரீகளும் வாசனைத் திரவியங்களைக் கொண்டு வந்தார்கள். (மாற்கு 16:1; லூக்கா 23:56; லூக்கா 24:1)

வெள்ளைப்போளம் **(myrrh)** - **σμύρναl - smyrnal** - 4666

பெண்பால் பெயர்ச்சொல் - வெள்ளைப்போளம் **(a fragrant gum used in anointing oil)** (யாத் 30:23), **perfume** (சங் 45:8), **(embalming)** (மாற்கு 15:23; யோவான் 19:39) இந்த வார்த்தை இந்த வசனத்திலும், மத் 2:11 ஆவது வசனத்திலும் மட்டுமே புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் இந்த வார்த்தையை நாம் பல வசனங்களில் வாசிக்கலாம். (ஆதி 37:25; ஆதி 43:11; யாத் 30:23; சங் 45:8; நீதி 7:17; உன் 3:6; உன் 4:6,14; உன் 5:1,13; எஸ் 2:12)

"கரியபோளம்" **(aloes)** - நறுமணம் கமழும் ஒரு மரத்தின் பட்டை. புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்திலும் பழைய ஏற்பாட்டில் 4 வசனங்களிலும் நாம் கரியபோளத்தைக் குறித்து வாசிக்கிறோம். (எண் 24:6; நீதி 7:17; உன் 4:14; சங் 45:8) சரீரத்தை அடக்கம் பண்ணும்போது கரியபோளத்தைப் பயன் படுத்துவார்கள். (யோவான் 19:39)

யோவான் - தொகுப்புரை

19 அதிகாரம்

"அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம்பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்தவர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினார்கள்" - எகிப்தியர்கள் இறந்தோருடைய சடலங்களைப் பாடம்பண்ணிப் பாதுகாப்பார்கள். (ஆதி 50:2-3) யூதர்கள் எகிப்தியரைப் போன்று, சரீரங்களைப் பாடம்பண்ணுவதில்லை. மரித்தவரின் சடலத்தின்மீது வாசனைத் திரவியங்களை ஊற்றி, அதைச் சீலைகளினால் சுகந்த வர்க்கங்களுடனே சுற்றிக் கட்டி விடுவார்கள். இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் இந்தச் சடங்குகளை எல்லாம் செய்ய முடியவில்லை. ஏனெனில் ஓய்வுநாள் வந்துவிடுகிறது. ஆகையினால் அவருடைய சரீரத்தில் வாசனைத் திரவியங்களை வைத்து, அபிஷேகம் பண்ண முடியவில்லை. ஓய்வுநாள் முடிந்த பிறகு, ஸ்திரீகள் வாசனைத் திரவியங்களோடு வருகிறார்கள். (மாற்கு 16:1). இரண்டு கால்களையும், கைகளையும் சீலைகளினால் சுற்றுவார்கள். முகத்தை ஒரு துணியால் மூடுவார்கள். (யோவான் 11:44; யோவான் 20:7; அப் 5:6)

"அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டம் இருந்தது" - வேதாகமத்தில் நாம் நான்கு விதமான தோட்டங்களைக் குறித்து வாசிக்கிறோம். இவை மனுஷருடைய பாவங்களோடும், இரட்சிப்போடும் தொடர்புடையவை. அவையாவன:

1. ஆதாமுக்கு முந்திய காலத்திலிருந்த ஏதேன் தோட்டம். இங்கு லூசிபர் ஆட்சி புரிந்து கலகம் பண்ணினான். (எசே 28:13)
2. ஆதாமின் காலத்திலிருந்த ஏதேன் தோட்டம். இங்கு ஆதாம் ஆட்சி புரிந்து கலகம் பண்ணினான். (ஆதி 2:8-3:24)
3. கெத்செமனே தோட்டம். இங்கு இயேசு கிறிஸ்து மனுஷருடைய பாவத்தினால் வியாகுலமடைந்தார். (மத் 26:36-56)
4. யோசேப்பின் தோட்டம். இயேசு கிறிஸ்து இந்தத் தோட்டத்தில் அடக்கம் பண்ணப்பட்டார். (யோவான் 19:41)

கல்லறை **(sepulchre)** - **μνημεῖον** - **mneemeion** - 3419

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - கல்லறை, பிரேதக்குழி **(grave)** (யோவான் 5:28; யோவான் 11:17,31,38; யோவான் 12:17) கல்லறையும், நரகமும் ஒன்றல்ல. கல்லறை மரித்த சரீரம் போகும் இடம். நரகம் துன்மார்க்கர் நித்திய காலமாக பாடுகளை அனுபவிக்கப் போகுமிடம்.

"யூதருடைய ஆயத்தநாளானபடியினாலும், அந்தக் கல்லறை சமீபமாயிருந்தபடியினாலும், அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள்" - யூதருடைய ஓய்வுநாள் நெருங்கிவிட்டது. யூதருக்கு ஓய்வுநாள் மாலை வேளையில் சூரியன் அஸ்தமனமாகும்போது ஆரம்பமாகும். இயேசு கிறிஸ்துவை அதற்குள் அடக்கம் பண்ண வேண்டுமென்று, அவசரமாக அடக்கம் பண்ணுகிறார்கள். இயேசுவை நல்ல கல்லறையில் வைத்து அவரைப் பாதுகாக்க வேண்டுமென்பது அவருடைய சீஷரின் விருப்பம். அவர் உயிர்த்தெழுவார் என்று அவர்கள் நம்பவில்லை. ஆனால் ஓய்வுநாள் ஆரம்பமாகப் போகிறபடியினால், இயேசு கிறிஸ்துவைச் சீக்கிரம் அடக்கம் பண்ண வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தார்கள். இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்த இடத்திற்கு அருகிலுள்ள கல்லறையில் அவரை அடக்கம் பண்ணுகிறார்கள்.

19 அதிகாரம்

இயேசு கிறிஸ்துவின் கல்லறையைக் குறித்து, ஜனங்கள் வெவ்வேறு விதமான நம்பிக்கைகளைக் கொண்டிருந்தார்கள். இயேசு கிறிஸ்துவின் கல்லறை புனிதமானது. பலவிதமான அற்புதங்களை இயேசு கிறிஸ்து அந்தக் கல்லறையிலிருந்து செய்வதாக கிரேக்கரும், அர்மேனியரும் நம்பினார்கள். ஒவ்வொரு ஈஸ்டர் தினத்தின்போதும் பரலோகத்திலிருந்து ஒரு அக்கினி இந்தக் கல்லறைக்கு வரும் என்பது இவர்களுடைய நம்பிக்கை. இந்தக் கல்லறையிலிருந்து ஒரு விளக்கை ஏற்றி, மரித்துப்போன மற்றவர்களுடைய கல்லறையில் வைத்தால், அவர்கள் நரகத்தின் அக்கினியிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள் என்றும், பரலோகத்திற்குச் செல்வார்கள் என்றும் அவர்கள் நம்பினார்கள். ஒரளவு இயேசு கிறிஸ்துவின் கல்லறையை விக்கிரகாராதனை செய்யும் ஸ்தலம்போல மாற்றிவிட்டார்கள். அந்த இடத்தில் பரிசுத்த கல்லறையின் தேவாலயம் **(Church of the Holy Sepulchre)** என்று ஒரு ஆலயத்தையும் கட்டிவிட்டார்கள். சுமார் 1,400 வருஷங்களாக இந்த விக்கிரகாராதனை முறைமை நடைபெற்று வந்தது. இந்த ஆலயம் 1808 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 11 ஆம் நாள் எரிக்கப்பட்டு, அழிக்கப்பட்டதாக திருச்சபை வரலாறு கூறுகிறது.

20 அதிகாரம்

IX. உயிர்த்தெழுந்த பின்பு இயேசுவின் ஊழியம்

1. ஸ்திரீகள் அப்போஸ்தலரிடம் கல்லறை காலியாக இருப்பதை அறிவிக்கிறார்கள்

யோவான் 20:1 வாரத்தின் முதல்நாள் காலையில், அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள்.

யோவான் 20:2 உடனே அவள் ஓடி, சீமோன் பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷனிடத்திலும் போய்: கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள்.

"வாரத்தின் முதல்நாள் காலை" (first day of the week) - ஓய்வுநாட்களின் முதலாவது நாள். பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஏழு ஓய்வுநாட்களை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (லேவி 23:15-17).

"அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்தாள்" - சூரியன் உதிப்பதற்கு முன்பாகவே மரியாள் வருகிறாள். மரியாளின் பெயர் இந்த வசனத்தில் விசேஷமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவளே பேதுருவையும், யோவானையும் கல்லறையினிடத்திற்கு அழைத்து வந்தவள். (யோவான் 20:2)

"இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷன்" - இது யோவானைக் குறிக்கும். (யோவான் 13:23; யோவான் 19:26; யோவான் 20:2; யோவான் 21:7,20-25).

"கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை" - யோசேப்பும், நிக்கொதேமுவும் இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டதாக மரியாள் நினைத்தாள்.

2. பேதுருவும் யோவானும் இயேசுவை அடக்கம் பண்ணிய இடத்திற்கு ஓடுகிறார்கள் - (லூக் 24:12)

யோவான் 20:3 அப்பொழுது பேதுருவும் மற்றச் சீஷனும் கல்லறையினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள்.

யோவான் 20:4 பேதுருவைப் பார்க்கிலும் மற்றச் சீஷன் துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில் வந்து,

யோவான் 20:5 அதற்குள்ளே குனிந்துபார்த்து, சீலைகள் கிடக்கிறதைக் கண்டான்; ஆனாலும் அவன் உள்ளே போகவில்லை.

யோவான் 20:6 சீமோன்பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக்குள்ளே பிரவேசித்து,

யோவான் 20:7 சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான்.

யோவான் 20:8. முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்த மற்றச் சீஷனும் அப்பொழுது உள்ளே பிரவேசித்து, கண்டு விசுவாசித்தான்.

யோவான் 20:9 அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்ற வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள்.யோவான்

20:10 பின்பு அந்தச் சீஷர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப் போனார்கள்.

"பேதுருவைப்பார்க்கிலும் மற்றச் சீஷன் துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில் வந்தான்" - பேதுருவைவிட யோவான் இளையவன் என்பதற்கு வேதத்தில் ஆதாரமில்லை. ஆனாலும் பேதுருவைவிட யோவான் வேகமாக ஓடினான்.

20 அதிகாரம்

"சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான்" - இந்தச் சீலைகள் இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம் பண்ணிய போது, எப்படி இருந்ததோ அப்படியே அந்த இடத்திலேயே இருந்தது. யோவான் இந்தச் சீலைகளைத் தாண்டி, கடந்து போனான். சுருட்டி வைத்திருந்த சீலையை உலைக்காமல், தாண்டிச் செல்கிறான். லாசருவைக் கட்டியிருந்த சீலையை அவிழ்த்ததுபோன்று, இயேசுவிற்கு யாரும் செய்ய வேண்டியதில்லை. (யோவான் 11:44). இயேசு கிறிஸ்துவின் சரீரம் உயிர்த் தெழுந்தது. அவரைச் சுற்றியிருந்த சீலைகளுக்கு ஒன்றும் ஆகவில்லை. அவைச் சுற்றப்பட்டப்படியே அதே இடத்தில் இருந்தது. கல்லறையின் கதவு திறந்திருந்தது. இயேசு கிறிஸ்துவின் சரீரம் வெளியேறிச் செல்வதற்காக கல்லறை திறக்கப்படவில்லை. அவர் இப்பொழுது உயிர்த்தெழுந்த சரீரத்தில் இருக்கிறார். கல்லறை பூட்டப் பட்டிருந்தாலும், அவரால் வெளியே போகமுடியும். ஆனால் பூட்டப்பட்டிருக்கும் கல்லறைக்குள் சீஷர்களால் உள்ளே வரமுடியாது. சீஷர்கள் கல்லறைக்குள் வரவேண்டுமென்பதற்காகவும், தாம் உயிர்த்தெழுந்திருப்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவும் கல்லறையை மூடப்பட்டிருந்த கல் திறந்திருந்தது. இயேசு கிறிஸ்து பூட்டப்பட்டிருந்த கதவுகள் வழியாகவும், போகக்கூடியவர். (யோவான் 20:19)

யோவான் சுவிசேஷத்தில் நிறைவேறியுள்ள பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எண் - 16

"அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும்" (யோவான் 20:9; சங் 16:10-11).

"அந்தச் சீஷர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப்போனார்கள்" - அவர்களுடைய இடம் என்பது சீஷர்கள் தற்காலிகமாக தங்கிய இடத்தைக் குறிக்கும்.

3. மகதலேனா மரியாளுக்கு இயேசுவின் தரிசனம் - (மத் 28:8)

யோவான் 20:11 மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள்; அப்படி அழுது கொண்டிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து,

யோவான் 20:12 இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள்.

யோவான் 20:13 அவர்கள் அவளை நோக்கி: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் அவரை வைத்த இடம்எனக்குத்தெரியவில்லை என்றாள்.

யோவான் 20:14 இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்.

யோவான் 20:15 இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக் கொண்டுபோனதுண்டானால், அவரை வைத்தஇடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுவேன் என்றாள்.

யோவான் 20:16 இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள்; அதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.

யோவான் 20:17 இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்.

யோவான் - தொகுப்புரை

20 அதிகாரம்

“மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள்; அப்படி அழுது கொண்டிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்தாள்” - பேதுருவும், யோவானும் கல்லறையைவிட்டு, தங்க ளுடைய இடத்திற்குத் திரும்பிப் போனபின்பு, மரியாள் இன்னும் கல்லறையின் அருகே வெளியே நின்று, அழுதுகொண்டிருந்தாள். கல்லறைக்குள்ளே குனிந்து பார்த்தாள். இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்தி ருக்கிறதைக் கண்டாள். (யோவான் 20:12) தேவதூதர்கள் இரண்டாம் முறையாகத் தோன்றிய நிகழ்ச்சியாக இருக்கலாம். மத் 28:1-6; மாற்கு 16:1-6 ஆகிய வசனங்களில் தேவதூதர்கள் முதலாவது தோன்றினார்கள். மரியாள் பேதுருவிடமும், யோவானிடமும் “கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை” (யோவான் 20:1-2) என்று கூறிய பின்பு இரண்டாம் முறையாகத் தேவதூதர்கள் தோன்றுகிறார்கள்.

“என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை” - என்று மரியாள் கூறுகிறாள். யோவான் 20:2 ஆவது வசனத்தில் “அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை” என்று வாசிக்கிறோம். “எங்கள்” என்பது பன்மைச் சொல். மரியாளோடு வேறு ஸ்திரீகளும் இருந்தார்கள். (மாற்கு 16:1). இந்த வசனத்தில் “அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை” என்று மரியாள் தன்னைப் பற்றி ஒருமையில் “எனக்கு” என்று குறிப்பிடுவதினால், இங்கு மரியாள் மட்டும் தனியாக இருந்திருக்க வேண்டும்.

“இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்” - அவரை இயேசு என்று மரியாள் ஏன் அறிந்து கொள்ளவில்லை என்பதற்கு பலவிதமான வியாக்கியா னங்களை வேதஅறிஞர்கள் கூறுகிறார்கள். எந்த வியாக்கியானமும் தெளிவாக இல்லை. (லூக்கா 24:16).

“இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார்” - மரியாள் யாரைத் தேடுகிறாள் என்பது இயேசுவிற்கு நன்றாகத் தெரியும். அவளுக்கு இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி எந்த அளவிற்குத் தெரிந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காக இயேசு இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கலாம். இயேசு இந்த உலகத்தில் ஊழியம் செய்துகொண்டிருந்த போது, தாம் மரிக்கபோவதையும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழப் போவதையும் பலமுறை அறிவித்திருக்கிறார். ஆனால் மரியாளோ அவருடைய சீஷர்களோ இந்தச் சத்தியத்தை நம்பியதாகவோ, ஞாபகத்தில் வைத்திருப் பதாகவோ தெரியவில்லை. விசுவாசமில்லாத யூதர்கள் இயேசு கிறிஸ்து தமது உயிர்த்தெழுதலைப் பற்றிக் கூறியதை நினைவில் வைத்திருந்தார்கள். (மத் 27:63)

தோட்டக்காரர் (gardener) - κηπουρός - keephouros - 2780

ஆண்பால் பெயர்ச்சொல் - தோட்டக்காரர் - தோட்டத்தில் வேலை பார்க்கிறவன். தோட்டத்தில் பணிபுரிபவர்களுக்கு அதிகாரியாக இருப்பவன். எஜமானுக்குக் கணக்குக் கொடுக்கிறவன்.

“நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுவேன்” - இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள பாசத்தினாலும், அன்பினாலும் மரியாள் இவ்வாறு கூறுகிறாள். இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை மரியாளால் எவ்வாறு தூக்கியெடுத்துக் கொள்ளமுடியும். இயேசு கிறிஸ்துவின் சரீர எடையோடு சேர்ந்து, 100 இராத்தல் வெள்ளைப்போளமும், கரிய போளமும் அவருடைய சரீரத்தில் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. மரியாளால் இயேசுவின் சரீரத்தைத் தூக்கி எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பில்லை.

“இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார்” - இப்போது அங்கு இருப்பது இயேசு கிறிஸ்து என்று மரியாள் அறிந்து கொள்கிறாள். இயேசு கிறிஸ்து தம்மைத் தாமே முதலாவது மரியாளுக்கு வெளிப்படுத்திக் காண்பித்தார். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மற்றவர் களுக்கு மரியாளே முதலாவது அறிவித்தவள்.

20 அதிகாரம்

“ரபூனி” **(Rabboni)** - இது அரமாயிக் மொழிச்சொல். (லூக்கா 9:38)

தீர்க்கதரிசன எண் - 42

“என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்” (யோவான் 20:17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

“என்னைத் தொடாதே” -இந்த வசனத்தில் “தொடு” என்பதற்கான கிரேக்க வார்த்தை “ஹாப்தோமாய்” **(haptomai)** என்பதாகும். இதற்குக் கட்டித் தழுவுதல், கட்டிக் கொள்ளுதல் என்று பொருள். என்னைத் தொடாதே என்று இயேசு கிறிஸ்து கூறியது “என்னைக் கட்டித் தழுவவேண்டாம்” என்று பொருள்படும். இயேசு கிறிஸ்து உடனடியாக பரலோகத்திற்கு ஏறிச்செல்லப் போகிறார். அந்த நாளில் அவர் பரலோகத்திற்குச் சென்று, அதே நாளிலேயே இந்தப் பூமிக்குத் திரும்பவும் வந்து, தமது சீஷர்களுக்குக் காட்சிக் கொடுத்தார்.

தொடு (Touch) - ἅπτομαι - **haptomai** - 680

வினைச்சொல் - தொடு

“நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை” - இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறிப்போகவேண்டும். மரியாள் தம்மை அங்கு போகவிடாமல் இங்கு கட்டி வைத்திருப்பதை இயேசு கிறிஸ்து விரும்பவில்லை. தம்மைத் தொடுவதற்கு இயேசு கிறிஸ்து ஸ்திரீகளுக்கு அனுமதி கொடுத்திருந்தார். (மத் 28:9) ஆனால் அவரை யாரும் கட்டிப்போடக்கூடாது.

“நீ என் சகோதரரிடத்திற்குப் போ” - தம்முடைய சகோதரர் என்று இயேசு கிறிஸ்து இங்கு கூறியிருப்பது அவருடைய சீஷர்களையே குறிக்கும். மரியாளின் வயிற்றில் பிறந்த இயேசு கிறிஸ்துவின் சகோதரரைக் குறிக்காது. (மத் 12:49; மத் 28:10; லூக்கா 8:19-21; எபி 2:11).

4. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு மகதலேனா மரியாளின் சாட்சி - (மத் 28:8)

யோவான் 20:18 மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்.

“மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்” - ஆனால் சீஷர்களோ மரியாள் கூறியதை விசுவாசிக்கவில்லை. (மாற்கு 16:11).

5. இயேசு பத்து பேருக்கு தரிசனம் தருகிறார் - தோமா அங்கில்லை - (வசனம் 24-25)

யோவான் 20:19 வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத்தினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.

யோவான் 20:20 அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

“வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத் தினம் சாயங்காலவேளையிலே” - இயேசு கிறிஸ்து ஒரே நாளிலேயே பரலோகத்திற்குச் சென்றுவிட்டு, மறுபடியும் பூமிக்குத் திரும்பி வருகிறார். (யோவான் 20:17)

20 அதிகாரம்

"வாரத்தின் முதல்நாள்" **(first day of the week)** - இது ஞாயிற்றுக்கிழமையைக் குறிக்கும். வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையிலே விசுவாசிகள் கூடி தேவனை ஆராதிக்கவில்லையென்று ஒரு சிலர் கூறுகிறார்கள். அது தவறான கருத்து. இந்த வசனமும், யோவான் 20:26; அப் 20:7; 1கொரி 16:2 ஆகிய வசனங்களும் வாரத்தின் முதல்நாளாகிய ஞாயிற்றுக் கிழமையிலே தேவனுடைய பிள்ளைகள் தேவனை ஆராதித்ததை உறுதிபண்ணுகிறது. யோவான் 20:19, 26 ஆகிய வசனங்கள் மூலமாக இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களைச் சந்திப்பதற்கு இரண்டு முறை வாரத்தின் முதல்நாளாகிய ஞாயிற்றுக் கிழமையைத் தெரிந்தெடுத்து, ஆசீர்வதித்தி ருக்கிறார் என்பதை உறுதி பண்ணுகிறது. அதுமட்டுமல்ல, பெந்தெகொஸ்தே நாளும் வாரத்தின் முதல்நாளாகிய ஞாயிற்றுக் கிழமையிலேயே வருகிறது. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்காக சீஷர்கள் பத்து நாட்கள் காத்திருந்தார்கள். இந்தப் பத்து நாட்களில் இரண்டு ஞாயிற்றுக் கிழமை வருகிறது. (லூக்கா 24:49; அப் 1:1-8; அப் 2:1). பெந்தெகொஸ்தே நாளிலிருந்து விசுவாசிகள் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையிலேயே கூடிவந்து தேவனை ஆராதித்தார்கள் என்பது வரலாற்றுப் பிரகாரம் தெரியவருகிறது. (அப் 20:7; 1கொரி 16:1-2).

"சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருந்தன" - உயிர்த்தெழுந்த சரீரங்களுக்குக் கதவுகள் ஒரு தடையாக இராது. பூட்டப்பட்டிருக்கும் கதவுகளுக் குள்ளேயும், உயிர்த்தெழுந்த சரீரம் போகும். உயிர்த்தெழுந்த சரீரங்கள் ஆவிக்குரிய சரீரங்கள் என்று அழைக்கப்படுகிறது. (1கொரி15:42-44) ஒருவேளை உயிர்த்தெழுந்த சரீரங்கள் ஆவிகளைப் போன்று இருக்கலாம். அவற்றால் தோன்றவும் முடியும், மறையவும் முடியும். அவற்றைக் காணவும் முடியும், காணா முடியாமலும் இருக்கும்.

"சீஷர்கள் கூடியிருந்த இடம்" - நண்பருடைய வீட்டின் மேலறையாக இருக்கலாம். அவர்கள் அங்கு பஸ்காவைப் புசித்திருக்கலாம். (மாற்கு 14:15; லூக்கா 22:12; அப் 1:13).

"இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்" - எபிரெயர்கள் ஒருவரையொருவர் வாழ்த்தும் போது, "உங்களுக்குச் சமாதானம்" **(Peace be unto you)** என்று கூறி வாழ்த்துவார்கள். யோசேப்பின் சகோதரர்கள் அவனிடம் இவ்வாறு கூற மறுத்துவிடுகிறார்கள். (ஆதி 37:4; நியா 19:20; 1சாமு 25:6; மத் 10:12-13). இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடம் உங்களுக்குச் சமாதானம் என்று கூறும்போது அவர்களுக்கு நிச்சயமாகவே தெய்வீக சமாதானம் வரும். இயேசு கிறிஸ்து வாக்குமாறாதவர். அவர் சர்வ வல்லவர். (யோவான் 14:27; யோவான் 16:33).

"அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார்" - கைகளையும், கால்களையும், விலாவையும் காண்பித்தார். (லூக்கா 24:39).

6. இயேசு தமது சீஷர்களுக்கு ஊழியப் பொறுப்புக்களைக் கொடுக்கிறார் - (மத் 18:18; யோவான் 14:12)

யோவான் 20:21 இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,

யோவான் 20:22 அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்;

யோவான் 20:23 எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப் படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்.

20 அதிகாரம்

"பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" - பிதாவானவர் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவிற்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அளவில்லாமல் அருளியிருக்கிறார். அதுபோலவே குமாரனாகிய இயேசுகிறிஸ்து தமது சீஷர்களைப் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடும், வல்லமையோடும் அனுப்புகிறார். (யோவான் 7:37-39; யோவான் 14:12; யோவான் 17:18; யோவான் 20:21; லூக்கா 24:49; அப் 1:4-8; மத் 18:18)

"இயேசு அவர்கள்மேல் ஊதினார்" - ஊது என்பதன் கிரேக்க வார்த்தை "எம்புசவோ" (emphysaoo) என்பதாகும். புதிய ஏற்பாட்டில் இந்த வசனத்தில் மட்டுமே நாம் இந்த வார்த்தையை வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டில் ஆதி 2:7 ஆவது வசனத்தில் "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" என்று வாசிக்கிறோம். இதில் பயன்படுத்தப் பட்டிருக்கும் எபிரெய வார்த்தை "நவ்பக்" (naw-fakh') என்பதாகும். இதற்கு வேகமாக ஊதுதல், வல்லமையோடு ஊதுதல் என்று பொருள். செப்துவஜிந்த் பதிப்பில் இந்த வசனத்தில் "எம்புசவோ" (emphysaoo) என்னும் கிரேக்க வார்த்தையே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

ஊது (breathed) - ἐμφυσάω - emphysaoo - 1720

வினைச்சொல் - ஊது

ஊது (breathe) - נפח - naw-fakh' - 5301

வினைச்சொல் - விட்டுவிடு, ஊது, ஊதிப்போடு, கொதி, பொங்கு, அவி, உபத்திரவப்படுத்து, திரணமாயப்பேசு

"எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்" - இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்கு அதிகாரம் கொடுக்கிறார். இந்த அதிகாரம் மத்தேயு 18:18 ஆவது வசனத்தில் "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று இயேசு கிறிஸ்து தமது சீஷர்களிடம் கூறியிருப்பது போன்று உள்ளது.

7. கண்டு விசுவாசித்த தோமா

யோவான் 20:24 இயேசு வந்திருந்தபோது பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்களுடனேகூட இருக்கவில்லை.

யோவான் 20:25 மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்: அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலைவிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான்.

"திதிமு என்னப்பட்ட தோமா" - யோவான் சுவிசேஷத்தில் மூன்றாம் முறையாக இவனுடைய பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (யோவான் 11:16; யோவான் 14:5; யோவான் 20:24). பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன். இவனுடைய மறுபெயர் திதிமு. (யோவான் 20:24; யோவான் 21:2; மத் 10:3; மாற்கு 3:18; லூக்கா 6:15; அப் 1:13) இவனுக்குசந்தேகப்படும் தோமா "doubting Thomas" என்றும் மற்றொரு பெயர் உள்ளது. இவன் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவைவிசுவாசிக்கவில்லை. (யோவான் 20:25) இந்த அடிப்படையில் நாம் எல்லா அப்போஸ்தலர்களையும் சந்தேகப்படுகிறவர்கள்,அவிசுவாசிகள் என்றுஅழைக்கலாம். (மத் 28:17; மாற்கு 16:11-14; லூக்கா 24:11,25,41; யோவான் 20:27) இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்குத் தரிசனம் கொடுத்தபோது, தோமா அங்கு இல்லை. மற்ற சகோதரர்கள் கூடி வந்திருக்கும் பொழுது, தோமா அங்கில்லை. ஆகையினால் அவனால் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த அற்புதத்தைக் காண முடியவில்லை. இன்றைக்கும் அநேகர் சபை கூடுதலை விட்டுவிட்டு, சபைக்கு வராமல் இருப்பதினால் தேவனுடைய மகிமையைக் காணாதிருக்கிறார்கள். (எபி 10:25).

20 அதிகாரம்

8. இயேசு பதினொரு பேருக்கு தரிசனம் தருகிறார்

யோவான் 20:26 மறுபடியும் எட்டுநாளைக்குப் பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.

யோவான் 20:27 பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்.

யோவான் 20:28 தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்.

"மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்" - வாரத்தின் முதலாம் நாளிலே சீஷர்கள் ஒரிடத்தில் கூடி இருந்தார்கள். (யோவான் 20:19) அந்த நாளுக்கு எட்டு நாளைக்குப் பின்பு இயேசு கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்தார். இது இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை. தோமா இந்த நாளில் சீஷர்கள் மத்தியிலே இருந்தான். அப்பொழுது, இயேசு கிறிஸ்து அவர்கள் நடுவிலே வந்து நின்றார். "உங்களுக்குச் சமாதானம்" (யோவான் 20:19,21,26) என்று கூறி இயேசுகிறிஸ்து மறுபடியும் தம்முடைய சீஷர்களை வாழ்த்தினார். இப்போதும் கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரத்திற்கு பூட்டப்பட்டிருக்கும் கதவு ஒரு தடையல்ல. (யோவான் 20:19) இயேசு கிறிஸ்து அவர்கள் நடுவிலே தோன்றி, அவர்களுக்கு உபதேசம் பண்ணிவிட்டு, அவர்கள் பார்வையிலிருந்து மறைந்துவிட்டார். (லூக்கா 24:31)

இதன் பின்பு, பெந்தெகொஸ்தே நாள் வருகிறது. இதுவரையிலும், இயேசு கிறிஸ்து இந்தப் பூமியிலே தமது சீஷர்களுக்கு உபதேசம் பண்ணிக் கொண்டு வந்தார். (அப் 1:3). 40 ஆம் நாளில் இயேசு கிறிஸ்து வானத்திற்கு உயர எடுத்துக் கொள்ளப் பட்டார். (அப் 1:11) இதன் பின்பு, 10 நாட்கள் கழித்து பெந்தெகொஸ்தே நாள் வருகிறது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த ஞாயிற்றுக் கிழமையிலிருந்து 50 நாட்கள் கழித்து, பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தது. (அப் 2:1; லேவி 23:15-16) முதலாவது உயிர்த்தெழுந்த ஞாயிற்றுக் கிழமை பற்றியும், எட்டு நாளைக்குப் பின்பு வந்த ஞாயிற்றுக்கிழமை பற்றியும் பரிசுத்த வேதாகமத்திலே குறிப்பு உள்ளது. இதற்கு இடையிலுள்ள ஞாயிற்றுக்கிழமைகளில் என்ன நடைபெற்றன என்று நமக்குத் தெரியவில்லை. இயேசு கிறிஸ்து இந்த நாட்களில் தமது சீஷர்களுக்கு உபதேசம் பண்ணியிருந்திருக்கலாம். (யோவான் 20:19,26)

"தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்" - சீஷர்களுடைய முதலாவது கூடுகையில் தோமா அவர்களோடு இல்லை. (யோவான் 20:19) உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து அவர்களுக்குத் தரிசனமானதை தோமா கேள்விப்பட்டான். அவரை எப்படியாவது பார்த்துவிட வேண்டுமென்று தீர்மானம்பண்ணி, அடுத்த ஞாயிற்றுக் கிழமையில் சீஷர்கள் கூடியிருக்கும் இடத்தில் தோமாவும், அவர்களுடனேகூட இருந்தான். அவிசுவாசியாகிய இருந்த தோமாவின் அவிசுவாசத்தைஇயேசுகிறிஸ்து அகற்றினார். (யோவான் 20:27-28)

"தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான்" - இவை சாதாரண வார்த்தைகளல்ல. இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு தோமாவின் வார்த்தைகள் மறுக்க முடியாத சாட்சியாகும். தோமா தன் கையை நீட்டி, இயேசு கிறிஸ்துவின் விலாவிலே போட்டானா என்று தெரியவில்லை. ஆனால் அவனுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டிருக்கிறது. அவன் இயேசு கிறிஸ்துவை தன் ஆண்டவராகவும், தன் தேவனாகவும் காண்கிறான். தோமாவே, இயேசு கிறிஸ்துவை முதன் முதலாகத் தேவன் என்று அழைத்தவன். பழைய ஏற்பாட்டுக்கால தீர்க்கதரிசிகள் இயேசுவைத் தேவன் என்று முன்னறிவித்திருக்கிறார்கள். (ஏசா 9:6-7; சங்45:6-7; யோவான் 1:1-2; யோவான் 5:17-47; யோவான் 10:33-36; அப் 20:28; பிலி 2:5-11; கொலோ 1:15-18; எபி 1:8-9).

20 அதிகாரம்

9. காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்

யோவான் 20:29 அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.

“அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்” - இயேசு கிறிஸ்துவைக் கண்டவர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதம் உண்டு என்று வேதத்தில் எங்கும் கூறப்படவில்லை. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

10. யோவான் எழுதின சுவிசேஷத்தின் நோக்கம்

யோவான் 20:30 இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்.

யோவான் 20:31. இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவன் அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

“இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்” - இந்த வசனத்தில் வேறு அநேக அற்புதங்கள் என்பது யோவான் 20:19, 26 ஆகிய வசனங்களில் காணப்படும் அடையாளமாகவோ, அல்லது சுவிசேஷப் புஸ்தகங்களை நாம் வாசிக்கும் அநேக அடையாளங்களாகவோ இருக்கலாம். (யோவான் 2:11, அப் 1:3; எபி 2:1-4; மாற்கு 16:15-20)

“இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்கள்” - இந்த வசனத்தைப் பலர் தவறுதலாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள். தள்ளுபடி ஆகமங்களையும் **(apocryphal gospels)** பரிசுத்த ஆவியானவர் ஏவியிருக்கிறார் என்று இதன் அடிப்படையில் கூறுகிறார்கள்.

“இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவன் அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது” - இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன். அவரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த மேசியா. விசுவாசத்தின் மூலமாக நமக்குப் பூரண இரட்சிப்பு உண்டாகும். சுவிசேஷத்தில் கூறப்பட்டிருக்கிற எல்லா ஆசீர்வாதங்களும் நமக்குக் கிடைக்கும். நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதற்காகவும், அவருடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இந்தச் சுவிசேஷப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

21 அதிகாரம்

11. இயேசு தமது சீஷர்களுக்கு மறுபடியும் தம்மை வெளிப் படுத்துகிறார்

(1) ஒரு மீனும் அகப்படவில்லை

யோவான் 21:1 இவைகளுக்குப்பின்பு இயேசு திபேரியா கடற்கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார்; வெளிப்படுத்தின விவரமாவது:

யோவான் 21:2 சீமோன்பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும், கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரானாகிய நாத்தான்வேலும், செபதேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில் வேறு இரண்டுபேரும் கூடியிருக்கும்போது,

யோவான் 21:3 சீமோன்பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப் போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்போய், உடனே படவேறி னார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.

"இவைகளுக்குப்பின்பு" - யோவான் இந்தச் சுவிசேஷத்தில் "இவைகளுக்குப் பின்பு" என்னும் வாக்கியத்தைப் பல இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். அவற்றில் இது கடைசித் தடவையாகும். (யோவான் 5:1)

"இயேசு திபேரியா கடற்கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார்" - இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, அவர் தமது மகிமையையும், வல்லமையையும் வெளிப்படுத்தினார். தாம் வாக்குத்தத்தம் பண்ணிய பிரகாரமாக இம்முறை கலிலேயாவிலே தம்மை வெளிப்படுத்துகிறார். (மத் 28:7).

வெளிப்படுத்து (shewed) - φανερόω - phanerooo - 5319

வினைச்சொல் - வெளியரங்கமாக்கு, வெளிப்படுத்து, தரிசனமாகு, விளங்கப்பண்ணு, தோன்று

"சீமோன்பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும், கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரானாகிய நாத்தான்வேலும், செபதேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில் வேறு இரண்டுபேரும் கூடியிருக்கும்போது, சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப் போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள்" - இயேசு கிறிஸ்துவின் ஏழு சீஷர்கள் மீன்பிடிக்கப் போகிறார்கள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, தங்களுடைய பிழைப்பிற்காக இவர்கள் மீன்பிடிக்கச் சென்றார்களா அல்லது பொழுதுபோக்கிற்காக மீன்பிடிக்கச் சென்றார்களா என்பது தெரியவில்லை. (லூக்கா 8:3)

"அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை" - இதற்கு முந்திய முறை இவர்கள் மீன்பிடிக்கச் சென்றபோதும், அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. இப்போதும் அதேபோன்ற நிலைமையே சீஷர்களுக்கு வருகிறது. இரண்டு முறைகளும் இயேசு கிறிஸ்து அவர்களுக்குத் திரளான மீன்கள் கிடைப்பதற்கு உதவி புரிகிறார். தம்மை மேசியாவாக வெளிப்படுத்துகிறார். இரண்டு இடங்களிலும் அவர்களைப் பிரசங்கம் பண்ணுமாறு அழைக்கிறார். (லூக்கா 5:1-11; யோவான் 21:1-20).

"ஒன்றும் பிடிக்கவில்லை" - இந்த வாக்கியத்தில் "பிடித்தல்" என்பதன் கிரேக்க வார்த்தை "பையாஜோ" (piazoo) என்பதாகும். யோவான் மட்டுமே இந்தச் சுவிசேஷத்தில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். (யோவான் 7:30,32,44; யோவான் 8:20; யோவான் 10:39; யோவான் 11:57, யோவான் 21:10) மனுஷரைப் பிடிப்பதற்கு இந்த வார்த்தை மூன்று இடங்களில் பயன் படுத்தப்பட்டி ருக்கிறது. (அப் 12:4; 2கொரி 11:32; வெளி 21:19) மனுஷனைப் பிடித்து தூக்கிவிடு வதற்கு இந்த வார்த்தை ஒரு இடத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (அப் 3:7).

21 அதிகாரம்

பிடி (caught) - πιάζω - piazoo - 4084

வினைச்சொல் - பிடி, பிடித்துக்கொள்

(2) திரளான மீன்கள் அகப்படுகிறது - (லூக் 5:1-11)

யோவான் 21:4 விடியற்காலமான போது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள்.

யோவான் 21:5 இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள்: ஒன்றுமில்லை என்றார்கள்.

யோவான் 21:6 அப்பொழுது அவர்: நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால், அதை இழுக்க மாட்டாதிருந்தார்கள்.

"விடியற்காலமானபோது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந் தார்கள்" - இருட்டாக இருந்ததி னாலோ அல்லது அவர்களுக்கு இடையிலுள்ள தூரம் அதிகமாக இருந்ததினாலோ அல்லது இயேசு கிறிஸ்துவின் ரூபம் மாறியிருந்த தினாலோ அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள். (மாற்கு 16:12).

"பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா" - என்று இயேசு அவர்களிடம் கேட்டார். இந்த வசனத்தில் "பிள்ளைகளே" என்பதன் கிரேக்க வார்த்தை "பைதியோன்" (paidion) என்பதாகும். இதற்கு சிறுகுழந்தை, விளையாட்டுப் பிள்ளை என்று பொருள். இயேசு கிறிஸ்து தமது சீஷர்களைச் சிறுபிள்ளைகளாகப் பாவிக்கிறார்.

"ஏதாகிலும் உண்டா" என்னும் வாக்கியம் மூலபாஷையில் "ஏதாகிலும் மீன் உண்டா" என்றுள்ளது. இதன் கிரேக்க வார்த்தை "பிரோஸ்பகியோன்" (prosphagion) இதற்கு மீன் என்றோ அல்லது அப்பத்தோடு தொட்டுச் சாப்பிடும் உணவு என்றோ பொருள்படும். ஒரு வேளை ஆண்டவர் கடற்கரையில் மீன்வாங்குகிறவர் போல நின்றிருக்கலாம்.

பிள்ளைகள் (Children) - παιδίον - paidion - 3813

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - பிள்ளை, பாலகன், சிறுபிள்ளை, குழந்தை

மீன் (fish) - προσφάγιον - prosphagion - 4371

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - மீன்

(3) இயேசுவிற்கு அன்பாயிருந்த சீஷன்

யோவான் 21:7 ஆதலால் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதுருவைப் பார்த்து: அவர் கர்த்தர் என்றான். அவர் கர்த்தர் என்று சீமோன்பேதுரு கேட்டவுடனே, தான் வஸ்திரமில்லாத வனாயிருந்தபடியினால், தன் மேற் சட்டையைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான்.

"இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதுருவைப் பார்த்து: அவர் கர்த்தர் என்றான்" - யோவான் பேதுருவிடம் கூறுகிறான். (யோவான் 20:4)

கட்டிக்கொள் (girt) - διαζώννυμι - diazoonnymi - 1241

வினைச்சொல் - கட்டிக்கொள் (to wrap around) (யோவான் 13:4-5; யோவான் 21:7).

"தான் வஸ்திரமில்லாதவனாயிருந்த படியினால்" - அவன் சிறிய கால்சட்டை மட்டும் அணிந்திருக்கலாம். (யோவான் 19:23) அவன் கடலில் குதித்தான். ஒருவேளை படகைக் கரைக்கு இழுத்துச் செல்வதற்கு உதவியாக அவன் கடலில் குதித்திருக்கலாம்.

21 அதிகாரம்

(4) சீஷர்கள் மீன்களுள்ள வலையை கரைக்கு இழுத்து வருகிறார்கள்

யோவான் 21:8 மற்றச் சீஷர்கள் கரைக்கு ஏறக்குறைய இருநூறுமுழத் தூரத்தில் இருந்தபடியினால் படவிலிருந்துகொண்டே மீன்களுள்ள வலையை இழுத்துக் கொண்டு வந்தார்கள்.

யோவான் 21:9 அவர்கள் கரையிலே வந்திறங்கினபோது, கரிநெருப்புப் போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்.

யோவான் 21:10 இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களில் சிலவற்றைக் கொண்டு வாருங்கள் என்றார்.

யோவான் 21:11 சீமோன்பேதுரு படவில் ஏறி, நூற்றைம்பத்துமூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான்; இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை.

யோவான் 21:12 இயேசு அவர்களை நோக்கி: வாருங்கள், போஜனம் பண்ணுங்கள் என்றார். அவரைக் கர்த்தரென்று சீஷர்கள் அறிந்தபடியினால் அவர்களில் ஒருவனும்: நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை.

யோவான் 21:13 அப்பொழுது இயேசு வந்து, அப்பத்தையும் மீனையும் எடுத்து, அவர்களுக்குக் கொடுத்தார்.

யோவான் 21:14 இயேசு மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம்.

"இருநூறுமுழத் தூரம்" - கடற்கரையிலிருந்து 134 மீட்டர் தூரம்.

"அவர்கள் கரையிலே வந்திறங்கின போது, கரிநெருப்புப் போட்டிருக்கிறதையும், அதின் மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்" - தாங்கள் திரளான மீன்களைப் பிடித்ததுபோலவே இங்கு வேறொரு அற்புதம் நடைபெறுகிறது. கர்த்தர் தங்களுடைய தேவைகளையெல்லாம் சந்திக்கிறார். அவர்கள் மறுபடியும் கடலுக்குச் சென்று மீன்பிடித்துத் தங்களுடைய ஜீவனத்தை நடத்த வேண்டிய கட்டாயத்தில் இல்லை. கர்த்தருக்காக அவர்கள் ஊழியம் செய்யும்போது கர்த்தர் அவர்களைப் போஷிப்பார்.

"இயேசு அவர்களை நோக்கி: வாருங்கள், போஜனம்பண்ணுங்கள்" - இந்த வசனத்தில் "போஜனம்பண்ணு" என்பதன் கிரேக்க வார்த்தை "அரிஸ்தாயோ" **(aristaoo)** என்பதாகும். இதற்கு காலைப்போஜனம் சாப்பிடுதல் என்று பொருள். (லூக்கா 11:37) இரவுபோஜனம் சாப்பிடுவதற்கு கிரேக்க மொழியில் "தெய்ப்னோன்" **(deipnon)** என்னும் வார்த்தை பயன் படுத்தப்படும். (மாற்கு 6:21; லூக்கா 14:12-24; யோவான் 12:2; யோவான் 13:2,4; யோவான் 21:20; 2கொரி 11:20-21; வெளி 19:9,17) இயேசு கிறிஸ்து அவர்களோடு போஜனம் பண்ணினார். உயிர்த்தெழுந்தவர்கள் போஜனம் பண்ணுவார்கள். (லூக்கா 24:42-43). தேவனும், தேவதூதர்களும் போஜனம் பண்ணுவார்கள். (ஆதி 18; யாத் 24:9-11).

போஜனம் பண்ணு **(dine)** - **ἀριστάω** - **aristaoo** - 709

வினைச்சொல் - போஜனம் பண்ணு, காலைப்போஜனம் பண்ணு **(eat the morning meal)**

போஜனம் **(supper)** - **δειπνον** - **deipnon** - 1173

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - விருந்து, பந்தி, போஜனம், இரவுபோஜனம்

"இயேசு மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம்" - அப்போஸ்தலர்களில் அநேகருக்கு இயேசு கிறிஸ்து மூன்று முறை தரிசனம் கொடுத்தாக இந்த வசனத்தில் நாம் வாசிக்கிறோம். (யோவான் 20:19,26; யோவான் 21:1-14) இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு பன்னிரெண்டு தடவைகள் தரிசனம் தந்திருக்கிறார்.

21 அதிகாரம்

இயேசு கிறிஸ்துவின் தரிசனங்கள்

1. மகதலேனா மரியாளுக்கு (மாற்கு 16:9; யோவான் 20:15-16)
2. கல்லறையிலிருந்த ஸ்திரீகளுக்கு (மத் 28:9)
3. எம்மாவுக்குச் செல்லும் சாலையில் இரண்டு சீஷர்களுக்கு (லூக்கா 24:13-31)
4. பேதுருவிற்கு (லூக்கா 24:34; 1கொரி 15:5)
5. பத்து அப்போஸ்தலர்களுக்கு (யோவான் 20:19)
6. பதினொரு அப்போஸ்தலர்களுக்கு (யோவான் 20:26)
7. ஏழு அப்போஸ்தலர்களுக்கு (யோவான் 21:1-22) இரண்டாம் ஞாயிற்றுக் கிழமைக்குப் பின்பு இந்தத் தரிசனம் உண்டாயிற்று.
8. கலிலேயாவில் ஒரு மலையில் பதினொரு அப்போஸ்தலர்களுக்கு (மத் 28:16)
9. மத்தியாவையும் சேர்த்து, பன்னிரெண்டு அப்போஸ்தலர்களுக்கு (1கொரி 15:5; அப் 1:26)
10. ஐநூறு சகோதரர்களுக்கு (1கொரி 15:6)
11. இயேசு கிறிஸ்துவின் சகோதரனாகிய யாக்கோபிற்கு (1கொரி 15:7; கலா 1:19)
12. எல்லா அப்போஸ்தலர்களுக்கும் (1கொரி 15:7; மாற்கு 16:19-20; லூக்கா 24:50-53; அப் 1:3-12,26)

12. பேதுருவின் மூன்று அம்ச ஊழியம்

யோவான் 21:15 அவர்கள் போஜனம் பண்ணின பின்பு, இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்.

யோவான் 21:16 இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.

யோவான் 21:17 மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.

21 அதிகாரம்

"அவர்கள் போஜனம்பண்ணினபின்பு, இயேசு சீமோன்பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக் கிறாயா என்றார்" - பேதுருவை இயேசு எப்போதும் சீமோனே என்றே அழைப்பார். லூக்கா 22:34 ஆவது வசனத்தில் மட்டும் பேதுருவே என்று கூறுகிறார். மற்ற சீஷர்களைவிட பேதுரு இயேசு கிறிஸ்து விடத்தில் அதிக அன்பாக இருப்பதாக பெருமைப்பட்டுக் கொண்டான். ஆகையினால் இயேசு அவனிடம் இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். (மத் 26:33-35) இயேசுகிறிஸ்து மூன்று தடவை பேதுருவிடம் என்மீது அன்பாக இருக்கிறாயா என்று கேட்கிறார். முதல் இரண்டு முறை கேட்கும்போது "நீ என்னிடத்தில் அன்பாய் இருக்கிறாயா" என்று கேட்கிறார். இதற்கான கிரேக்க வார்த்தை"அகாபே" (agapao) என்பதாகும். இதற்கு பரிபூரணமான அன்பு, என்று பொருள். பேதுரு இயேசு கிறிஸ்துவிற்குப் பதில் கூறும்போது "ஆம் ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன்" என்று கூறுகிறான். நேசிக்கிறேன் என்பதன் கிரேக்க வார்த்தை "பிலேயோ" (phileo) என்பதாகும். இதற்கு சகோதர சிநேகம், நட்பு என்று பொருள். மூன்றாம் முறையாக இயேசு கிறிஸ்து பேதுருவிடம் கேட்கும்போது என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்று கேட்பதற்குப் பதிலாக "என்னை நேசிக்கிறாயா" என்று கேட்கிறார். அதாவது இயேசு கிறிஸ்து இரண்டுமுறை அகாபே (agapao) என்னும் சொல்லைப் பயன்படுத்தி விட்டு, மூன்றாம் முறையாக பிலேயோ (phileo) என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார். இதன் பொருள் என்னவெனில், "பேதுரு, என்மீது நீ தெய்வீக அன்பு வைத்திருக்கிறாயா" என்று இரண்டு முறை கேட்டுவிட்டு, பின்பு மூன்றாம் முறையாக "நீ என்மீது சகோதர அன்பாவது வைத்திருக்கிறாயா" என்று கேட்கிறார். இயேசு கிறிஸ்து மூன்றாம் முறையாக இந்த வார்த்தையைப் பயன் படுத்தியதினால் பேதுரு மிகுந்த துக்கப்பட்டு, "ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்" என்று தன்னைத் தாழ்த்துகிறான்.

அன்பாயிரு (lovest) - ἀγαπάω - agavaoo - 25

வினைச்சொல் - அன்பு செலுத்துதல், சிநேகித்தல், அன்பு கூருதல், அன்பாயிரு

(அ) தேவன் மனிதனிடம் காட்டும் அன்பு யோவா. 3:16

(ஆ) கிறிஸ்து தனி மனிதனிடம் காட்டும் அன்பு மாற்கு 10:21

(இ) ஒரு மனிதன் மற்ற மனிதர்களிடம் காட்டும் அன்பு 2கொரி. 12:15

(ஈ) மனிதர் உலகப்பிரகாரமான பொருட்களிடம் காட்டும் அன்பு லூக். 11:43. இந்தச் சொல் பொதுவாக தன்னலம் கருதாத நீதியான கிறிஸ்தவ அன்பைக் குறிக்கும்.

சிநேகி (to like) - φιλέω - phileoo - 5368

வினைச்சொல் - விரும்பு, நேசி, முத்தஞ்செய், அன்பாயிரு, சிநேகி, அன்புகூர்

"என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" - மேய்த்தல் என்பதன் கிரேக்க வார்த்தை "போஸ்கோ" (boskoo) என்பதாகும். இதற்கு இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளை வழிநடத்த வேண்டும், பாதுகாக்க வேண்டும், பராமரிக்க வேண்டும், ஆளுகை செய்ய வேண்டும், அவர்களுக்கு நல்ல மேய்ப்பனாக இருக்க வேண்டும் என்பது பொருள்.

ஆட்டுக்குட்டிகள் என்பதன் கிரேக்க வார்த்தை "அர்னியோன்" (arnion) என்பதாகும். இந்த வசனத்திலும், வெளிப்படுத்தின விசேஷத்தில் 27 இடங்களிலும், இந்த வார்த்தை பயன் படுத்தப்பட்டிருக்கிறது. ஆட்டுக்குட்டி என்பது பொதுவாக இயேசு கிறிஸ்துவையே குறிக்கும். வெளி 13:11 ஆவது வசனம் மட்டும் பூமியிலிருந்து எழும்பிய மிருகத்தைக் குறிக்கிறது. ஆட்டுக்குட்டிக்கு பயன்படுத்தப் பட்டிருக்கும் வேறொரு கிரேக்க வார்த்தை "அம்னோஸ்" (amnos) என்பதாகும். (யோவான் 1:29,36; அப் 8:32; 1பேதுரு 1:19)

யோவான் - தொகுப்புரை

21 அதிகாரம்

மேய் (Feed) - βόσκω - boskoo - 1006

வினைச்சொல் - மேய்ந்து கொண்டிரு, மேய்

ஆட்டுக்குட்டி (lambs) - ἀρνίον - arnion - 721

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆட்டுக்குட்டி, ஆட்டுக்குட்டியானவர்

ஆட்டுக்குட்டி (lamb) - ἀμνός - amnos - 286

ஆண்பால்பெயர்ச்சொல் - ஆட்டுக்குட்டி

"என் ஆடுகளை மேய்ப்பாயாக" - இந்த வாக்கியத்தில் மேய்ப்பாயாக என்பதன் கிரேக்கச் சொல் "போய்மாய்னோ" (poimainoo) என்பதாகும். பதினொறு இடங்களில் இந்த வார்த்தை ஆளுகைசெய் என்றும், (rule) (மத் 2:6; வெளி 2:27; வெளி 12:5; வெளி 19:15) மற்ற இடங்களில் போஜனம் கொடு அல்லது மேய் (feed) (யோவான் 21:16; லூக்கா 17:7; அப் 20:28; 1கொரி 9:7; 1பேதுரு 5:2; யூதா 1:12; வெளி 7:17) என்றும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

மேய் (Feed) - ποιμαίνω - poimainoo - 4165

வினைச்சொல் - மேய், அரசாளு, ஆளு

இந்த வசனத்தில் ஆடுகள் என்பதன் கிரேக்க வார்த்தை "ப்ரோபேஷன்" (probation) என்பதாகும். இதைப் பலவிதமாக மொழிபெயர்க்கலாம். ஆடுகள் (sheep) (மத் 12:11-12; மத் 18:12-13; லூக்கா 15:4-6; யோவான் 2:14-15). இயேசுகிறிஸ்து (figuratively of Christ) (அப் 8:32); இரட்சிக்கப்படாத ஜனங்கள் (lost people) (மத் 9:36; மத் 10:6; மத் 15:24; 1பேதுரு 2:25); இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் (saved people) (மத் 10:16; மத் 26:31; யோவான் 10:1-27; யோவான் 21:16-17; ரோமர் 8:36; எபி 13:20); பொதுவான ஜனங்கள் (people in general) (மத் 25:31-46).

ஆடு (sheep) - προβάτιον - probation - 4263

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆடு

"மூன்றாந்தரம்" - பேதுரு ஏற்கெனவே சேவல் கூவுகிறதற்கு முன்னே இயேசு கிறிஸ்துவை மூன்று முறை மறுதலித்தவன் ஆகையினால் இயேசு கிறிஸ்து இப்பொழுது அவனை மூன்று முறை விசுவாச அறிக்கை பண்ண வைக்கிறார்.

"அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டான்" - துக்கப்படுதல் என்பதன் கிரேக்க வார்த்தை "லூபேயோ" (lupeo) என்பதாகும். இது பல்வேறு பொருட்களில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. "grieve" (மாற்கு 10:22; யோவான் 21:17; ரோமர் 14:15; 2கொரி 2:4-5; எபே 4:30); "sorry" and "sorrowful" (மத் 14:9; மத் 17:23; மத் 18:31; மத் 19:22; மத் 26:22,37; மாற்கு 14:19; யோவான் 16:20; 2கொரி 2:2; 2கொரி 6:10; 2கொரி 7:8-11; 1தெச 4:13); "be in heaviness" (1பேதுரு 1:6).

துக்கப்படு (grieved) - λυπέω - lypeoo - 3076

வினைச்சொல் - துக்கமடை, துக்கப்படு (to make sorrowful, to affect with sadness, cause grief, make uneasy)

"ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்" - இயேசு கிறிஸ்துவிடம் பேதுரு மிகுந்த தாழ்மையோடு தன்னைப் பற்றி அறிக்கையிடுகிறான். அவனிடத்தில் காணப்பட்ட பெருமையெல்லாம் மறைந்துபோயிற்று. இயேசு கிறிஸ்து அவனிடம் இப்படிப்பட்ட தாழ்மையைத்தான் எதிர்பார்க்கிறார். அவனுக்குத் தன்னைப் பற்றித் தெரியவில்லை. ஆனால் தான் இயேசு கிறிஸ்துவை நேசிப்பதை பேதுரு அறிந்திருக்கிறான். (யோவான் 21:17).

மேய் (Feed) - βόσκω - boskoo - 1006

வினைச்சொல் - மேய்ந்து கொண்டிரு, மேய் (யோவான் 21:15)

21 அதிகாரம்

13. பேதுருவின் மரணத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் - (2பேதுரு 1:14)

யோவான் 21:18 நீ இளவயதுள்ளவனாயிருந்த போது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர் வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டு போவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

யோவான் 21:19 இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார். அவர் இதைச் சொல்லியபின்பு, அவனை நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார்.

'மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" - யோவான் இந்தச் சுவிசேஷத்தில் இந்த வாக்கியத்தை 25 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். அவற்றில் இது கடைசித் தடவையாகும். (யோவான் 1:51)

தீர்க்கதரிசன எண் - 43

"நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர் வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான்" (யோவான் 21:18) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. இன்னவிதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப் படுத்தப்போகிறானென்பதைக் குறிக்கும் படியாக இப்படிச் சொன்னார். (யோவான் 21:19).

இந்த வாக்கியம் பேதுரு மரணமடைந்த பின்பு எழுதப்பட்டது. வரலாற்று ஆசிரியர்கள் பேதுருவைப் பற்றி எழுதும்போது, அவனுடைய விருப்பத்தின் பிரகாரம் அவனைத் தலைகீழாகத் தொங்கவிட்டு, சிலுவையில் அறைந்தார்கள் என்று எழுதியிருக்கிறார்கள். தன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் போன்று சிலுவையில் நேராக அறைந்து தொங்கவிடுவதற்கு தான் பாக்கியவான் அல்ல என்று பேதுரு நினைத்தான். தன்னைச் சிலுவையில் தலைகீழாக அறையுமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டான். அவனுடைய வேண்டு கோளின் பிரகாரம் அவனைச் சிலுவையில் தலைகீழாக அறைந்து கொன்றார்கள்.

"இளவயதுள்ளவன்" - இதன் கிரேக்க வார்த்தை 'நியோஸ்' (neos) என்பதாகும். இதற்கு முப்பது வயதிற்குட்பட்டவன் என்று பொருள். இந்த வார்த்தையினாலும், யோவான் கல்லறைக்குப் பேதுருவை முந்தி ஓடினான் (யோவான் 20:4) என்னும் வார்த்தையினாலும் சீமோன்பேதுரு நடுவயது மனுஷன் (middle) aged man (45 முதல் 50 வயது வரை) என்பது தெரியவருகிறது.

இளவயது (young) - νέος - neos - 3501

பெயரடை - புது, இளைய, வாலி பரான, புதிதான, புதிய, இளவயதுள்ள

"உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான்" - கொண்டுபோ என்பதன் கிரேக்க வார்த்தை "பெரோ" (pheroo) என்பதாகும். பேதுரு மரிக்கும் வேளையை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. அவன் விரும்பாத இடத்திற்கு அவனை அழைத்துச் செல்வார்கள். அதாவது அவனுடைய மரணத்திற்கும், கல்லறைக்கும் அவனைக் கொண்டுபோவார்கள்.

கொண்டுபோ (carry) - φέρω - pheroo - 5342

வினைச்சொல் - கொண்டு வா, கொண்டுபோ, சுமந்து கொள், பலன் தா, கொடு, சாட்டு, நீட்டு, அடி, தாங்கு பொறுமையாயிரு, உண்டாக்கு, அளி, ஏவு, சகி (lead, carry, bear, or bring forth) (யோவான் 2:8; யோவான் 12:24; யோவான் 15:2-8,16; யோவான் 21:18).

21 அதிகாரம்

"என்னைப் பின்பற்றிவா" - இயேசு கிறிஸ்து இந்த வார்த்தைகளையெல்லாம் சொல்லிய பின்பு, பேதுருவைப் பார்த்து, "என்னைப் பின்பற்றிவா" என்று கூறுகிறார். இதற்கான கிரேக்க வார்த்தை "அகோலோதெயோ" (akolouthuoo) என்பதாகும். மரணம் வந்தாலும் என்னைப் பின்பற்ற வேண்டும் என்று ஒரு தலைவன் கூறுவதைப் போன்றது. வேலைக்காரன் தன் எஜமானனையும், போர்வீரன் தன் படைத்தலைவனையும், மாணவன் தன் ஆசிரியரையும் மரணபரியந்தம் பின்பற்றுவார்கள். அதேபோன்று, என்னைப் பின்பற்றிவா என்று இயேசு கிறிஸ்து பேதுருவை அழைக்கிறார். (மத் 8:19; மத் 9:9; மத் 19:27; யோவான் 12:26; யோவான் 21:22). இயேசு கிறிஸ்து தன்னிடம் இவ்வாறு கூறுவதினால் பேதுரு மகிழ்ச்சியடைந்திருப்பான். தான் இனிமேல் இயேசுவை மறுதலிக்கப் போவதில்லை என்று அவர் தன்னை நம்புவதாக உறுதிபண்ணிக் கொள்வான். இரண்டு இடங்களில் இயேசு கிறிஸ்து பேதுரு தம்மைப் பின்பற்றி வருமாறு கட்டளையிட்டிருக்கிறார்.(யோவான்21:19,22).

பின்பற்று (Follow) - ἀκολουθέω - **akolouthuoo** - 190

வினைச்சொல் - பின்செல், பின்பற்று, பின்னே செய், பின்னே போ

14. பேதுரு யோவானைப் பற்றி கேட்கிறான்

யோவான் 21:20 பேதுரு திரும்பிப்பார்த்து, இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராப்போஜனம் பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து: ஆண்டவரே, உம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான்.

யோவான் 21:21 அவனைக் கண்டு, பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, இவன் காரியம் என்ன என்றான்.

யோவான் 21:22 அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார்.

யோவான் 21:23 ஆகையால் அந்தச் சீஷன் மரிப்பதில்லையென்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று. ஆனாலும், அவன் மரிப்பதில்லையென்று இயேசு சொல்லாமல், நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்னவென்று சொன்னார்.

"இயேசுவுக்கு அன்பாயிருந்தவன்" - இந்த வாக்கியம் யோவானைக் குறிக்கிறது (யோவான் 13:23; யோவான் 19:26; யோவான் 20:2; யோவான் 21:7,20,24).

"பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, இவன் காரியம் என்ன" - இயேசு கிறிஸ்து பேதுருவைத் தம்மைப் பின்பற்றி வருமாறு அழைக்கிறார். யோவானைக் குறித்து இயேசு கிறிஸ்து என்ன சொல்லப்போகிறார் என்பதை அறிந்து கொள்ள பேதுரு விரும்புகிறான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ "நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா" என்று கூறிவிடுகிறார். யோவான் முதல் நூற்றாண்டின் இறுதியில் மரித்தான்.

15. யோவான் - இந்த சுவிசேஷத்தை எழுதியவர் - முடிவுரை

யோவான் 21:24 அந்தச் சீஷனே இவைகளைக்குறித்துச் சாட்சி கொடுத்து இவைகளை எழுதினவன்; அவனுடைய சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறோம்.

யோவான் 21:25 இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். ஆமென்.

"அந்தச் சீஷனே இவைகளைக்குறித்துச் சாட்சிகொடுத்து இவைகளை எழுதினவன்" - யோவான் சுவிசேஷத்தின் ஆசிரியர் யோவான் என்பது இந்த வசனத்தின் மூலமாகத் தெளிவாகிறது.

யோவான் - தொகுப்புரை

21 அதிகாரம்

"இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்" - இயேசு கிறிஸ்து அநேக அற்புதங்களைச் செய்தார். அவை அனைத்தும் வேதப் புத்தகத்தில் எழுதப்படவில்லை. அவைகளையெல்லாம் எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் மிகவும் அதிகமாக இருக்கும்.

ஆகையினால் பரிசுத்த ஆவியானவரின் அனுமதி பெற்று, ஏவப்பட்டவை மட்டுமே வேதப்புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது.

உலகம் (world) - κόσμος - kosmos - 2889

ஆண்பால் பெயர்ச்சொல் - உலகம், அலங்கரிப்பு, லௌகிகம்